வெளியீடு

15 JAN 194
MADRAS

ஸ்டாலின்

வெ. ராமசாமி

4

சக்தி காரியாலயம்
சென்னை......மதுரை.

புதிய நூல்கள்

ரஜபுத்திர ஆதிக்கத்தின் அஸ்தமனம் ரூ. 4-8-0

— சரித்திர நவீனங்கள் எழுதுவதில் மகா மேதையான **ரமேச சந்திர தத்தர்**, I.C.S. எழுதிய 'மகாராஷ்டிர ஜீவன் உதயம்' என்ற புத்தகத்தைத் தமிழர்கள் அறிவார்கள். அந்நூலின் ஆசிரியர் இதனை அதே உணர்ச்சி பாவத்தோடும், கற்பனு அலங்காரத்தோடும் எழுதியுள்ளார். —

சுதந்திரத்தின் தத்துவங்கள் : ரூ. 2-8-0

— ஐரிஷ் சுதந்திர வீரர் **டெரன்ஸ் மாக்ஸ்வினி**, தனக்கே சொந்தமான ஆவேச நடையில் சுதந்தரத்தின் அவசியத்தையும் அதை அடையும் வழிகளைப் பற்றியும் தத்துவ ரீதியாகவும், அநுபவ ரீதியாகவும் எழுதியிருக்கிருர். —

நிர்மாணத் திட்டம் : ரூ. 1-8-0

— **காந்தியடிகளும், ராஜேந்திர பாபுவும்** நிர்மாணத் திட்டங்கள் பற்றி இதுவரை எழுதியதும், பேசியதுமான அனைத்தும் அடங்கியது. —

இம்மூன்றும் விரைவில் வெளிவரும்.

பெண்களுக்கு :	காந்திஜீ	ரூ. 6-0-0
மிருணுலவதி :	கே. எம். முன்ஷி	ரூ. 3-0-0
ஏழு நாடகங்கள் :	க. நா. சுப்ரமண்யம்	ரூ. 2-0-0
கதைக் கனிகள் :	ஆண்டர்சன்	ரூ. 1-0-0
காவேரி :	ராய. சொ.	ரூ. 1-0-0
எதிர்கால உலகம் :	கு. ப. ரா.	ரூ. 1-12-0
காதலர் உள்ளம் :	லியானுர்டு பிராங்	ரூ. 1-12-0

தபால் செலவு தனி

நவயுகப் பிரசுராலயம்

காரைக்குடி

ஸ்டாலின்

6 JAN 1945
MADRAS

வெ. ராமசாமி

923.147

தினசரி வெளியீடு—4

விற்பனை உரிமையாளர்:
சக்தி காரியாலயம்
சென்னை : : மதுரை

V58,147

இன்றையதினம் போரின் நிலைமை அடியோடு மாறி நேசநாடுகள் வெற்றியடைந்து வருகிறது. வெற்றிக்குக் காரணம் சோவியத் தலைவர் ஸ்டாலின்தான் என்று சொல்வது மிகையாகாது. அந்த ஸ்டாலின் யார்? அவர் சோவியத்தின் தலைவராக விளங்கும் காரணம் என்ன? எல்லா விபரங்களும், கூடிய அளவில் சுருக்கமாக, தெளிவாக, ஸ்ரீ வெ. ராமசாமி இந்தச் சிறு புத்தகத்தில் எழுதியிருக்கிறார். கடைசியில் குறிப்பும் சேர்க்கப் பட்டிருக்கிறது. வாசகர்களுக்கு உதவியாக இருக்கும்.

இது 'தினசரி'யின் நான்காவது வெளியீடு.

முதல் பதிப்பு: 1944 டிசம்பர் 15
உரிமை பதிவு செய்யப் பெற்றது

அணு எட்டு

சக்தி பிரஸ் லிமிடெட்
(சக்தி பிரஸ்)
ராயப்பேட்டை :: சென்னை

15 JAN 1945
MADRAS

குழந்தைப் பருவம்

காகேசியாவில் கோரி என்ற சிறு நகரம் ஒன்றுண்டு. இந்த நகரத்திலேயுள்ள சக்கிலியர் சேரியில் ஒரு சிறிய வீடு. வீடு என்று அலங்காரமாகச் சொன்னாலும் அது ஒரு குடிசைதான். 1879-ம் வருஷம் டிசம்பர் மாதம் 21-உ மாலையில் இந்தக் குடிசையிலிருந்து 'குவா', 'குவா', என்ற சப்தம் கேட்டது. ஆம், காதரைன்ட்ஜுகஷ்விலிக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. குழந்தையைக் கட்டி அணைத்துக் கொண்டாள் தாய். பிறந்தவுடனேயே மூன்று குழந்தைகளைப் பறிகொடுத்த தாய்க்கு நான்காவதாகப் பிறந்த இந்தக் குழந்தையாவது பிழைத்திருக்கவேண்டுமென்ற ஆத்திரம் இருக்கத்தானே செய்யும். வசீகரமான தோற்றத்தோடு அமைந்திருந்த குழந்தையின் முகத்தைப் பார்த்து காதரைனுக்கு இல்லாத ஆனந்தம் உண்டாயிற்று. அதன் கரிய விழிகளில் என்னதான் வசீகரம் இருக்குமோ தெரியவில்லை. தாய் அதை உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தாள். தன் மகன் தந்தையைப் போன்று செருப்புத் தைக்கிற தொழிலில்தான் இருக்கப்போகிறானா, அல்லது வேறு நல்ல வருவாயுள்ள வேலையில் ஈடுபடப் போகிறானா என்று அவள் தெரிந்து கொள்ளப் பிரியப்பட்டிருக்கலாம். தாயின் அன்பினால் என்னதான் கற்பனைசெய்து பார்த்தாலும், தன் மகன் உலகத்தில் ஆறில் ஒரு பங்குக்கு ஒப்பற்ற தலைவனாகப் போகிறான் என்று அவள் கனவில்கூட எண்ணிப் பார்த்திருக்க முடியாது. ஆயினும் இந்தக் குழந்தை அந்தப் பொல்லாத காரியத்தைச் செய்யவே செய்தது. குழந்தைக்குப் பெற்றோர்கள் "ஜோஸப்" என்று நாமகரணம் சூட்டினார்கள். இந்த ஜோஸப் விசாரியானோவிட்ஜுகஷ்விலிதான் இன்று சோவியத் மக்கள் "எங்கள் தலைவன்" என்று பெருமிதத்தோடு கூறும் ஸ்டாலின் ஆவார்.

ஸ்டாலினுடைய தந்தையின் பெயர் விசேரியன். குடும்பத்தின் பரம்பரைத் தொழிலான செருப்புத் தைக்கிற வேலையைத்தான் விசேரியனும் செய்துவந்தார். வீட்டு வேலை முழுவதையும் தாய் காதரைனே பார்த்துவந்தாள். இரவு பகலும் மாடுபோல உழைத்தாலும், இந்த உழைப்பினால் அவர்கள் வயிறு நிரம்பவில்லை. எனவே வீட்டு வேலையோடு, துணி வெளுத்துக் கொடுப்பதன்மூலமும் காதரைன் குடும்ப வருவாயை அதிகப்படுத்தினாள். இவர்கள் வசித்துவந்த வீடு ஐந்து சதுர கஜமுள்ள ஒரு அறையே. வீட்டுக்கு வாசற்படிகூட இல்லை. ஒரு சிறிய ஜன்னலிலிருந்து வருகிற மங்கலான வெளிச்சத்தைத் தவிர அறை இருண்டிருக்கும். ஒரு முக்காலி, ஒரு மேஜை, ஒரு சோபா—இவைதான் அங்கு போட்டிருந்த விலையுயர்ந்த சாமான்கள். வீட்டிலும், வீட்டுக்கு வெளியிலும் வறுமை தாண்டவமாடியது. எந்தப்பக்கம் திரும்பினாலும் வறுமை, வறுமை, வறுமை. வறுமையிலேயே பிறந்து, வறுமையிலேயே வளர்ந்த ஸ்டாலினுடைய குழந்தையுள்ளத்தில் சுற்றியிருக்கும் குடியானவர்களும் தொழிலாளர்களும் வறுமையின் காரணமாக படுந்துன்பம் பசுமரத்தாணிபோலப் பதிந்துவிட்டது.

ஸ்டாலினுடைய நண்பர்கள் பலர் அவர் குழந்தையாக இருந்த காலத்தில் எப்படி இருந்தார் என்று தங்கள் ஞாபகங்களையெல்லாம் எழுதியிருக்கிறார்கள். அவர் ரொம்ப சூடிக்கையான சிறுவனாக இருந்தார்; விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற ஆசை அவருக்கு அதிகம் இருந்தது; தோழர்களிடம் ரொம்ப அன்பாகப் பழகினார் என்றெல்லாம் அவர்கள் எழுதுகிறார்கள்.

ஏழாவது வயதில் ஸ்டாலின் கல்வி கற்க ஆரம்பித்தார். ஒரு வருஷத்திற்குள் ஜார்ஜிய மொழி, ரஷ்யமொழி இரண்டிலும் படிக்கும் அளவு திறமை அடைந்துவிட்டார். 1888 முதல், 1894 வரையில் கோரியிலுள்ள பாதிரிமார்களின் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்றார். லெனினைப்போல, இவரும் பள்ளிக்கூடத்தில் புத்திசாலி என்று பேரெடுத்தார். பரீட்சைகளிலெல்லாம் முதல்தரமாகத் தேறினார். படிப்பைப்போல் விளையாட்டிலும் இவர் முன்னணியில் நின்றார். இளம் சூரியனைப்போலத் தோன்றிய சோவியத் ரஷ்யாவை நசுக்கிவிடுவது என்று கிளம்பிய பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான் போன்ற நாடுகளின் சேனைகளையும், இன்று தோல்வி என்பதையே அறியாதது என்று சொன்ன ஹிட்லரின் மகத்தான இராணுவத்தையும் முறியடித்த ஸ்டாலின் குழந்தைப் பருவத்தில் விளையாட்டுக்களில் திறமை காட்டியதில் வியப்பு ஒன்றுமில்லை. காந்தத்தை நாடி இரும்பு செல்வதுபோல நண்பர்கள் இவரை நாடிச்சென்றார்கள். படிப்பது, சித்திரம் வரைவது, பாடுவது இவைகளில் ஸ்டாலினுக்கு அதிகப் பிரியம்.

பள்ளிச் சிறுவனாக இருக்கும்போதே ஸ்டாலின் தொழிலாளர்களிடமும் குடியானவர்களிடமும் நெருங்கிப் பழகுவார். வறுமை ஏன் அவர்களை இப்படி வாட்டுகிறது என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுவார். ஒரு சமயம் தனது நண்பன் ஒருவனோடு ஸ்டாலின் வரப்பு வழியாகச் சென்று கொண்டிருந்தார். வழியில், நாள் முழுதும் வயலில் உழுததன் காரணமாகக் களைப்பாறிக் கொண்டிருந்த உழவர்களின் கூட்டம் ஒன்றைக்கண்டார். அவர்களில் ஒரு உழவன் தனக்கு வந்த ரொட்டித் துண்டையும், மொச்சையையும் ரொம்ப ஆவலோடு வாயில் அள்ளிப் போட்டுக்கொண்டிருந்தான். அதைப்பார்த்து ஸ்டாலின் "என் அப்பா இவ்வளவு மோசமான உணவைப் புசிக்கிறாய்? உழுது பயிரிட்டு அறுவடை செய்கிறதெல்லாம் நீதானே? உனக்கு இதைவிட நல்ல உணவு கிடைக்க வேண்டாமா?" என்று கேட்டார். "அறுவடை செய்கிறதில் ஒன்றும் குறைவில்லை. ஆனால், போலீஸ் இன்ஸ்பெக்டருக்கும், பாதிரிக்கும் கண்டல்லவா எங்களுக்கு மிஞ்சவேண்டும்" என்று அந்த உழவன் பதில் சொன்னான். பிறகு இதையொட்டி நிகழ்ந்த சம்பாஷணையில் உழவர்கள் ஏன் இவ்வளவு வறுமையில் இருக்கிறார்கள், அவர்களின் உழைப்பின் பயனை யார் அனுபவிக்கிறார்கள், உழவர்களின் உண்மையான நண்பர்கள் யார், உண்மையான எதிரிகள் யார் என்கிற விஷயத்தையெல்லாம் அவர்கள் புரிந்துகொள்ளக்கூடியபாஷையில் படிப்படியாக அவர் எடுத்து விளக்கினார். இவ்வளவு ரசமாகவும் புரியும்படியும் தங்களுடைய வறுமையின் காரணத்தை விளக்கிச் சொன்னதைக் கேட்டு அவர்களுக்கு ஸ்டாலினிடம் ஒரு அன்பே ஏற்பட்டுவிட்டது. "தம்பி, நீ அடிக்கடி இங்கே வந்து எங்களுக்குப் பல விஷயங்களை எடுத்துச் சொல்லவேண்டும்," என்று அவர்கள் ஸ்டாலினை வேண்டிக் கொண்டார்கள்.

பாதிரிமார்களின் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே ஸ்டாலினுடைய மனது புரட்சிகரமான எண்ணங்களில் தோய ஆரம்பித்தது. எந்த விஷயத்தையும் கூர்ந்து கவனிக்கிற பழக்கமும் ஏற்பட்டது. டார்வின் எழுதிய புத்தகங்களை அவர் படிக்க ஆரம்பித்தார். அதன் பயனாகப் பதினான்கு வயது முற்றுப்பெறு முன்னரே ஒரு பழுத்த நாஸ்திகராகவும் மாறினார்.

ஸ்டாலினுடைய பள்ளிக்கூட நண்பர் கிளர்டிஜிட்ஸ் ஒரு ரசமான சம்பவத்தை எழுதியிருக்கிறார். அது கீழ் வருமாறு:

"நான் கடவுளைப்பற்றிப் பேச ஆரம்பித்தேன். ஜோஸப் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்தார். ஒரு கணம் பேசாமலிருந்துவிட்டு, 'அவர்கள் நம்மை ஏமாற்றப் பார்க்கிறார்கள், கடவுள் என்று ஒரு பொருளே இல்லை', என்று சொன்னார். இந்த வார்த்தைகளை கேட்டு எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. இதற்குமுன் இப்படி யாரும் சொல்லி நான் கேட்டதில்லை.

"'கடவுள் இல்லையென்று நீ எப்படிச் சொல்ல முடியும், சோசோ?' (இந்த வார்த்தை ஜோஸப் என்பதன் சுருக்கம்) என்று நான் கேட்டேன்.

"'நான் ஒரு புத்தகம் தருகிறேன். படித்துப் பார். இந்த உலகமும் ஜீவராசிகளும் நீ எண்ணிக் கொண்டிருக்கிற படியில்லை. அதற்கு முற்றிலும் மாறாக இருக்கின்றன. கடவுளைப்பற்றிப் பேசுகிற இந்தப் பேச்சு எல்லாம் சுத்த அபத்தம் என்பதை அந்தப் புத்தகத்தின்மூலம் நீ தெரிந்துகொள்ளுவாய்' என்று ஜோஸப் சொன்னார்.

"'அது என்ன புத்தகம்?' என்று கேட்டேன்.

"'டார்வின் எழுதிய புத்தகம். கட்டாயம் நீ அதைப் படிக்க வேண்டும்', என்று ஜோஸப் மீண்டும் வற்புறுத்தினார்."

டார்வின் எழுதிய புத்தகங்களைப் படிப்பதோடு, மார்க்சின் தத்துவத்திலும் அவர் மனது செல்ல ஆரம்பித்தது. 1894-ம் வருஷம் ஸ்டாலின் கோரி பள்ளிக்கூடத்திலிருந்து படித்து வெளியேறி டிப்லிஸ் நகரிலுள்ள சமய பாடசாலையில் சேர்ந்தார். அங்கே கல்வி பயிற்றுவதில் கையாண்ட நடைமுறை அவருக்குப் பெரிதும் வெறுப்பை உண்டாக்கியது. அங்கே கல்விபயிலும் மாணவர்கள் வெளியுலகத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது. வாத்தியார்களெல்லாம் கிருஸ்துவ சந்நியாசிகள். கடவுளுக்கும், ஜார் அரசனுக்கும், கிருஸ்துவக் கோயிலுக்கும் பயந்து நடக்கவேண்டும்,சொந்தச் சொத்துரிமைக்கு மரியாதை வைக்கவேண்டுமென்று அவர்கள் போதனைசெய்தார்கள். பாதிரி மடத்தில் நடப்பதுபோல, ஒவ்வொருநாளும் கோயில்மணி அடித்தவுடன் மாணவர்கள் எல்லோரும் பிரார்த்தனைக்குச் செல்லவேண்டும். அங்கே பயிற்றுவிக்கும் கல்விமுறையில் மதசம்பந்தமான பாடத்திற்கே முக்கிய ஸ்தானம். "பலாமின் கழுதை எந்த பாஷையில் பேசியது?" என்பதுபோன்ற விஷயங்களை வைத்து மாணவர்களைக் கட்டுரை எழுதச் சொல்லுவார்கள். மாணவர்கள் ஒழுங்காக நடந்து கொள்ளுகிறார்களா என்பதை ரகசியமாக கவனிக்க ஒரு உளவு கூட்டத்தையும் பாடசாலை அதிகாரிகள் நியமித்திருந்தார்கள். இளம் பிள்ளைகளின் மனதை இப்படியெல்லாம் சிதைத்து வளர

முடியாமல் செய்ததன் பயனுக, இந்தப் பாடசாலையிலிருந்து வெளி யேறிய மாணவர்களில் பெரும்பாலோர் கொடுங்கோலனுன ஜாருக் குத் தாசானுதாசர் ஆனுர்கள். ஆனுல் பலர் புரட்சித் தலைவர்களா கவும் மாறினுர்கள். அடக்குமுறைக்கும் அடிமைத்தனத்திற்கும் உதவியாக அமைத்த கல்விமுறை பள்ளி மாணவர்களிடையே ஒரு வெறுப்பையும் புரட்சி மனப்பான்மையையும் உண்டுபண்ணியது. அதன் காரணமாகப் பள்ளிக்கூடத்தில் எந்தப் புத்தகங்களைப் படிக் கக் கூடாதென்று தடை செய்திருந்தார்களோ அந்தப் புத்தகங் களையே மாணவர்கள் திருட்டுத்தனமாகப் படிக்க ஆரம்பித்தார் கள். ஜெர்மன் ஆசிரியர் எமில் லட்விக் ஸ்டாலினைப் பேட்டிகாணச் சென்றிருந்தபோது, இந்தப் பாடசாலை தன்னை எப்படி ஆக்கியது என்பதைப்பற்றி ஸ்டாலின் ரொம்ப நன்ருகச் சொன்னுர் :

"அங்கு கையாண்ட கல்வி முறையையும், மாணவர்களைக் கேவலமாக நடத்துவதையும் எதிர்த்து நான் புரட்சிக்காரனுக மாறுவதென்று முடிவு செய்தேன்; முடிவில் புரட்சிகாரனுக மாறவும் செய்தேன்."

15 வயதாயிருக்கும் போதே ஸ்டாலின் டிரான்ஸ்காகேசி யாவில் மறைமுகமாக இருந்துவந்த மார்க்சீயக் கூட்டத்துடன் தொடர்பு வைத்துக்கொண்டார். அந்தக் காலத்திலிருந்தே மார்க் சீய நூல்களை ரொம்ப கவனத்துடன் படிக்கத்தொடங்கினுர்.

அந்தக் காலத்தில் டிப்லிஸ் நகரில் மார்க்சீய நூல்கள் கிடைப்பது அரிது. ஒருநாள், மார்க்சீயத்தில் பற்றுள்ள இளம் மாணவர்கள் கைக்கு மூலதனத்தின் பிரதி யொன்று கிட்டியது. மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒவ்வொரு காசாகச் சேர்த்து அந்தப் பிரதியை வைத்துக் கொண்டு இன்னெரு கையெழுத்துப் பிரதியைத் தயார் செய்தார்கள். இந்தக் கையெழுத்துப் பிரதிதான் அவர்களது ரகசிய மார்க்சீயக் கூட்டங்களில் உலவியது. ரகசிய மார்க்சீயக் கூட்டங்களில் சேர்ந்து மார்க்ஸ், ப்ளெக்கானெவ், செர்னிஷெவ்ஸ்கை, பிசாரவ், ஹெர்ஜன் போன்ற ஆசிரியர்கள் எழுதிய புத்தகங்களையும் மாணவர்கள் படிக்கத்தொடங்கினுர்கள்.

இந்தக் காலத்தில் ஸ்டாலின் ஜார்ஜிய மொழியிலும் ரஷ்ய மொழியிலும் பல முக்கியமான புத்தகங்களைப் படித்தார்; பல மொழி பெயர்ப்பு நூல்களையும் படித்தார். பாடசாலை அதிகாரிகள் வெளியிலுள்ள எந்த நூல் நிலயத்திலும் புத்தகம் வாங்கிப் படிக்கக் கூடாதென்று தடை செய்திருந்தபோதிலும், ஸ்டாலின் அதைப் பொருட்படுத்தாமல் ஒரு நூல் நிலையத்தில் அங்கத்தினராகச் சேர்ந்து கொண்டார்.

இக் காலத்தில் ஸ்டாலின் கவிதை புனைவதிலும் தன் கைத் திறத்தை காட்ட ஆரம்பித்தார். பல பாட்டுக்களை இயற்றினுர். அந்தக் காலத்து ஜார்ஜிய அறிஞர்கள் ஸ்டாலினுடைய பாட்டுக் களை ரொம்பப் பாராட்டிச் சொல்லியிருக்கிருர்கள்.

ஸ்டாலினேடு படித்த பார்க்கட்ஜ் ருசிகரமான சில சம்பவங் களைக் குறிப்பிடுகிருர். "உலகத்தைக் கடவுள் ஆறு நாட்களில் படைத்தார்" என்று வாத்தியார் மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்திருந்தார். அப்பாவி மாணவர்களும் இதை நம்பினுர்கள். நாங்கள் மேலே சொன்ன மாணவர்களோடு வாதம் செய்து அது பொய் என்பதை நிரூபிக்க விரும்பினேம். இதற்காகப் பூமி எப்

போது உண்டாயிற்று, அதனுடைய வயது என்ன என்பன போன்ற விஷயங்களைத் தெரிந்துகொள்ள முயன்றோம். டார்வின், கலிலியோ, காபெர்னிகஸ் போன்றவர்கள் எழுதிய நூல்களைப் படிக்க ஆரம்பித்தோம். தோழர் ஸ்டாலின் சயன்ஸ் புத்தகங்களை ரொம்ப ஆவலோடு படித்தார். இப்படியே படிப்படியாகச் சென்று சமுதாயத்தில் தோன்றி இருக்கும் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியைப் பற்றிய நூல்களையும் படிக்க ஆரம்பித்தோம். மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் எழுதிய நூல்களையெல்லாம் படித்தோம். அந்தக் காலத்தில் மார்க்ஸைப் படிப்பதென்பது ஏதோ ஒரு பொல்லாத காரியத்தை செய்வதற்கு ஒப்பாகும். இந்தப் புரட்சிகரமான செயலுக்குத் தண்டனை விதிப்பதும் உண்டு. டார்வின் என்று சொன்னவுடனேயே கண்டபடி வைகிற எங்கள் பாடசாலை ஆசிரியர்கள் மார்க்ஸை லேசிலா விட்டுவிடுவார்கள்? சமுதாயம், பொருளாதாரம் சம்பந்தமான புத்தகங்களோடு வான சாஸ்திரம், இராசயனம், பிசிக்ஸ் முதலிய சயன்ஸ் புத்தகங்களிலும் கவனஞ் செலுத்த ஆரம்பித்தோம். இந்தப் புத்தகங்களையெல்லாம் கொண்டுவந்து தருவது தோழர் ஸ்டாலின்தான். முதன் முதலில் நாம் யாவரும் நாஸ்திகர்களாக மாற வேண்டும் என்று அவர் எங்களுக்கு அடிக்கடி சொல்வது உண்டு. நாங்கள் படித்த எல்லா சயன்ஸ் புத்தகங்களும் மார்க்ஸ் சொல்லியிருக்கும் விஷயங்கள் சரியென்பதையே ஊர்ஜிதப் படுத்தின.

"தோழர் ஸ்டாலினுக்குச் சரித்திரத்தில் இல்லாத பிரியம். பிரஞ்சுப் புரட்சி, பாரிஸ் கம்யூன், 1848-ம் வருஷம் நடந்த புரட்சி, ரஷ்யசரித்திரம் போன்ற புத்தகங்களை யெல்லாம் அவர் கொண்டு வருவார். இந்தப் புத்தகங்களை எங்கிருந்து கொண்டுவருகிறார் என்பது எங்களுக்குப் பேராச்சரியமாக இருக்கும். தோழர் ஸ்டாலின் தனது 17-வது வயதில் பாடசாலையில் ஒரு ரகசிய மார்க்சீயக் கூட்டத்தை ஏற்படுத்தி மார்க்சீயத்தை பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். கொஞ்ச நாட்களில் இரண்டாவது கூட்டமொன்றும் ஏற்பட்டது. நான் முதல் கூட்டத்தைசேர்ந்தவன். தோழர் ஸ்டாலினுக்கு நாவல்கள் படிப்பதிலும் ரொம்பப்பிரியம்."

டிப்லிஸ் சமய பாடசாலையில் ஸ்டாலினோடு படித்த இன்னொரு நண்பரும் தனது பள்ளிக்கூட ஞாபகங்களை எழுதியிருக்கிறார். ஏற்கனவே நாம் குறிப்பிட்ட கிளர்டிஜிட்ஜ் என்பவரே இவர். இவர் இப்போது கோரிக்குப் பக்கத்தில் உள்ள ஊரில் மத்தியதர பள்ளிக்கூடமொன்றில் வாத்தியாராக இருக்கிறார். இவர் கூறுகிறார்: "மத போதனை நடக்கும்போது புத்தகங்களை மேஜைக்குக்கீழ் மறைவாக வைத்துக்கொண்டு நாங்கள்படிப்போம். வாத்தியார் கண்டுபிடித்து விடாதபடி ரொம்ப ஜாக்கிரதையாகத்தான் இருப்போம். கண்டு பிடித்தால் ஆபத்துதான். ஜோஸப்புக்கு பிரியாத நண்பர்கள் புத்தகங்கள்தான். சாப்பிடும்போதுகூட புத்தகங்கள் அவர் பக்கத்தில் இருக்கும். ஏதாவது ஒரு கேள்வி கேட்டால் 'படா'ரென்று அடித்தவாய் துடைத்ததுபோல ஜோஸப் பதில் சொல்லமாட்டார். நிதானமாக யோசித்தே பதில் சொல்லுவார். இந்தப் பாழும் பாடசாலையில் எங்களுக்குப் பெரிதும் இன்பத்தை அளித்த காரியம் பாட்டுத்தான். நாங்கள் எல்லோரும் கூட்டமாகச்சேர்ந்து கொண்டுநாடோடிப் பாடல்களைப் பாடுவோம். எங்களை ஒழுங்காக நிறுத்திப் பாட்டை ஆரம்பிப்பது ஜோஸப்தான்."

இந்தச் சமய பாடசாலையிலிருக்கும் போதுதான் ஸ்டாலின் முதன் முதலாக லெனினுடைய புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்தார். "ஜனங்களின் நண்பர்கள் யார், அவர்கள் சமுதாய ஜனநாயக கட்சியாருடன் எவ்விதம் போராடுகிறார்கள்" என்ற லெனின் எழுதிய முதல் புத்தகத்தை ஸ்டாலின் படித்தார். தூலின் (லெனின் வைத்துக்கொண்ட புனைபெயர்) எழுதியகட்டுரைகளையும் ஸ்டாலின் ஆர்வத்தோடு படிப்பார். ஸ்டாலினுடைய பள்ளிக்கூட நண்பர் ஒருவர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்: "1898வது வருஷம். காலை உணவுக்கு பிறகு புஷ்கின் சதுக்கத்திற்கு நடந்து சென்றேன். அங்கே ஸ்டாலின் தோழர்கள் புடைசூழ உட்கார்ந்திருப்பதை பார்த்தேன். அவர்களிடையே ரொம்ப பலமாக ஒரு வாதம் நடந்து கொண்டிருந்தது.

"ஜார்டேனியா (டிரான்ஸ்காகேசியாவின் புரட்சித் தலைவர்களில் ஒருவர்) வின் கருத்துக்களை ஸ்டாலின் பலமாகத் தாக்கிப் பேசினார். இங்கேதான் லெனினுடைய பெயரை முதன் முதலாக நான் கேட்டேன். மணியடித்தபடியால், நாங்கள் யாவரும் விரைந்து வகுப்புக்குச் சென்றுவிட்டோம். ஜோஸப் பேசுவதைக் கேட்டு நான் ஆச்சரியப் பட்டுப்போய் விட்டேன். இவ்வளவு ஆழமாகப்பேச அவர் எங்கே கற்றுக்கொண்டார் என்று அவரைக் கேட்டேன். 'தூலி' னுடைய கட்டுரையை இப்போதுதான் படித்தேன் என்றுசொல்லிவிட்டு எப்படியாவது லெனினை தான் சந்திக்க வேண்டும் என்று அவர் என்னிடம் ஆசையாகச் சொன்னார்."

சமய பாடசாலையின் அதிகாரிகள் ஸ்டாலினினுடைய நடவடிக்கைகளை ரொம்பக் கவனத்தோடு பார்த்து வந்தார்கள். பாடசாலையில் புத்திசாலித் தனமுள்ள மாணவர்களை யெல்லாம் ஸ்டாலின் தன்னுடைய கூட்டத்திற்குள் இழுத்துக்கொண்டார். இப்படியே விட்டு விட்டால் நிலைமை முற்றிவிடும் என்று எண்ணி அவர்கள் ஸ்டாலினை நல்ல பிள்ளையாக நடந்து கொள்ளும்படி எச்சரித்தார்கள்; பயமுறுத்தினார்கள்; பாடசாலைச் சிறையில் அடைத்து வைக்கவும் செய்தார்கள். ஆனால் இந்த மிரட்டலெல்லாம் ஸ்டாலினிடம் பலிக்கவில்லை. ஸ்டாலினுடைய அறையை அடிக்கடி சோதனை செய்தார்கள். இந்தமாதிரி செய்த ஒரு சோதனையின் போது, பாடசாலை அதிகாரி டிமிட்ரி ஸ்டாலின் இருந்த அறைக்குள் திடுதிடுவென்று நுழைந்தார். 'படிக்கக் கூடாத' புத்தகத்தை அப்போது ஸ்டாலின் படித்துக்கொண்டிருந்தார். "உனக்கு முன்னால் நிற்கிறது யார் என்பதுதெரியவில்லையா"? என்று அதிகாரி அதட்டினார். ஸ்டாலின் எழுந்தார். கண்களை துடைத்துக்கொண்டு, "என் கண்ணுக்கு ஒரு கரும்புள்ளி எனக்கு முன்னால் இருப்பதாக தெரிகிறதே யன்றி வேறொன்றும் தெரியவில்லையே?" என்றார். இந்தக்'கரும்புள்ளி'தான் பாடசாலைக் கமிட்டியில் ஸ்டாலினை வெளியேற்றுவதற்கு பிரேரணை கொண்டுவந்தார். ஆஹா, ரொம்ப சரியான யோசனையென்று அதை மற்ற கமிட்டி அங்கத்தினர்கள் ஒப்புக் கொண்டார்கள். விரும்பத்தகாத ஆசாமி என்பதற்காக ஸ்டாலினை வெளியேற்றினார்கள். ஆயினும் அவர்கள் வெளிப்படையாகச் சொன்ன காரணம் ஸ்டாலின் பள்ளிக்கூடச் சம்பளம் கொடுக்கவில்லை யென்பதும், பரீட்சை எழுதுவதில்லை என்பதும் ஆகும். உண்மையான காரணம் அவர் அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளுகிறார் என்பதே.

ஆனல் காதரைன் அம்மையார் மட்டும் தன் மகனைப் பாடசாலை அதிகாரிகள் வெளியேற்றிய உண்மையை ஒப்புக் கொண்டதே இல்லை. பையனுக்கு ஆரோக்கியம் குன்றியிருந்த காரணத்தால் நான்தான் பாடசாலைப் படிப்பை நிறுத்தினேன் என்று அந்த அம்மையார் சொல்வதுண்டாம். பாடசாலையிலிருந்து வெளியேற்றுவது என்பது ரொம்ப அவமானத்திற்குரிய காரியம் என்று அந்த அம்மையார் எண்ணிக் கொண்டிருந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. தனது அருமையான மகனைப் பற்றி ஊரார் இப்படியெல்லாம் அவதூருகப் பேசினல் தாய்க்கு மனந்தாளுமா?

ஸ்டாலினைப் பாடசாலையிலிருந்து வெளியேற்றிய பிறகு போலீஸ் அதிகாரிகள் அவர் மேல் ஒரு கண் வைக்க ஆரம்பித்தார்கள். ரொம்ப அபாயகரமான ஆசாமியல்லவா? அதனலே தான்.

வெளியேறிய சமயத்தில் ஸ்டாலின் மூலதனத்தைக் கரைத்துக் குடித்திருந்தார். ரகசியமார்க்ஸீய வட்டாரங்களில் பெற்ற நான்கு வருடப் பயிற்சியும் அவருக்கு உதவியாயிருந்தது. ரகசியமான முறையில் மாணவர்களின் சஞ்சிகை யொன்றை அவர் வெளியிட ஆரம்பித்தார்.

பாடசாலைப் படிப்பும் ஒருவாருக முடிவுக்கு வந்தது. ஸ்டாலினும் பழுத்த மார்க்ஸீயவாதி யாகிவிட்டார். ஏழைகளிலிருந்து தோன்றிய ஸ்டாலின் ஏழைகளின் வாழ்க்கை நிலைமையைப் பூரணமாக உணர்ந்து கொண்டு விட்டார். ஜாரின் கொடுங்கோன்மையின் மீதும் அந்தக் கொடுங்கோன்மைக்குச் சாதகமாயிருந்த சமூக அமைப்பின் மீதும் அவருக்குத் தாங்கமுடியாத கோபம் வந்தது. ஜாரின்மீது வெறுப்பு ஏற்பட ஏற்பட, ஜனங்களின்மீது அவருக்குள்ள அன்பு வளரத் தொடங்கியது.

2. அந்தக் காலத்தில் டிரான்ஸ்காகேசியா

ஸ்டாலின் புரட்சி இயக்கத்தில் பங்கு கொண்டதைப் பற்றி சொல்லுமுன் அவர் பிறந்த நாட்டின் நிலைமையைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ளுவது அவசியம். கோரி நகரம் குரா என்ற நதியின் கரையில் இருக்கிறது. அந்த நகரத்தைச் சுற்றிலும் நல்ல வளமான பூமி. விவசாயம் தான் முக்கியமான தொழில். காகேசியா முழுவதிலுமே முதல்தரமான தானியம் விளையும் பூமி இது. மிகச்சுவையுடைய திராட்சைக்கும் இது பேர்போனது. வளமான பூமி யென்ருல் ஆபத்து என்று பொருள். பிரதேச வெறி கொண்ட நாடுகளுக்கு இதன்மீது கண் விழுவது இயற்கையே. இயற்கையின் இந்தச் சட்டத்தை யொட்டி அலெக்ஸாண்டர், செங்கிஸ்கான், டாமர்லேன் போன்றவர்கள் ஜார்ஜியாமீது தங்கள் படைகளை நடத்தி நாட்டை நாசம் செய்தார்கள். ஏற்கெனவே வறுமைக்குட்பட்டிருந்த குடியானவர்கள் இந்தப் படையெடுப்புகளினல் இல்லாத துன்பங்களுக்கு இலக்கானர்கள்.

சுற்றியுள்ள வறண்ட பிரதேசங்களிலிருந்து வந்து, வளம் பொருந்திய ஜார்ஜியாவில் மக்கள் குடியேறினர்கள். ஜார்ஜியாவில் மட்டும் அந்தக் காலத்தில் 60 பாஷைகள் பேசப்பட்டனவென்றும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்த 60 ரகமானமக்கள் வசித்தனரென்றும் தெரிகிறது. படையெடுப்புகளும் பலரக மக்களும் அடிக்கடி

வந்து அமைதியின்மையைக் குலைத்ததன் காரணமாக ஜார்ஜியக் குடியானவர்களிடையே ஒருவிதமான எதிர்ப்பு மனப்பான்மை வளரத் தொடங்கியது. இந்த மனப்பான்மை பிற்காலத்தில் ஏற்பட்ட புரட்சிக்கு ரொம்ப உதவியாக இருந்தது.

1801-ல் சாம்ராஜ்ய வெறிபிடித்த ரஷ்யா ஜார்ஜியாவின்மீது படையெடுத்து, அதைத் தன் சுவாதீனத்தின்கீழ் கொண்டு வந்தது. சுதந்திர ஜார்ஜியா ஜாரின் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக மாறியது. இதற்குப் பிறகு நடந்த காலம் ஜார்ஜியாவின் சரித்திரத்திலேயே பெரிதும் இருளடர்ந்த காலம் என்று சொல்லலாம். ஜாரின் கவர்னர்கள் நடத்திய கொடுங்கோலாட்சியைத் தாளமாட்டாமல் மக்கள் துடித்தனர். அடக்குமுறை தலை விரித்தாடியது. இம்மென்றால் சிறைவாசம் ஏனென்றால் வனவாசமென்று சொன்னது ஜார்ஜியாவின் அந்தக் காலத்திய நிலைமை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது. ஜாரின் ஆட்சியின் கீழ் ஜார்ஜிய மக்களுக்கு இருந்த ஒரே சுதந்திரம் தண்டனைக்குள்ளாவதும் சாவதும் தான். என்றாலும் ஜார்ஜிய தேசபக்தர்கள் மலைகளிலும் காடுகளிலும் ஒளிந்துகொண்டு 50 வருஷம்வரை ரஷ்ய அதிகார வர்க்கத்தாரோடு போரிட்டு வந்தார்கள்.

ஸ்டாலின் பிறந்தசமயத்தில் தேசபக்தர்களின் ராணுவஎதிர்ப்பு மறைந்து விட்டது. ஆனால் ஒவ்வொரு உண்மையான ஜார்ஜிய தேசபக்தன் மனதிலும் ரஷ்ய அதிகார வர்க்கத்தின்மீதுள்ள வெறுப்பு வைரம் பாய்ந்து போயிருந்தது. இன்று நாம் எவ்வளவு ஆத்திரத்தோடும் கோபத்தோடும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வெறுக்கிறோமோ அவ்வளவு ஆத்திரமும் கோபமும் அவர்களுக்கு ரஷ்ய ஏகாதிபத்தியத்தின்மீது இருந்தது. நம்மைப் போலவே அந்நிய ஆதிக்கத்தின் அடிமைத் தனத்தை உதறித்தள்ளுகிற நன்னாளை ரொம்ப ஆவலோடு அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

1865-ம் வருஷம் ரஷ்ய எஞ்சினியர்கள் பாகுவிலும், அதன் சுற்று வட்டாரங்களிலும் மாங்கனீஸ், நாப்தா போன்ற உலோகங்களை எடுப்பதற்குச் சாதகமான இயந்திரங்களை அமைத்தார்கள். 1878-ல் தண்டவாளம் போட்டு ரயில் போக்கு வரத்து வசதிகளை உண்டு பண்ணினார்கள். புராதனமான பழக்க வழக்கங்களைக் கொண்ட குடியானவர்களின் ஜார்ஜியாவில் இயந்திரத் தொழில் சாலைகள் இடம்பெறத் தொடங்கின. தொழிற் சாலைகள் பெருகும் போது தொழிலாளர்களும் பெருக ஆரம்பித்தனர். 1870-ம் வருஷத்தில் டிப்லிஸ் ஒன்றரை லட்சம் பேருள்ள ஒரு பெரிய நகரமாயிருந்தது. குடியானவர்களின் புதல்வர்கள் தங்கள் துண்டு நிலங்களை விட்டு விட்டுத் தொழில்சாலைகளில் போய்ச் சேர்ந்து கொண்டார்கள். தொழிலாளர்களின் கூட்டம் பெருகிக் கொண்டிருந்தது. அதே சமயத்தில் படித்தவர்களிடையே புதிய எண்ணங்கள் தோன்றத் தொடங்கின. குறுகிய தேசிய உணர்ச்சிக்குப் பதிலாக ஐரோப்பிய உலகியல் வாதிகளின் புதிய எண்ணங்களும் புதிய சித்தாந்தங்களும் மேலோங்க ஆரம்பித்தன.

ஸ்டாலின் சமய பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் டிப்லிஸ் நகரில் பல பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டன. டிப்லிஸ் நகரிலிருந்து காஸ்பியன் கடலுக்கும், அங்கிருந்து எண்ணெய்க் கிணறுகளுக்குப் பேர்போன பாதும் என்ற இடத்

திற்கும் ரயில் போடப்பட்டது. அதன் காரணமாக எண்ணெய் எடுப்பது இரண்டு மடங்காகப் பெருகியது. எண்ணெய் எடுக்கும் தொழிலோடு அதற்குச் சாதகமான இன்னும் பல தொழில்களும் ஏற்படத் தொடங்கின.

"ரஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி" என்ற புத்தகத்தில் லெனின் டிரான்ஸ்காகேசியாவில் (ஜார்ஜியா, ஆர்மீனியா, அஜர்பைஜான் என்ற மூன்றையும் சேர்த்து டிரான்ஸ்காகேசியா என்று சொல்வது வழக்கம்.) ஏற்பட்ட அடிப்படையான பொருளாதார மாற்றங்களைப் பற்றி ரொம்ப விளக்கமாக எழுதியிருக்கிறார். காகேசியாவில் சுற்று வட்டாரங்களிலுள்ள மக்கள் வந்து குடியேறியதன் காரணமாக நிலத்தை நம்பியிருப்பவர்களின் தொகை பெருகியது. உள்நாட்டில் பண்டைக் காலத்திலிருந்து கையினால் செய்துவந்த சாமான்கள் மறைந்து, அவைகளுக்குப் பதிலாக தொழில்சாலையில் செய்யும் சாமான்கள் மாஸ்கோவிலிருந்து வந்து குவியத் தொடங்கின. ரஷ்ய முதலாளித்துவம் காகேசியாவையும் உலகப்பொருளாதார முறையோடு இணைத்தது. தான் செய்து குவிக்கும் பண்டங்களை விற்கும் சந்தையாக அது காகேசியாவைப் பயன்படுத்திக் கொண்டது. 1863-ல் காகேசிய நகரங்களில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை $3\frac{1}{2}$ லட்சமாக இருந்தது. 1897-ல் இது 9 லட்சமாகப் பெருகியது.

டிரான்ஸ்காகேசியாவின் எண்ணெய்த் தொழில் ரொம்ப விசேஷமாகப் பெருகியது. நல்ல லாபம் கிடைக்குமென்று தெரிந்து கொண்ட அந்நியநாட்டு முதலாளிகள் இந்தத் தொழிலில் ஏராளமான பணத்தைபோட ஆரம்பித்தனர். பாகு என்ற நகரம் பூமியின் கீழிருந்து திடீரென்று மந்திர சக்தியினால் தோன்றவில்லை. நோபல், ராத்சைல்ட், விசௌ போன்ற முதலாளிகளின் முயற்சியினால் படிப்படியாக வளர்ந்து அது இன்றைய நிலையை அடைந்திருக்கிறது என்று ஸ்டாலின் ஒரு இடத்தில் குறிப்பிடுகிறார்.

அதேசமயத்தில் நகரத்திற்கும் நாட்டுப்புறத்திற்கும் இடையே அடிப்படையில் வேறுபாடு ஏற்படத் தொடங்கியது. பாகு தொழில்சாலைகள் நிறைந்த நகரமாக வளர்ந்திருக்கும்போது, அஜெர்பைஜான் பண்டைக்காலப் பண்ணை முறையை அடிப்படையாகக் கொண்ட பிற்போக்கான நாடாக இருந்தது. உரலுக்கு ஒருபுறம் இடி, மத்தளத்துக்கு இரண்டு புறமும் இடி என்பார்கள். ஆனால் காகேசியாவில் வசித்த பலரகப்பட்ட தேசிய இனங்களைச் சேர்ந்த மக்கள் மூன்று புறத்தில் இடிபட்டார்கள். பண்டைக் காலப் பண்ணை முறையைச் சிதையாமல் வைத்துக்கொண்டு ஜாரின் ஏகாதிபத்தியம் ஒருபக்கம் சுரண்டிற்று. மற்றொரு பக்கம் தேசீய அடக்குமுறை. மூன்றாவது பக்கம் முதலாளி வர்க்கத்தாரின் அட்டூழியம். எல்லோரும் ரஷ்ய மொழியில் தான் பேசவேண்டும் என்பது சட்டம். தங்கள் தாய்பாஷையில் பேசிய குற்றத்திற்காக, நாய் குலைப்பதுபோலப் படமெழுதி அதைப் பள்ளிச்சிறுவர்களின் கழுத்தில் கட்டி தொங்க விட்டார்கள். தொழிலாளர்களைத் தொழில்சாலை முதலாளிகளும் நிலச்சுவான்தார்களும் படாதபாடு படுத்தினார்கள். ஆனால் இந்த அடக்கு முறைக்கும் அட்டூழியத்திற்கும் கீழ் புரட்சியின் சக்திகள் வேலை செய்து கொண்டிருந்தன. தொழிலாளர்களிடையே புரட்சி மனப்பான்மை வளர்ந்துவந்தது.

மற்றைய ஐரோப்பிய நாடுகளைவிட ரஷ்யாவில் புரட்சி மனப்பான்மை வெகுவிரைவில் தோன்றி வளர்ந்ததற்குப் பல முக்கியமான காரணங்கள் உண்டு. இதர ஐரோப்பிய நாடுகளில், உதாரணமாக பிரிட்டனில், தொழில் முறையில் ஏற்பட்ட புரட்சி பாட்டாளி மக்களை மட்டும் தோற்றுவிக்கவில்லை. ஒரு மத்திய வர்க்கத்தாரையும் தோற்றுவித்தது. ரஷ்யாவின் கதை வேறு. மத்திய வர்க்கத்தாரின் ஸ்தானத்தில் ஜாரும், நிலச் சுவான்தார்களும் இருந்தார்கள். சமுதாய அமைப்பு மாறுவதற்கு இடம் கொடுக்காமல் அப்படியே அதை வைத்துக்கொண்டு ஆங்காங்கே ஜார் அரசாங்கம் தொழில்சாலைகளை அமைத்தது. தொழில்சாலைகளில் வேலை பார்த்து வந்த 3 லட்சம் தொழிலாளர்களில், பாதிக்குமேல், பண்ணையடிமைகளைப்போல, தொழில்சாலைச்சொத்து என்று சொல்லும் முறையில் அடிமையாக இருந்தனர் என்று போல்ஷிவிக் சரித்திர ஆசிரியர் போவ்ராஸ்கி கூறுகிறார். ஒரு நாளைக்கு 16 மணி நேரம் வேலைசெய்தாலும் இவர்களுக்கு எந்த விதமான சட்ட உரிமைகளோ சமூக உரிமைகளோ வழங்கப்படவில்லை. இந்த நிலை அப்படியே நீடித்து நிற்கமுடியாது. வேலைநிறுத்தங்கள், இயந்திரங்களை உடைப்பது போன்ற காரியங்கள் அடிக்கடி நிகழ ஆரம்பித்தன. ஜாரின் போலீஸ் இந்தக்காரியங்களைச் சும்மாபார்த்துக்கொண்டிருக்குமா? மாஸ்கோ, காஜான், பாதும், வொரனேஜ் முதலிய நகரங்களுக்கு ஜாரின் போலீஸ் அடக்குமுறைப் பாடத்தை முதன் முதலாகப் படிப்பித்தது.

1861-ம் வருஷம் ஒருமகத்தான செயல் நிகழ்ந்தது. ஜார் அரசாங்கம் பண்ணையடிமைத் தனத்தைச் சட்டரீதியாக ஒழித்தது. நாட்டுப் புறங்களிலிருந்து கூட்டம் கூட்டமாக மக்கள் நகரங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் வந்தார்கள். இதன் காரணமாக அடுத்து வந்த 30 வருஷகாலத்தில் பாட்டாளி மக்களின் தொகை ஏழு மடங்கு பெருகியது. கிராமங்களெல்லாம் வெறிச்சென்று போய் விட்டன. அங்கே நிலங்களை உழுவதற்குக் கூடப் போதிய ஆட்கள் கிடைக்கவில்லை.

இங்கேயும், ரஷ்யா மற்ற ஐரோப்பிய நாடுகளின்றும் மாறுபடுவதைக் காண்கிறோம். ரஷ்யாவில் மந்திரசக்தியினால் கிளம்பியது போல திடீரென்று தொழிலாளர் வர்க்கம் ஒன்று தோன்றி விட்டது. இந்தத் தொழிலாளர் வர்க்கத்தில், பெரும்பான்மையாயுள்ளவர்கள் குடியானவர்களாதலால், பரம்பரையாக ரஷ்யக் குடியானவர்களுக்குள்ள புரட்சித் தன்மை இவர்களுக்கு இயல்பாகவே வந்துவிட்டது. 1861 முதல் 1905 வரையில் நடைபெற்ற 44 வருஷ காலத்தில் சுமார் 2000 கலகங்களும், வேலைநிறுத்தங்களும் ஏற்பட்டிருக்கின்றனவென்று போவ்ராஸ்கி கணக்கிட்டிருக்கிறார். இதைப் பார்க்கும் போது, புரட்சி என்பது ரஷ்ய மக்களின் ரத்தத்திலே தோய்ந்திருக்கும் ஒரு குணம் என்றுதான் சொல்லத்தோன்றும்.

இக்காலத்தில் டால்ஸ்டாய், புஷ்கின், கோகல், டோஸ்டாவ்ஸ்கி போன்ற மகத்தான இலக்கியக் கர்த்தாக்கள் தோன்றி ஜார் அரசாங்கத்தையும் சமுதாய அமைப்பு முறையையும் தாக்கிப் பலமாகப் பிரசாரம் செய்தார்கள். இவர்களுடைய எழுத்திலும் பேச்சிலும் காணப்பட்ட குழப்பமும் அவநம்பிக்கையும் அந்தக் காலத்

தின் போக்கையே பிரதிபலித்துக் காட்டின. எண்ணத்திலும் செயலிலும் குழப்பம் மிகுந்திருந்த அக்காலத்தில் அவர்கள் வேறு மாதிரியாக இருந்திருக்க முடியாது.

இந்த நிலையில் முதல் நிகோலஸ் பட்டத்திற்கு வந்தான். அடக்குமுறையை இரக்கமின்றிக் கையாண்டான். வெற்றி யடைந்து விட்டதாகவும் எண்ணினன். லின்லித்கோ நாட்டின் ஒப்பற்ற தலைவர்களைச் சிறையிலடைத்துவிட்டுச் சுதந்திர இயக் கத்தை நசுக்கி விட்டதாக எண்ணிக் கொண்ட கதைதான். இந்த அடக்குமுறையினல் மக்களின் மனதைச் சிறைப்படுத்த முடிய வில்லை. படித்தவர்க்கத்திலிருந்து பல தலைவர்கள் தோன்றினர்கள். அதிகார வர்க்கத்தை எதிர்த்து நடத்தும் இந்தப் போராட்டத்தில் தங்களுக்கு யார் உதவிக்கு வருவார்கள் என்று அவர்கள் ஆவ லோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். இம்மாதிரி தங்களுக்கு உதவி செய்யக் கூடிய நண்பன் தொழிலாளர் வர்க்கம்தான் என் பதை அவர்கள் விரைவில் கண்டு கொண்டார்கள்.

3. புரட்சி வாழ்க்கையின் துவக்கம்

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஜார்ஜியாவில் ஒரு சமுதாய இயக்கம் தோன்றியது. இது பண்டையப் பண்ணை முறையை வைத்துக்கொண்டு சமுதாய அமைப்பில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்ற ஒரு இயக்கம். முதலாளித்துவ அமைப்பை அடிப்படையாகக் கொண்டு சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று இன்னெரு இயக்கம் கிளம்பியது. இவ்விரண்டு இயக்கங்களும் ஜனங்களால் ஒன்றும் செய்யமுடியாது, தனிப்பட்ட தலைவர்களின் முயற்சியினலே தான் சீர்திருத்தம் நடைபெற வேண்டுமென்று எண்ணிய நரோடியர்களின் மனப்போக்கைப் பிரதி பலித்தன.

இவை யிரண்டும் ஒருபுறமிருக்க, ''மெஸாமேடாசி'' என்று சொல்லும் மூன்ருவது கட்சி ஒன்று தோன்றியது. ஜார்ஜியாவில் படித்த வர்க்கத்தாரிடையே மார்க்சீய தத்துவம் பரவியிருந்த தென்பதற்கு இந்த மூன்ருவது கட்சி சான்ருக இருந்தது. இதற்கு ஜார்டேனியா என்பவர் தலைவராயிருந்தார். மார்க்சீயச் சொற் ருெடர்களைக் கையாண்டாலும், தேசிய உணர்ச்சிதான் முக்கியம், தொழிலாளர்களும் முதலாளிகளும் ஒற்றுமையாக வாழமுடியு மென்று இந்தக் கூட்டத்தார் பிரசாரம் செய்தார்கள்.

1898-ம் வருஷம் ஸ்டாலின் இந்த மூன்ருவது கூட்டத்தில் சேர்ந்தார். இன்னும் இரண்டு தோழர்களோடு கூடி டிரான்ஸ் காகேசியாவில் ஸ்டாலின் முதன் முதலாகப் புரட்சிகரமான ஒரு மார்க்சீயக் கட்சியை அமைத்தார். புரட்சிகரமான மார்க்சீய வாதிகளான இவர்களின் கூட்டத்திற்கும் சந்தர்ப்ப வாதப்போக் குள்ள மெஸாமேடாஸிக்கும் இடையே ஆரம்பத்திலேயே வேறு பாடுகள் ஏற்படத்தொடங்கின.

பீடர்ஸ்பர்க்கில் லெனின் அமைத்த ''பீடர்ஸ்பர்க் தொழி லாளர் விடுதலைப் போராட்டச் சங்கம்'' ஸ்டாலின், சூலுகிட்ஜ், கெட்ஸ்கோவலி ஆகியோர்களின் எண்ணங்களை உருவாக்குவதற்கு உதவியாக இருந்தது.

மெஸாமேடாசி இரண்டு பிரிவாகப் பிரிய ஆரம்பித்தது. ஒன்று சந்தர்ப்ப வாதத்தில் ஆழ்ந்து போயிருந்த பெரும்பான்மைக் கூட்டம். இன்னொன்று, புரட்சிகரமான போக்குள்ள இளைஞர்களின் கூட்டம். இந்த இரண்டாவது கூட்டத்திற்கு ஸ்டாலின் தலைவராக இருந்தார். புரட்சித் தீயை எழுப்பும்படியான ஒரு ரகசியப் பத்திரிகை வேண்டுமென்றும், கிளர்ச்சி செய்யும்படி பொதுமக்களைத் தூண்ட வேண்டுமென்றும் ஸ்டாலினும் அவர் நண்பர்களும் வற்புறுத்தினார்கள். இதைச் சந்தர்ப்ப வாதிகள் ஒப்புக்கொள்ளவில்லை. சட்டத்தை மீறிப் போகக்கூடாது, புரட்சி வழியைப் பின்பற்றக் கூடாது என்பது அவர்களின் அந்தரங்க எண்ணம். இது காரணமாகவே மேலே சொன்ன பிளவு ஏற்பட்டது.

அந்தக் காலத்தில் டிப்லிஸ் நகரில் தொழிலாளரிடையே ஒரு பொது இயக்கம் வளர்ந்துகொண்டிருந்தது. ஸ்டாலின் பல மார்க்சீய வட்டாரங்களை நடத்திக்கொண்டு வந்தார். முற்போக்கான தொழிலாளருக்குப் புரட்சி மனப்பான்மையை ஊட்டுவது ரொம்ப முக்கியமான வேலையென்று ஸ்டாலின் கருதினார். சில்வெஸ்டர் டோட்ரியா என்பவர் ஸ்டாலின் அமைத்த ரகசிய மார்க்சீய வட்டாரத்தில் படித்த தொழிலாளர்களில் ஒருவர். மெஸாமேடாசியின் பெரும்பான்மைக் கூட்டத்தாரான சந்தர்ப்ப வாதிகள் நடத்துகிற ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடங்களில் தொழிலாளர்களுக்கு என்ன சொல்லி கொடுக்கிறார்களென்று டோட்ரியைப் பார்த்து ஸ்டாலின் ஒரு சமயம் கேட்டார்.

"சூரியன் எப்படிச் செல்கிறது என்பதைப்பற்றி அவர்கள் கற்றுக் கொடுக்கிறார்கள்," என்று டோட்ரியா பதில் சொன்னார். இதைக்கேட்டு ஸ்டாலின் சிரித்துக்கொண்டே, "சூரியன் ஒன்றும் வழிதவறிச் சென்றுவிடமாட்டான். அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். இப்போது நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டுவது புரட்சியை எப்படி நடத்தவேண்டுமென்பதேயாகும். ஆகையால் ரகசியமாக அச்சடிக்க இப்போது ஒரு அச்சு இயந்திரம் வேண்டும். அதற்கு உன்னால் உதவி செய்ய முடியுமா?" என்று கேட்டாராம்.

ஸ்டாலின் அமைத்த ரகசிய மார்க்சீய வட்டாரத்தில் படித்த இன்னொரு தொழிலாளர் கீழ் வருமாறு எழுதுகிறார்:

"ஸ்டாலின் இரண்டு வருஷமாக இந்த ரகசியக் கூட்டத்தை நடத்திவந்தார். சாமானியமான உதாரணங்களைச்சொல்லி அவர் எங்களுக்கு விஷயத்தை விளங்க வைப்பார். ஒரு குறிப்புப் புத்தகத்தில் விஷயங்களைக் குறித்துக்கொண்டு வருவார். பெரும்பாலும் மாலை வேளையிலும் இரவிலும்தான் வருவார். விஷயத்தை விளங்கிக் கொண்டோம் என்று அவர் திருப்தி அடையாத வரையில் அடுத்த விஷயத்திற்குப் போகமாட்டார். எங்கள் வாழ்க்கை அனுபவங்களையும், தொழிற்சாலையில் நடக்கும் விஷயங்களையும், முதலாளிகளும் கண்டிராக்டர்களும் எங்களை எப்படி சுரண்டுகிறார்கள் என்பதையும்பற்றி நாங்கள் சொல்லும்போது ரொம்ப ஆவலோடு கேட்பார். தோழர் ஸ்டாலின் எங்களுக்கு வாத்தியாராக இருந்தார். இருந்தாலும் தொழிலாளர்களிடமிருந்து தான் ரொம்ப விஷயங்களைக் கற்றுக்கொண்டதாக அவர் அடிக்கடி சொல்லுவார்."

1898-ம் வருஷம் டிப்லிஸ் நகரிலுள்ள ரயில்வே தொழிலாளர்களும் இதர தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தனர்.

இந்த வேலை நிறுத்தத்தை ஏற்பாடு செய்தது ஸ்டாலினே. 1899-ல் டிப்லிஸ் தொழிலாளர்கள் புரட்சிதினத்தை முதன் முதலாகக் கொண்டாடினார்கள். இவ்வருஷக் கடைசியில் டிப்லிஸ் டிராம்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வெற்றியும் அடைந்தார்கள். 1900-ம் வருஷம் மே தினப் புரட்சிக் கொண்டாட்டத்தின்போது ஸ்டாலின் பேசினார். கூட்டத்திற்குச் சுமார் 500 தொழிலாளர்கள் வந்திருந்தார்கள். இவ்வளவுதானே என்று இப்போது நமக்குத் தோன்றும். ஆனால் அந்தக்காலத்தில் தொழிலாளர்கள் பொதுக்கூட்டங்களை நடத்துவதென்பது ஒரு புதுமையான காரியம். மேலும் டிப்லிஸ் நகரில் இவ்வளவு அதிகமான தொழிலாளர்கள் ஒரு பொது இடத்தில் கூடியது இதுதான் முதல் தரம். தொழிலாளர்களின் பொதுக்கூட்டத்தில் ஸ்டாலின் பேசியதும் இதுதான் முதல் தரம்.

1901-ம் வருஷம் ஏப்ரல் மாதம் ஒரு பெரிய ஊர்வலத்தை ஸ்டாலின் ஏற்பாடு செய்தார். அதில் சுமார் 2000 தொழிலாளர்கள் கலந்து கொண்டார்கள். இந்த ஊர்வலத்தை அதிகாரிகள் மிருகத்தனமாகத் தாக்கினார்கள். காகேசியாவின் சரித்திரத்தில் இந்த ஊர்வலம் ஒரு முக்கிய ஸ்தானத்தைப் பெறும் என்று லெனின் "இஸ்க்ரா" என்ற பத்திரிகையில் எழுதினர். மறைவாக இருந்த புரட்சி இயக்கம் வெளிப்படையாக வரக்கூடிய அளவு பல மடைந்து விட்டது என்பதையே இந்த ஊர்வலம் காட்டியது.

1899-ம் ஆண்டு டிசம்பரிலிருந்து 1901 மார்ச்சுவரை ஸ்டாலின் தலை மறைவாக இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. போலீசாரின் கிருபா கடாட்சத்திலிருந்து தப்புவதற்காகத்தான். இந்தக் காலத்தில் டிப்லிஸ் நகரிலுள்ள வான ஆராய்ச்சி நிலையத்தில் ஸ்டாலின் வேலைசெய்து ஏதோ ஜீவனத்தை நடத்தினர். இரவு முழுதும் விழித்துக்கொண்டிருந்து குறித்த காலங்களில் வானத்தில் நிகழும் மாறுதல்களைக் குறித்து வைக்கவேண்டியது அவர் வேலை. இந்த வேலைக்கு பொறுமையும் கவனமும் அதிகம் வேண்டும். இந்த ஸ்தானம் எப்போதும் காலியாகவே இருக்குமாம். சொற்ப சம்பளத்துக்காக இவ்வளவு கஷ்டப்பட யார் முன் வருவார்கள்? அது காரணமாகவே ஸ்டாலினுக்கு எளிதில் இந்த வேலை கிடைத்து விட்டது.

1901-ல் ஸ்டாலின், கெட்ஸ்கோவலி இருவரும் பெரு முயற்சியின் பேரில் பாகுவில் ரகசியமான அச்சாபீஸ் ஒன்றை ஏற்பாடு செய்தார்கள். இதை ஏற்பாடு செய்த சில மாதங்களில் ஜார்ஜியாவின் முதல் ரகசியப் பத்திரிகை "பிரிட்ஜோலா" (போராட்டம் என்று இதற்குப் பொருள்) ஆரம்பிக்கப்பெற்றது. இது லெனின் நடத்திவந்த "இஸ்க்ரா"வின் கொள்கையை தழுவி இருந்தது. ஜாரையும், நிலச்சுவான்தார்களையும், முதலாளி வர்க்கத்தாரையும் எதிர்த்துத் தொழிலாளர்கள் போராடவேண்டும். சமதர்மத்திற்காகப் போராடும் இந்தப் போராட்டத்தில் ரஷ்யா முழுவதிலுமுள்ள தொழிலாளர்களெல்லாம் ஒன்று. அவர்களைப் பிரிக்க முடியாது என்று அது பிரசாரம் செய்தது. ஜார்ஜியாவில் காணப்பட்ட சமுதாய ஜனநாயகக் கிளர்ச்சி அகில ரஷ்ய சமுதாய ஜனநாயக இயக்கத்தின் ஒரு அம்சமே என்று, 'பிரிட்ஜோலா' அறிவித்தது. பாட்டாளிமக்களின் சர்வாதிகாரம் ஏற்படவேண்டும், தொழிலா

ளர்கள் வெளிப்படையாகப் புரட்சி இயக்கத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று அது வற்புறுத்தியது. சந்தர்ப்ப வாதக் கூட்டங் களுக்கெல்லாம் அது சாட்டை அடி கொடுத்தது. இந்தப் பத்திரி கையில் தலையங்கங்களையும் முக்கியமான கட்டுரைகளையும் ஸ்டாலி னும், கெட்ஸ்கோவலியுமே எழுதினர்கள்.

1901-ம் வருஷம் மார்ச் மாதம் ஸ்டாலினும் அவருடைய தோழரும் வசித்துவந்த வீட்டை போலீஸார் திடீரென்று சோதனை செய்தனர். அந்தச் சமயம் ஸ்டாலின் வீட்டில் இல்லை. போலீஸார் தோழருடைய அறையைப் பார்த்துவிட்டு, ஸ்டாலினுடைய அறைக்கு வந்தார்கள். அங்கேயிருந்த பெட்டியைத் திறந்து பார்த் தார்கள். படுக்கையைப் புரட்டிப்பார்த்தார்கள். மூலை முடுக்குகளை யெல்லாம் துருவிப்பார்த்தார்கள். ஆனல் அவர்களுக்குச்சாதகமாக ஒரு துரும்புகூடக்கிடைக்கவில்லை. ஏமாற்றத்துடன் அவர்கள் வீடு திரும்பினர். இதையெல்லாம் எதிர்பார்த்தே ஸ்டாலின் ரொம்ப எச்சரிக்கையோடு இருப்பார். புஸ்தகத்தை படித்தவுடனே திருப் பிக் கொடுத்துவிடுவார். வீட்டில் வைத்துக்கொள்ள மாட்டார். குராநதியின் கரையில் செங்கல் குவித்துக் கிடக்கும். அந்தக் குவியலுக்குக் கீழ் ரகசியமான பிரசுரங்களை மறைத்து வைத் திருப்பார்.

1901-ம் வருஷம் நவம்பர் மாதம் டிப்லிஸ் சமுதாய ஜனநாய கக் கட்சியின் முதல் மகாநாடு நடைபெற்றது. அதன் கமிட்டி அங்கத்தினர்களில் ஸ்டாலினும் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அந்த வருஷக் கடைசியில் பாதுமில் சமுதாய ஜனநாய கக் கட்சியொன்றை அமைக்கக் கமிட்டியார் ஸ்டாலினை அங்கே அனுப்பி வைத்தார்கள்.

அப்போது பாதும் தொழிலாளர்களிடையே சந்தர்ப்பவாதி களுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. அங்கே உண்மையான புரட்சியை ஊட்டும் கட்சியை நிருமாணிப்பது அசாத்தியமான காரியம்தான். ஆயினும் ஸ்டாலின் மனச்சோர்வடையவில்லை. தொழிலாளர்கள் வசிக்கும் பகுதியிலேயே தனது வாசஸ்தலத்தை அமைத்துக்கொண்டார். உற்சாகத்தோடு தன் வேலையில் முனைந் தார். பாதும் பிரமாண்டமான எண்ணெய்த் தொழிற்சாலைகளை உடைய நகரம். இந்தத் தொழிற்சாலைகள் ராத்சைல்ட், மாண்ட ஷேவ், நோபல் போன்ற பெரிய முதலாளிகளுக்குச் சொந்தமா யிருந்தன. இந்த தொழிற்சாலைகளிலுள்ள முற்போக்குள்ள தொழிலாளர்களோடு ஸ்டாலின் முதன் முதலில் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டார். பிறகு அவர்கள் மூலமாக இதர தொழி லாளர்களை ஒன்று திரட்ட முயன்றுர். அவர்களிடையே சென்று நேர் முறையிலும் பிரசாரம் செய்தார். அத்துடன் ரகசிய அச்சாலை ஒன்றையும் ஏற்பாடு செய்தார். எனவே எழுத்து, பேச்சு ஆகிய இரண்டு வழியாலும் பலமான பிரசாரம் செய்துவந்தார். இதன் பயனுக 1901-ம் வருஷம் டிசம்பரில் பாதுமில் ரஷ்ய சமுதாய ஜன நாயகக் கட்சியின் கமிட்டியொன்றை அமைப்பதில் அவர் வெற்றி யடைந்தார். கமிட்டியை நியமனம் செய்வதற்காகக் கூட்டிய கூட்டத்தில் ஸ்டாலின் ரொம்ப உருக்கமாகப் பேசினுர்:

“இருள் நீங்கியது. அருணன் உதித்துவிட்டான். சூரிய உதயம் இனி ஏற்பட்டுவிடும். அந்தச் சூரியன் நமக்காகப் பிரகா

சிப்பான். தோழர்களே, என்னை நம்புங்கள். இது சத்தியம்,'' என்று அவர் தன் பேச்சை முடித்தாராம். அப்போது அங்கேயிருந்த தொழிலாளர்கள் உணர்ச்சி பரவசமானார்களாம்.

புதிதாக நியமனம் செய்த இந்தப் பாதும் கமிட்டியின் உதவி கொண்டு பல வேலை நிறுத்தங்களை அவர் ஏற்பாடு செய்தார். 1902-லிருந்து வேலைநிறுத்தங்கள் எண்ணிக்கையிலும் ஆக்கத்திலும் வலுப்படத்தொடங்கின. வேலை நிறுத்தக் கமிட்டிகள் ஸ்டாலினுடைய ஆலோசனையையே பின்பற்றிவந்தன. வேலை நிறுத்தங்கள் காட்டுத் தீபோலப் பரவிக் கொண்டு போவதையும் தொழிலாளர்களின் மன உறுதியையும் கண்டு ஜாரின் அதிகாரிகள் கலவரமடைந்துவிட்டார்கள். வேலை நிறுத்தங்களை அடக்குவதற்கென்று பாதுமில் விசேஷ கவர்னர் ஒருவரை நியமனம் செய்தார்கள். ஒழுங்காகத் திரும்ப வேலைக்குப் போகிறீர்களா, அல்லது என் கைத்திறத்தைக் காட்டவா என்று இந்தக் கவர்னர் தொழிலாளர்களைப் பயமுறுத்தினான். பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா? தொழிலாளர்கள் ஒரு இம்மிகூட அசையவில்லை. கூட்டம் கூட்டமாக அவன் தொழிலாளர்களைக் கைது செய்தான். அதற்குப் பதில் தொழிலாளர்கள் ஊர்வலம் வந்து, கைதுசெய்த தொழிலாளர்களை விடுதலை செய்கிறாயா இல்லையா என்று கேட்டார்கள். போலீஸார் ஊர்வலம் சென்றவர்களில் முன்னூறு பேரைத் திரும்பவும் கைது செய்தார்கள். மார்ச் மாதம் 9-உ ஸ்டாலின் முன்னையைவிடப் பெரிய ஊர்வலம் ஒன்றை ஏற்பாடு செய்தார். இந்த ஊர்வலத்தில் ராத்சைல்ட், மாண்டஷேல் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்கள் மட்டுமின்றி, கப்பல் கட்டும் தொழில், ரயில்வே இன்னும் இதர தொழில்களில் வேலைபார்க்கும் எல்லாத் தொழிலாளர்களும் கலந்துகொண்டார்கள். செங்கொடிகளை ஏந்திக்கொண்டும், புரட்சிக் கீதங்களைப் பாடிக்கொண்டும் ஊர்வலம் சென்றது. ஊர்வலம் சிறைச்சாலையை அணுகியதும், 'கைது செய்த தொழிலாளர்களை விடுதலை செய்' என்ற கோஷம் வானைப் பிளந்தது. நிலைமை மோசமடைந்தது என்று தெரிந்துகொண்ட போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். 15 பேர் இறந்தார்கள், 53 பேர் காயமடைந்தனர். இந்தத் தொழிலாளர் கூட்டத்தின் நடுவில் ஸ்டாலின் அஞ்சாமல் நின்றுகொண்டு அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தார். துப்பாக்கிப் பிரயோகத்தினால் இறந்தவர்களுக்கு இறுதி மரியாதை செய்ய ஸ்டாலின் ஏற்பாடு செய்தார். புதையல் இடத்திற்கு நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வந்திருந்தார்கள். இறந்தவர்களின் சார்பாக ஸ்டாலின் ஒரு துண்டுப் பிரசுரத்தையும் வெளியிட்டார்:

"உண்மைக்காக உயிர்துறந்த உங்களுக்கு எல்லா கௌரவமும் உரியதாகுக! உங்களைப் பாலூட்டி வளர்த்த தாய்மாருக்கு எல்லா கௌரவமும் உரியதாகுக! "பழிக்கு பழி வாங்கு" என்று எங்கள் காதுகளில் சொல்லும் உங்கள் ஆவிகளுக்கு எல்லா கௌரவமும் உரியதாகுக!'' என்று அந்தத் துண்டுப் பிரசுரத்தில் எழுதியிருந்தது.

1902-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 5-உ கட்சிக் கூட்டம் ஒன்றில் பேசிக்கொண்டிருக்கும்போது ஸ்டாலினைப் போலீஸார் கைது செய்தனர். சிறையில் இருந்தே லெனினைப்போல புரட்சி நடவடிக்

கைகளை ஸ்டாலின் நடத்திவந்தார். அத்துடன் சிறையிலுள்ள கைதிகளுக்கும புரட்சி மனப்பான்மையை ஊட்டினர். 1903-ல் ஜார் அரசாங்கம் ஸ்டாலினை 3-வருஷ காலத்திற்கு கிழக்கு சைபிரியாவுக்கு நாடு கடத்தியது.

இந்தக் காலத்திலேதான் லெனினும் ஸ்டாலினும் கடிதப் போக்கு வரத்துமூலம் ஒருவரையொருவர் தெரிந்துகொள்ள ஆரம்பித்தார்கள்.

"1903-ல் கடித மூலம் தான் நான் லெனினைப் பரிச்சயப் படுத்திக் கொண்டேன். என்றாலும் அவருடைய கடிதங்கள் என் மனதில் அப்படியே பதிந்து விட்டன. லெனின் நமது கட்சியின் கேவலம் தலைவர் மட்டுமல்ல; கட்சியின் ஸ்தாபகரே அவர் தான். கட்சியின் இதர தலைவர்களோடு அவரை ஒப்பிடும்போது அவர்களுக்கெல்லாம் எட்டாத உயரத்திற்கு அவர் சென்று விடுகிறார். அச்சமென்பதையே அறியாமல் ஆகாச வெளியில் பறந்து திரியும் மலைக் கழுகல்லவா அவர்? ரஷ்யப் புரட்சி இயக்கத்தை புதிய வழிகளில் தைரியத்தோடு நடத்திய ஒப்பற்ற தலைவர் அவர் ஒருவரே," என்று ஸ்டாலின் சொல்லும்போது அந்தக் காலத்திலேயே லெனினிடம் எவ்வளவு அன்பும் மதிப்பும் அவர் வைத்திருந்தார் என்பது எளிதில் புலனாகும்.

1904-ம் வருஷ வசந்த காலத்தில் ஸ்டாலின் சைபீரியாவிலிருந்து தப்பி, பாதும் நகருக்கு வந்தார். அவர் வந்த விதத்தை ஒரு பெண்மணியார் கீழ் வருமாறு வருணிக்கிறார்:

"ஒரு நாள் இரவு கதவை யாரோ தட்டுவதைப்போலச் சத்தம் கேட்டது. அப்போது பாதி ராத்திரி."

"'யார் கதவை தட்டுகிறது?' என்று நான் கேட்டேன்.

"'நான்தான், கதவைத் திற.'

"'நான்தான் என்றால்?'

"'நான்தான் சோசோ'

"இருந்தாலும் எனக்கு நம்பிக்கை இல்லை. எங்களுடைய ரகசியமான பாஷையில் "பல்லூழி வாழ்க" என்ற வார்த்தைகளைச் சொன்ன பிறகு தான் நான் கதவைத் திறந்தேன்.

"'நீங்கள் எப்படி பாதுமுக்கு வந்தீர்கள்?' என்று நான் கேட்டேன்.

"'சிறையிலிருந்து தப்பி வந்துவிட்டேன்' என்று சோ சோ (ஸ்டாலின்) சொன்னார்." இதைக் கேட்டு அந்த அம்மையார் ஆச்சரியப்பட்டிருக்கலாம். ஆனால் ஆறு தரம் சிறையினின்றும் தப்பி வந்த ஸ்டாலினுக்கு அதில் ஆச்சரியம் எதுவும் இருப்பதாகத் தோன்றியிருக்க முடியாது தானே.

4. முதல் ரஷ்யப் புரட்சி

போல்ஷிவிக் கட்சி செய்த வேலையின் பயனாக டிரான்ஸ்காகேசியாவில் புரட்சி இயக்கம் வலுத்தது. ரஷ்யாவில் நடந்த முதல் புரட்சியில் டிரான்ஸ்காகேசியா பெரிதும் பங்கு கொண்டது. ஜாரின் சர்வாதிகாரம் என்கிற அணையை உடைத்துக் கொண்டு புரட்சி வெள்ளம் மட மடவென்று பாய ஆரம்பித்தது. ஜார்ஜியா

விலுள்ள நகரங்களிலும் கிராமங்களிலும் தொழிலாளர்களின் இயக்கம் பலமான பொது ஜனங்களின் இயக்கமாக மாற ஆரம்பித்தது. நூற்றுக்கணக்கான வருஷங்களாகத் தங்களை அடக்கியொடுக்கி வைத்திருந்த நிலச்சுவான்தார், முதலாளி வர்க்கத்தார், ஜாரின் அதிகாரிகள் ஆகியோர்மீது ஜார்ஜிய மக்களுக்குள்ள அடங்காத கோபம் திடீரென்று பொங்கி எழுந்தது.

இந்தப் புரட்சி இயக்கத்தைச் சரியான வழியில் செலுத்திய பெருமை ஸ்டாலினைச் சேர்ந்ததாகும். சைபீரியாவிலிருந்து தப்பிய ஸ்டாலின் பாதும் நகருக்கு வந்து, பிறகு டிப்லிசுக்குச் சென்றார். அங்கே டிரான்ஸ்காகேசியப் போல்ஷிவிக் கட்சியின் தலைமை பூண்டு காரியங்களை நடத்த ஆரம்பித்தார். ரஷ்ய போல்ஷிவிக் கட்சி அமைப்பு முறையிலும், கொள்கையிலும், அரசியல் நோக்கிலும் தெளிவான முறையில் உருவாகிக் கொண்டு வந்த காலம் இது. ஸ்டாலினுடைய சரித்திரத்தைப் படிக்கும்போது முக்கியமான எல்லா விஷயங்களிலும் ஸ்டாலினும் லெனினும் ஒன்று போல எண்ணினர்கள் என்பது தெளிவாகத் தெரியும். ஸ்டாலின் தானுகச் சில விஷயங்களைச் செய்யவேண்டிய காலம் வந்த சமயத்திலும், அவருடைய பேச்சிலும் செயலிலும் மேலே குறிப்பிட்ட ஒற்றுமையையே நாம் பார்க்கிறோம்.

குழப்பம் மிகுந்திருந்த இந்தக் காலத்தில் தொழிலாளர்களின் மனதில் தெளிவை உண்டாக்கவும் சந்தர்ப்ப வாதிகளின் உண்மை நோக்கங்களை வெளிப்படுத்தவும் லெனின் பல கட்டுரைகளையும் புத்தகங்களையும் எழுதினர். புரட்சியைப்பற்றிய கொள்கையையும் புரட்சியை நடத்துகிற முறையையும் பற்றி மேலே சொன்ன கட்டுரைகளும் புத்தகங்களும் தொழிலாளர்களின் மனதில் பதியும் வண்ணம் விளக்கப்படுத்தின. லெனினைப் பின்பற்றி ஸ்டாலினும் பல கட்டுரைகளை எழுதினர். சிக்கலான விஷயங்களைத் தெளிவாகவும் விளக்கும்படியும் எழுதுகிற திறமை ஸ்டாலின் கையில் உள்ள ஒரு பெரிய ஆயுதம் என்று சொல்லவேண்டும். இந்த ஆயுதத்தை அவர் ரொம்பப் பயன் தரத்தக்கமுறையில் பிரயோகித்தார். எனவே, டிரான்ஸ்காகேசியாவில் லெனினுடைய தளகர்த்தராக இருந்து, ஸ்டாலின் தொழிலாளர்களை முதல் ரஷ்யப் புரட்சிக்குத் தயார் செய்தார்.

டிரான்ஸ்காகேசியப் போல்ஷிவிக் கட்சியின் பிரசாரத்தை நடத்துவதற்கு ஸ்டாலின் ஆவ்லாபாரில் ஒரு ரகசிய அச்சாபீசை ஸ்தாபித்தார். இந்த அச்சாபீஸிலிருந்து துண்டுப்பிரசுரங்களும், பத்திரிகைகளும் வெளிவரத்தொடங்கின. "காகேசியன் தொழிலாளர்களுக்கு," "காகேசஸ் தொழிலாளர்களே! வஞ்சம் தீர்க்கும் காலம் வந்துவிட்டது, எழுங்கள்!" "மிருகம் திணறுகிறது" என்பன போன்ற நூற்றுக் கணக்கான துண்டுப் பிரசுரங்கள் கடலலைகள் போல ஒன்றின்பின் ஒன்ருக ஆவ்லாபார் அச்சாபீஸிலிருந்து வந்துகொண்டிருந்தன. போலீசார் எவ்வளவோ முயன்றும் இந்த அச்சாபீஸ் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. ரஷ்ய—ஜப்பான் சண்டை ஒருபுறம் ஜார் அரசாங்கத்தின் அஸ்திவாரத்தை ஆட்டிக் கொண்டிருந்தது. உள்நாட்டில் புரட்சி மனப்பான்மை பயங்கரமான முறையில் வளர்ந்து கொண்டிருந்தது. இந்த நிலையில் ஆவ்லாபார் அச்சாபீஸ் ஒரே யடியாகத் தொழிலாளர்களைப் புரட்சி

செய்யும்படி தூண்டிக்கொண்டிருந்ததை பார்த்து டிரான்ஸ் காகேசிய அதிகாரிகளுக்குக் கிலிபிடித்துவிட்டது. ஆவ்லாபார் அச்சாபீஸ் இருந்த இடத்தை போலீஸார் கண்டு பிடித்தபோது ஜார் அரசாங்கம் அதை ஒரு பெரிய வெற்றியாக கொண்டாடியது என்ருல், அது எவ்வளவு கலவரமடைந்திருந்தது என்பதை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

புரட்சியின் சக்திகள் ஜாரின் சர்வாதிகாரக் கோட்டையைத் தாக்க ஆரம்பித்துவிட்டன. நாடுமுழுவதிலும் புரட்சிவேகம் காட்டுத்தீபோலப்பரவியது. எங்குபார்த்தாலும் மாற்றம். முதலாளி வர்க்கத்தாரிடையே மாற்றம். தொழிலாளர்களின் நிலையில் மாற்றம். ஒவ்வொரு பகுதியினரும் தங்கள் நலன்களைப் பாதுகாக்கப் புதுவழிகளைக் கண்டுபிடித்துக்கொண்டிருந்தார்கள். இந்தநிலையில் ரஷ்ய சமுதாய ஜனநாயக கட்சிக்கும் இனி எந்த வழியில் செல்ல வேண்டும், என்ன நடைமுறையைக்கையாளவேண்டும் என்பதைத் தீர்மானிப்பது ரொம்ப அவசரமான காரியமாயிருந்தது. எனவே சமுதாய ஜனநாயக கட்சியின் மூன்ருவது காங்கிரசைக் கூட்டுவது ரொம்ப அவசியமென்று லெனின் எண்ணினர். அதுதான் சரியான வழியென்று ஸ்டாலினும் ஒப்புக்கொண்டார். ஆனல் மென்ஷிவிக் கட்சியினருக்கு இந்த எண்ணம் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. தங்கள் மனம் போனவாறு நடப்பதற்கு அது தடையாக இருக்குமென்று எண்ணினர்கள். எனினும் போல்ஷிவிக் கட்சியினர் மூன்ருவது காங்கிரசைக் கூட்டினர்கள். அதில் மென்ஷிவிக் அங்கத்தினர்கள் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் அதே சமயத்தில் தனியான மகாநாடு ஒன்றை வேருெரு இடத்தில் நடத்தினர்கள்.

இந்த நிலையில் மேலே சொன்ன மூன்ருவது காங்கிரசைக் கூட்டுவதற்கு டிரான்ஸ்காகேசியாவில் ஸ்டாலின் அரும்பாடுபட்டார்.

மென்ஷவிக்குகளுக்கும் போல்ஷிவிக்குகளுக்கும் நடந்த இந்தப்போராட்டத்தில் ஸ்டாலின் போல்ஷிவிக் கட்சியை உருவாக்கி ஒன்று திரட்டுவதில் வெற்றியடைந்தார். அப்போதுதான் அவருடைய செயல்த்திறமை எல்லோருக்கும் தெரியவந்தது. டிரான்ஸ் காகேசியாவில் ஜார்டேனியா, ராமிஷ்விலி போன்ற மென்ஷிவிக் கூட்டத்தாரை எதிர்த்துப் போராடுவது ரொம்ப அவசியமாகப் போய்விட்டது. ஸ்டாலின் ஊர் ஊராகச்சென்று இந்த வேலையைத் திறம்படச் செய்தார். மென்ஷிவிக், அராஜகவாதிகள் இன்னும் இவர்களைப் போன்ற சந்தர்ப்பவாதிகளோடு பத்திரிகை மூலமும், நேர்முறையிலும், பொதுக் கூட்டங்களிலும் வாதாடி, அவர்களுடைய சித்தாந்தம் எவ்வளவு மோசமானது, எவ்வளவு தன்னலத்தை அடிப்படையாகக்கொண்டது, தொழிலாளர்களுக்கு எவ்வளவு துரோகம் பயப்பது என்பதை ஸ்டாலின் சந்தேகத்திற்கு இடமின்றி வெட்டவெளிச்சமாக்கி விட்டார். இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் சந்தர்ப்ப வாதத்தை வெளிப்படுத்தியதோடு அமையாமல், ஆங்காங்கே கட்சி ஸ்தாபனங்களை உருவாக்குகிற ஆக்கவேலையிலும் ஸ்டாலின் முனேந்தார். இந்த வாதப் போட்டிகளில் பேசும்போது ஸ்டாலின் ரொம்ப அமைதியாக ஆவேசத்திற்கு இடங்கொடாமல் உண்மைகளைச் சாமானியமக்களும் அறியும்படி விளக்கி, எதிரிகள் வாயடைத்துப் போகும்படி செய்துவந்தார்.

1904-டிசம்பர் மாதம் பாகுவில் பெரிய வேலை நிறுத்தம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த வேலை நிறுத்தம் ரஷ்யப் புரட்சியின் முன்னணிப்படைப் போலத்தோன்றியது. முதலாளிகள் பயந்துபோய் தொழிலாளர்களின் கோரிக்கையை ஒப்புக்கொண்டார்கள். இது ஒரு பெரிய வெற்றி. இந்த வெற்றியினால் தூண்டப்பட்டு தொழிலாளர்கள் எல்லோரும் போல்ஷிவிக் கட்சியின் தலைமையில் 1905-ஆம் வருஷப் புரட்சியில் ஊக்கத்தோடு பங்கெடுத்துக்கொண்டார்கள்.

போராட்டத்தின் முக்கியமான பிரசினைகளையெல்லாம் தொழிலாளர்களுக்கு விளங்கும்படி ஸ்டாலின் எடுத்துச்சொல்லுவார். வாழ்க்கையின் நிலைமை மாறுகிறபோது உடனடியாக அதற்குப் பொருத்தமான முறையில் எண்ணங்களும் மாறிவிடுகிறதில்லை, அதற்கு கொஞ்சகாலம் பிடிக்கும் என்கிற இந்த உண்மையை ஸ்டாலின் கீழ் வருமாறு ஒரு கூட்டத்தில் விளக்கிச் சொன்னார்:

ஒருவன் தனக்குச் சொந்தமான சிறிய செருப்புத் தொழிற்சாலை ஒன்றை நடத்தி வந்தான். ஏராளமான முதல்போட்ட இதைவிடப் பெரிய செருப்புத்தொழிற்சாலை யொன்று கொஞ்சகாலத்தில் அங்கே ஏற்பட்டு விட்டது. அவனால் இந்தப் பெரிய தொழிற்சாலையோடு போட்டிபோட முடியவில்லை. அவனுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. தனது தொழிற்சாலையை மூடிவிட்டு ஜீவனத்திற்கு வேறொரு தொழிற்சாலையில் வேலை பார்க்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. கிடைக்கிற சம்பளத்திலிருந்து சிறிது சிறிதாகப் பணத்தைச்சேர்த்துத் திரும்பவும் தனது தொழிற்சாலையை ஆரம்பித்துவிடலாம் என்று அவன் எண்ணினான். இந்த ஆசாமி இப்போது அன்றாடம் கூலி வாங்கி வயிறுவளர்க்கும் ஒரு தொழிலாளனே. ஆனால் எண்ணத்தில் மட்டும் அவன் தன்னை இன்னும் ஒருகுட்டிமுதலாளிஎன்றுஎண்ணிக்கொண்டிருக்கிறான். அவனுடைய உண்மையான அந்தஸ்துக்கும் அவனுடைய எண்ணத்திற்கும் இடையே ஒரு பெரியவித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்த எண்ணத்தை அவனால் உடனே உதறித்தள்ள முடியவில்லை. எனவே வாழ்க்கைநிலையில் முதலில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. பிறகு மாறிய வாழ்க்கை நிலைக்குப் பொருத்தமான வண்ணம் எண்ணம் மாறுகிறது. பொருளாதாரநிலையில் ஏற்படுகிற மாற்றங்களை யொட்டியே எண்ணங்களும் மாறுகிறபடியால், ஒரு குறிப்பிட்ட எண்ணமோ, இலட்சியமோ அவ்வக் காலத்திலுள்ள பொருளாதார அமைப்பை அடிப்படையாக கொண்டிருக்கிறதேயன்றி, இலட்சியவாதிகள் கூறுகிறபடி, மனதை அடிப்படையாக கொண்டிருக்கவில்லை. பொருளாதார நிலைமையோடு பொருந்தும் இலட்சியங்கள் தான் நீடித்துநிற்கமுடியும். பொருளாதார நிலைமைகளோடு ஒவ்வாத எண்ணங்கள் நிலைகொண்டு நிற்கமுடியாது.

எனவே, வாழ்க்கை நிலைமைகளிலிருந்தே எண்ணமும், ஒழுக்கமும், இதர பழக்க வழக்கங்களும் தோன்றுகின்றன. அவைகளின் அடிப்படையின் மீதெழுந்த அரசியலமைப்பு, நியாயம் வழங்குகிற முறை ஆகிய இவையாவும் பொருளாதார நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களுக்குதகுந்தவாறு மாறித்தான் ஆகவேண்டும். ஆதலால் இன்று நாம் காணும் அரசியல் அமைப்பு, எண்ணம், பழக்கவழக்கம் எல்லாவற்றிலும் அடிப்படையான மாறுதல் ஏற்படவேண்டு

மென்றுல் இன்று இருந்துவரும் பொருளாதார அமைப்பில் முதன் முதலில் அடிப்படையான மாறுதல் ஏற்படவேண்டும். பொரு ளாதார அமைப்பை அடிப்படையில் மாற்றுவதற்குத்தான் நாம் இப்போது முயற்சி செய்யவேண்டும். அதற்கு அரசியல் கிளர்ச்சி தான் வழியென்று சாமானியமான ஒரு சக்கிலியனிலிருந்து மூலா தாரமான சித்தாந்தங்களை ஸ்டாலின் விளக்கிச் சொல்லிவிடுவார்.

இந்தக் காலத்தில் ஸ்டாலின் செய்த ஆக்க வேலையில் முக்கிய மானது தொழிலாளர்கள் ஆயுதபாணிகளாகிப் புரட்சி செய்ய வேண்டுமென்று அவர் பிரசாரம் செய்ததேயாகும். தொழிலா ளர்களுக்கு ஆயுதங்கள் சேகரித்துக் கொடுப்பதற்கும் ஸ்டாலின் ஏற்பாடுகள் செய்தார்.

1905-ம் வருஷம் அக்டோபர் மாதம் ஜார் அரசாங்கம் பொது ஜனங்களுக்குச் சில அடிப்படையான உரிமைகளை வழங்குவதாக வாக்களித்தது. ஜார் அரசாங்கத்தின் வாக்குறுதியை யார் நம்பு வார்கள்? ஆனல் மென்ஷிவிக் கட்சியினர் அதை நம்பவே செய்த னர். மேலும் ஜனங்களுக்கு வெற்றி கிடைத்து விட்டது என்று அவர்கள் தம்பட்டமடித்து வந்தார்கள். இதை உண்மையென்று பெரும்பான்மையானகுடியானவர்களும் தொழிலாளர்களும் நம்பி விடலாமல்லாவா?

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு கூட்டத்தில் பேசும் போது ஸ்டாலின் சொன்னதாவது: "உங்களிடம் ஒரு கெட்ட பழக்கம் இருக்கிறது. யார் வந்து பேசினுலும், என்ன பேசினுலும் நீங்கள் கையைத்தட்டிப் பிரசங்கியை உற்சாகப் படுத்துகிறீர்கள். அவன் "சுதந்தரம் வாழ்க" என்று சொன்னல் நீங்கள் கையைத் தட்டுகிறீர்கள்; "புரட்சி வாழ்க" என்று அவன் சொல்லும் போதும் நீங்கள் கை தட்டுகிறீர்கள். இதுவரை கை தட்டியது சரிதான். ஆனல் யாராவது ஒரு பிணமி ஆசாமி வந்து "ஆயு தத்தை ஒழியுங்கள்" என்று சொல்லும்போதும் அல்லவா நீங்கள் கைத் தட்டுகிறீர்கள். ஆயுதம் இல்லாமல் புரட்சி எப்படி வெல் லும் என்பதை ஒரு கணமாவது சிந்தித்துப் பார்த்தீர்களா? "ஆயு தத்தை ஒழியுங்கள்" என்று சொல்லுகிற ஆசாமி எப்படிப்பட்ட புரட்சிகாரனே! இப்படிச் சொன்னவர் டால்ஸ்டாய் கொள் கையைப் பின்பற்றுவராக இருக்கலாம். அது யாராயிருந்தாலும் சரி, ஆயுதத்தை ஒழிக்கச் சொல்லுகிறவன் புரட்சிக்கு விரோதி, சுதந்திரத்துக்கு விரோதி என்பதில் கொஞ்சம் கூட சந்தேகம் இல்லை. எதிரியை வெல்லுவதற்கு இப்போது நமக்கு மிக அவசிய மாகத் தேவைப்படுகிற விஷயம் என்ன? நமக்கு மூன்று விஷயங் கள் தேவை. இதை மறவாமல் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். முதலாவது தேவை ஆயுதம். இரண்டாவது தேவை ஆயுதம். மூன்றுவது தேவை ஆயுதம். நமது தேவை யெல்லாம் ஆயுதமே."

டிரான்ஸ்காகேசியாவில் போல்ஷிவிக் கட்சியின் பத்திரிகை யான "பிராலிடேரியட்டிஸ்பிரிட் ஜோலா" (பாட்டாளி மக்களின் போராட்டம் என்று இதற்கு பொருள்) வில் ஸ்டாலின் 1904-ல் *தேசிய இனப் பிரசினையைப்பற்றி ஒரு கட்டுரை எழுதினர். தேசிய இனங்கள் எப்படி உருவாகின்றன என்பதை அவர் இந்தக் கட்டுரையில் ரொம்பத் தெளிவான முறையில் எழுதியிருக்கிருர்.

* தேசிய இனம் — Nationality

சுயநிர்ணய உரிமை தேசிய இனங்களின் பிறப்புரிமை. இந்த உரிமையை வழங்காமல், கலை, பண்பாடு, பாஷை சம்பந்தப்பட்ட வரையில்மட்டும் உரிமை வழங்கினால் போதும் என்று சொல்லுவது ரொம்பத் தீமையைபயப்பதாகும். ஒரு தேசிய இனத்திலிருந்து இன்னொரு தேசிய இனம் விரும்பினால் பிரிந்து போகும் அளவுக்கு அரசியல் உரிமை வழங்காவிடில் தேசியவிடுதலை என்கிற பிரசினையில் தொழிலாளர் - முதலாளி பிரசினை மறைந்து விடும். அதனால் பல தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் எல்லாம் வர்க்கப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒன்று படுத்துவதற்கு அது பெரிய தடங்கலாகிவிடும் என்று அந்தக்கட்டுரையில் ஸ்டாலின் எடுத்துக் காட்டினார்.

1905 நவம்பர் மாதம் காகேசிய போல்ஷிவிக் கட்சியின் நான்காவது மகாநாடு ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது. ஆயுத பாணிகளாகிப் புரட்சி செய்வதற்குத் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று இந்த மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

1905 டிசம்பர் புரட்சி ஏற்படுவதற்குச் சில நாள் முன்னரே டாமர்போர்ஸ் என்ற இடத்தில் போல்ஷிவிக் மகாநாடு ஒன்று கூடியது. இங்கேதான் ஸ்டாலின் முதல்முறையாக லெனினைச் சந்தித்தார். தனது முதல் சந்திப்பைப்பற்றி ஸ்டாலின் ரொம்ப உருக்கமாக எழுதியிருக்கிறார்: "டாமர்போர்சில் (பின்லாந்து)நடைபெற்ற மகாநாட்டிலேதான் நான் முதன்முதலாக லெனினைச்சந்தித்தேன். நமது கட்சியின் ஒப்பற்ற தலைவரான லெனின் அரசியலில் மட்டுமின்றி ஆகிருதியிலும் பிரமாண்டமான வடிவமுள்ள ஆசாமியாக இருப்பாரென்று எப்படியோ நான் எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் லெனினை நேரில் சந்தித்தபோது எனது ஏமாற்றத்தை என்னவென்று சொல்லுவது? ஒரு குள்ளமான ஆசாமி, ரொம்ப சாமானிய மனிதனைப்போல் இருக்கும் ஆசாமியைப் பார்த்து இவர்தான் லெனின் என்றால் என்னால் எப்படி நம்பமுடியும்?

"அந்தக் காலத்தில் 'பெரிய மனித'ரென்றால் அவர் கூட்டங்களுக்குக் கொஞ்சம் காலம் தாழ்ந்தே வரவேண்டும். ஜனங்கள் அவருடைய வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். கடைசியாக அவர் வரும்போது "உஸ்......அமைதி, அவர் வருகிறார்" என்று ஒருவர் மேடை மீது எழுந்து ஜனங்களை எச்சரிக்கை செய்வார். 'பெரிய மனிதர்' வருகிற காலத்தில் இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் ஏற்படுவது வழக்கம். இந்தச் சடங்குகள் அநாவசியமானவை என்று அப்போது எனக்குப் படவில்லை. ஏனெனில் அதனால் ஜனங்கள் மனதில் தலைவரைப்பற்றி அழுத்தமான ஒரு எண்ணம் பதிகிறது, மரியாதை உண்டாகிறது என்று நான் நினைத்தேன். இந்தப் பாவி மனுஷன் இதிலும் என்னை ஏமாற்றிவிட்டார். பிரதிநிதிகள் வருமுன்னமே லெனின் மகாநாட்டுக்கு வந்துவிட்டார். வந்தவர் ஒரு மூலையில் போய் சாவதானமாக உட்கார்ந்து கொண்டார். மகாநாட்டுக்கு வந்திருந்த ரொம்ப சாமானியமான பிரதிநிதிகளோடு அவர் எளிமையான முறையில் பேசிக் கொண்டிருந்தார். இப்படி அவர் நடந்து கொண்டது முக்கியமான பொது விதிகளை மீறி நடந்துகொள்ளுவதாகவே எனக்குப்பட்டது.

இருப்பதற்கு மிகவும் இன்றியமையாத அம்சம் என்பதைப் பிற்காலத்திலேயே நான் அறிந்தேன். லெனினுடைய பெருமைக்கு இது ஒரு முக்கியமான காரணமாகும்.''

லெனினுடைய பேச்சு சுருக்கமாகவும், ஆனால் எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். விஷயங்களைத் தெளிவுபடச் சொல்லுவதில் அவருக்கு விசேஷத்திறமை உண்டு. செயற்கையான முறையில் இல்லாத பொல்லாததெல்லாம் வருவித்துக்கொள்வது, கேட்போரை பிரமிக்கச் செய்வதற்காக அர்த்தமற்றமுறையில் வார்த்தைகளை அடுக்கிக்கொண்டுபோவது, நாடகப் போக்கில் அப்படியே இடையில்நிறுத்துவது, ஆரம்பிப்பது என்கிற இந்த அம்சங்களையெல்லாம் அவர் பேச்சில் காணமுடியாது. அவர் பேச ஆரம்பித்ததும் என்னமோபோல இருக்கும். படிப்படியாகக் கேட்போர் மனம் அவர் பேச்சில் போய்க் கவியும். இறுதியில் தங்களையே மறந்து அவர்கள் மனம் அதில் லயித்துவிடும். காரண காரியங்களோடு அவர் பேசும்போது அதை எதிர்த்து வாதாடுவது என்பது சாத்தியமான காரியமல்ல. ஒன்று அவர் சொல்லுவதை அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டும், அல்லது தோல்வியையாவது ஒப்புக்கொள்ள வேண்டும்.

நாம் மேலே சொன்ன இந்தக் குணங்களெல்லாம், லெனினைப் போல, ஸ்டாலினிடமும் நிறைந்திருந்தன.

டிசம்பர் புரட்சி தோல்வியில் முடிந்தது. இருந்தாலும், அதனுல் போல்ஷிவிக் கட்சியாரின் உறுதி குலையவில்லை. புரட்சியில் நம்பிக்கை குன்றுமலும், அயர்ச்சியடையாமலும் ஸ்டாலின் இருந்தது அவர் தோழர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பெரிதும் ஆறுதலை அளித்தது. அவருடைய உதாரணத்தை அவர்களும் பின்பற்றினர். “இரண்டு போராட்டங்கள்'' என்ற கட்டுரையில் 1905 ஜனவரியில் நடந்த புரட்சியையும், டிசம்பரில் நடந்த புரட்சியையும் ஒப்பிட்டு ஸ்டாலின் எழுதினர். ஜனவரிப் புரட்சியின்போது தொழிலாளர்கள் எல்லோரும் ஒன்றுபடவில்லை. அவர்களுக்குக் குடியானவர்களின் உதவியும் கிடைக்கவில்லை. ஆனல் டிசம்பர் புரட்சி அதற்கு முற்றிலும் மாறுயிருந்தது. அப்போது தொழிலாளர்கள் விக்கிரகங்களையும், ஜாரின்படத்தையும் சுமந்துகொண்டு ஊர்வலம் செல்லவில்லை. அதற்குப் பதிலாகச் செங்கொடிகளைப் பிடித்துக் கொண்டும், மார்க்ஸ், எங்கல்ஸ் படங்களை ஏந்திக்கொண்டும் சென்றனர். ''ஜார் நீடூழி வாழ்க'' என்ற கோஷத்திற்குப் பதிலாக ''புரட்சி நீடூழி வாழ்க!'' என்ற ஒலி வானைப்பிளந்தது. காரணம் இந்தப் புரட்சியை பாதிரி காபன் நடத்தவில்லை, பாட்டாளி மக்களின் கட்சி நடத்தியது என்பதுதான். டிசம்பர் புரட்சி தோல்வியுற்றதற்கு முக்கியகாரணம் தொழிலாளர்கள் இன்னும் பிளவுபட்டிருந்தார்கள், அவர்களது கட்சியில் ஒற்றுமையில்லை என்பதாகும். இன்னொரு பெரிய தவறு என்னவென்ருல் தொழிலாளர்கள் எதிர்த்துத் தாக்குவதற்குப் பதிலாகப் பாதுகாப்பிலிருந்துவிட்டார்கள். ஆதலால் எதிர்காலத்தில் புரட்சி வெற்றியடைய வேண்டுமென்ருல் தொழிலாளர்களின் கட்சியில் ஒற்றுமை ஏற்படவேண்டும்; தொழிலாளர்கள் முன்னேறித் தாக்க வேண்டுமென்று ஸ்டாலின் முடிவு கட்டினர்.

1906-ல் ஸ்டாக்ஹோமில் நடந்த ரஷ்ய சமுதாய ஜனநாயகக் கட்சியின் நான்காவது காங்கிரசில் ஸ்டாலின் கலந்துகொண்டார். இங்கே போல்ஷிவிக், மென்ஷ்விக் ஆகிய இவ்விரு பகுதியினருக்கும் உள்ள வித்தியாசத்தை ஸ்டாலின் வெகு அழகாக எடுத்துச் சொன்னார்: "பாட்டாளி மக்களின் சர்வாதிகாரமா, முதலாளி வர்க்கத்தாரின் சர்வாதிகாரமா என்பதுதான் இப்போது நமக்கு முன் இருக்கும் பிரசினை. இங்கேதான் நமது நோக்கங்கள் வேறுபடுகின்றன," என்று சொல்லி மென்ஷிவிக் கட்சிக்காரர்களை மேலே பேச முடியாதபடி அடித்துவிட்டார் ஸ்டாலின்.

1907-ல் நடந்த ஐந்தாவது கட்சிக் காங்கிரசில் போல்ஷிவிக்குகளுக்கு பூரண வெற்றி கிடைத்தது.

5. புரட்சிக்குப் பிறகு

முதல் ரஷ்யப் புரட்சி தோல்வியில் முடிந்தது. முதல் ரஷ்யப் புரட்சிக்கும் இரண்டாவது ரஷ்யப்புரட்சிக்கும் இடையிலுள்ள 10 வருஷகாலத்தில் போல்ஷிவிக்குகள் சோர்வின்றி விடாமுயற்சியோடு உழைத்தார்கள். மக்களை ஒன்று திரட்டியும், அவர்கள் மனதில் புரட்சியை ஊட்டியும், அவர்களது போராட்டங்களை நடத்த வழி காட்டியாக இருந்தும் அடுத்த புரட்சிக்கு அவர்கள் அடிகோலினார்கள்.

1905-ல் ரஷ்ய மக்கள் வீறு கொண்டு எழுந்தது ஜாருக்கும் அவருடைய அதிகாரிகளுக்கும் கொலை நடுக்கத்தை உண்டுபண்ணியது. இப்படித் தங்களைப் பயமுறுத்திய ஜனங்களைப் பழிக்குப்பழி வாங்குவதென்று ஜார் தீர்மானித்துவிட்டான். இந்த உணர்ச்சியிலேயே கொலை பாதகனை ஜாரின் கவர்னர்களும் வழக்கமான தங்கள் கொலைத் தொழிலை ஆரம்பித்தார்கள்; தொழிலாளர்களைக் கொன்று குவித்தனர். இம்மென்று சொன்னாலே போதும துப்பாக்கிக்கு இரையாக வேண்டியது தான். வீதிகளெல்லாம் ரத்தம் ஆறாக ஓடியது. போலீசார் புரட்சி இயக்கத்தின் தலைமை இடங்களை எல்லாம் சுட்டுப் பொசுக்கித்தள்ளினர். நீதி, நியாயம் என்கிற பேச்சே இல்லை.

ரஷ்யாவின் இதர பகுதிகளைப் போல பாகுவிலும் புரட்சிக் காலத்தில் தொழிலாளர்களுக்குக் கொடுத்திருந்த வசதிகளை யெல்லாம் முதலாளிகள் பிடுங்கிக் கொண்டார்கள். இப்போது என்ன செய்தாலும் கேள்வில்லை யல்லாவா? அரசியலில் ஜார் அரசாங்கம் செய்த கொடுமையைவிடப் பன்மடங்கு அதிகமான கொடுமையைப் பொருளாதாரத் துறையில் முதலாளிமார்கள் செய்துவந்தார்கள். சம்பளத்தைக் குறைத்தார்கள்; வேலைபார்க்கும் நேரத்தை அதிகப்படுத்தினார்கள்; கட்டாய வேலையை வற்புறுத்தினார்கள்; தொழிலாளர்களின் நன்மைக்காக வைத்திருந்த ஆஸ்பத்திரிகளையும் பள்ளிக்கூடங்களையும் மூடுகிற அளவு அவற்றின் செலவைக் குறைத்தார்கள்; அதேசமயத்தில் ஆறுலட்சரூபிள் போலீசுக்காகச் செலவு செய்தார்கள். தொழிலாளர்கள் சங்கங்களை அலட்சியம் செய்து முதலாளிகள் தங்கள் மனம் போனவாறு தொழிலாளர்களை வேலையிலிருந்து நிறுத்துவதும், அபராதம் விதிப்பதும், சவுக்கடி கொடுப்பதும் சர்வ சாதாரணமாகப் போய்விட்டது.

இந்த பத்து வருஷங்களில் லெனினும் ஸ்டாலினும் கட்சியைச் சிதைந்து போகாமல் வைத்துக் கொண்டு ரகசியமாக நடத்திவந்தார்கள். காலத்திற்குத் தகுந்தபடி நடைமுறையை மாற்றியமைத்துப் போராட்டத்தை நடத்தினர்கள். தொழிலாளர்களை ஒன்று திரட்டுவது ஒருபுறம் இருக்க, அவர்களுக்கு அரசியல் அறிவை ஊட்டவேண்டிய அவசியமும் அதிகமாயிருந்தது. அத்துடன் ஜாரின் போலீஸ் தொல்லையையும் சமாளிக்க வேண்டியிருந்தது. ஸ்டாலின் புரட்சிக்காரர்களில் ரொம்ப முக்கியமானவர் என்பதை ஜார் அரசாங்கம் தெரிந்துகொண்டது. புரட்சிவேலைக்கு அவருக்குச் சந்தர்ப்பமே இல்லாமல் அடித்துவிடவேண்டும் என்று அது எத்தனையோ வழிகளில் முயன்றுபார்த்தது. ஜாரின் போலீஸ் அவரைக் கைதுசெய்தது; சிறையில் அடைத்து வைத்தது; நாடு கடத்தியும் பார்த்தது. இதனால் எல்லாம் அதன் எண்ணம் பலிக்க வில்லை. 1902க்கும் 1913க்கும் இடையே போலீஸார் அவரை எட்டு முறை கைது செய்தார்கள், ஏழுமுறை நாடு கடத்தினர்கள். ஏழு முறை நாடுகடத்தியதில் ஆறுமுறை ஸ்டாலின் எப்படியோ தப்பித்துக்கொண்டு வெளிவந்துவிட்டார். போலீஸ் அவரை ஒரு இடத்துக்கு நாடுகடத்திய சில நாட்களுக்குள் ஸ்டாலின் வெளியேவந்து புரட்சிவேலையில் மும்முரமாக முனைவார். கடைசியாக நாடுகடத்திய போதுதான் அவர் தப்பிவரவில்லை. அதிலிருந்து 1917-ம் வருஷம் பிப்ரவரிமாதம் நடந்த புரட்சிதான் அவருக்கு விடுதலை யளித்தது.

1907 முதல் ஸ்டாலின் பாகுவில் இருந்து புரட்சி வேலையில் ஈடுபட்டார். டிரான்ஸ்காகேசியாவிலேயே பாகு பெரிய தொழிற்சாலைகளைக் கொண்ட பகுதியாகும். ரஷ்யாவில் தொழிலாளர் இயக்கத்தின் தலைமை ஸ்தானங்களில் பாகு ஒன்ருகும். பாகு தொழிலாளர்களைப் போல்ஷிவிக் கட்சியின் தலைமையின்கீழ் கொண்டு வர ஸ்டாலின் அரும்பாடு பட்டார். பாகுவில் தொழிலாளர்கள் ஏராளமாக இருக்கும் ஜில்லாக்களிலெல்லாம் மென்ஷிவிக் கட்சிக்கு அதிகமான செல்வாக்கு இருந்தது. மென்ஷிவிக்கட்சியின் இனிப்பான வார்த்தைகளில் தொழிலாளர்கள் மயங்கிப் போயிருந்தார்கள். இந்த சந்தர்ப்ப வாதக் கூட்டத்தின் பிடியிலிருந்து பாகு தொழிலாளர்களை விடுதலை செய்வது தனது முதல் கடமை என்று ஸ்டாலின் எண்ணினர். அதற்காக முற்போக்கான போக்குடைய தொழிலாளர்களின் உதவி கொண்டு போராட்டத்தை அவர் துவக்கினர். வெளிப்படையாகவும் ரகசியமாகவும் பல பத்திரிகைகளை நடத்தினர். இன்ன முறையில் முதலாளிகளை எதிர்க்க வேண்டும் இன்ன வழிகளைப் பின்பற்றவேண்டும் என்று அந்தந்த நிலைமைக்குத் தக்கவாறு போராட்டத்தை நடத்தத் தொழிலாளர்களுக்கு அவர் உதவியாக இருந்தார்.

1907 ஆகஸ்டில் பாகுவில் ஸ்டாலின் கட்சியின் மகாநாடு ஒற்றைக் கூட்டினர். இந்த மகாநாட்டில் பாகு தொழிலாளர்களெல்லாம் ஒரு பொது வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவைத் தெரிந்துகொண்ட பாகு எண்ணெய்த் தொழில் முதலாளிகள் ஒரு யோசனை செய்தனர். தொழிலாளர்களும் முதலாளிகளும் சேர்ந்து ஒரு மகாநாட்டைக் கூட்டுவது, அதில் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்துக் கொள்வது என்ற யோசனைதான் அது. தாங்கள் சம்பளம் கொடுத்து வைத்திருக்கும் கூலிப்படை

யினரைக் கொண்டு தொழிலாளர்களின் உறுதியைக் குலைத்து, அவர்களிடையே குழப்பத்தை உண்டாக்கிப் பொதுவேலைநிறுத்தம் ஏற்படாமல் அடித்துவிடவேண்டுமென்பது அவர்கள் எண்ணம். ஆனால் தொழிலாளர்களின் தலைவராக ஸ்டாலின் இருக்கும் போது, முதலாளிகள் அவ்வளவு சுலபமாக வெற்றியடைந்து விடமுடியுமா? அந்தச் சமயம் எண்ணெய் உற்பத்தியை அதிகப் படுத்த வேண்டுமென்று முதலாளிகள் ரொம்ப ஆவலாக இருந்தார்கள். இதுதான் பொதுவேலை நிறுத்தத்திற்கு நல்ல சந்தர்ப்பம் என்று கட்சி மகாநாடு முடிவு செய்தது. ஒரு வேலை நிறுத்தக் கமிட்டியையும் போல்ஷிவிக் கட்சியினர் நியமித்தார்கள். போனஸ் தருகிறோம், அது தருகிறோம், இது தருகிறோம் என்று முதலாளிகள் ஆசைகாட்டி வேலை நிறுத்தத்தை நடக்காமலடிக்க முயன்றார்கள். நாங்கள் "தருமம்" கேட்கவில்லை யென்று தொழிலாளர்கள் அவற்றை ஏளனத்தோடு புறக்கணித்து விட்டார்கள்.

பாகு முதலாளிகள் குறிப்பிட்ட மகாநாட்டில் கலந்து கொள்ளக்கூடாது என்று முடிவெடுத்த காலத்தில் ஸ்டாலின் விஷயத்தை விளக்கிச் சொன்னார். "மகாநாட்டில் கலந்து கொள்வதும், கலந்துகொள்ளாமலிருப்பதும் நமது தேவையையும் சந்தர்ப்பத்தையும் பொறுத்து முடிவுசெய்கிற காரியமேயன்றி, கொள்கையையொட்டி முடிவு செய்கிற விஷயமல்ல. முதலாளிகள் வேண்டும் என்கிற எந்த மகாநாட்டிலும் கலந்து கொள்ளக்கூடாது என்று ஒரேயடியாக எல்லாக் காலத்திற்கும் சேர்த்து முடிவு செய்யக் கூடாது. அதே மாதிரி அவர்கள் கோருகிற எல்லா மகாநாடுகளிலும் கலந்து கொள்வது என்றும் முடிவு செய்துவிடக்கூடாது. காலத்தையும் சந்தர்ப்பத்தையும் பொறுத்தே நாம் அவ்வப்போது முடிவு செய்யவேண்டும்," என்று ஸ்டாலின் எச்சரித்தார்.

1908 ஜனவரியில் பாகுவில் பல வேலை நிறுத்தங்கள் நடந்தன. அவற்றுள் பல வெற்றிபெற்றன.

1907ல் முதலாளிகள் குறிப்பிடும் மகாநாட்டில் கலந்துகொள்வதென்றால் சில அடிப்படையான நிபந்தனைகளை முதலில் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று ஸ்டாலின் தலைமையில் போல்ஷிவிக் அங்கத்தினர்கள் முடிவுசெய்திருந்தார்கள். மகாநாட்டை எப்போது கூட்டுவது என்பதைத் தீர்மானிக்கிற உரிமை தொழிலாளர்களுக்கே இருக்கவேண்டும். மகாநாட்டில் தங்கள் கோரிக்கைகளின் நியாயத்தை எடுத்துப்பேசும் உரிமையும், தங்கள் சங்கங்களை வைத்துக் கொள்ளும் உரிமையும் தொழிலாளர்களுக்கு இருக்க வேண்டும் என்பதுதான் அவர்கள் ஏற்கனவே செய்து வைத்திருந்த முடிவு. தொழிலாளர்கள் எல்லோரும் போல்ஷிவிக் கட்சியில் இருக்கிறார்கள், தாங்கள் எண்ணியபடி மகாநாட்டில் அவர்களை ஏமாற்றிவிட முடியாது என்று தெரிந்துகொண்ட முதலாளிகள், மகாநாட்டைக் கூட்டாமலிருப்பதற்கு வேண்டிய கெடுதல்களையெல்லாம் செய்து வந்தார்கள். மேலும் பொது வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்குமாறு தொழிலாளர்களை வேண்டுமென்றே கோப மூட்டி வந்தார்கள்.

ஆனால் பொது வேலை நிறுத்தத்திற்கு இது காலமில்லையென்று உணர்ந்த ஸ்டாலின் தனிப்பட்ட தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் செய்வதுதான் சரியான வழியென்று அபிப்பிராயப் பட்டார். முதலாளிகளின் கையாட்கள் வேலை நிறுத்தம் செய்யுங்

காலத்தில் தொழிலாளர்களுக்கிடையே கலகங்களை உண்டுபண்ணி ஜாரின் போலீஸைக்கொண்டு அடக்கச் சொல்லுவதற்கு முயன்று கொண்டிருந்தார்கள். ஆனால் ஸ்டாலின் அவ்வண்ணம் கலகங்கள் நேராதபடி பார்த்துக்கொண்டார்.

எனவே, எண்ணெய்த்தொழில் முதலாளிகளுக்கு விரோத மாக ஸ்டாலின் ஏற்பாடுசெய்த போராட்டம் சட்டப்படி செய்யும் போராட்டத்தை ரகசியமாக நடத்தும் போராட்டத்தோடு இணைக்க வேண்டுமென்ற லெனினுடைய சித்தாந்தத்திற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். ஜார் அரசாங்கத்தை முறியடிக்க நடத்தும் போராட்டத்திற்குள் தொழிலாளர்களைக் கொண்டுவர வேண்டும் என்று லெனின் வகுத்த கொள்கையை ஸ்டாலின் வெகு திறமையோடு நடைமுறையில் கையாள ஆரம்பித்தார். ஜாரின் கொலைகார மந்திரி ஸ்டோலிபின் மக்களை இல்லாத கொடுமைகளுக்கு ஆளாக்கிய அந்த இருளடர்ந்த காலத்தில் பாகுவில் தொழிலாளர்களின் போராட்டம் ஆக்கத்தோடு நடைபெற்று வந்தது ஒருபெரிய அதிசயமான விஷயம்தான். அந்தக் காலத்தில் டிரான்ஸ்காகேசிய போல்ஷிவிக் கட்சிப் பத்திரிகைகள் ரஷ்யா முழுவதிலும் பரவி நம்பிக்கை மனப்பான்மையை உண்டுபண்ணின.

லெனினுடைய சித்தாந்தத்தில் தோய்ந்த பலர் ஸ்டாலினுக்கு இந்த வேலையில் உதவியாக வந்து சேர்ந்தனர். இறுதியில் பாகு சமுதாய ஜனநாயகக் கட்சியில் போல்ஷிவிசம் பூரண வெற்றியடைந்தது. மென்ஷிவிக் கோட்டையாக இருந்த பாகு போல்ஷிவிக் கோட்டையாக மாறியது. ஸ்டாலின் தலைமையில் பாகு தொழிலாளர்கள் ரஷ்யப் புரட்சி இயக்கத்தின் முன்னணியில் நின்று வீரத்தோடும் தியாகத்தோடும் போரிட்டனர்.

பாகுவில் ஸ்டாலின் வசித்தகாலம் அவருடைய வாழ்க்கையிலேயே முக்கியமான காலம் என்றுசொல்லலாம். அதைப்பற்றி கீழ்வருமாறு அவரே சொல்கிறார்:

"எண்ணெய்த் தொழிலில் வேலைபார்க்கும் தொழிலாளர்களுக்கிடையில் செய்த இரண்டுவருஷப் புரட்சிவேலை என்னை ஒரு நல்ல போர் வீரனாகவும் தலைவனாகவும் செய்துவிட்டது. பாகுவில் முற்போக்கான தொழிலாளர்களோடு நான் வைத்துக்கொண்ட தொடர்பும், தொழிலாளர்க்கும் முதலாளிகளுக்கும் இடையே நடத்திய போராட்டமும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களின் தலைவனாக இருப்பது என்ன என்பதை எனக்குத் தெளிவாகக் காட்டிவிட்டன."

1908 மார்ச் 28-உ ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டார். 9 மாதம் சிறையில் வைத்திருந்த பிறகு ஜார் அரசாங்கம் அவரை இரண்டு வருஷத்திற்கு நாடு கடத்தியது. ஆனால், 1909 ஜூன் மாதமே ஸ்டாலின் வெளிவந்து விட்டார்! அவர் பாகுவிற்குத் திரும்பவும் சென்று ஏதோ ஒன்றும் நடக்காததுபோலத் தன் வேலையைப் பார்க்கத் தொடங்கினார்.

புரட்சி தோல்வியடைந்ததையும், ஸ்டோலிபின் நடத்தும் ராவண தர்பாரையும் கண்டு அஞ்சிய மென்ஷிவிக்குகளில் சிலர் ரகசியமாக நடக்கும் சமுதாய ஜனநாயகக் கட்சியை ஒழித்து விட வேண்டுமென்று பிரசாரம் செய்தனர். சட்டசபையில்

போல்ஷிவிக் அங்கத்தினர்கள் இருக்கக்கூடாதென்று போல்ஷிவிக் கட்சிக்குள்ளிருந்தே சிலர் கூச்சல் போட்டனர். இவ்விரு கூட்டத்தாரையும் லெனின் பலமாகக் கண்டித்தார். லெனின் சொல்வது சரி என்பதை உணர்ந்து ஸ்டாலின் அவரை ரொம்ப ஊக்கத்தோடு ஆதரித்தார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சுயராஜ்யம் கேட்பதற்காக இந்திய தேசபக்தர்களை சிறையில் தள்ளுகிறது. ஆனால் பிரிட்டிஷ் சிறைச்சாலை அதிகாரிகள் அவ்வளவு கடுமையாக நடந்துகொள்வதில்லை. அவர்கள் கேட்காமலிருக்கும் போதே "சுயராஜ்யம்" கொடுத்துவிடுகிறார்கள். "சுயராஜ்யம்" கொடுப்பதற்கென்றே பல தடியர்கள் ஜெயிலில் இருப்பார்கள். கைதி சிறைக்கு வந்ததும் "சுயராஜ்யம், சுயராஜ்யம் என்று அலறினயே, வா, சுயராஜ்யம் தருகிறோம்" என்று அவர்கள் பரபரவென்று அவனை ஒரு தனி அறைக்கு இழுத்துக் கொண்டுபோவார்கள். அங்கே அவர்கள் கொடுக்கும் 'சுயராஜ்யம்' சித்திரவதை செய்வதுதான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

நமது ஜெயிலதிகாரிகளைப்போல ஜாரின் ஜெயிலதிகாரிகளும் தங்கள் கைதிகளுக்குத் தாராளமாகச் "சுயராஜ்யம்" வழங்கி வந்தார்கள். ஸ்டாலின் சிறையிலிருக்கும் போதும் புரட்சிப் போராட்டத்தை நடத்திவந்தார். அங்கு அடைத்து வைத்திருந்த மற்ற அரசியல் கைதிகளும் ஸ்டாலினைப் பின்பற்றினார்கள். இவர்களுக்குச் சரியான பாடம் படிப்பிக்கவேண்டும் என்று ஜாரின் ஜெயிலதிகாரிகள் உறுதி செய்து கொண்டார்கள். ஸ்டாலின் இருந்த சிறைக்கு ஒரு பட்டாளத்தை அனுப்பி வைத்தனர். முற்றத்தில் துருப்புகளை இரண்டு வரிசையாக நிறுத்தி, அந்த இரண்டு வரிசைக்கும் நடுவில் அரசியல் கைதிகளை அவர்கள் ஓட்டுவார்கள். ஓடும்போது இரண்டுபுறத்திலுமிருந்து தங்கள் துப்பாக்கியின் முனையைக்கொண்டு அவர்களை நன்ருகப் புடைப்பார்கள். ஸ்டாலினுக்கும் இந்த கௌரவம் கிடைத்தது. மார்க்ஸ் புத்தகத்தை கையில் ஏந்திக்கொண்டு அஞ்சா நெஞ்சத்துடன் தலை நிமிர்ந்த வண்ணம் ஸ்டாலின் அந்த மிருகங்களுக்கு இடையே நடந்து சென்ருர். அடி சரமாரியாக விழுந்தது. இறுதியில் பொதுவுடமை வெல்லும் என்கிற திடமான நம்பிக்கைக்குமுன் இந்த அடியும் உதையும் அவரை என்ன செய்யமுடியும்?

1910, மார்ச் மாதம் திரும்பவும் ஸ்டாலினைக் கைதுசெய்து பழைய இடத்துக்கே நாடுகடத்தினார்கள். அங்கிருந்தபடியே அவர் லெனினோடு தொடர்பு ஏற்படுத்திக்கொண்டார். வெளிப்படையாக இருப்பதோடன்றி ரகசியமாகவும்பாட்டாளிமக்களின்கட்சி வேலை செய்யவேண்டுமென்ற அபிப்பிராயமுடையவர்கள் எல்லோரையும் ஒரு கட்சியாகத் திரட்டவேண்டுமென்று லெனின் அபிப்பிராயப்பட்டார். அந்த அபிப்பிராயத்தைத் தான் பூரணமாக ஒப்புக்கொள்ளுவதாக ஸ்டாலின் கடிதம் மூலம் லெனினுக்குத் தெரிவித்தார்.

1911-ல் ஸ்டாலின் சிறையிலிருந்து தப்பி பீடர்ஸ்பர்க்குக்கு வந்தார். அங்கே மென்ஷிவிக், டிராஸ்கியைப் பின்பற்றுபவர்கள் ஆகிய இவர்களை எதிர்த்து ஸ்டாலின் போராட்டம் நடத்தினர். திரும்பவும் போலீஸார் கைது செய்து பழைய இடத்துக்கே அவரை அனுப்பி வைத்தார்கள். திரும்பவும் ஸ்டாலின் தப்பி வந்துவிட்டார்.

1912, ஜனவரியில் ஒரு முக்கியமான சம்பவம் நிகழ்ந்தது. பிரேக்கில் நடந்த மகாநாட்டில் மென்ஷிவிக்குகளை வெளியேற்றி விட்டு போல்ஷிவிக்கட்சி சுதந்திரமான ஒரு தனித்த கட்சியாக உருவாகியது.

6. புரட்சி இயக்கம் ஓங்குகிறது

பீடர்ஸ்பர்க்கிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள சைபீரியாவில் லீனு என்ற இடத்தில் தங்கச் சுரங்கங்கள் பல இருக்கின்றன. இந்தச் சுரங்கங்கள் அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் முதலாளிகளின் கையிலிருந்தன. சுரங்கத் தொழிலாளர்களை பிரிட்டிஷ் முதலாளிகளும் அவர்களது ரஷ்யப் பங்காளிகளும் பயங்கரமான முறையில் கொள்ளையடித்து வந்தார்கள். சுரங்க முதலாளிகள் செய்த கொடுமையையும் அவமானத்தையும் தாங்க மாட்டாமல் அங்கு வேலைசெய்த 6000 தொழிலாளர்களும் 1912 ஏப்ரல் மாதம் வேலை நிறுத்தம் செய்தார்கள். அமைதியான முறையில் முதலாளிகளிடம் முறையிடச் சென்றபோது ஜாரின் போலீசார், ஏற்கனவே சுரங்க முதலாளிகளோடு செய்த ஏற்பாட்டின்படி, தொழிலாளர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து 500 பேரை அந்த இடத்திலே கொன்று தள்ளினர்கள்.

இந்தச்செய்தி மற்ற ரஷ்யத்தொழிலாளர்கள் காதுக்கு எட்டியதும் அவர்களுக்குத் தாங்கமுடியாத கோபம் உண்டாயிற்று. இந்த மிருகத்தனத்தை இனி எங்களால் சகித்துக் கொள்ள முடியாதென்று பீடர்ஸ்பர்க், மாஸ்கோ இன்னும்பல முக்கியமான நகரங்களிலுள்ள தொழிலாளர்கள் எல்லாம் பொங்கியெழுந்தனர். ஊர்வலம் வருவது, கூட்டங் கூடிக் கண்டனம் செய்வது, வேலை நிறுத்தம் செய்வது ஆகிய இவைகளின் மூலம் தொழிலாளர்கள் அடங்காத தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர்கள். மிருகத்தனமான இந்தச் செயலை எண்ணி அழுவதிலும் கண்டனம் செய்வதிலும் பயனில்லை. இதற்கு ஒரேவழி பொது ஜனப் போராட்டம்தான் என்று தொழிலாளர்கள் உணர்ந்துகொண்டார்கள். ரஷ்ய அரசாங்க சபையில் இதைப்பற்றிக் கேள்வி கேட்டபோது, "போலீசார் சுட்டார்கள், இனியும் சுடத்தான் செய்வார்கள்" என்று ஜாரின் மந்திரி சொன்ன பதில் தொழிலாளர்களின் கோபத்தை இன்னும் அதிகப் படுத்தியது.

லீனுத் தொழிலாளர்களுக்காக ரஷ்யாவின் இதர பகுதிகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் நான்கு லட்சம் பேருக்குமேல் வேலை நிறுத்தம் செய்தார்கள் என்ருல், புரட்சித் தீ மீண்டும் சுடர் விட்டு எரிய ஆரம்பித்துவிட்டது என்பதை அது தெளிவாகக் காட்டுகிறதல்லவா? டிராட்ஸ்கியின் கொள்கையைப் பின்பற்றுபவர்களும் இதர சந்தர்ப்ப வாதிகளும் புரட்சியைக் குழிதோண்டிப் புதைத்துவிட வேண்டுமென்று பிரசாரம் செய்ததெல்லாம் வீணுயிற்று. இந்தச் சுயநல வெறியர்களையும் சந்தர்ப்பவாதிகளையும் கேட்டுக்கொண்டா புரட்சி வருகிறது? அரசியல் போராட்டத்தின் அறிகுறிகளோடு தோன்றிய இந்த வேலை நிறுத்தங்கள் போல்ஷிவிக் கட்சியின் தலைமையிலேயே நடந்தன. சுதந்திரக் குடியரசு வேண்டும், ஒரு நாளைக்கு எட்டுமணி நேரத்திற்குமேல்

வேலை வாங்கக்கூடாது, நிலச் சுவான்தார்களிடமுள்ள நிலங்களைப் பறிமுதல் செய்யவேண்டும் என்ற போல்ஷிவிக் கட்சிச் சுலோகங்களைத் தொழிலாளர்கள் எல்லோரும் கோஷித்தனர்.

இந்தக்காலத்தில் ரஷ்யாவில் இயந்திரத்தொழில் வியக்கத்தக்க அளவு வளர்ச்சியடைந்திருந்தது. தொழில் வளர்ச்சியின் காரணத்தினால் தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகியிருந்தது. 500 பேருக்குஅதிகமான தொழிலாளர்களையுடைய தொழிற்சாலைகளே அதிகமாகப்பெருகியபடியால் தொழிலாளர்கள் ஒன்றுசேர்வதற்கு இலகுவாயிருந்தது. எனவே புரட்சி இயக்கமும் பன்மடங்கு வலுப்பட்டது. புரட்சி இயக்கத்தை நடத்த உதவிக்கு போல்ஷிவிக் கட்சியும் இருந்தது. சந்தர்ப்ப வாதிகளின் நோக்கங்களை வெட்ட வெளிச்சமாக்கிக் கட்சியை ஒழுங்கான துறையில் நடத்த லெனினும் ஸ்டாலினும் இருந்தார்கள். புரட்சி வெற்றியடையப்போகிறது என்பதற்கு இதைவிட நல்ல அறிகுறிகள் வேறு என்னவேண்டும்?

வோலாக்டா சிறையிலிருந்து தப்பிய ஸ்டாலின் வீண சம்பவத்தை கேட்டு பீட்டர்ஸ்பர்க்குக்கு விரைந்தார். இந்தச் சமயத்தில் தான் புகழ்வாய்ந்த 'பிரவடா' (உண்மை) என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. இதை ஸ்தாபிப்பதற்கு ஸ்டாலின் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். பிரவடாவின் முதல் சஞ்சிகை வெளிவந்த தினத்தில் போலீஸார் ஸ்டாலினைக் கைதுசெய்து நாரிம் என்ற இடத்திற்கு நாடு கடத்தினர். வழக்கப்படி ஸ்டாலின் அங்கிருந்து தப்பித்துக் கொண்டு திரும்பவும் பீட்டர்ஸ்பர்க் வந்து சேர்ந்தார். போல்ஷிவிக் காரியக்கமிட்டியின் அங்கத்தினராகவும் பிரவடாவின் ஆசிரியராகவும் இருந்து ஸ்டாலின் ஊக்கத்தோடு போராட்டத்தை நடத்தி வந்தார்.

இந்தச் சமயம் நான்காவது அரசாங்க சபையின் தேர்தல் பிரசாரம் பலமாக நடந்துகொண்டிருந்தது. இந்தப் பிரசாரத்தை ஸ்டாலின் திறமையான முறையில் பயன்படுத்திக்கொண்டார். போல்ஷிவிக் காரியக்கமிட்டியும் லெனினும் கிராகோவில் இருந்த காலம் இது. லெனின் இப்படி இப்படிச் செய்யவேண்டும் என்று செய்தி அனுப்பினர். அதன்படி ஸ்டாலின் அவர் உத்தரவுகளை நிறைவேற்றி வைத்தார்.

அக்டோபர் மாதம் அரசாங்க சபைக்குத் தேர்ந்தெடுத்த போல்ஷிவிக் பிரதிநிதிகளின் மகாநாடு நடைபெற்றது. 'பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர் தங்கள் பிரதிநிதிகளுக்குக் கொடுத்த உத்தரவு' இந்த மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதைத்தயாரித்தது ஸ்டாலினே. லெனின் இதை ரொம்பப் புகழ்ந்து கூறினர். தொழிலாளர் வர்க்கமே தலைமை தாங்கிப் புரட்சியை நடத்தப்போகிறது. புரட்சிப்போராட்டத்தில் முன்னணியில் நிற்கும் தொழிலாளர் வர்க்கத்தின் கூட்டாளிகள் குடியானவர்களே. அந்தப்போராட்டத்தை நடத்தத் தற்போது ரொம்ப உபயோகமாக இருப்பது அரசாங்க சபையாகும். அரசாங்க சபையின் மேடையின் மீது இருந்து சமுதாய ஜனநாயக கட்சியின் அங்கத்தினர்கள் பாட்டாளி மக்களின் இலட்சியத்தைக் கோஷிக்கட்டும் என்று அந்த உத்தரவு கூறியது.

1912 நவம்பர்மாதம் அரசாங்க சபை ஆரம்பமாயிற்று. அதை ஆரம்பிக்கும் தினத்தன்று ஒரு பெரிய அரசியல் ஊர்வலம் ஒன்றை ஸ்டாலின் நடத்தினர்.

இந்தக்காலத்தில் ஸ்டாலின் லெனினேடு எழுத்து மூலம் தொடர்பு வைத்துக்கொண்டார். ஆனல் லெனின் அவரை நேரில் பார்க்க விரும்பியதனல் ரகசியப் போலீசாரின் கண்ணுக்குப்படா மல் ஸ்டாலின் கிராக்கோ போய்ச்சேர்ந்தார். பல முக்கியமான விஷ யங்களைப்பற்றி இருவரும் பேசினர்கள். பிறகு ஸ்டாலின் ரஷ்யா திரும்பினர். ரஷ்யாவில் ஸ்டாலினுக்கு ஆபத்து ஏற்படுமென்று, வெளிநாட்டிலேயே இருக்கும்படி லெனின் அவரிடம் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். ஆனல் ஸ்டாலின் அதற்கு இசையவில்லை.

''மார்க்சியமும் தேசிய இனப் பிரசினையும்'' என்ற புத்தகத்தை ஸ்டாலின் எழுதி முடித்தார். இதில் தேசிய இனங்களுக்குப் பூரண அரசியல் சுதந்திரம் வழங்குவதுதான் ரஷ்யத் தொழிலாளர் களிடையே பிளவு ஏற்படாமலிருப்பதற்கு வழி, அதுதான் நியாய முங்கூட என்பதை ஸ்டாலின் ரொம்பத் திறமையோடு எடுத்துக் காட்டியிருக்கிறர்.

இந்தப் புத்தகத்தை எழுதி முடித்துவிட்டு ஸ்டாலின் பீட்டர்ஸ் பர்க்குக்கு வந்தார். ஸ்டாலினிடமிருந்து ரொம்ப நாளாக ஒரு சமா சாரமும் வராதது, லெனினுக்குப் பயமாய் போய் விட்டது.

'''வாசிலி' (இது ஸ்டாலின் வைத்துக் கொண்ட மாறு பெயர்) யிடமிருந்து ஏன் ஒரு செய்தியும் வரவில்லை? அவருக்கு என்ன நேர்ந்தது? எனக்கு ரொம்பக் கவலையாக இருக்கிறது,'' என்று லெனின் ஒரு கடிதத்தில் எழுதி விசாரித்தார்.

ஸ்டாலினைக் கைதுசெய்ய ஜாரின் போலீஸ் முயன்று கொண் டிருந்தது. 'பிரவடா' வுக்குப் பொருளுதவி செய்யும் வண்ணம் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஸ்டாலின் அதற்கு வந்திருந்தார். சமயம் பார்த்துக்கொண்டிருந்த போலீஸார் ஸ்டாலி னைக் கைது செய்தார்கள். வடதுருவத்திற்கு அப்பாலுள்ள குரைக்கா என்ற கிராமத்திற்குக் காருண்யம் பொருந்திய ஜாரின் போலீஸார் அவரை அனுப்பிவைத்தார்கள். இந்தமுறை ஸ்டாலின் தான் வழக்கமாகச் செய்கிற காரியத்தைச் செய்யவில்லை, அதா வது தப்பித்துக் கொள்ளவில்லை. 1917-ம் வருஷம் பிப்ரவரி புரட்சி யின் போதுதான் அவருக்கு இந்தச் சிறையிலிருந்து விடுதலை கிடைத்தது.

ஸ்டாலின் குரைக்கா கிராமத்திலிருந்த காலத்தில் அவரைப் பார்க்கச் சென்ற இரண்டு தோழர்கள் ரொம்ப ரசமான சம்பவம் ஒன்றைவர்ணிக்கிறர்கள். எதிர்பாராதமுறையில் இவர்களைப் பார்த் ததும் ஸ்டாலினுக்கு அளவில்லாதமகிழ்ச்சிஏற்பட்டது. விருந்தினர் களுக்கு தன்னல் ஆன உபசாரம் எல்லாம் செய்தார். ஓடோடியும் போய் தான் போட்டு வைத்திருந்த மீன் வலையிலகப்பட்ட ஒரு பெரிய மீனைத் தோளில்போட்டுக்கொண்டு திரும்பிவந்தார். ''அனு பவம் வாய்ந்த இந்தச் செம்படவன்'' சொன்னபடி அவர்கள் அந்த மீனைச் சமைத்தார்கள். சமையல் வேலை நடக்கும்போது, போல்ஷி விக் கட்சி விஷயங்களையும் அவர்கள் பேசினர்களாம்.

1914-ம் வருஷம் ஏகாதிபத்தியப் போர் ஆரம்பமாயிற்று. இரண்டாவது சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தலைவர்கள் பாட் டாளி மக்களுக்குத் துரோகம் செய்து வெட்கமில்லாமல் ஏகாதி பத்திய வாதிகளோடு சேர்ந்து கொண்டார்கள். லெனினைத்

தலைவராகக் கொண்ட போல்ஷிவிக் கட்சி மட்டும் உண்மையோடு நின்றது. ஏகாதிபத்தியப்போரை எதிர்க்க வேண்டுமென்று போல்ஷிவிக் கட்சியார் பிரசாரம் செய்தார்கள். லெனின் இருக்கும் இடத்திலிருந்து ஆயிரக்கணக்கான மைலுக்கப்பால் வெளி யுலகத்தோடு தொடர்பற்ற நிலையில் ஸ்டாலின் இருந்தாலும், இந்தப் போரைப் பற்றி லெனின் என்ன எண்ணினரோ அதே முறையில் ஸ்டாலினும் எண்ணினர். இது ஒரு ஆச்சரியமான காரியம்தான். ஆயினும், உண்மையான மார்க்ஸியத்தைத் தெரிந்துகொண்டவர்கள் ஒன்றுபட்ட உள்ளம் படைத்திருப்பதில் வியப்பொன்றுமில்லை. 1915ம் வருஷம் அவர் லெனினுக்கு இதைப்பற்றி எழுதினர்.

1917 வருஷம் பிப்ரவரி மாதம் புரட்சி ஆரம்பித்து விட்டது என்ற செய்தியை கேட்டு ஸ்டாலின் புளகாங்கித மடைந்தார். உடனே லெனினுக்கு ஒரு சந்தோஷச் செய்தி அனுப்பிவிட்டு பெட்ரோகிராடுக்குப் பயணமானர்.

7. இரண்டு புரட்சிகள்

1917 வருஷம் ரஷ்ய சரித்திரத்தில் ஒரு மகத்தான வருஷமாகும். இந்த வருஷம் இரண்டு புரட்சிகளைப் பார்த்தது. பிப்ரவரிப் புரட்சி ஜார் அரசாங்கத்தை முறியடித்தது. அக்டோபர் புரட்சி முதலாளி வர்க்கத்தாரின் அரசாங்கத்தைத் தூக்கி யெறிந்து பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தை நிலை நாட்டியது.

1917, மார்ச் மாதம் ஸ்டாலின் பெட்ரோகிராடில் கால் வைத்தார். அன்றைய தினமே "பிரவடா"வை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். தலைமறைவாக இருந்த போல்ஷிவிக் கட்சி வெளியில் வந்தது. கட்சியின் முக்கியமான அங்கத்தினர்களில் பலர் தொலை தூரங்களிலுள்ள சிறைச்சாலைகளிலிருந்து விடுதலையடைந்து பெட்ரோகிராடுக்கு வந்து கொண்டிருந்தனர். லெனின் இன்னும் வெளி நாட்டிலே தான் இருந்தார். புதிதாக ஏற்பட்ட தற்காலிக பூர்ஷ்வா அரசாங்கம் அவரை வராமல் தடுப்பதற்கு வேண்டிய காரியங்களை யெல்லாம் செய்து கொண்டிருந்தது. நிலைமை ரொம்ப நெருக்கடியாக இருந்தாலும் ஸ்டாலின் பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியிலிருந்து சமதர்மப் புரட்சிக்குப் போவதற்குக் கட்சியைத் தயார் செய்து கொண்டிருந்தார். போல்ஷிவிக் கட்சியின் மத்திய கமிட்டியின் வேலைகளையும், பெட்ரோகிராட் கமிட்டியின் வேலைகளையும் அவரே பார்த்து வந்தார். ஸ்டாலின் வகுத்த கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு போல்ஷிவிக்குகள் செயலாற்றத் தொடங்கினர். தனது கட்டுரைகளில் இந்தக் கொள்கைகளை ஸ்டாலின் விளக்கி எழுதினர். பெட்ரோகிராடில் தொழிலாளர்களின் முயற்சியினல் தோன்றிய தொழிலாளர் - போர்வீரர் சோவியத்தை (சபை) அடிப்படையாகக் கொண்டு ரஷ்யா முழுவதிலும் இம்மாதிரி சோவியத்துகளை நிருமாணித்து இந்த சோவியத்துகளுக் கெல்லாம் தலைமையான ஒரு மத்திய சோவியத்தை ஏற்படுத்த வேண்டும். ரஷ்யா முழுதுமுள்ள தொழிலாளர்களுக்கும், போர்வீரர்களுக்கும் பிரதிநிதியாக விளங்கும் இந்த மத்திய சோவியத் ஜனங்களின் புரட்சி அதிகாரத்தின் ஸ்தாபனமாக இருக்குமென்று ஸ்டாலின் பெட்ரோகிராட்டுக்கு வந்தவுடன் எழுதிய முதல் கட்டுரையில் குறிப்பிட்டார்.

தற்காலிக அரசாங்கம் ஏற்பட்டதனல் போரின் ஏகாதிபத்தியத் தன்மை மறைந்து விடவில்லை யென்றும், அது நியாயமற்ற கொள்ளைக்காரர்களின் போராகத்தான் இருக்கிறதென்றும் ஸ்டாலின் தனது கட்டுரைகளின் மூலம் காட்டினர்.

தற்காலிக பூர்ஷ்வா அரசாங்கத்தில் நம்பிக்கை வைக்கக் கூடாது என்று ஸ்டாலினும் மாலடாவும் எடுத்துப் பேசினர்கள். இதைப் போல்ஷிவிக்கட்சியின் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் ஆதரித்தார்கள். மென்ஷிவிக், சமதர்ம–புரட்சிக் கட்சிக்காரர்கள் தற்காலிக பூர்ஷ்வா அரசாங்கத்தை ஆதரித்துப்பேசினர். காமனேவும் மற்ற சந்தர்ப்ப வாதிகளும் சில நிபந்தனைகளோடு அதை ஆதரித்தனர். இந்த இரண்டு போக்குகளையும் போல்ஷிவிக் கட்சி பலமாகக் கண்டித்தது.

1917, ஏப்ரல் 3உ நீண்ட அன்னிய நாட்டு வாசத்திற்குப் பிறகு லெனின் ரஷ்யா திரும்பினர். தங்கள் ஒப்பற்ற தலைவர் லெனின் வருகிறர் என்ற செய்தியைக் கேட்டுப் பெட்ரோகிராட் தொழிலாளர்கள் உள்ளம் பூரித்தார்கள். ஸ்டாலின் தொழிலாளர்களின் பிரதிநிதிகளடங்கிய ஒரு கூட்டத்தின் தலைவராகச் சென்று பியேலோ – ஆஸ்ரோவ் என்ற இடத்தில் லெனினை எதிர் சென்று வரவேற்றர். பெட்ரோகிராடின் பின்லாந்து ரயில்வே ஸ்டேஷனில் தொழிலாளர்கள் லெனினை வரவேற்ற வைபவம் கண்கொள்ளாக் காட்சியாகும். அது ஒரு பெரிய புரட்சிப் பிரவாகமாக இருந்தது. வந்த மறுநாளே லெனின் தனது புகழ்வாய்ந்த "ஏப்ரல் கொள்கை"யை வெளியிட்டார். பூர்ஷ்வா – ஜனநாயகப் புரட்சியிலிருந்து சமதர்மப் புரட்சிக்குச் செல்லுவதற்குரிய போராட்டத்தின் திட்டத்தை அற்புதமான முறையில் இந்தப் புத்தகத்தில் அவர் வகுத்திருந்தார். ஜாரின் வீழ்ச்சிக்குப் பிறகு போராட்டத்தில் ஏற்பட்ட புதிய நிலைமைகளுக்குப் பொருத்தமான முறையில் கட்சியின் போக்கை இது மாற்றியமைத்தது. 1917, ஏப்ரல் 24உ நடைபெற்ற போல்ஷிவிக் கட்சி மகா நாட்டில் இந்தக் கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் ஸ்டாலின் லெனினுடைய கொள்கையை ஆதரித்தும், முதலாளித்துவத்தை ரகசியமாகப் பாதுகாக்க விரும்பிய காமனேவ், ரைகாவ் கூட்டத்தைப் பலமாகக் கண்டித்தும் பேசினர். தேசிய இனப் பிரசினையைப் பற்றிய தனது அறிக்கையை ஸ்டாலின் இங்கே சமர்ப்பித்தார்.

இந்த மகா நாட்டுக்குப் பிறகு, மத்திய கமிட்டியிலிருந்து ஒரு நிர்வாகக் கமிட்டியை அமைத்தார்கள். இந்த நிர்வாக கமிட்டியில் ஸ்டாலின் ஒரு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்று வரை அவர் இந்தக் கமிட்டியில் இருந்து வருகிறர்.

ஏப்ரல் மகாநாட்டில் எடுத்த முடிவுகளை மூலாதாரமாகக் கொண்டு போல்ஷிவிக் கட்சி பொது ஜனங்களைத தங்கள் பக்கம் திருப்பவும், அவர்களைப் போராட்டத்திற்குத் தயார் செய்யவும் வேண்டிய வேலையில் ரொம்ப ஊக்கத்தோடு ஈடுபடத் தொடங்கியது. சம்பவங்கள் அதிவேகமாக நிகழ்ந்து கொண்டிருந்த இந்தப் புரட்சிக் காலத்தில் லெனினும் ஸ்டாலினும் பொது ஜனங்களுக்கு வழிகாட்டியாக இருந்து போராட்டத்தை நடத்தினர்கள்.

கட்சியின் வேலைகளை எல்லாம் ஸ்டாலினே மேற்பார்த்து வந்தார். கட்சியின் மத்திய கமிட்டியின் அங்கத்தினர் என்கிற முறையில் அவர் பெட்ரோகிராட் கமிட்டியில் பிரதானமான பங்கெடுத்துக் கொண்டார். 'பிரவடா' பத்திரிகையை மேற்பார்த்து வருவதோடு, அதிலும் இதர கட்சிப் பத்திரிகைகளிலும் கொள்கையையும் நடைமுறையையும் பற்றிய முக்கியமான சித்தாந்தங்களைப்பற்றிக் கட்டுரைகள் எழுதி வந்தார். பெட்ரோகிராட் முனிஸிப்பல் தேர்தல் நடந்த காலத்தில் கட்சியின் பிரசாரத்தை வெகு திறமையோடு நடத்தினர். ராணுவத்திலுள்ள போல்ஷிவிக் கட்சி ஸ்தாபனங்கள் எல்லாம் சேர்ந்து அகில ரஷ்ய மகாநாடு நடத்தியபோது அதில் லெனினும் ஸ்டாலினும் கலந்து கொண்டார்கள். சரித்திர மகிமை பொருந்திய ஜூன் 18ஆ ஊர்வலத்தை லெனினோடு சேர்ந்து ஸ்டாலின் ஏற்பாடு செய்தார்.

போல்ஷிவிக் கட்சியின் சுலோகங்களைக் கோஷித்துக்கொண்டு லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பெட்ரோகிராட் வீதிகளில் ஊர்வலம் சென்றதைப் பார்த்துப் புரட்சித் தலைவர்களான லெனினும் ஸ்டாலினும் உள்ளம் பூரித்தார்கள். அதே சமயத்தில் தற்காலிக அரசாங்கத் தலைவரான கெரென்ஸ்கியும் அவரை ஆதரித்த சந்தர்ப்பவாதக் கூட்டங்களும் கதி கலங்கினர்கள். இந்த ஊர்வலத்திற்கு முதல் நாள், ஸ்டாலின் தொழிலாளர்களுக்கு ஒரு அறிக்கை விட்டார். அதில் அவர் செய்து கொண்ட வேண்டுகோள் வருமாறு :

"பெட்ரோகிராட் தொழிலாளர்களே, போர்வீரர்களே! "சுதந்திரத்திற்கும் சமதர்மத்திற்கும் விரோதியாக இருப்பவர்கள் மனம் கலங்கு வண்ணம் நாளை நமது வெற்றிக்கொடி பறக்கட்டும்.

"புரட்சிப் போர்வீரர்களான உங்களுடைய கோஷம், அமுக்கப்பட்டு அடிமைப்பட்டுக் கிடக்கும் மக்கள் ஆனந்தமடையும் வண்ணம் உலக முழுவதும் ஒலிக்கட்டும்!

"தொழிலாளர்களே! போர்வீரர்களே! சகோதர பாவத்தில் கை குலுக்கிக் கொண்டு சமதர்மக் கொடியின் கீழ் முன்னேறிச் செல்லுங்கள்!

"எல்லோரும் வீதிக்கு வாருங்கள், தோழர்களே!

"உங்களுடைய கொடியைச் சுற்றி நில்லுங்கள்!

"இந்தத் தலை நகரின் வீதிகளில் போர்வீரர்களைப் போல வரிசை வரிசையாக அணிவகுத்துச் செல்லுங்கள்." இந்த ஜூன் ஊர்வலத்தில் ஆறு லட்சம் தொழிலாளர்களும் போர்வீரர்களும் போல்ஷிவிக் கட்சிக் கொடியின் கீழ் சென்றார்கள்.

போல்ஷிவிக் கட்சியின் செல்வாக்கைக் கண்டு திகிலடைந்த கெரென்ஸ்கி அரசாங்கம் போல்ஷிவிக் கட்சியைத் தொலைத்துவிட வேண்டுமென்று முடிவு செய்தது. அடக்கு முறையை ஆரம்பிப்பதற்கு ஒரு சாக்கு வேண்டுமல்லவா? அந்த சந்தர்ப்பத்தை வெகு ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்த கெரென்ஸ்கி அரசாங்கத்துக்கு வசதியாக இந்த ஜூன் ஊர்வலம் வந்து சேர்ந்தது. ஊர்வலத்தின்மீது போலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். "பிரவடா"வின் ஆபீஸைச் சின்னபின்னப் படுத்தினர். இல்லாத பொல்லாத குற்றங்களையெல்லாம் லெனின்மீது சுமத்தித் தற்காலிக

அரசாங்கம் அவரைக் கைது செய்யும்படி உத்தரவு பிறப்பித்தது. இந்தக் காரணத்தினால் லெனின் தலை மறைவாக இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. போல்ஷிவிக் கட்சிக்குள்ளே இருந்து அதற்குத் துரோகமாக நடந்துகொண்டிருந்த ஆசாமிகள் லெனின் தலைமறைவாக இருக்கக்கூடாதென்றும், கெரன்ஸ்கியின் நியாய சபையின் முன்னர் ஆஜராக வேண்டுமென்றும் வற்புறுத்தினார்கள். ஸ்டாலின், ஸ்வெர்ட்லாவ், ஆர்ஜானிகிட்ஜ போன்ற லெனினுடைய உண்மையான சிஷ்யர்கள் இந்தத் துரோகிகளுக்கு இடங்கொடுக்காமல் லெனினை மறைத்து வைத்திருந்தார்கள். லெனின் தலைமறைவாக இல்லாமலிருந்திருந்தால் "எங்கே அந்தப் பயல்?" என்று பல்லை நெற நெறவென்று கடித்துக் கொண்டிருந்த நிலச்சுவான்தார்களும் முதலாளிகளும் அவரை உயிரோடு விட்டிருப்பார்களா?

லெனின் தலைமறைவாக இருந்த காலத்தில் ஸ்டாலினே மத்திய கமிட்டியின் வேலையையும் கட்சியின் பத்திரிகைகளையும் நடத்தி வந்தார். ஸ்வெர்ட்லாவின் உதவியோடு கட்சியின் ஆறுவது காங்கிரசை ஸ்டாலின் இரகசியமாக நடத்தினார். இந்தக் காங்கிரசில் நாட்டின் நிலைமையையும், கட்சியின் குறிக்கோளையும் போராட்டத்தை நடத்த வேண்டிய முறையையும் பற்றிய தனது அறிக்கையை ஸ்டாலின் சமர்ப்பித்தார். டிராட்ஸ்கியின் சிஷ்யர்கள் ரஷ்யா மேற்கு ஐரோப்பிய நாடுகளைவிட ரொம்பப் பிற்போக்கானது, ஆதலால் ரஷ்யாவில் சமதர்மம் வெற்றியடைய முடியாது என்று கூச்சல் போட்டனர். ரஷ்யாவில் சமதர்மம் வெற்றியடைய முடியும் என்ற லெனினுடைய கொள்கையை ரொம்பத் திறமையான முறையில் எடுத்துக்காட்டி ஸ்டாலின் அவர்களை வாயடைத்துப் போகும்படி செய்துவிட்டார். "ஐரோப்பா தான் நமக்கு வழிகாட்டியாக இருக்கமுடியும் என்ற உளுத்துப்போன எண்ணத்தை நாம் இனிக் கைவிட்டு விடவேண்டும். மார்க்ஸியத்தில் இரண்டு விதம் இருக்கிறது. ஒன்று பழைய கொள்கைகளை அதிகார பூர்வமாக நிலைநாட்டி இது தான் மார்க்ஸியம் என்று சொல்வது; இன்னொன்று காலத்தோடு வளர்ந்து கொண்டுபோகும் மார்க்ஸியம். நான் இரண்டாவது சொன்ன மார்க்ஸியத்தைக் கடைப்பிடிப்பவன்," என்று ஸ்டாலின் அவர்களுக்குப் பதில் சொன்னார். காங்கிரஸ் ஸ்டாலினைப் பூரணமாக ஆதரித்தது. பூர்ஷ்வாக்கள் கையிலிருந்து அரசியலைக் கைப்பற்றக் காலம் வந்து விட்டது என்று கட்சி உணர்ந்தது. ஆயுதபாணிகளாகச் சென்று அரசியலைக் கைப்பற்றுவதும் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தை ஸ்தாபிப்பதும் இப்போது கட்சியின் முக்கியமான வேலையாக இருந்தது. இதற்கு வேண்டிய முன்னேற்பாடுகளை ஸ்டாலின் தலைமையில் போல்ஷிவிக் கட்சியார் செய்யத் துவங்கினார்கள்.

1917, ஆகஸ்ட் மாதம், ரஷ்யாவில் ஜார் அரசாட்சியைத் திரும்பவும் நிலைநாட்டும் நோக்கத்தோடு தளகர்த்தன் கார்னிலாவ் பெட்ரோகிராட்மீது தனது சேனையை நடத்தினான். கெரென்ஸ்கி ஒன்றும் செய்யமுடியாமல் விழித்தான். இந்தச் சமயம் போல்ஷிவிக் கட்சியார் ஜனங்களைத் தட்டி எழுப்பி, கார்னிலாவின் கலகத்தை அடக்கினார்கள். போல்ஷிவிக் கட்சி தான் ஜனங்களை ஒன்று திரட்டி வெற்றிக்கு வழிநடத்திச் செல்லமுடியுமென்பதைச்

சாதாரண மனிதனும் அறிந்து கொள்ளும்படி இந்த கார்னிலாவ் கலகம் காட்டிவிட்டது. இந்தக் கணத்திலிருந்து சமதர்மப் புரட்சிக்குப் படை திரட்டுகிற வேலை வெகு மும்முரமாக நடக்க ஆரம்பித்தது.

உறுதியோடும், அபாரமான நம்பிக்கையோடும் லெனினும் ஸ்டாலினும் கட்சியையும் தொழிலாளர் வர்க்கத்தையும் சமதர்மப் புரட்சியை நோக்கி நடத்தினார்கள். அக்டோபரில் நிகழ்ந்த மகத்தான சமதர்மப் புரட்சி வெற்றிபெறும்படி செய்த பெருமை அவர்களையே சாரும். தொழிலாளர்களின் இதயத்தில் ஆவேச வெறியை உண்டாக்கி கெரென்ஸ்கியின் பூர்ஷ்வா அரசாங்கத்தை முறியடித்தது அவர்களே அல்லவா? ஸ்டாலின் லெனினுடைய வலதுகைபோல. புரட்சியை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யும் பொறுப்பெல்லாம் ஸ்டாலினுக்கே அளிக்கப்பட்டிருந்தது. ரஷ்யா முழுதுமுள்ள போல்ஷிவிக் கட்சி ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையெல்லாம் பெட்ரோகிராடுக்கு வரவழைத்து ஆங்காங்கே புரட்சிப்போரை எப்படி நடத்தவேண்டும் என்கிற திட்டங்களை வகுத்து ஸ்டாலின் அவர்களுக்கு அந்தத் திட்டங்களை நிறைவேற்றவேண்டிய முறைகளையும் எடுத்துச்சொன்னார். கட்சிப் பத்திரிகைகளிலும் எழுதினார். அக்டோபர் மாதம் 16உ மத்திய கமிட்டி புரட்சிப் போரை நடத்த ஸ்டாலினைத் தலைமையாகக் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்தது. இந்தக் கமிட்டி பெட்ரோகிராட் சோவியத் நியமித்த புரட்சி ராணுவக் கமிட்டியின் ஒரு பகுதியாக அமைந்து, அதன் உயிர்நாடி போல இருந்தது. புரட்சி சம்பந்தமான திட்டத்தை ஸ்டாலினுடைய உதவிகொண்டு இந்தக் கமிட்டி வகுத்து, புரட்சியை ஆரம்பிக்கிற நாளையும் குறிப்பிட்டது. அக்டோபர் 24உ அதிகாலையில் கட்சியின் முக்கியமான 'ரபோசி புட்' (போர்வீரர்களின் பாதை) என்ற பத்திரிகையை ஒழித்து விடும்படி உத்தரவிட்டு, அந்த உத்தரவை நிறைவேற்றுவதற்கு மேற்படி பத்திரிகை நிலையத்தைத் தகர்க்கும்படி பல கவச மோட்டார்களை கெரென்ஸ்கி அனுப்பிவைத்தான். ஸ்டாலினை கெரென்ஸ்கி ஏமாற்றிவிட முடியுமா? கெரென்ஸ்கியின் கவச மோட்டார்கள் வருவதற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே, ஸ்டாலின் முன்னெச்சரிக்கையாக அதைப் பாதுகாப்பதற்கு புரட்சித் துருப்புகளை அனுப்பிவைத்திருந்தார். அன்று காலை 11மணிக்கு "நாம் செய்ய வேண்டுவது என்ன" என்ற தலையங்கத்துடன் "ரபோசிபுட்" வெளிவந்தது. பூர்ஷ்வா அரசாங்கத்தைத் தகர்த்தெறியுங்கள், எழுங்கள் என்று அந்தத் தலையங்கம் ஜனங்களை அறைகூவி அழைத்தது. அதே சமயத்தில் போல்ஷிவிக் கட்சியின் தலைமை நிலையமான ஸ்மோல்னிக்குப் புரட்சிப் படைகளை ஸ்டாலின் அனுப்பிவைத்தார். புரட்சி ஆரம்பித்துவிட்டது. அன்றைய தினம் முடியுமுன்னரே முதலாளிகளின் ரஷ்யா தொழிலாளர்களின் ரஷ்யாவாக மாறிக் காட்சியளித்தது. புரட்சி வெற்றியடைந்தது. அன்றைய இரவே லெனின் வெளிவந்தார். மறுநாள் மாலை கூடிய இரண்டாவது அகில ரஷ்ய சோவியத் காங்கிரஸ் நாட்டின் பூரண அதிகாரத்தை சோவியத்துக்களின் கையில் ஒப்படைத்தது.

ஜனங்களின் கமிசார்கள் (மந்திரிகள்) அடங்கிய கவுன்சிலுக்கு ஸ்டாலின் ஒரு கமிசாராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கு லெனின் தலைவராக அமைந்தார்.

மகத்தான இந்த அக்டோபர் புரட்சி மனித சரித்திரத்திலேயே முக்கியமான பல மாற்றங்களை உண்டாக்கியது. முதலாளித்துவம் சமதர்மம் என்று உலகத்தை இரண்டு பிரிவாக அது பிரித்தது. புதிய நிலைமைகளையொட்டி, மகத்தான புதிய ஆக்க வேலைகளைச் செய்யவேண்டிய பொறுப்பு போல்ஷிவிக் கட்சிக்கு ஏற்பட்டது. சோவியத் ரஷ்யாவில் தொழிலாளர்களின் போராட்டத்தின் தன்மையும் போக்கும் அடிப்படையான முறையில் மாறிவிட்டது.

சோவியத் அரசாங்கம் தோன்றியகாலத்திலிருந்து 1923-வரை தேசிய இனங்களின் சம்பந்தமானவிஷயங்களை நிர்வகிக்கும் கமிசாராக ஸ்டாலின் இருந்துவந்தார். சோவியத் ரஷ்யாவில் தேசிய இனப் பிரசினையைத் தீர்க்கப் போல்ஷிவிக் கட்சியும் சோவியத் அரசாங்கமும் எடுத்துக்கொண்ட நடபடிக்கைகளெல்லாம் ஸ்டாலின் கூறிய ஆலோசனைகளை அடிப்படையாக கொண்டவைகளே. ரஷ்ய தேசிய இனங்களின் உரிமைப் பிரகடனத்தை தயார்செய்தது ஸ்டாலினே. ஒரு தேசிய இனம் இன்னொரு தேசிய இனத்தை அடக்கிவைப்பது, அடிமைப் படுத்துவது, கொடுமைப் படுத்துவது என்கிற நிலைமை மறைந்து, தேசிய இனங்கள் சகோதரபாவத்துடனும் பூரணசமத்துவத்துடனும் பொருந்தி வாழும்படி செய்த மகத்துவம் இந்தப் பிரகடனத்துக்கும், இதைத்தயாரித்த ஆசிரியருக்கும் நிச்சயம் உண்டு.

இன்று ரஷ்யாவில் நூற்றுக்கு மேலான தேசிய இனங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே முன்னேறியுள்ள தேசிய இனங்கள் பிற்போக்கான நிலைமையிலிருக்கும் தேசிய இனங்களை முன்னணிக்குக் கொண்டுவரத் தங்களாலான எல்லா உதவிகளையும் செய்கின்றன. சோவியத் ஐக்கிய அரசாங்கம் தேசிய இனங்களுக்கிடையே அன்பையும் சகோதர பாவத்தையும் வளர்ப்பதோடு, பிற்போக்கான நிலையிலுள்ள தேசிய இனங்களைக் கை தூக்கிவிடச் சாத்தியமான எல்லா நடபடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளுகிறது. அதன் பயனாக, ஜார்கால ரஷ்யாவில் தேசிய இனங்களுக்கிடையே இருந்த பெரிய தாரதம்மியம் மறைந்து, இன்று தேசிய இனங்களனைத்தும் வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் ஆச்சரியப்படத்தக்க அளவு முன்னேறியிருக்கின்றன. ஐக்கிய சோவியத் ரஷ்யாவில் நிறபேதத்திற்கும் தேசிய பேதங்களுக்கும் இடமில்லை. இந்தப் பேதங்களின் காரணமாக அனுபவித்து வந்த சலுகைகளுக்கும் அங்கே இடமில்லாமல் போய்விட்டது. தேசிய இனங்களுக்குள் ஒன்றையொன்று சண்டை மூட்டிவிட்டு, மூன்றாவது கட்சி அந்தச் சண்டையினால் லாபமடைந்த காலமும் மலையேறிவிட்டது. ஏசுநாதரின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஆப்பிரிக்காவில் இன்று நிறத்திமிர் தலை விரித்தாடுகிறது. ஜாரின் ரஷ்யாவிலும் இந்த நிறத்திமிர் தாண்டவமாடியது. ஆனால், நான் வெள்ளை நிறம் அதனால் உயர்வு, நீ கருப்பு நிறம் அதனால் தாழ்வு என்று யாராவது சொன்னால் அவன் தண்டனைக்குள்ளாவான் என்று சோவியத்அரசாங்கம் சட்டமியற்றிவிட்டது.

1918 ஜனவரியில் மத்திய கமிட்டியின் உத்தரவை மேற்கொண்டு, அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் இருந்து வந்த புரட்சியில் நம்பிக்கையுள்ள சமதர்மக் கட்சிகளின் பிரதிநிதிகளை ஒன்று திரட்டி ஸ்டாலின் மகாநாடு ஒன்றைக் கூட்டினார். இந்த முயற்சி மூன்றாவது சர்வதேசத் தொழிலாளர்கள் சங்கத்தை நிறுவ உதவியாக இருந்தது.

8. உள்நாட்டுப் போர்

அக்டோபர் புரட்சி ஒரு தேசத்தை இன்னொரு தேசம் அடிமை படுத்தவும், சுரண்டவும் இடமில்லாமல் செய்துவிட்டது. அன்னிய நாடுகளை அடிமைப்படுத்தி வைப்பதை ஒழிக்கிற பிரசினை, அடக்கி ஒடுக்கி வைத்திருக்கும் நாடுகளையும் காலனிகளையும் ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுதலை செய்யும் பிரசினையாக மாறி விட்டது. ஏகாதிபத்தியத்தின் கீழ் அடிமைப்பட்டுக் கிடக்கும் நாடுகளுக்கு விடுதலை பெறும் வழியை அது காட்டியது. சமதர்ம நாட்டிற்கும் அடிமைப்பட்டு கிடக்கும் நாடுகளுக்கும் இடையே ஒரு தொடர்பை உண்டாக்கி உலக ஏகாதிபத்தியத்தை ஒழிக்கும் ஒரு பெரிய சக்தியாக அது மாறியது.

உலகத் தொழிலாளர்கள் சோவியத் ரஷ்யா விஷயத்தில் காட்டிவரும் அபாரமான அன்பிற்கும் உற்சாகத்திற்கும் காரணம் மேலே சொன்ன விஷயங்கள் தான். உலகத்தின் ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்கள் அடக்கமுடியாத கோபத்துடன் சோவியத் ரஷ்யாவைத் தாக்க ஆரம்பித்ததும் அதே காரணத்துக்காகத் தான். "முதலாளித்துவ உலகமே, என்ன சேதி?" என்று கேட்பதுபோல இருந்தது ரஷ்யாவில் அக்டோபரில் நடந்த சமதர்மப் புரட்சி. மோசம் வந்துவிட்டது என்று முதலாளித்துவ உலகம் கச்சைக் கட்டிக்கொண்டு கிளம்பிவிட்டது. ரஷ்யாவிலுள்ள முதலாளிகளும் நிலச்சுவான்தார்களும் முதலாளித்துவ நாடுகளோடு சேர்ந்து கொண்டார்கள். உள்நாட்டுச் சண்டை கிளம்பியது. பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாடுகள் பொருளும் ஆயுதமும் கொடுத்து எதிரிகளுக்கு உதவி செய்தன. சமதர்மத்துக்கே தாய் நாடாக உள்ள சோவியத் ரஷ்யாவுக்கு ஆபத்து வந்து விட்டதென்று சொல்லி, சோவியத் அரசாங்கம் அதைப் பாதுகாக்க முன் வரும்படி ஜனங்களை வேண்டிக்கொண்டது. போல்ஷிவிக் கட்சி போருக்குத் தொழிலாளர்களையும் குடியானவர்களையும் ஒன்று திரட்டியது.

1918 முதல் 1920 வரை இந்த உள்நாட்டுப் போர் நடந்தது. "எந்தெந்த முனைகளில் பெரும் ஆபதது ஏற்பட்டதோ, அங்கெல்லாம் ஸ்டாலினைத் தான் மத்திய கமிட்டி அனுப்பிவைத்தது" என்று வொராஷிலாவ் கூறுகிறார். ஜாரிட்சின் நகரம் ஆபத்திலிருந்தபோது வொராஷிலாவுடன் சேர்ந்து ஸ்டாலின் அந்நகரைக் காத்தார். ஜெர்ஜின்ஸ்கியுடன் சேர்ந்து பெர்ம் நகரத்திலிருந்து எதிரிகளை புறமுதுகிட்டு ஓடச்செய்தார்; பெட்ரோகிராடு முனையில் யூடெனிச்சை முறியடித்தார். ஸ்மாலென்ஸ்கில் முதலாளித்துவத்தின் படையைத் தோற்கடித்தார். தெற்கே டெனிகினை விரட்டியடித்தார். ஜிட்டோமீரில் ரஷயக் காலாட் படையை வளைந்து கொண்ட போலிஷ் துருப்புகளைத் துரத்தியடித்து, அதை மீட்டார்.

ஜாரிட்சின் தற்காப்பைப்பற்றி காகனுவிச் எழுதியிருக்கிறார். அவர் ஸ்டாலினுடைய நெருங்கிய நண்பர்; போல்ஷிவிக் கட்சியில் ஈடுபட்டு வேலை செய்தவர். அவர் கூறுவதாவது: " ஆபத்தான காலம். அப்போது பார்க்கவேண்டுமே ஸ்டாலினை. ஸ்டாலின் எப்போதும் என்ன வந்தாலும் சாந்தத்தை இழக்கமாட்டார். சதா சிந்தனையில் ஆழ்ந்திருப்பார். ஒரு நிமிஷம்கூடக் கண்ணைமூட

அவருக்கு அவகாசம் கிடைக்காது. வாஸ்தவத்தில் தூக்கமே கிடையாது என்று சொல்லிவிடலாம். சளையாத உழைப்பு. ராணுவத் தலைமைக் காரியாலயத்திற்கும் போர்முனைக்குமாக மாறி மாறித் தன் காலத்தைப் பிரித்துச் செலவழித்தார். போர் முனையில் நிலைமை ரொம்ப நெருக்கடியாயிருந்தது. ஆனால் ஸ்டாலின் ஒரு சிறிதுகூட மனம் கலங்கவில்லை. அவருக்கு எண்ணமெல்லாம் எதிரியை விரட்டியடிப்பதிலே தான். அசைக்கமுடியாத இந்த உறுதி அவரோடு வேலை செய்தவர்களிடையிலும் பரவியது. நிலைமை மோசமாகிவிட்டது, இனி நம்பிக்கைக்கு இடமில்லை என்று இருக்கிற காலத்திலும், வெற்றி நம்மது தான் என்று எல்லோரும் உறுதியாக நம்பினார்கள்.'' நம்பியபடி வெற்றியும் அடைந்தார்கள்.

ஜாரிட்சின் முனையைப்போல பெர்ம் முனையும் ஆபத்தான நிலையிலிருந்தது. கோல்சாக் படை அந்நிய நாடுகளின் படையோடு கலக்கும் தருணத்திலிருந்தது. கோல்சாக்கை எதிர்த்த செஞ்சேனையோ பீதியடைந்து கலைந்து கொண்டிருந்தது. இந்தச் சமயத்தில் ஸ்டாலினையும் ஜெர்ஜின்ஸ்கியையும் லெனின் அங்கே அனுப்பி வைத்தார் ஸ்டாலின் மின்னல் வேகத்தில் காரியங்களைச் செய்ய ஆரம்பித்தார். பீதியடைந்து சிதறிப்போய்க் கிடந்த படையைத் திரும்பவும் ஒன்றுபடுத்திச் சக்திவாய்ந்த ஒரு சேனையாக்கினார். புதிதாக ஒழுங்கு படுத்தப்பட்ட இந்தப் படைக்கு முன்னர் கோல்சாக்கின் கூலிப்படை நிற்க முடியவில்லை.

பால்டிக் முனையில் யூடெனிச் என்ற தளகர்த்தன் பெட்ரோகிராடுக்குச் சமீபத்தில் வந்துவிட்டான். கோல்சாக்கின் பக்கத்திலிருந்து செஞ்சேனையை வடமேற்குப் பகுதிக்கு இழுப்பதற்குச் செய்த வேலை இது. யூடெனிச்சுக்கு பிரிட்டிஷ் கடற்படை உதவியாக இருந்தது. மென்ஷிவிக் கட்சியின் பேச்சில் மயங்கியிருந்த இரண்டு பட்டாளங்கள் சோவியத் அரசாங்கத்துக்கு விரோதமாகக் கலகம் செய்தன. செஞ்சேனை மனத்தளர்ச்சி அடைந்தது. இந்த நெருக்கடியான நிலையில், யூடெனிச் படை பெட்ரோகிராட் வாசலுக்கு வந்துவிட்டது.

திரும்பவும் மத்திய கமிட்டி ஸ்டாலினை பெட்ரோகிராட் முனைக்கு அனுப்பிவைத்தது. போல்ஷிவிக்குகள் போர்முனைக்கு விரைந்தனர். ஸ்டாலின் எதிரியை விரட்டியடித்தார். எதிரி கைக்குப்போன கிராஸ்நாயா கோர்க்கா, செரயாலோஷத் என்ற கோட்டைகளைக் கடற்படையைக் கொண்டு ஸ்டாலின் திரும்பக் கைப்பற்றினர். கடற்போரில் வல்லுநர்களாயுள்ள ராணுவ நிபுணர்கள் கடல் மூலமாக இவைகளைக் கைப்பற்றமுடியாது, கடற்போர் சாஸ்திரத்திற்கே இது முரண்பாடானது என்று சொன்னார்கள். ஆனாலும் ஸ்டாலின் கடல்மார்க்கமாகவே அவைகளைக் கைப்பற்றிக் கடற்போர் நிபுணர்களையும் அவர்கள் சாஸ்திரத்தையும் ஒருங்கே பொய்ப்பித்து விட்டார்.

கிழக்கே கோல்சாக்கோடு போர் செய்துகொண்டிருந்த சமயத்தில், டெனிகின் யுக்ரேனியா மீது படையெடுத்தான். டிராட்ஸ்கியின் துரோகச் செயல்களினால் செஞ்சேனைக்குத் தோல்விக்குமேல் தோல்வி ஏற்பட்டுக்கொண்டிருந்தது. டெனிகின் மாஸ்கோவுக்குப் பக்கத்தில் வந்துவிட்டான். மாஸ்கோவிற்குப் பெரிய ஆபத்து. மாஸ்கோவைக் காக்கும் பொறுப்பை

மத்தியக் கமிட்டி ஸ்டாலினுக்கே கொடுத்தது. ஸ்டாலின் டிராட்ஸ்கியின் போர்த் திட்டம் முழுவதையும் மாற்றியமைத்து, டெனிகினை முறியடித்தார்.

ஸ்டாலினுடைய சேவையை மெச்சி அகில ரஷ்ய மத்திய காரியக் கமிட்டியார் அவருக்கு ஆர்டர் ஆப் தி ரெட்பானர் என்ற உயர்ந்த பட்டத்தை வழங்கினர்கள்.

"உள்நாட்டுப் போரில் ஸ்டாலின் என்ன செய்துவிட்டார்?" என்று ஸ்டாலினுடைய விரோதிகள் கூறுவார்கள். சமதர்மத்துக்கு விரோதிகளும் அவ்வண்ணமே சொல்லுவார்கள். அவருடைய ராணுவ வெற்றிகளைப்பற்றிக் குறைவாகப் பேசுவார்கள். ஆனல் அந்தக் காலத்தில் ராணுவப் பயிற்சியில்லாத ஸ்டாலின் ராணுவ சாஸ்திரத்தைக் கரைத்துக் குடித்திருந்த பெரிய ராணுவ நிபுணர்களெல்லாம் ஆச்சரியப்படும்படியான மகத்தான வெற்றிகளை அடைந்தார் என்பதை அவர்கள் மறந்துவிடுவார்கள். ராணுவ நிபுணர்களை அன்று அதிசயிக்கும்படி செய்ததுபோல, இன்று ஹிட்லரின் பான்ஸர் படைகளை முறியடித்து உலக மக்கள் அனைவரையுமே பிரமிக்கும்படி செய்துவிட்டார் ஸ்டாலின். இதுவே அவருடைய அபாரமான ராணுவ தந்திரத்திற்குச் சான்றாகும். ஹிட்லரே அதற்குச் சாட்சி சொல்லுவார்.

9. புனர் நிர்மாணமும் புதிய பொருளாதாரக் கொள்கையும்

ஒரு குறிப்பிட்ட பொருளாதார அமைப்பு முறையை அஸ்திவாரமாகக் கொண்டு முதலாளித்துவ முறை இயங்குகிறது. அந்த அஸ்திவாரத்தின்மீதே முதலாளித்துவ நாடுகள் பொருளைச் சிருஷ்டிக்கின்றன; அரசியலை நடத்துகின்றன; ராணுவத்தை அமைக்கின்றன. நன்மை தீமையைப் பகுத்தறிவதும், நீதி வழங்குவதும், தண்டனை விதிப்பதும் அந்த அஸ்திவாரத்தின்மீதே. அந்தப் பொருளாதார அமைப்புக்குப் பொருத்தமான முறையிலேயே மக்கள் காதல் புரிகிறார்கள்; கவிதை புனைகிறார்கள்; கலையை வளர்க்கிறார்கள். சுருக்கமாகக் கூறினல், பொருளை உற்பத்தி செய்கிற முறையையும் அதை உற்பத்தி செய்யும்போது மக்களுக்கிடையே ஏற்படுகிற தொடர்புகளையும் அடிப்படையாகக் கொண்டு சமுதாய அமைப்பும், அரசியல் சட்ட திட்டங்களும் உருவாகின்றன. இந்தப் பொருளாதார அமைப்பும் அதையொட்டி ஏற்படும் ஏனைய சமுதாய அரசியல் அமைப்புகளும் சநாதனமானவை, என்றும் அழியாதவை, அழிக்க முடியாதவை என்று முதலாளி வர்க்கத்தார் வாதாடுகிறார்கள். நாகரிகம், பண்பாடு என்ற வார்த்தைகளின் மூலம் அவர்கள் குறிப்பிடுவதெல்லாம் இந்த அமைப்பையே. இந்த அமைப்பு முறையை மாற்றவேண்டுமென்று சொல்லும்போது, "ஐயோ! நாகரிகத்திற்கு ஆபத்து வந்துவிட்டதே, பண்பாட்டிற்கு ஆபத்துவந்துவிட்டதே, மனித சுதந்திரத்திற்கு ஆபத்து வந்துவிட்டதே!" என்று அவர்கள் கூச்சல் போடுவதும் இதே காரணத்தையொட்டித்தான். முதலாளித்துவ நாகரிகத்தைவிட உயர்ந்த நாகரிகம் ஒன்று இருக்கிறது, முதலாளி-தொழிலாளன் அமைப்பில் மனிதனுக்குக் கிடைக்கும் சுதந்திரத்தைவிட உயர்ந்த சுதந்திரம் ஒன்று இருக்கிறது என்பதை அவர்கள்

சாவதானமாக மறந்துவிடுகிறார்கள். இந்தப் புதிய நாகரிகத்தையும் புதிய சுதந்திரத்தையும் படைக்கும் வண்ணமே ரஷ்யாவில் அக்டோபர் புரட்சி ஏற்பட்டது.

ஆதலால், புதிதாகத் தோன்றிய சோவியத் ரஷ்யாவுக்கு ஒரு புதிய யுகத்தையே சிருஷ்டிக்கவேண்டிய அவசியம் உண்டாயிற்று. இதுவரையில் உலகத்தில் எந்தக் காலத்திலும் எந்த நாடும் தீர்க்காத புதுமைப் பிரசினைகளைத் தீர்க்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. பொருளாதாரம், அரசியல், ராணுவம் முதலிய துறைகளில் இதுவரையில் உலகத்தில் எங்கும் காணாத புதிய அமைப்பு முறைகளை உருவாக்கவேண்டிய மகத்தான வேலை சோவியத் ரஷ்யாவைப் பொறுத்திருந்தது. முதலாளித்துவ முறையில் காணும் அமைப்பு முறைகளையும் ஸ்தாபனங்களையும் சோவியத் ரஷ்யா வைத்துக்கொள்ள இனி நியாயமில்லை, வைத்துக்கொள்ளவும் முடியாது. பொருளாதாரம், அரசியல், ராணுவம் ஆகிய எல்லாத் துறைகளிலும் புதிய அமைப்பு முறைகளை ஏற்படுத்த வேண்டுமென்பது அவசியமாக இருந்தாலும் அவற்றை எப்படி ஏற்படுத்துவது என்பது பெரிய பிரசினையாக இருந்தது. பிறநாடுகளின் அனுபவத்தினால் பயனடையலாம் என்றால், பாட்டாளி மக்களின் அரசாங்கம் இதுவரையில் எந்த நாட்டிலும் ஏற்பட்டது கிடையாது. பாரிஸ் கம்யூன் இருந்ததே என்று சொல்லலாம். ஆனால் பாரிஸ் கம்யூன், மின்னலைப்போல தோன்றி மறைந்துவிட்டது. ஒரு சில நாட்களே உயிரோடியங்கிய பாரிஸ் கம்யூனுக்கு மூலாதாரமான கொள்கைகளை வகுக்கவும் அந்தக் கொள்கைகளின்படி நாட்டின் வாழ்க்கையை நடத்தவும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனவே சோவியத் ரஷ்யா சம்பந்தப்பட்ட வரையில் பழைய அநுபவத்தை நம்பியிருக்கிற பிரசினை எழுவதற்கு இடமேயில்லை.

புதிய சமுதாயத்தைச் சிருஷ்டிக்கிற வேலை சாமானியமானதல்ல. ஆயினும் அதைச் சிருஷ்டிக்கத் தவறினால் முதலாளித்துவ நாடுகளுக்கிடையில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் சோவியத் ரஷ்யா மாய்ந்து மறையவேண்டியதுதான். கலங்காத நெஞ்சத்துடன் லெனின் இந்த மகத்தான சிருஷ்டித் தொழிலில் ஈடுபட்டார். இந்த வேலையில் அவருக்கு உண்மையான தோழனாகவும் சிஷ்யனாகவும் இருந்து உதவியவர் ஸ்டாலின். சோவியத் மக்கள் லெனினுக்கும் ஸ்டாலினுக்கும் ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சமதர்ம நாகரிகத்தைச் சிருஷ்டிக்கும் வேலையில் பூரண மனதோடு ஈடுபடுவதென்றால் நாட்டில் அமைதி நிலவ வேண்டும். ஒரு பெரிய ஏகாதிபத்தியப்போரில் பங்கெடுத்துக்கொண்டு இந்த மகத்தான ஆக்கவேலையைச்செய்வது என்பது அசாத்தியமான காரியம். ஆதலால் முதலில் தேவைப்படுவது ஓய்வு என்று லெனின் கண்டார். சோவியத் அரசாங்கம் ஆதிக்கத்தைக் கைப்பற்றியதும் அது செய்த முதல் காரியம் ஜெர்மனியோடு சமரசம் செய்துகொள்ள எடுத்துக்கொண்ட முயற்சியே. அதன் பயனாக ஏற்பட்ட பிரெஸ்ட் – லிடாவ்ஸ்க் ஒப்பந்தம் சோவியத் ரஷ்யாவுக்கு ரொம்ப அவமானத்தை விளைவிக்கக் கூடியது, நஷ்டத்தை உண்டாக்கக் கூடியது என்று டிராட்ஸ்கியும் அவர் சகாக்களும் எதிர்த்தார்கள். ஆனால் லெனினுடைய உறுதி அவர்களது எதிர்ப்பினால் குலைய

வில்லே. இந்த ஒப்பந்தத்தினல் சோவியத் ரஷ்யா அடையும் அவமானத்தையும் நஷ்டத்தையும்விட அது அடையப்போகிற நன்மை பெரிது என்று லெனின் சொன்னர். ஸ்டாலின் அவரை மனப்பூர்வமாக ஆதரித்தார். லெனினும் ஸ்டாலினும் சொன்னது எவ்வளவு உண்மையென்பதைச் சிறிது காலத்தில் சோவியத் மக்கள் பூரணமாக உணர்ந்துகொண்டார்கள்.

ஏகாதிபத்தியப் போரிலிருந்து விடுதலே பெற்றுவிட்டோம் என்று சோவியத் மக்கள் ரொம்பகாலம் சந்தோஷத்துடன் இருக்க முடியவில்லே. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய இந்த நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகள் சோவியத் ரஷ்யாவோடு போர் தொடுத்தனர். அவர்களோடு ரஷ்ய முதலாளிகளும் நிலச்சுவான்தார்களும் சேர்ந்துகொண்டார்கள். எனவே 1914 முதல் 1920 வரையில் ரஷ்யா போரில் ஈடுபட்ட வண்ணமாகவே இருந்தது. தொடர்ந்து நடந்த இந்த ஏழு வருஷப் போரினல் நாட்டின் பொருளாதார வாழ்க்கை சீர்குலேந்து போயிற்று. வறுமை அதிகப்பட்டது. இந்த நிலேயில் 50 லட்சத்துக்கு மேலாகப் பெருகியிருந்த செஞ்சேனையை வேறு ஆக்கவேலேயில் ஈடுபடுத்த வேண்டியிருந்தது. போர்க்காலத்தில் தொழிலாளர்களுக்கும் குடியானவர்களுக்கும் இடையே இருந்துவந்த ராணுவத் தொடர்பும் அரசியல் தொடர்பும் குடியானவர்களுக்கு அதிருப்தியை உண்டாக்கிற்று. போர் நடக்கும் காலத்தில் குடியானவர்களின் தேவைக்குக் கண்டு அதிகமான தானியங்களே யெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொண்டது. அந்த முறையைப் போர் முடிந்த பிறகும் கட்டாயப்படுத்த முடியாது; கட்டாயப்படுத்துவதை விட்டு அவர்களிடம் நயம் பயமாகச் சொல்லித்தான் இனிக் காரியத்தைக் கைக்கொள்ளவேண்டும். தொழிலாளர்களேயும் குடியானவர்களேயும் வேறு முறையில்த்தான் ஒன்ருகப் பிணேக்க வேண்டும். இதற்கு இதுவரை பின்பற்றிவந்த பொருளாதாரக் கொள்கையை மாற்றியமைக்கவேண்டும். இந்தக் காரியம் அவ்வளவு சுலபமானதல்ல. அதிகாரம் போல்ஷிவிக் கட்சி கைக்கு மாறியபோது, முதலாளிகளுக்கும் பாட்டாளி மக்களுக்கும் இடையிலுள்ள மத்திய வர்க்கத்தார் போல்ஷிவிக் கட்சியில் அமோகமாகச் சேர ஆரம்பித்தார்கள். இவர்களின் தலேவர்களான அராஜகவாதிகள், மென்ஷிவிக் கட்சிக்காரர்கள், 'சமதர்ம-புரட்சி'க்காரர்கள் எல்லோரும் போல்ஷிவிக் கட்சிக்கு விரோதமாகப் பிரசாரம் செய்துவந்தார்கள். போல்ஷிவிக் கட்சிக்கு விரோதமாகவுள்ள ஏனேய கூட்டத்தாருக்கும் மேலே குறிப்பிட்ட கட்சிகள் தஞ்சமளித்தன. புதிய பொருளாதாரக் கொள்கையை சோவியத் அரசாங்கம் கையாள ஆரம்பித்தபோது இவர்கள் அதற்குப் பெரிய முட்டுக்கட்டையாக இருந்து கெடுதல் செய்துவந்தார்கள். இவ்வண்ணம் பெருந் தீமைகளே இழைத்துவந்த டிராட்ஸ்கி கூட்டத்தார், "இடது சாரி கம்யூனிஸ்டுகள்" மென்ஸ்விக்குகள் ஆகிய எல்லோரையும் எதிர்த்து, அவர்கள் சொல்வதில் உண்மையில்லேயென்பதை பொதுமக்களுக்கு லெனினும் ஸ்டாலினும் காட்டிவந்தார்கள்.

1920-ம் வருஷம் மின்சாரத் திட்டம் ஒன்றை உருவாக்க ஒரு அரசாங்கக் கமிஷனே லெனின் ஏற்படுத்தினர். இந்தக் கமிஷன் ஒரு 10 வருஷத் திட்டத்தை வகுத்தது. மின்சாரத் திட்டம்

சோவியத் மூலத் தொழிலுக்கும் இதர தொழில்களுக்கும் முது கெலும்புபோல் உள்ளது. ஆயினும் இந்த அருமையான திட்டத்தை டிராட்ஸ்கியும், ரைகாவும் எதிர்த்தார்கள். ஸ்டாலின் இந்தத்திட்டத்தின் எதிர்கால முக்கியத்துவத்தை உணர்ந்து இதைப் பூரணமாக ஆதரித்தார். பொருளாதாரத் துறையில் பிற்போக்காயிருக்கும் ரஷயாவை உண்மையான மார்க்சீய முறைப்படி முன்னேற்றுவதற்கு இதுதான் சரியான வழியென்று சொல்லி அவர் இதைப் பெரிதும் பாராட்டினர். பேசிப் பொழுதைக் கழிக்காமல் இந்தத் திட்டத்தை உடனே செயல் முறையில் நடத்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று அவர் தூண்டினர்.

இந்தத் தர்க்கத்தோடு இன்னெரு தர்க்கமும் கிளம்பியது. வழக்கம்போல், இதைக் கிளப்பியதும் ட்ராட்ஸ்கியும் அவருடைய சிஷ்யர்களுமே. போர்க் காலத்தின் அவசியத்தை யொட்டி ஜனங்கள்மீது புகுத்திய பொருளாதாரக் கொள்கையை நெகிழ்த்தாமல் இன்னும் பலப்படுத்த வேண்டுமென்று அவர்கள் சொன்னர்கள். குடியானவர்களில் பெரும்பான்மையோரும், தொழிலாளர்களில் ஒரு சிலரும் அதிருப்தி அடைந்திருக்கும் இந்த நிலையில் போர்க் காலப் பொருளாதாரக் கொள்கையின் ஆணியை முடுக்க வேண்டுமென்று சொல்வது போல்ஷிவிக் கட்சியில் ஜனங்களுக்குள்ள நம்பிக்கையைக் குலைப்பதற்குச் செய்யும் வேலையேயன்றி வேறில்லை. போல்ஷிவிக் கட்சிக்கும் பொதுமக்களுக்கும் உள்ள தொடர்பை நீக்கிப் பாட்டாளிமக்களின் அரசாங்கத்தையே ஒழிப்பதற்குச் செய்யும் இந்தச் சிறுமைத் தொழிலுக்கு லெனினும் ஸ்டாலினும் ஒரு சிறிதும் இடங் கொடுக்கவில்லை. டிராட்ஸ்கி கூட்டத்தார் மட்டும் தான் இப்படிச் சொன்னர்கள் என்பதில்லை. மென்ஷிவிக், "இடதுசாரி கம்யூனிஸ்டுகள்" போன்ற கட்சிகள் எல்லாம் பல விஷயங்களில் மாறுபட்டாலும், ஒரு விஷயத்தில் மட்டும் ஒற்றுமையாய் இருந்தன. போல்ஷிவிக் கட்சியும், லெனினும் ஸ்டாலினும் என்ன சொன்னலும் என்ன செய்தாலும் அவர்கள் எல்லோரும் அதை எதிர்த்தார்கள்.

பத்தாவது கட்சிக் காங்கிரஸ் லெனின் பிரரேபித்த புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக்கொண்டது. புதிய பொருளாதாரக் கொள்கை முதலாளித்துவத்தை முற்றிலும் ஒழித்துவிடாமல் அவற்றின் சில அம்சங்களைமட்டும் கொஞ்சம்விட்டு வைப்பதற்காகக் கடைப்பிடித்தகொள்கையாகும். மத்திய வர்க்கத்தைச் சேர்ந்தவர்களை அதிகமாகக் கட்டுப்படுத்தாமல் விட்டாலும் முக்கியமான தொழில்களும் மூலத் தொழில்களும் சோவியத் அரசாங்கத்தின் கையிலேயே இருந்தன. முதலாளித்துவ சக்திகளுக்கும் சமதர்ம சக்திகளுக்கும் நடக்கும் போராட்டத்தில், முதலாளித்துவ சக்திகளின் ஆற்றலை அழித்து சமதர்ம சக்திகளுக்கு ஆக்கம் அளிக்கும் வண்ணம் கடைப்பிடித்த கொள்கையே இது. சமதர்ம சக்திகள் வெற்றிபெற்று வர்க்கப் போராட்டத்தை ஒழிப்பதற்கும், சமதர்மப் பொருளாதார முறையை உறுதியாக நிலைநாட்டுவதற்கும் மார்க்சீய-லெனினிஸம் கண்டுபிடித்த அற்புதமான கொள்கை இது.

இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையை டிராஸ்கி கூட்டத்தாரும் இதர சந்தர்ப்பவாதிகளும் பலமாகத் தாக்கி "போல்ஷிவிக் கட்சி முதலாளித்துவத்துக்கு திரும்புகிறது" என்ற கூச்சலைக் கிளப்பினர்கள். ஆனல், கொஞ்சம்விட்டுத்தான் பிடிக்கவேண்டும்,

இல்லாவிட்டால் பொருளாதார வாழ்க்கை சீர்குலைந்து கலகமும் குழப்பமும் ஏற்பட்டு விடுமென்று லெனின் ஏற்கெனவே சொல்லி யிருந்தார். குடியானவர்களின் தேவைக்குக் கண்டதுபோக எஞ்சி யதையெல்லாம் எடுத்துக்கொள்வது என்பதற்குப் பதிலாக, அவர் களிடம் கொஞ்சம் விட்டுவைக்கும முறையில் விளைகிற தானியத் தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை வரியாகக் கொடுத்துவிட வேண் டும் என்று இந்தப் புதிய கொள்கை நிர்ணயித்தது. வரி கொடுத் ததுபோக எஞ்சிய தானியத்தைக் குடியானவன் விற்றுப் பண மாக்கிக் கொள்ளலாம். இந்த கொள்கையைக் கையாளுவதால் முதலில் முதலாளித்துவம் கொஞ்சம் தலை தூக்கப்பார்க்கும். அதனால் சொந்த முறையில் செய்யும் வியாபாரத்திற்கும், சிறிய தொழில்களுக்கும் இடம் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படத் தான்செய்யும். ஆனால் இதனால் முதலாளித்துவம் திரும்பிவந்துவிடும் என்று பயப்படத் தேவையில்லை. இந்த வியாபாரமும் தொழில்க ளும் குடியானவர்களுக்கு உற்சாகத்தை ஊட்டும்; ஆதலால அவர் கள் உழவுத் தொழிலில் ஊக்கமாக ஈடுபட்டு அதிக தானியத்தை உற்பத்திசெய்வார்கள். விவசாயம் விருத்தியடையும். விவசாயம் விருத்தியடையும்போது, அத்துடன் நெருங்கிய தொடர்பு கொண் டிருக்கும் அரசாங்கத்துக்குச்சொந்தமான தொழில்களும் விருத்தி யடையும். அரசாங்கத்துச் சொந்தமான தொழில்கள் அடையும் அபிவிருத்தியினால் சொந்தப் பணத்தைப்போட்டு செய்யும் தொழில் கள் நசித்துப்போகும். பொருளாதாரம் நன்றாக விருத்தியடைந்து, மூலத்தொழில்களும் பலமாக வளர்ந்த பிறகு, பாக்கியுள்ள முத லாளித்துவ அம்சங்களை ஒழிக்கும் போராட்டத்தை ஆரம்பித்துக் கொள்ளலாம் என்று லெனின் ரொம்ப விளக்கமாகச் சொல்லி யிருக்கிறார். இந்தப் பெரிய உண்மையை இக்கொள்கையை எதிர்ப் பவர்கள் தெரிந்து கொள்ளவில்லை.

1921-ம் வருஷம் கோடை காலத்தில் அதிகப்படியான உழைப் பினால் ஸ்டாலின் உடல் நலம் கெட்டது. சிலநாள் படுத்த படுக்கை யாகவே இருந்தார். இந்தச் செய்தியைக் கேட்டு லெனினுக்கு கவலை உண்டாகிவிட்டது. "இப்போது தோழர் ஸ்டாலின் எப்படி இருக்கிறார்? எந்த டாக்டர் அவரைப் பார்க்கிறார்?" என்று லெனின் தந்தி மூலம் கேட்டார். ஸ்டாலின் இருந்த பகுதியில் சத்தம் அதிகமாயிருக்கும், அவரை உடனே வேறு அமைதியான இடத் துக்கு மாற்றுங்கள் என்று லெனின் செய்தி சொல்லியனுப்பினார்.

பதினோராவது கட்சிக் காங்கிரஸில் கட்சியின் மத்திய கமிட்டி யின் பொதுக் காரியதரிசியாக ஸ்டாலின் தேர்ந்தெடுக்கப்பட்டார். இது ரொம்ப முக்கியமான பதவி, மிகமிகப் பொறுப்பான பதவி. இதே சமயத்தில் தேசிய இனங்களின் கமிசாராகவும், தொழிலா ளர்கள் குடியானவர்களின் நலன்களைப் பாதுகாக்கிற கமிசாராக வும் ஸ்டாலின் இருந்து வந்தார். இத்தனை பொறுப்பான பதவிகளை ஸ்டாலின் வகிப்பதைப் பார்த்துப் பொறுமைஅடைந்த அவருடைய எதிரிகள் இப்படி ஒருவருக்கே பல பொறுப்பான பதவிகளைக் கொடுப்பது சரியானதில்லையென்று எதிர்த்தார்கள். லெனின் அவர் களுக்கு இடம் கொடுக்கவில்லை.

1922-ம் வருஷம் கோடை காலத்தில் லெனின் நோய்வாய்ப் பட்டார். ஸ்டாலின் அடிக்கடி லெனினைப் போய்ப் பார்த்தார். அரசாங்க விஷயங்களைப்பற்றி அவருக்குத் தெரிவித்து அவருடைய

ஆலோசனையை கேட்டு வந்தார். படிக்கிறது, எழுதுகிறதென்ற பேச்சே வைத்துக் கொள்ளக்கூடாது என்று டாக்டர்கள் கண்டிப்பாக லெனினிடம் சொல்லியிருந்தார்கள். "பத்திரிகைகூட நான் படிக்கக் கூடாதாம். அரசியலைப்பற்றி மூச்சுவிடக் கூடாது. கீழே ஏதாவது பேப்பர் கிடந்தால், அதன் பக்கம் போகாமல் மரியாதையாக நான் அப்பால் நடந்து செல்லுகிறேன். அது செய்திப் பத்திரிகையாயிருந்தால் மோசமல்லவா போய்விடும்?" என்று லெனின் ஸ்டாலினிடம் ஒருநாள் ரொம்ப ஏளனத்தோடு சொன்னாராம். இதைக் கேட்டு ஸ்டாலின் வயிறு வெடிக்கச் சிரித்துவிட்டு, "இவ்வளவு நல்ல பிள்ளையாக நடந்து கொள்வதற்காக உங்களை நான் ரொம்ப மெச்சுகிறேன்" என்று பதில் சொன்னாராம்.

1922-ம் வருஷம் டிசம்பர் மாதம் ஐக்கிய சோவியத் சமதர்மக் குடியரசுகள் உருவாக்கப்பட்டன. இந்த குடியரசுகளின் ஐக்கியத்தைத் தான் இன்று நாம் சோவியத் ரஷ்யா என்ற பெயரால் அழைக்கிறோம். இந்த ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையையும், ஐக்கிய அரசியல் அமைப்பையும் தயார் செய்தது ஸ்டாலினே.

1922 அக்டோபரில் லெனின் உடல்நிலை அபிவிருத்தியடைந்தது. அவர் திரும்பவும் அரசியலில் பங்கு கொள்ளத் தொடங்கினர். நவம்பர் 20உ மாஸ்கோ சோவியத் பொதுக் கூட்டத்தில் லெனின் பேசினர். புதிய பொருளாதாரக் கொள்கையைக் கடைப் பிடித்திருக்கும் ரஷ்யா விரைவில் சமதர்ம ரஷ்யாவாக மாறிவிடும் என்று லெனின் சொன்னர். லெனினுடைய கடைசிப்பேச்சு இதுதான்.

1924 ஜனவரி 21உ லெனின் தனது 54-வது வயதில் இறந்தார். அவர் மரணத்தின்மூலம், போல்ஷிவிக் கட்சியும், சோவியத் ரஷ்யாவும், உலகத் தொழிலாளர் இயக்கமும் ஒரு ஒப்பற்ற தலைவனை இழந்துவிட்டன. ஆயினும் லெனினுடைய கொடியை ஸ்டாலின் பிடித்துக்கொண்டு நிற்கிறர், நமக்கு ஒரு கவலையுமில்லையென்று போல்ஷிவிக் கட்சி ஒருவாறு ஆறுதல் அடைந்தது. 1924, ஜனவரியில், இரண்டாவது சோவியத் ரஷ்யக் காங்கிரஸில் லெனின் ஞாபகார்த்தமாகக் கூடிய பொதுக் கூட்டத்தில் பேசும்போது லெனினுடைய இலட்சியங்களையும், அந்த இலட்சியங்களை நோக்கிச் செல்வது போல்ஷிவிக் கட்சியின் கடமை என்பதையும் பற்றி ஸ்டாலின் எடுத்துப் பேசினர். இந்த இலட்சியங்களை மனம் வாக்கு காயத்தினல் தான் பின்பற்றுவதாகவும் அவர் சபதம் செய்தார்.

சமதர்மத்தின் விரோதிகளெல்லாம் லெனினுடைய மரணத்தைப் பயன் படுத்திக்கொண்டு குழப்பத்தை உண்டுபண்ண முயன்றனர்கள். கொள்கைகளைத் திரித்துக் கூறி அபாரமாகப் பிரசாரம் செய்தார்கள். இந்தச் சமயத்தில் இவர்களுடைய பொய்ம்மைச் சித்தாந்தங்களை யெல்லாம் தகர்த்தெறிய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஸ்டாலின் இந்த வேலையை அற்புதமாகச் செய்தார். மார்க்சீய – லெனினிசம் என்ற சித்தாந்தத்தை உண்மையான மார்க்சீய முறையில் ஸ்டாலின் பிரயோகித்தார். இந்தக் காலத்தில் அவர் பேசியதும் எழுதியதும் சேர்ந்து "லெனினிசம்" என்று புத்தக ரூபமாக வெளிவந்தன. லெனினிசம் என்கிற சித்தாந்தம் எந்தச் சரித்திர அடிப்படையிலிருந்து பிறந்தது, அதனுடைய போக்கு, முறை, முக்கியத்தும் என்ன என்பவைகளை யெல்லாம் இந்தப் புத்தகத்தில் வெகு திறமையாக எழுதியிருக்கிறர்.

ஸ்டாலின் தலைவரானதும் பல முக்கியமான பிரசினைகளைத் தீர்க்கவேண்டியிருந்தது. புதிய பொருளாதாரக் கொள்கையினால் குடியானவர்களின் நிலையும் தொழிலாளர்களின் நிலையும் அபிவிருத்தியடைந்தன. என்றாலும் இந்தக்கொள்கையை நெடுங்காலம் வைத்துக்கொள்ளமுடியாது. வர்க்கப்பிரிவற்ற சமதர்ம ரஷ்யாவை உருவாக்கத் திட்டம் போடவேண்டியிருந்தது. சமதர்மத்திற்கு விரோதமாகயிருந்தவர்கள், எல்லா நாடுகளிலினும் சமதர்மம் பரவினாலொழிய ரஷ்யாவில்மட்டும் வர்க்கப்பிரிவற்ற சமதர்ம சமுதாயம் வெற்றியோடு இயங்கமுடியாதென்று வாதாடினார்கள். ஒருதேசத்தில் மட்டுமே என்றாலும் சமதர்மம் வெற்றியடையும் என்ற லெனினுடைய கொள்கை பிசகு என்று தர்க்கித்தார்கள். அக்டோபர் புரட்சி தொழிலாளர்களுக்கு அரசியலில் வெற்றியளித்துவிட்டது. சமதர்மம் அரசியலைப்போல பொருளாதாரத் துறையிலும் முதலாளித்துவ அம்சங்களைப் பூரணமாக ஒழித்துவிடும் என்பதை இப்பொழுது செயலின்மூலம் காட்டவேண்டும். ஒருதேசத்தில் மட்டும் சமதர்மம் வெற்றியடையுமா என்ற பிரசினை பெரும் பிரசினையாக இருந்தது. உலகத்தொழிலாளர் இயக்கத்துக்கே ஸ்டாலின் செய்த பெரிய சேவை இதற்குச் சரியான முறையில் பதில் சொன்னது தான். முதலாளித்துவ நாடுகள் ரஷ்யாவில் அடிக்கடி தலையிட்டு முதலாளித்துவத்தைத் திரும்பவும் கொண்டுவர முயன்றுகொண்டு தான்இருக்கும். இந்தநாடுகளின் தலையீடு இல்லாமலிருக்கவேண்டுமென்றால், அது சமதர்மம் பூரணமாக வெற்றியடைந்த பிறகுதான், அதாவது மற்ற நாடுகளிலும் முதலாளித்துவத்தை ஒழித்த பிறகு தான், சாத்தியமாகும். ஆனால் உள்நாட்டு விஷயங்களைப் பொறுத்த வரையில் ஒரே நாட்டில் சமதர்மம் வெற்றியடைதல் கூடும், அதற்குரிய எல்லாச் சாதனங்களும் சோவியத் ரஷ்யாவில் இருக்கின்றன என்று ஸ்டாலின் சொன்னார்.

இந்தப் பிரசினை பதினைன்காவது கட்சி மகாநாட்டிலும் காங்கிரசிலும் தர்க்கிக்கப்பட்டது. இறுதியில் காங்கிரஸ் ஸ்டாலின் சொன்னது சரியென்று ஏற்றுக்கொண்டது. சர்வதேசத் தொழிலாளர் சங்கமும் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டது.

10. தொழில் முன்னேற்றம்

பாட்டாளிமக்கள் அரசியலைக் கைப்பற்றிய பிறகு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி மார்க்சும் எங்கெல்சும் பொதுப்படையாகக் கூறியிருக்கிறார்களே யன்றிக் குறிப்பாக இன்ன இன்ன திட்டங்களை வகுக்கவேண்டுமென்று சொல்லவில்லை. சொல்லியிருக்கவும் முடியாது. சோவியத் ரஷ்யா இந்தத் திட்டங்களையெல்லாம் தானே வகுத்துக்கொள்ளவேண்டிய நிலையில் இருந்தது. சோவியத் அரசாங்கம் செயலாற்றத் தொடங்கியவுடனேசில அடிப்படையான மாறுதல்களைச் செய்தது. நிலத்தை நாட்டின் பொதுச் சொத்தாக்கி, அதை உழுதுகொள்ளும்படி குடியானவர்களிடம் விட்டது; தொழிற்சாலைகள், இயந்திர ஆலைகள், ரயில், மோட்டார் போன்ற போக்குவரத்துச் சாதனங்கள், சுரங்கங்கள் ஆகிய இவைகளையெல்லாம் பொதுச் சொத்தாக்கியது; பாங்குகளை நாட்டின் பொதுச் சொத்தாக மாற்றியது. இந்த வேலைகள் முதன்

முதலிலேயே செய்யப்பட்டுவிட்டன. என்றாலும் உள்நாட்டுப் போரின் காரணமாக, சமதர்மப் பொருளாதார முறையைச் சிருஷ்டிப்பதற்குள்ள திட்டங்களை உடனே எடுத்து நடத்தமுடியவில்லை. இந்தத் திட்டங்களின் பொதுப்படையான அம்சங்கள் மட்டிலும் அப்போது வகுக்கப்பட்டன. இயந்திரத் தொழில்கள் அரசாங்கத்தின் கையிலிருக்கின்றன; குடியானவர்கள் தொழிலாளர்களைப் பின்பற்றுகிறார்கள்; இந்தநிலைமையில் பூரண சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதற்குக் கூட்டுறவு முறையில் வளர்ச்சியடையும் விவசாயதான் ரொம்பப் பொருத்தமானதென்று லெனின் சொன்னார்.

சோவியத் மக்களுக்கு என்ன வேண்டும்? அவர்கள் நாகரிகமடையவேண்டும். போதிய அளவு பண்பாட்டில் உயரவேண்டும். குடியானவர்களுக்குத் தொழிலாளர்கள் தொடர்ந்து வழிகாட்டியாக இருக்கும் முறையிலும் அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கும் முறையிலும் உள்ள ஒரு அரசியலை அமைக்கவேண்டும். இதற்குச் சரித்திரத்தில் உதாரணங்களைத் தேடக்கூடாது. ஏனெனில் சென்ற காலத்தில் இம்மாதிரி ஒரு அரசியல் ஏற்பட்டதே கிடையாது. மின்சாரத் திட்டம், தொழில் திட்டம் போன்ற திட்டங்களைப் பிறருடைய உதாரணத்தையோ உதவியையோ நாடாமல் நாமேதான் வகுத்துக்கொள்ளவேண்டும் என்று லெனின் சொன்னார்.

எவ்வளவு கஷ்டமான நிலைமைகளுக்கு இடையில் போல்ஷிவிக் கட்சி லெனின் சொன்ன திட்டங்களை உருவாக்கவேண்டியிருந்தது என்பதைச் சற்று பார்ப்போம். ஸ்டாலின் தலைமையில், போல்ஷிவிக் கட்சி தொழிலையும் விவசாயத்தையும் பழைய நிலைமைக்குக் கொண்டுவருவதற்குத் தடங்கலாயுள்ளவைகளையெல்லாம் இப்போதுதான் அகற்றமுடிந்தது. ஒருபுறம் ஏகாதிபத்தியப் போரினால் நாடு நாசமடைந்து வறுமையால் பீடிக்கப்பட்டிருந்தது. இன்னொரு புறம், டிராட்ஸ்கி கூட்டத்தாரும் ஏனைய விரோதிகளும் போல்ஷிவிசத்தைப் பலமாகத் தாக்கினார்கள். இது உள்நாட்டில். அந்நிய நாடுகளும் எல்லையற்ற தீமைகளை இழைத்துவந்தன. ஏகாதிபத்திய வாதிகள் சோவியத் அரசாங்கத்தைக் கவிழ்க்க நேர்முகமாகவும் மறைமுகமாகவும் சதா சூழ்ச்சி செய்துவந்தார்கள். இவர்களுடைய சூழ்ச்சிக்கெல்லாம் இடம் கொடாமல் ஜாக்கிரதையாக இருக்கவேண்டியிருந்தது.

இன்னொரு பெரிய கஷ்டம் மூலத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு மூலதனத்திற்கு வழிசெய்வதாகும். 1920 முதல் 1926 வரையில் சோவியத் ரஷ்யாவில் தொழிலில் முன்னேற்றம் ஏற்பட்டாலும், சில முக்கியமான குறைபாடுகள் காணப்பட்டன. முதலாவதாக, மில்களும், தொழிற்சாலை இயந்திரங்களும் தேய்ந்து பழுதுபட்டிருந்தன. இவற்றை வைத்துக்கொண்டு இனி ரொம்ப காலம் தள்ளமுடியாதென்கிற நிலை ஏற்பட்டது. இரண்டாவது, இந்தக் காலத்தில் இயந்திரங்களை உற்பத்தி செய்யும் மூலத் தொழில் வளரவில்லை. மூலத் தொழில்கள் ஏற்படாதவரையில் தொழில் துறையில் ஒரு தேசமும் முன்னேற முடியாது. மூன்றாவது அழிபண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் இந்தக் காலத்தில் பெருகினாலும் அவற்றின் எதிர்கால வளர்ச்சி மூலத் தொழிலைப் பொறுத்தே இருந்தது. எனவே எந்த வழியாகப்

பார்த்தாலும் மூலத் தொழிலை வளர்க்காமல் முடியவில்லை. ஜார் கால ரஷ்யாவில் இல்லாத மோட்டார் தொழில், ரசாயனத் தொழில், இரும்புத் தொழில், இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழில் போன்ற மூலத் தொழில்களை ஏற்படுத்துவது அவசிய மாக இருந்தது. முதலாளித்துவ நாடுகளால் சூழப்பட்டிருக்கும் சோவியத் ரஷ்யாவுக்குப் போர்க் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழில்களையும் நிறுவ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வ்வ சாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு டிராக்டர் என்று சொல்லு கிற உழுகிற இயந்திரத்தையும் இன்னும் இதர இயந்திரங்களை யும் உற்பத்தி செய்வதும் அவசியமாயிற்று.

இந்தக் காரியங்களையெல்லாம் தொழில் முன்னேற்றத்தினலே தான் சாதிக்கமுடியும். ஆனல் தொழிலில் இவ்வளவு மகத்தான முன்னேற்றத்தைக் கொண்டுவருவதென்ருல் கோடிக் கணக்கான ரூபிள் (ரஷ்ய நாணயம்) செலவாகும். இத்தனை கோடி ரூபிளையும் எங்கிருந்து பெறுவது? வெளி நாடுகளிலிருந்து கடன் வாங்கலா மென்று கனவிலும் எண்ணமுடியாது. எந்த முதலாளித்துவ நாடு சோவியத் ரஷ்யாவுக்குக் கடன் கொடுக்கும்? வெளிநாட்டு உத வியை ஒரு இம்மியும் எதிர்பார்க்காமல் சோவியத் ரஷ்யா இந்த மகத்தான தொழிலபிவிருத்தியைக் கொண்டுவரவேண்டியிருந்தது.

முதலாளித்துவ நாடுகள் காலனிகளைக் கொள்ளையடித்தும், தங் கள் ஆதிக்கத்தின் கீழ்வந்த நாடுகளிலிருந்து பணத்தைக் கசக்கிப் பிழிந்தும், அந்நிய நாடுகளிலிருந்து பணத்தைக் கடன் வாங்கியும், தங்கள் மூலத்தொழில்களை நிறுவின. சோவியத் ரஷ்யா முதலிரண்டு ஆட்சேபகரமான வழிகளைக் கையாள முடியாது. மூன்ருவதான கடன் வாங்குவது சம்பந்தமான பிரசினைக்கே இடமில்லை. ஆயினும் எப்படியாவது பணத்தைப் பெற்று ஆகவேண்டியிருந்தது.

பணம் கிடைக்கவும் செய்தது. முதலாளித்துவ நாடுகளால் முடியாத காரியத்தை சோவியத் ரஷ்யா செய்தது. சோவியத் அரசாங்கம் மில்களையும், தொழிற்சாலைகளையும், போக்குவரத்துச் சாதனங்களையும், நிலத்தையும், பாங்குகளையும் அரசாங்கத்தின் பொதுச் சொத்தாக்கியது. இவைகளிலிருந்து கிடைத்த லாபம் யாவும் விரல்விட்டு எண்ணக்கூடிய சில முதலாளிகள் கைக்குப் போகாமல், தொழிலபிவிருத்திக்குச் சென்றது.

ஜார் அரசாங்கம் வாங்கிய கடன்களை யெல்லாம் சோவியத் அரசாங்கம் ரத்து செய்தது. இந்தக் கடன்களுக்கு ஜனங்களிடம் வாங்கும் வரியின் மூலம் வட்டியாகக் கொடுக்கும் கோடிக் கணக் கான ரூபிள் இப்போது மிஞ்சியது. நிலச்சுவான்தார்களிடமிருந்து நிலத்தைப் பறித்தபடியால், அவர்களுக்குக் குடியானவர்கள் வரு ஷத்தில் கிஸ்தியாகக் கட்டிவந்த 50 கோடி ரூபிள் மிச்சப்பட்டது. இந்தப் பணங்களெல்லாம் தொழிலபிவிருத்திக்குச் சென்றன. தொழில் வருஷா வருஷம் வளர்ந்துகொண்டு சென்றபடியாலும், சோவியத் அரசாங்கம் ரொம்பச் சிக்கனமாகச் செலவு செய்த படியாலும் வருஷா வருஷம் கிடைத்த வரும்படி பெருகிக்கொண்டு சென்றது. இந்தக் காரணங்களினல், நீப்பர் மின்சாரத் தொழிற் சாலை, டர்க்கிஸ்டான் சைபீரியன் ரயில்வே, ஸ்டாலின்கிராட் டிராக்டர் தொழிற்சாலை போன்ற பிரமாண்டமான மூலத் தொழில்களைச் சிருஷ்டி செய்ய முடிந்தது.

1927-ம் வருஷத்திலேயே இதனுடைய நலன்கள் தெரியத் தொடங்கின. விவசாயமும் தொழிலும் போருக்கு முன்னிருந்த நிலைக்கு வந்து விட்டன. சமதர்ம அடிப்படையில் நடக்கும் தொழில் 81 சதவிகிதத்திற்கு உயர்ந்தும் சொந்த முறையில் நடக்கும் தொழில் 19 சதவிகிதத்திற்கும் குறைந்தும் போய்விட்டது.

ஆனால் விவசாயத்தின் நிலைமை வேறு மாதிரியாக இருந்தது. விவசாயம் போருக்கு முன்னிருந்த நிலைக்கு வந்தாலும், விவசாயத்தில் முக்கிய அம்சமான நெல், கோதுமை போன்ற தானிய விளைவு போருக்கு முன்னைய அளவில் 91 சதவிகிதம்தான் இருந்தது. இதில் குடியானவர்களின் தேவைக்குக் கண்டு விற்பனைக்காகச் சந்தைக்கு வருவது போருக்கு முன்னர் வந்த தானியத்தில் 38 சதவிகிதமே. தானிய விளைவு இன்னும் குறையும் என்ற குறிகள் வேறு காணப்பட்டன.

பெரிய பண்ணைகளைத் துண்டு நிலங்களாகப் பிரிக்கிற வேலை இன்னும் நடந்துகொண்டிருந்தது. துண்டு நிலங்களில் பழையகால முறைப்படி குடியானவர்கள் உழுது பயிரிட்டுவந்தார்கள். துண்டு பட்டுப்போன காரணத்தினாலும் விளைவு குறைந்து போகிறது என்பது ஒருபுறமிருக்க, இந்தக் குறைந்த விளைவிலும் முன்னையை விட வெகு குறைவான சதவிகிதமே விற்பனைக்காகச் சந்தைக்கு வந்தது. இந்தநிலை நீடித்துக்கொண்டுபோனால், ராணுவமும் நகரவாசிகளும் பஞ்சத்தால் சாகவேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

இதிலிருந்து தப்பும் வழி துண்டு நிலங்களை ஒன்று சேர்த்து, டிராக்டர் போன்ற இயந்திரங்களைக் கொண்டு விவசாயத்தை நடத்துவதேயாகும். இப்படிச் செய்தால் சந்தைக்குவரும் தானியத்தை ஏழுமடங்கு அதிகப்படுத்தலாம். ஆனால் துண்டு நிலங்களை ஒன்றுசேர்த்து ஒருவருடைய பொறுப்பில் விடமுடியாது. அப்படி விட்டால் அது அவருக்குச் சொந்தமாகிப் பழைய முதலாளித்துவ முறைக்குக் கொண்டு வந்துவிடும். ஆகையால் சமதர்மக் கொள்கைக்குப் பொருத்தமான கூட்டுப்பண்ணை முறையைக் கையாளுவது தான் இதற்குச் சரியான வழி. இந்த வழியைக் குடியானவர்கள்மீது கட்டாயப்படுத்திப் புகுத்தாமல் இதம்பதமாகச் சொல்லியே கையாளவேண்டும். அதைத் தான் சோவியத் ரஷ்யா செய்தது.

1926, பிப்ரவரியில் நடைபெற்ற சர்வதேசக் கம்யூனிஸ்ட் சங்கக் காரியக் கமிட்டியில் ஸ்டாலின் வலது சாரிக்காரர்களையும் "அதி-இடதுசாரி"க் காரர்களையும் கண்டித்துப் பேசினார். இந்தக் காலத்தில் டிராட்ஸ்கி கூட்டத்தாரையும் இதர எதிரிகளையும் எதிர்த்து ஸ்டாலின் எழுதியும் பேசியும் வந்தார். டிராட்ஸ்கி கூட்டத்தார் இறுதியில் புரட்சியை எதிர்க்கிற பிற்போக்காளர்கள் கூட்டத்தில் சேர்ந்து கொள்ளுவார்கள் என்று ஸ்டாலின் அப்போதே சொன்னார்.

சீனாவைப்பற்றி ஸ்டாலின் பல கட்டுரைகள் எழுதினார். கீழை நாடுகளில் புரட்சி மனப்பான்மை எப்படி வலுக்கிறது, புரட்சிப் போருக்கு அவை எப்படி தயாராகி வருகின்றன என்ற பிரசினைகளைத் தெரிந்து கொள்ளுவதற்கு அவர் பேசியதும் எழுதியதும் ரொம்ப உதவியாயிருந்தன.

1927-ம் வருஷக் கடைசியில் டிராட்ஸ்கி கூட்டத்தாரின் எதிர்ப்பு ரொம்ப பலமாக இருந்தது. எதிர்ப் புரட்சிசெய்து பழைய முதலாளித்துவ முறையை ஸ்தாபிப்பதற்கு வெளிப்படையாகவே அவர்கள் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்கள். இந்த நோக்கத்துடன் ஒருகட்சியை உருவாக்கவும் முயற்சித்தனர். இவர்கள் செய்கிற வேலைகளையெல்லாம் பற்றி, 15-வது கட்சிக் காங்கிரசில் ஸ்டாலின் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தார். டிராட்ஸ்கி கூட்டத்தார் லெனின் வகுத்த வழியினின்றும் தவறி வேறு தவருன பாதையில் செல்லுகிருர்கள். இதனல் நாட்டுக்கு தீமையே விளையும் என்று உணர்ந்த காங்கிரஸ் அவர்களைக் கட்சி அங்கத்தினர் பதவியிலிருந்து நீக்கியது. தொழிலபிவிருத்தியையும், விவசாய அபிவிருத்தியையும் இன்னும் துரிதப்படுத்தவேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் முடிவு செய்தது. இந்தக் காங்கிரஸ் தீர்மானத்தை அடிப்படையாகக்கொண்டு ஸ்டாலின் முதல் ஐந்து வருஷத் திட்டத்தைத் தயார் செய்தார். இந்த 5-வருஷ காலத்தில் (1928—33) 6400 கோடி ரூபிள் பொருளாதார அபிவிருத்தியில் போடவேண்டுமென்று இந்தத் திட்டம் கணக்கிட்டது.

இந்தக் காங்கிரஸில் தீர்மானித்தபடி பணக்காரக் குடியானவர்களின் (இவர்களை ரஷ்யமொழியில் 'குலாக்' என்று சொல்லுவார்கள்.) மீது போல்ஷிவிக்கட்சி பலமான போரைத் தொடுக்க ஆரம்பித்தது. "ஏழைக் குடியானவனை உறுதியாக நம்பு, மத்திய வர்க்கத்தைச் சேர்ந்த குடியானவர்களோடுள்ள தொடர்பைப் பலப்படுத்திக் கொள், குலாக்குகள்மீது போர் தொடு" என்ற சுலோகத்தைப் போல்ஷிவிக் கட்சி கடைப்பிடித்தது. குலாக்குகள் அரசாங்கம் கட்டுப்படுத்திய விலைக்கு தங்கள் விவசாயப்பொருள்களை விற்க மறுத்தார்கள். அரசாங்கம் அவற்றை பறிமுதல்செய்தது. பறிமுதல் செய்த தானியத்தில் 25 சத விகித தானியத்தை ஏழைக் குடியானவர்களுக்கு வழங்கியது. இத்தோடு இன்னும் பல விசேஷ உரிமைகளும் ஏழைக்குடியானவர்களுக்கு அளிக்கப்பட்டன. அரசாங்கம் எடுத்துக்கொண்ட இந்த நடபடிக்கைகள் விரும்பிய பலனை அளித்தது. ஏழைக் குடியானவர்களும் மத்திய வர்க்கத்தைச் சேர்ந்த குடியானவர்களும் குலாக்குகளுக்கு விரோதமாக அரசாங்கத்தோடு பூரணமாக ஒத்துழைத்தார்கள். 1928-ல் அரசாங்கத்துக்குப் போதுமான அளவு தானியம் கிடைத்தது. கூட்டுப்பண்ணை இயக்கமும் துரிதமாக அபிவிருத்தியடைய ஆரம்பித்தது.

இதே வருஷத்தில் நிலக்கரிச் சுரங்கங்களுக்குப் பேர்போன டொனெட்ஸ் பகுதியில் ஷக்தி என்ற ஜில்லாவில் நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை பார்த்துவந்த பல பூர்ஷ்வா நிபுணர்கள் அங்கேயுள்ள இயந்திரங்களை உடைத்தும், இன்னும் பல முறைகளில் சேதப்படுத்தியும் வேண்டுமென்றே சுரங்கங்களைத் தீமைபயக்கும் முறையில் மேல்பார்த்தும் வந்தார்கள். இவர்கள் புரட்சிக்குமுன் இந்தச் சுரங்கங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருந்த ரஷ்ய முதலாளிகளோடும், அந்நியநாட்டு முதலாளிகளோடும், அந்நிய ராணுவ ரகசியப் போலீசுடனும் ரகசியமாகத் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார்கள். சோவியத் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து திரும்பவும் முதலாளித்துவத்தை ரஷ்யாவுக்குக் கொண்டுவந்துவிட வேண்டுமென்பது இவர்கள் எண்ணம். இவர்களை சோவியத் அரசாங்கம் தகுந்த முறையில் தண்டித்தது.

ஷக்தி ஜில்லாவில் நடந்த இந்த சம்பவத்திலிருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாயின. அந்நிய நாடுகளிலுள்ள முதலாளி களும் அவர்களுக்குக் கையாளாக ரஷ்யாவிலேயே இருக்கும் துரோகிகளும் சோவியத் ரஷ்யாவின் பொருளாதார அமைப்பைச் சிதைத்து சோவியத் அரசாங்கத்தைக் கவிழ்க்கப் பார்க்கிறார்கள் என்பது ஒன்று. இரண்டாவது சோவியத் ரஷ்யா தொழில் நிபுணர் களுக்குப் பூர்ஷ்வாக்களை நம்பியிருக்கக்கூடாது, தொழிலாளர்களை இந்தத் துறையில் பயிற்ற வேண்டு மென்பது இரண்டாவதாகும்.

நாம் பிறரிடத்தில் இருக்கிற குற்றங்களைமட்டும்பார்க்காமல்நம் மிடையே என்ன குற்றங்கள் இருக்கின்றன என்பதையும் பார்க்க வேண்டும். நமது குற்றத்தை நாம் காணுதவரையில், நமது ஸ்தாப னங்களின் வேலையைப் பொது மக்களின் கட்டுப்பாட்டுக்கு உட் படுத்தாதவரையில், நமது தொழிலையும், தொழிலாளர் சங்கங்களை யும், கட்சி ஸ்தாபனங்களையும் அபிவிருத்தி செய்யமுடியாது; சமதர்ம அமைப்பை உருவாக்கவும், முதலாளிவர்க்கத்தாரின் நாச வேலைகளை நிறுத்தவும் முடியாது,'' என்று ஸ்டாலின் சொன்னார்.

தன் குற்றம் காணும் இந்தக் கொள்கையைக் கடைப்பிடித்த தன் பயனாகப் போல்ஷிவிக் கட்சி வியந்து பாராட்டத்தக்க பல வேலைகளைச் செய்யமுடிந்தது. கூட்டுப்பண்ணையையும், அரசாங்கப் பண்ணையையும் அது பெருக்கியது; குலாக்குகள்மீது போர்தொடுத் தது; தானியங்களைச் சேகரிக்க ஸ்தாபனங்களை நிறுவியது; கட்சியி லிருந்து போல்ஷிவிக் கொள்கைகளுக்கு விரோதமாக உள்ளவர் களை அங்கத்தினர் பதவியிலிருந்து நீக்கியது. இவையெல்லாவற் றையும் போல்ஷிவிக் கட்சி சாதிக்க முடிந்தது.

இந்தக் காலத்தில் ஏற்பட்ட பலன்களைப்பற்றிப் பேசும்போது ஸ்டாலின் கீழ் வருமாறு சொல்லுகிறார் :

"நாம் ரஷ்யாவின் பிற்போக்கைப் பின்புறமாகவே விட்டுவிட் டுத் தொழில் முன்னேற்றத்தின் வழியில், சமதர்ம வழியில், வெகு வேமாகச் சென்று கொண்டிருக்கிறோம். உலோகத் தொழில், மோட்டார் தொழில், டிராக்டர் தொழில் ஆகிய தொழில்களை யுடைய நாடாக நாம் மாறிக்கொண்டிருக்கிறோம். நாம் தொழிலில் பூரண அபிவிருத்தியடையும் காலத்தில், தங்கள் "நாகரிக"த்தைப் பற்றிப் பெருமை யடித்துக்கொள்ளும் மதிப்பு வாய்ந்த முதலாளி மார்கள் நம்மை முந்துவதற்கு முயன்று பார்க்கட்டும்! அப்போது பிற்போக்காயிருப்பது எந்த நாடு, முன்னேறியிருப்பது எந்த நாடு என்று அவர்கள் சொல்லுகிறார்கள் என்பதைப் பார்ப்போம்!"

எவ்வளவு தூரதிருஷ்டியோடு ஸ்டாலின் இதைச் சொல்லி யிருக்கிறார் என்பதை இன்று நாம் பார்க்கிறோம்.

11. விவசாயப் புரட்சி

மேற்கே ஒடெஸாவிலிருந்து கிழக்கே விலாடிவோஸ்டக் வரையில் ரஷ்யா முழுவதும் எங்கு பார்த்தாலும் கூட்டுப் பண்ணை மயமாக இருக்கிறது. லட்சக்கணக்கான இந்தக் கூட்டுப்பண்ணை களிலெல்லாம் டிராக்டர்களே உழவு வேலையை நடத்துகின்றன. கதிர் முற்றிக் கனங் தாங்கமாட்டாமல் தலை சாய்த்து நிற்கும் போது, அவற்றை இயந்திரக் கருவிகளே அறுவடை செய்கின்

றன; அறுவடையான தானியத்தை இயந்திரங்களே பதர் போக்கு கின்றன. இப்படியெல்லாம் லெனின் கனவு கண்டார். 1923-ல் இது வெறும் கனவாகவேதான் இருந்தது. ஆனல், 1937-ல் இந்தக் கனவு நனவாகிவிட்டது. ரஷ்ய விவசாயம் நூற்றுக்கு நூறு கூட்டுப்பண்ணை விவசாயமாகிவிட்டது. முதலாளித்துவ உலகில் மனிதனை அடிமைப்படுத்துகிற இயந்திரத்தைச் சமதர்ம ரஷ்யாவில் மனிதன் அடிமைப்படுத்திவிட்டான். இங்கே உழுவது, அறுவடை செய்வது, பதர் போக்குவது போன்ற வேலைகளையெல்லாம் மனிதன் சொற்படி இயந்திரங்களே செய்து வருகின்றன.

1917-ம் வருஷம் அக்டோபர் மாதம் ஏற்பட்ட சமதர்மப் புரட்சி எவ்வளவு மகத்தானதோ, அவ்வளவு மகத்தானது விவசாயத்தில் ஏற்பட்ட இந்தப் புரட்சி என்று ஸ்டாலின் சொன்னர். அந்தப் புரட்சியைப் போலவே இந்தப் புரட்சியும் சமுதாய அமைப்பின் தன்மையையே மாற்றியிருக்கிறது. ஆனல் அக்டோபர் புரட்சியைப் போல இது பலவந்தத்தினல் ஏற்பட்டதல்ல. இதம்பதமாகச் சொல்லியும், கல்வியறிவு ஊட்டியும், அரசாங்கப்பண்ணைகளின் உதாரணங்களைக் காட்டியும், படம், பேச்சு, எழுத்துமூலம் பிரசாரம் செய்தும் சோவியத் அதிகாரிகள் கூட்டுப்பண்ணை முறையில் ரஷ்யக் குடியானவர்களின் மனது கவியும்படி செய்தார்கள். இதற்கு எல்லையற்றபொறுமையும், இடைவிடாத உழைப்பும், நுண்ணிய அறிவும், குன்ருத உற்சாகமும், அசையாத நம்பிக்கையும் தேவைப்பட்டன. இந்தக் குணங்களெல்லாம் ஸ்டாலினிடமும் போல்ஷிவிக் அங்கத்தினர்களிடமும் அமோகமாக இருந்தன.

கூட்டுப்பண்ணை முறை ஒரு தடங்கலுமின்றி வளர்ச்சியடைந்தது என்று சொல்லமுடியாது. முதலாளித்துவம் பயங்கரமான உலகப் பொருளாதார நெருக்கடியில் தத்தளித்துக் கொண்டிருந்த சமயம் அது. சோவியத் ரஷ்யாவைப் பலி கொடுத்துத் தங்கள் நிலைமையை அபிவிருத்தி செய்யலாம் என்று முதலாளிகள் கனவு கண்டு கொண்டிருந்தார்கள். போர் வரப்போவதாகப் பயமுறுத்திக்கொண்டிருந்தது. 1931-ல் ஜப்பான், திருடனைப் போல, திடீரென்று மஞ்சூரியாவின்மீது பாய்ந்து அதைத் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தது. அரசியலிலும் பொருளியலிலும் நெருக்கடியாயிருந்த இந்தக் காலத்திலே தான், சோவியத் ரஷ்யாவில் கூட்டுப்பண்ணை முறை வளர்ந்தது; ஐந்து வருஷத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியது. முதலாளித்துவத்துக்கும் சமதர்மத்துக்கும் உள்ள வித்தியாசம் இது தான்.

உள்நாட்டில் டிராட்ஸ்கி கூட்டத்தாரும் முதலாளித்துவத்தை திரும்பக் கொண்டுவர முயன்ற வலதுசாரிக்காரர்களும் அந்நிய ஏகாதிபத்திய வாதிகளோடும் அவர்களது இரகசியப் போலீசுடனும் சேர்ந்து சூழ்ச்சி செய்து, அவர்களுக்காக வேவு பார்க்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். அத்தோடு, போல்ஷிவிக் கட்சி அங்கத்தினர்களில் முக்கியமானவர்களைக் கொலை செய்வதென்று திட்டம் போட்டு முதலில் செர்ஜிகிராவைப் பலியும் வாங்கினர்கள். ஸ்டாலினை எப்படியாவது தீர்த்துவிடுவது என்று சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த சந்தர்ப்பத்திலே தான் ஸ்டாலின் கூட்டுப் பண்ணை முறையை வளர்த்து குலாக்குகளை ஒழித்து விடுவதென்ற கொள்

கையைக் கையாண்டு வந்தார். விவசாயத்தில் ஏற்படுத்திய இந்தப் புரட்சியை ஸ்டாலின் படிப்படியாகவே கொண்டு வந்தார்.

குலாக்குகளை ஒழித்து, விவசாயத்தில் கூட்டுப்பண்ணை முறையைக் கொண்டுவர வேண்டுமென்று மத்திய கமிட்டி அறிவித்த போது, கட்சியின் "இடதுசாரி" அங்கத்தினர்கள் சிலர் முன்பின் யோசிக்காமல் கூட்டுப்பண்ணை முறையை அமைக்கப்பக்குவமடையாத ஜில்லாக்களிலும் அதைப் புகுத்த ஆரம்பித்தார்கள். குலாக்காயில்லாதவர்களையே குலாக் என்று சொல்லி அவர்கள் பரிமுதல் செய்ய ஆரம்பித்தார்கள். இது ரொம்ப ஆபத்தான செய்கையாகும். இதனால் குடியானவர்களிடையே கோபத்தை உண்டாக்கி, சோவியத் அரசாங்கத்திற்கு விரோதமாகக் கிளம்பும்படி பிரசாரம் செய்வதற்கு சோவியத் அரசாங்கத்திற்கும், போல்ஷிவிக் கட்சிக்கும் விரோதிகளாக யிருப்பவர்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது. வெறும் வாயை மெல்லுபவர்கள் அவல் கிடைத்தால் விடுவார்களா?

இப்படிக் கட்டாயமாகக் கூட்டுப்பண்ணை முறையைப் புகுத்துவதை ஸ்டாலின் "வெற்றியின் வெறி" என்ற கட்டுரையில் தாக்கி எழுதினர். இந்தக் கட்டுரை விரும்பிய பலனை ஈந்தது. வெற்றியில் மயங்கிப் போய்ச் செய்த தவறுகளை யெல்லாம் திருத்திக் கொள்வதற்கு அது உதவியாக இருந்தது. கூட்டுப்பண்ணை முறையில் இரண்டு விதம் இருக்கிறது. முக்கியமான உற்பத்தி சாதனங்களை மட்டும் பொதுச் சொத்தாக்கி வசிக்கும் வீடு, அதோடு சேர்ந்திருக்கும் நிலம், தோட்டம், பசுமாடு, கோழி, வாத்துப் போன்றவை ஆகிய இவைகளை யெல்லாம் அவரவர்களிடமே இருக்கவிட்டு விடுவது ஒருமுறை. இதை **ஆர்ட்டல்** என்று சொல்லுவார்கள்; உற்பத்தி சாதனங்கள் எல்லாவற்றையும் பொதுச் சொத்தாக்குவதோடு விநியோகத்தையும் பொதுவாக்கி விடுவது இரண்டாவது முறை. இதற்கு **கம்யூன்** என்று பெயர். ரஷ்யாவில் முதல் முதலில் ஆர்ட்டல் முறையைத்தான் கையாளவேண்டும். நிலைமை பக்குவமடைந்த பிறகு இரண்டாவது படியாகிய கம்யூன் முறைக்குப் போகலாமென்று ஸ்டாலின் அந்தக் கட்டுரையில் எழுதினர்.

தலைவராக இருப்பவன் எப்படி யிருக்கவேண்டும் என்று இந்தக் கட்டுரையில் ஸ்டாலின் குறிப்பிட்டார். "தலைமைப் பதவி வகிப்பது என்பது ஒரு கலை. ரொம்பக் கஷ்டமான கலையும்கூட. இயக்கத்தோடு செல்லாமல் பின்தங்கிவிடக் கூடாது. அப்படிச் செய்வது ஜனங்களிடமிருந்து அவனைப் பிரித்துவிடும். ஆனால் ஒரே மூச்சில் முன்னேக்கி ஓடிவிடவும் கூடாது அப்படிச் செய்வது ஜனங்களோடு அவனுக்குத் தொடர்பில்லாதபடி செய்துவிடும். ஒரு இயக்கத்தை நடத்தும்போதே, ஜனங்களோடு நெருங்கிய தொடர்பும் வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஒருவன் விரும்பினல் இரண்டு முனைகளில் அவன் போராட வேண்டும். இயக்கத்தோடு ஒட்டிச் செல்லாமல் பின் தங்குபவர்கள், இயக்கத்தை விட்டு விட்டு ஒரேயடியாக முன்னே சென்று விடுபவர்கள்- இவ்விரு சாராரோடும் அவன் போராட வேண்டும்.

"இயக்கத்தை நடத்தும்போதே தொழிலாளர்கள் குடியானவர்கள் ஆகிய இவர்களோடுள்ள தொடர்புகளை இழந்துவிடாமலிருக்கவும், அந்தத் தொடர்புகளைப் பலவழிகளில் அதிகப்படுத்

தவும் நமது கட்சி கற்றுக் கொண்டிருக்கிறது. இது தான் அது இவ்வளவு சக்தி வாய்ந்ததாகவும் ஜயிக்க முடியாததாகவும் இருப்பதற்குக் காரணம்,'' என்று ஸ்டாலின் எழுதினர்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு, கூட்டுப்பண்ணை முறையைப் பற்றிய கேள்விகளடங்கிய கடிதங்கள் பல சாதாரணக் குடியான வர்களிடமிருந்தும கூட்டுப்பண்ணைக் குடியானவர்களிடமிருந்தும் வந்தன. இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் முறையில் ஸ்டாலின் "கூட்டுப்பண்ணைத் தோழர்களுக்குப் பதில்'' என்ற ஒரு கட்டுரையை எழுதினர். இதில் போல்ஷிவிக் கட்சி அதிகாரிகளும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் செய்த பெரிய பிசகுகளை எடுத்துக்காட்டி யிருந்தார். இந்தப் பிசகுகளுக்குக் காரணம் மத்திய வர்க்கத்தைத் சேர்ந்த குடியானவர்களின் முக்கியத் துவத்தை உணராததும், குடியானவர்களைக் கூட்டுப்பண்ணையில் சேரும்படி கட்டாயப் படுத்தக்கூடாது என்ற லெனினுடைய கொள்கையை மறந்துவிட்டதும் ஆகும். கூட்டுப்பண்ணைகளில் குடியானவர்கள் தாங்களாக வந்து சேரவேண்டும். மேலும் சோவியத் ரஷ்யாவில் எல்லாப் பகுதிகளும் ஒரே மாதிரியாக இருக்கவில்லை. நிலைமைகள் எவ்வளவோ வேறுபடுகின்றன. ஆர்ட்டல் முறையை விட்டு கம்யூன் முறைக்கு உடனே தாவிவிடக் கூடாது. கூட்டுப்பண்ணையின் பூரணமான வளர்ச்சிதான் கம்யூன். கம்யூனிலுள்ள அங்கத்தினர்களின் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் அளவு பொருளுற்பத்தி ஏற்பட்ட பிறகு தான் இந்த முறை சாத்தியமாகும் என்று விளக்கி ரஷ்யக் குடியானவர்களின் சந்தேகங்களை ஸ்டாலின் அகற்றி வைத்தார்.

ஸ்டாலின் சொன்னபடியே கட்சி நடபடிக்கைகள் எடுத்துக் கொண்டு கூட்டுப்பண்ணை முறையை ஒரு பெரிய வெற்றியாக்கி விட்டது. கூட்டுப்பண்ணை முறை வெற்றியடைந்ததன் காரண மாகக் குலாக் வர்க்கமே மறைந்தது விட்டது.

ஐந்து வருஷத் திட்டத்தை நான்கு வருஷத்தில் பூர்த்திசெய்து விடவேண்டுமென்ற ஆவலும் உற்சாகமும் ஜனங்களிடம் அதிக மாகக் காணப்பட்டது. "ஐந்து வருஷத் திட்டத்தை நான்கு வருஷத்தில் பூர்த்திசெய்'' என்ற இந்த சுலோகம் ஜனங்களிடமிருந்தே வந்தது. அதை ஸ்டாலின் ஏற்றுக்கொண்டு, 1930-ம் வருஷம்கூடிய கட்சிக் காங்கிரசையும் அதை ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். அதன்படியே பிரமாண்டமான ஐந்து வருஷத் திட்டம் நான்கு வருஷத்தில் பூர்த்தியாயிற்று. அது முடிந்ததும் அமுலுக்குக் கொண்டு வருவதற்கு இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தை வகுத்து ஸ்டாலின் தயாராகவைத்திருந்தார். இந்த இரண்டாவது திட்டமும் குறித்த காலத்திற்கு முன்பே பூர்த்தியாகிவிட்டது.

முதல் ஐந்து வருஷத்திட்டம் வெற்றிகரமாகப் பூர்த்தியாகிக் கொண்டிருந்தது. தொழிலில் அபாரமான வளர்ச்சி ஏற்பட்டது. மூலத் தொழில்கள், சிறப்பாக இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் நிறுவப்பெற்று நடந்து கொண்டிருந்தன. ஆயினும் இந்த மூலத் தொழில்களில் உபயோகித்து வந்த இயந்திரங்கள் பழைய ரகத்தைச் சேர்ந்தவையாயிருந்தன. அங்கே விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பயனைக் கண்டுபிடித்த நவீன இயந்திரங்களை அமைக்கவேண்டிய தேவை அதிகமாக ஏற்பட்டது. மேலும்

தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழில் நிபுணர்களெல்லாம் பூர்ஷ்வா வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். மானேஜர்களாகவுள்ள போல்ஷிவிக் கட்சி அங்கத்தினர்களுக்குத் தொழிலில் நிபுணத்துவம் அடையவேண்டுமென்ற ஆவலும் இல்லை. அதைப்பற்றி இழிவாகவும் எண்ணினார்கள். மேல்ப் பார்ப்பதுதான் தங்கள் வேலை என்று கருதினார்கள். இந்த மனப்போக்கு நீடித்து நிற்குமானால், தொழிலபிவிருத்திக்கே தடங்கல் ஏற்படுமென்று கண்ட ஸ்டாலின் போல்ஷிவிக்குகள் தொழிலில் நிபுணத்துவம் அடையவேண்டும் என்று வற்புறுத்த ஆரம்பித்தார். பழைய அசட்டையான எண்ணங்களை உதறித் தள்ளிவிட்டு போல்ஷிவிக்குகள் தொழிலில் நிபுணத்துவம் அடைகிற விஷயத்தில் விசேஷ சிரத்தைக்காட்ட ஆரம்பித்தார்கள். விரைவில் நிபுணர்களாகவும் ஆனார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஸ்டாலின் சொல்லியது குறிப்பிடத்தக்கது:

"தொழில் அபிவிருத்தி இவ்வளவு வேகமாகப் போகக்கூடாது, இந்த வேகத்தை குறைக்கவேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள். தோழர்களே, இல்லை, அதைக் குறைப்பது சாத்தியமில்லை. வேகத்தைக் குறைப்பது பின்வாங்குவதாகிவிடும். பின்வாங்குவதென்றால் தோற்று விட்டோம் என்று தான் பொருள். ஆனால் நாம் தோற்க விரும்பவில்லை. மாட்டோம், தோற்க ஒருநாளும் இசையமாட்டோம். முற்போக்கான நாடுகளைவிட நாம் 50 வருஷம் பின்தங்கி விட்டோம். இந்த 50 வருஷத்தை 10 வருஷ காலத்தில் நாம் சரிபண்ணவேண்டும். ஒன்று, நாம் முன்னேற வேண்டும், அல்லது அவர்கள் நம்மை நசுக்கி விடுவார்கள்."

இதன் பயனாகத் தொழில் முறையில் ஏற்பட்ட முன்னேற்றம் விவசாயத் துறையிலும் முன்னேற்றம் ஏற்படுவதற்கு உதவியாக இருந்தது. 1930-ம் வருஷத்துக்குப் பிறகு கூட்டுப்பண்ணைகள் எண்ணிக்கையில் பெருகிக்கொண்டு போயின. 1931-ல் நூற்றுக்கு எண்பது குடியானவர்கள் கூட்டுப்பண்ணைகளில் சேர்ந்துவிட்டார்கள். இது சமதர்மத்திற்குப் பெரிய வெற்றி தான். என்றாலும் லட்சக்கணக்கான இந்தக் கூட்டுப்பண்ணைகளில் வேலைத் திறமையும் நிர்வாகத் திறமையும் ஏற்படவில்லை. காரணம், கூட்டுப் பண்ணைகளை நடத்துவதில் திறமைவாய்ந்த நிபுணர்கள் போதிய அளவு இல்லை. 5 ஏக்கரையும் பத்து ஏக்கரையும் வைத்து உழுத குடியானவர்களுக்கு 3000 ஏக்கர் 4000 ஏக்கர் என்பதை வைத்துத் திறமையாக நடத்தவும் நிர்வகிக்கவும் உள்ள அநுபவம் இல்லை. மேலும் சில கூட்டுப்பண்ணைகள் திறம்பட அமைக்கப்படவில்லை. வேலையில் ஒரு ஒழுங்கு கட்டுப்பாடு என்பதும் இல்லாமலிருந்தது. நிலங்களை இழந்த குலாக்குகள் நேரில் வராமல் மறைமுகமாகப் பல தீமைகள் புரிந்து வந்தார்கள்.

இந்த நிலைமையைச் சீர்திருத்தம் செய்யவேண்டிய அவசியத்தைப் போல்ஷிவிக் கட்சி உணர்ந்தது. போல்ஷிவிக் கட்சியிலிருந்து சுமார் 17000 பேரை ஸ்டாலின் நாட்டுப்புறங்களுக்கு அனுப்பிவைத்தார். இவர்கள் கூட்டுப்பண்ணைக் குடியானவர்களுக்கு அரசியல் அறிவை ஊட்டியதோடு, பண்ணை வேலைகளையும் திறம்பட நடத்த உதவியாயிருந்தார்கள். தக்க காலத்தில் சரியான நடவடிக்கை எடுத்துக்கொண்டதன் பயனாகக் கூட்டுப்

பண்ணைகளில் காணப்பட்ட குறைகளெல்லாம் மறைந்தன. 1934-ம் வருஷக் கடைசியில் கூட்டுப் பண்ணைகள் மிகப் பலமாக வேரூன்றிக்கொண்டன. இனி அவைகளை யாராலும் அசைக்க முடியாது என்ற நம்பிக்கை பிறந்தது. 1934-ல் சோவியத் ரஷ்யா விலுள்ள விளை நிலத்தில் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு கூட்டுப் பண்ணைகளாக மாறிவிட்டது. கூட்டுப் பண்ணையாக மாற்றுகிற இந்த இயக்கம் 1936-ல் பூர்த்தியடைந்து, ரஷ்யா முழுதும் கூட் டுப் பண்ணை மயமாக மாறிவிட்டது.

1933-ஆம் வருஷம் ஸ்டாலினுடைய முயற்சியின் பேரில் அகில ரஷ்யக் கூட்டுப் பண்ணைக் குடியானவர்களின் காங்கிரஸ் நடைபெற்றது. இந்தக் காங்கிரஸில் ஸ்டாலின் பேசியதாவது:

"கோடிக் கணக்கான ஏழைக் குடியானவர்களைக் கூட்டுப் பண்ணைகளில் சேரும்படி செய்தோம். உயர்ந்த ரகமான நிலமும் இயந்திரக் கருவிகளும் கிடைத்தபடியால் இந்த ஏழைக் குடியான வர்களெல்லாம் இன்று மத்தியதரக் குடியானவர்களின் அந்தஸ் துக்கு வந்துவிட்டார்கள். நூற்றுக் கணக்கான வருஷங்களாக வறுமையையே தங்கள் குடும்பச் சொத்தாகப் பெற்றுவந்த இந்தக் குடியானவர்கள் இன்று மத்தியதரக் குடியானவர்களானது ஒரு பெரிய வெற்றிதான். ஆனால் இது நமது திட்டத்தின் முதல்படியே ஆகும். நாம் இனி இரண்டாவது படிக்குப் போகவேண்டும். முன் னர் ஏழைக் குடியானவர்களாக இருந்தவர்களையும் மத்தியதரக் குடியானவர்களா யிருந்தவர்களையும் செல்வச் செழிப்புள்ள குடி யானவர்களின் அந்தஸ்துக்குக் கொண்டுவர வேண்டும்,'' என்று ஸ்டாலின் பேசினார்.

1934-ஆம்வருஷம் 17வது போல்ஷிவிக் கட்சிக் காங்கிரஸ் கூடி யது. இந்தக் காங்கிரசில் சோவியத் ரஷ்யாவில் இதுவரையில் நிகழ் ந்த மகத்தான மாற்றங்களை யெல்லாம் ஸ்டாலின் எடுத்துச் சொன் னார்: விவசாயத்தை நம்பியிருந்த ரஷ்யா இன்று தொழில் வளர்ச்சி யில் முன்னணியில் நிற்கும் ரஷ்யாவாக மாறியிருக்கிறது. சிறுசிறு நிலங்களை வைத்துச் சாகுபடி செய்த ரஷ்யா இயந்திரக் கருவிகளின் உதவி கொண்டு சாகுபடி செய்யும் கூட்டுப் பண்ணை ரஷ்யாவாக மாறியிருக்கிறது. அஞ்ஞானம் என்ற இருளில் மூழ்கியிருந்த ரஷ்யா வில் இன்று கல்வியறிவு என்கிற சூரியன் பிரகாசித்துக் கொண் டிருக்கிறது என்று ஸ்டாலின் பேசினார்.

இந்தக்காலத்தில் இரண்டாவது ஐந்துவருஷத் திட்டம் ரொம்ப வெற்றிகரமாக நடந்துகொண்டிருந்தது. இந்தத் திட்டத்தை நிறை வேற்ற 13,500 கோடி ரூபிள் செலவாகுமென்று கணக்கிட்டிருந் தார்கள். நமது முதலாளிகள் தயாரித்திருக்கும் பாம்பே திட்டத் தைப் படித்ததும் ரூ. 10,000 கோடியா என்று நாம் பிரமித்துப் போய்விட்டோம். ஆனால் ரஷ்யாவில் வெற்றிகரமாகப் பூர்த்தி யடைந்த இரண்டாவது ஐந்துவருஷத் திட்டத்திற்கு முன் நமது பாம்பே திட்டம் வெட்கித் தலைகுனிய வேண்டியதுதான்.

12. பூரண சமதர்ம சமுதாயம்

முதலாளித்துவ நாடுகளில் 1929-ஆம் வருஷம் ஆரம்பித்த பயங்கர மான பொருளாதார நெருக்கடி 1933-ஆம் வருஷம் வரை இருந்தது. இந்தக் காலத்தில் உலக மக்கள் — ரஷ்ய மக்களைத் தவிர — அனுபவித்த கஷ்டங்களைச் சொல்லி முடியாது. நெருக்கடி

ஒருவாறு தீர்ந்தது. ஆனல் தொழிலபிவிருத்தி ஏற்படும் குறிகள் காணப்படவில்லை. நெருக்கடியின் வேகத்தைத் தாங்கமாட்டாமல் அப்படியே அறிவிழந்து ஸ்தம்பித்துப்போனதுபோல் இருந்தன முதலாளித்துவ நாடுகள். நெருக்கடி தீர்ந்து கொஞ்ச காலம் சென்ற பிறகே இயந்திரங்கள் திரும்பவும் இயங்க ஆரம்பித்தன. ஆனல் இந்தத் தொழில் அபிவிருத்தி ரொம்ப மந்தப் போக்குடையதாயிருந்தது. 1937-ஆம் வருஷத்தில்கூட 1929-ஆம் வருஷ நிலைமையை அடைய முடியவில்லை. 1937-ல் திரும்பவும் ஒரு பொருளாதார நெருக்கடி தலைதூக்க ஆரம்பித்தது. இது முதலில் அமெரிக்காவில் துவங்கிப் பிரிட்டனுக்கும் இதர நாடுகளுக்கும் பரவிக்கொண்டிருந்தது. 1937-ல் அமெரிக்காவில் மட்டும் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 100 லட்சமாகப் பெருகியது. பிரிட்டனிலும் வேலையில்லாத் திண்டாட்டம் காட்டுத் தீ போலப் பரவிக்கொண்டிருந்தது. 1939-ல் உலகப் போர் குறுக்கிட்டிராவிட்டால் முதலாளித்துவ உலகம் 1929–33 நெருக்கடியை விட பன்மடங்கு பயங்கரமான ஒரு நெருக்கடியில் அகப்பட்டுக்கொண்டிருந்திருக்கும். அப்படி அகப்பட்டுக்கொள்ளாமல் தப்பியதற்கு முதலாளித்துவம் ஹிட்லருக்கு ரொம்பக் கடமைப் பட்டிருக்கிறது. டாங்கையும், வெடி விமானத்தையும், ஏனைய மரணக் கருவிகளையுமாவது உற்பத்தி செய்ய ஒரு சந்தர்ப்பமேற்பட்டதல்லவா? சோப்பையும் துணியையும் உற்பத்தி செய்வதில் போதிய லாபமில்லை, அவைகளை வாங்க மக்களிடம் பணம் இல்லை என்றுல், வெடிகுண்டையும் துப்பாக்கியையும் உற்பத்திசெய்து, அரசாங்கத்தாரிடம் நல்ல லாபத்திற்கு விற்கிருர்கள். முதலாளிமார்களுக்கு லாபம்தானே குறி?

பொருளாதார நெருக்கடி முதலாளித்துவ நாடுகளுக்கு இப்படி அடிக்கடி விஜயம் செய்துகொண்டிருந்த காலத்தில் அரசியல் உலகிலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. பொருளாதார நெருக்கடியால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஜப்பான், இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகள் தங்கள் நஷ்டங்களை ஈடு செய்வதற்கும், உள்நாட்டில் வளர்ந்துகொண்டிருந்த தொழிலாளர் இயக்கத்தைத் தடைப்படுத்துவதற்கும் ராணுவ பலமற்ற நாடுகள்மீது பாய்ந்தன. மஞ்சூரியா, அபிசீனியா, ஸ்பெயின், ஆஸ்ட்ரியா, செக்கோஸ்லோவகியா என்று ஒன்றன்பின் ஒன்ருக இந்த பாசிஸ பூதங்களுக்கு இரையாயின. சீனுவில் ஒரு பகுதியும் ஜப்பானிய பாசிஸ்டுகள் கைக்கு மாறியது.

ஜிப்ரால்டரிலிருந்து ஷாங்கை வரையில் பாசிஸ்டுகள் இப்படிப் போரை ஆரம்பித்திருக்கும்போது, "ஜனநாயக" நாடுகள் தங்களுக்கு அதைப்பற்றிக் கவலையில்லாததுபோல் நடித்தன. இந்த பாசிஸ்டு நாடுகளை விட்டோமா பார் என்று சொல்லிக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாக அவைகளுக்குப் பணிந்து போவதை "ஜனநாயக" நாடுகள் சமாதானத்தை வளர்ப்பதாகப் பறைசாற்றிக்கொண்டிருந்தன. எனவே, எதிர்ப்பே இல்லாமல் பாசிஸ்டுகளுக்கு வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்துவந்தது.

பலமில்லாத குறையால் "ஜனநாயக" நாடுகள் இப்படிச் சமாதானத்தில் அபாரமான பிரியமுடையனவாயிருந்தனவென்று சொல்லிவிடமுடியாது. உண்மையிலேயே அவைகள் பாசிஸ்டு நாடுகளைவிடப் பலமானவை. ஆனல் "ஜனநாயக" நாடுகள் எல்லாம்

ஒன்றுசேர்ந்து ஒரு ஐக்கிய முன்னணியை ஏற்படுத்தாததுதான் பாசிஸ நாடுகள் எதிர்ப்பில்லாமல் தங்கள் கொள்ளைத் தொழிலைச் செய்ய இடங்கொடுத்துவிட்டது. பாசிஸ நாடுகள் இவ்வளவு தூரம் போவதை "ஜனநாயக" நாடுகள் விரும்பவில்லை; அவைகள் ரொம்ப பலமடைந்துவிட்டால் என்ன செய்வதென்று அஞ்சக் கூடச் செய்தன. ஆனால் ஐரோப்பாவில் தொழிலாளர் இயக்கம் வலுத்துவருவதையும் ஆசியாவில் தேசிய சுதந்திர இயக்கம் பலப் பட்டு வருவதையும் கண்டு அவைகள் அதைவிட அஞ்சின. இந்த "அபாயகரமான" இயக்கங்களைக் குணப்படுத்தப் பாசிஸம் அருமை யான மருந்து என்று அவைகள் கருதின. இந்தக் காரணத்தை முன் னிட்டு, "ஜனநாயக" நாடுகளை ஆளுகிற வர்க்கத்தார், சிறப்பாக பிரிட்டிஷ் கன்ஸர்வேடிவ் கட்சியார், "நீங்கள் செய்கிற காரியங்களி லெல்லாம் எங்களுக்கு ரொம்ப அநுதாபம் உண்டு; ஆனால் நீங்கள் ரொம்ப தூரம் போய்விடக்கூடாது" என்று பாஸிஸ சர்வாதிகாரி களிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள். பிரிட்டிஷ் கன்சர் வேடிவ்கள் பின்பற்றிய இந்தக் கொள்கை கடைசியில் முனிக் ஒப்பந்தத்தில் வந்து முடிந்தது நமக்குத் தெரியும்.

இந்த நிலையில் சோவியத் ரஷ்யா கண்ணை மூடிக்கொண்டு சும்மா இருக்க முடியாது. சொல்லாமல் கொள்ளாமல் இரண்டா வது உலகப் போர் ஆரம்பமாகிவிட்டது. அதில் சோவியத் ரஷ்யா வுக்கு ஆபத்து ஏற்படும் என்பது நிச்சயம். எனவே, ஸ்டாலின் தலைமையில் சோவியத் ரஷ்யா தனது ராணுவத்தில் கவனம் செலுத்தியதோடு, எல்லைப்புறப் பாதுகாப்புக்களையும் பலப்படுத் தியது. பரஸ்பரப் பாதுகாப்பையொட்டி பிரான்ஸ், செக்கோஸ் லோவகியா, மங்கோலியா, சீனா முதலிய நாடுகளோடு சோவியத் ரஷ்யா தனித் தனியாக ஒப்பந்தங்கள் செய்துகொண்டது.

முதலாளித்துவ நாடுகளைப் பொருளாதார நெருக்கடி சூழ்ந்து கொண்ட காலத்தில், அதாவது 1929-33-ல் சோவியத் ரஷ்யாவில் தொழிலும் விவசாயமும் அதிவேகமாக முன்னேறிக்கொண்டிருந் தன. 1937-ல் முதலாளித்துவ நாடுகள் 1929-ஆம் வருஷம் இருந்த நிலைமைக்குக்கூட வரமுடியாமல் தத்தளித்த சமயத்தில், சோவியத் ரஷ்யாவில், 1929-ஆம் வருஷ அளவைப்போல நான்கு மடங்குக்கு மேலும், 1914-ஆம் வருஷத்திற்கு முன்னிருந்த அளவைப்போல 7 மடங்குக்கு அதிகமாகவும் தொழில் பெருகியிருந்தது.

இந்த வெற்றி சாத்தியமானது சோவியத் அரசாங்கமும் போல்ஷிவிக்கட்சியும் தொழில் முன்னேற்றத்தின்பொருட்டு எடுத் துக்கொண்ட நடவடிக்கைகளேயாகும். இரண்டாவது ஐந்து வரு ஷத் திட்டம் நான்கு வருஷம் மூன்று மாதத்தில் பூர்த்தியானது சமதர்மத்துக்கே ஒரு பெரிய வெற்றியென்று சொல்லவேண்டும்.

விவசாயத்திலும் அபாரமான முன்னேற்றம் ஏற்பட்டிருந் தது. 1937-ஆம் வருஷத்தில் தானியம், கடலை, பஞ்சுபோன்ற விவசாயப் பொருள்களின் உற்பத்தி 1913-ஆம் வருஷ உற்பத்தியை விடப் பன்மடங்கு அதிகப்பட்டிருந்தது.

தொழிலையும் விவசாயத்தையும் புனர்நிர்மாணம் செய்ததன் பயனாக நாட்டின் பொருளாதார நிலை ரொம்ப பலப்பட்டுவிட்டது. நவீன இயந்திரங்களும், இயந்திரக் கருவிகளும், டிராக்டர்களும், இதர விவசாய இயந்திரக் கருவிகளும், மோட்டார்களும், கப்பல்

களும், விமானங்களும் ஏராளமாகச் செய்து குவிக்கப்பட்டன. ஆனால் இந்த இயந்திரங்களைக் கையாளுகிற திறமைவாய்ந்த பல்லாயிரக்கணக்கான நிபுணர்கள் தேவைப்பட்டனர். ஆனால் இதை உணராமல், இயந்திரங்களைச் செய்து குவித்தாலே எல்லாக் காரியமும் நடைபெற்றுவிடும் என்ற எண்ணம் பெரும்பான்மைத் தொழிற்சாலை உத்தியோகஸ்தர்களிடம் காணப்பட்டது. எவ்வளவு அதிகமாகத்தான் இயந்திரங்களை உற்பத்தி செய்தாலும் அதைக் கையாளுபவர்கள் இல்லாவிட்டால், அந்த இயந்திரங்களால் என்ன பயன்? கொஞ்ச காலத்தில் இதனால் தொழில் முன்னேற முடியாமலும் போகலாமல்லவா? இதையெல்லாம் எண்ணியே இயந்திரங்களைக் கையாளும் நிபுணர்களைப் பயிற்றுவிக்க வேண்டிய அவசியத்தை ஸ்டாலின் இந்தக் காலத்தில் வற்புறுத்திச் சொன்னார்.

ஸ்டாலினும் போல்ஷிவிக் கட்சியும் எடுத்துக் கொண்ட முயற்சியின் பலனாக நிபுணர்களின் எண்ணிக்கை பெருகத் தொடங்கியது. நிபுணர்கள் பெருகியதன் காரணமாக ஒரு தொழிலாளன் முன் எவ்வளவு உற்பத்தி செய்தானோ அதைவிடப் பன்மடங்கு அதிகமாக இப்போது உற்பத்தி செய்யமுடிந்தது. இந்தத் துறைகளில் தொழிலில் எவ்வளவு அபிவிருத்தி ஏற்பட்டதென்பதைக் காட்ட "ஸ்டாகனவ்" இயக்கமே நல்ல உதாரணமாகும். ஸ்டாகனவ் என்பவர் டொனெட்ஸ் நிலக்கரிச் சுரங்கத்திலே வேலை பார்க்கும் ஒரு தொழிலாளர். இவர் ஒரே தரத்தில் 14 தரத்தில் எடுக்கக்கூடிய நிலக்கரியை எடுத்தார். உடலை வருத்தாமல் உற்பத்தியை அதிகப்படுத்துகிற இந்த இயக்கம் தொழிலாளர்களிடையே வெகு வேகமாகப் பரவ ஆரம்பித்தது. தொழிலாளர்களின் வாழ்க்கை அபிவிருத்தியடைந்திருக்கிறது, அவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு புதிய மகிழ்ச்சி தோன்றியிருக்கிறது என்பதையே இந்த இயக்கம் காட்டுகிறது.

ஸ்டாகனவ் இயக்கம் தொழிலுற்பத்தியில் ஒரு புரட்சியையே செய்துவிட்டது. இந்த இயக்கத்தின் முக்கியத்துவம் என்னவென்றால் சமதர்ம அமைப்பிலிருந்து பொதுவுடைமை அமைப்பிற்கு மாறுவதற்கு இது ஒரு முக்கியமான சாதனமாயிருக்கிறதென்பதேயாகும். சமதர்ம அமைப்பைவிட உயர்ந்த நிலையையே பொதுவுடைமை குறிக்கிறது. பொதுவுடைமை அமைப்பில் பொருளை உற்பத்தி செய்கிற சக்தி இதைவிட அதிகப்படவேண்டும். மேலும் பொதுவுடைமைச் சமுதாயத்திற்கு உயர்ந்த பண்பாடும், நிபுணத்துவமும் அவசியமாகும். உடலை அடிப்படையாகக் கொண்டு செய்கிற வேலைக்கும் மனத்தை அடிப்படையாகக் கொண்டு செய்கிற வேலைக்கும் உள்ள வித்தியாசம் மறைந்தால்தான் பொதுவுடைமை அமைப்பு ஏற்படுவது சாத்தியமாகும். பொதுவுடைமைச் சமுதாயத்திற்கு அடிகோலியாக இருக்கிறதென்பதைக் கண்டுதான் ஸ்டாகனவ் இயக்கத்தை ஸ்டாலின் பெரிதும் பாராட்டினர்.

இந்தக் காலத்தில் ஆங்காங்கேயுள்ள தொழிலாளர்களும் கூட்டுப்பண்ணை விவசாயிகளும் ஏராளமான மகாநாடுகளை நடத்தினர்கள். இந்த மகாநாடுகளில் எல்லாம் ஸ்டாலின் பேசினர். கூட்டுப்பண்ணைப் பெண்கள் கூட்டம் ஒன்றில் பேசும்போது ஸ்டாலின் சொன்னதாவது:

"முன் பெண்கள்தான் கூலிகளுக்கெல்லாம் கூலியாக இருந்தார்கள். அந்தப் பேய்த்தனமான நிலைமையில் விவசாயப் பெண்

களிடையே இன்று நாம் பார்ப்பதுபோல அபாரத் தொழில்த் திறமை வாய்ந்த பெண்மணிகளை பார்க்க முடியவில்லை. அந்தக் காலத்தில் வேலை என்று சொன்னால், பெண்கள் அதை ஒரு பெரியச் சாபத் தீட்டாகக் கருதினார்கள். ஆனால் கூட்டுப்பண்ணை அவர்கள் அஞ்சி வெறுத்த அந்த வேலைக்கு ஒரு கௌரவத்தை அளித்து விட்டது. கூட்டுப்பண்ணை பெண்ணின் அடிமைத் தளையை உடைத் தெறிந்து அவளை ஒரு சுதந்திர தேவியாகச் செய்துவிட்டது. அதைப்பற்றி நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை, உங்களுக்கே தெரியும். வேலைக்குத் தகுந்தபடி சம்பளம் என்ற முறையைக் கூட்டுப்பண்ணை கையாண்டு ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமைகளை அளித்தது. அதனால் யார் அதிகமாகப் பாடுபடுகிறார் களோ, அவர்களுக்கு அதிகச் சம்பளம் என்று ஏற்பட்டது. ஒரு பெண்ணைப் பார்த்து தகப்பனோ, புருஷனோ "உனக்குச் சாப்பாடு போட்டுத் தொலைக்கிறேனே" என்று இடித்துக் கூறுவதற்கு இந்த முறையில் இடமில்லை. இப்போது ஆணைப்போல பெண்ணும் உழைப்புக்குத் தக்க ஊதியம் பெறுகிறாள். அவள் யாருக்கும் அடிமை இல்லை. அவளுக்கு எஜமானன் அவளே."

ஸ்டாலினுடைய தலைமையில் சோவியத் ரஷ்யாவில் பொது வுடைமையின் முதல்படியான சமதர்மம் பூரணமாக வளர்ச்சி அடைந்து விட்டது. முதலாளித்துவ அம்சங்களை முற்றிலும் ஒழித்து, பொருளாதார வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சமதர்மம் வெற்றிபெற்றது. உற்பத்தி சாதனங்கள் நாட்டு மக்க ளின் பொதுச் சொத்து ஆக்கப்பட்டன. இந்தப் புதியமுறை நாட் டின் பொருளாதார அமைப்பில் வேரூன்றி விட்டது. சோவியத் ரஷ்யாவின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட இந்த மாற்றங்களின் பயனாக ஒரு புதிய சமதர்மப் பொருளாதாரமுறை தோன்றியது. இந்தப் புதிய பொருளாதார அமைப்புக்கு நெருக்கடி, வேலை யில்லாத் திண்டாட்டம் என்கிற காரியங்களெல்லாம் புதிது. அவை களுக்கு இந்த அமைப்பில் இடமில்லை. வறுமை, நாசம் என்கிற வார்த்தைகளுக்கும் இந்தப் புதிய சமூகத்தில் வேலையில்லை. சோவியத் தொழில் திட்டங்களும், கூட்டுப்பண்ணை முறையும் வெற்றியடைந்த உடனேயே பொருளாதார நெருக்கடி வேலை யில்லாத் திண்டாட்டம், வறுமை ஆகிய இந்த புண்ணியாத்துமாக் களை எல்லாம் ரஷ்யா நாடு கடத்திவிட்டது. அவைகள் செல்வங் கொழிக்கும் அமெரிக்காவுக்கும், வறுமைக்கே இன்று தாய் நாடாக விளங்கும் இந்தியாவுக்கும், பிரிட்டன் பிரான்ஸ் போன்ற ஏனைய முதலாளித்துவ நாடுகளுக்கும் சென்று தங்கள் ராஜ்ய பாரத்தை நடத்தி வருகின்றன.

சோவியத் ரஷ்யாவில் வர்க்க அமைப்பும் பூரணமாக மாறி விட்டது. பிறரைச் சுரண்டிப் பிழைக்கும் முதலாளி வர்க்கம் மறைந்துவிட்டது. பாட்டாளி மக்கள் எல்லோரையும் கொண்ட தொழிலாளர்வர்க்கம் ஒன்று உருவாகியிருக்கிறது. இது முதலாளித் துவ நாடுகளில் காணப்படும் தொழிலாளர் வர்க்கமல்ல. இந்தத் தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவ முறையை மூலதாரமாகக் கொண்ட பொருளாதார அமைப்பை முற்றிலும் ஒழித்துவிட்டு, அந்த இடத்தில் சமதர்ம முறையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரச் அமைப்பைச் சிருஷ்டித்துவிட்டிருக்கிறது. சோவி யத் சமுதாயம் பொதுவுடைமையை நோக்கி வெகு வேகமாகச்

சென்றுகொண்டிருக்கிறது. இந்த மகத்தான வேலையில் சோவியத் சமுதாயத்திற்கு இந்தத் தொழிலாளர் வர்க்கம் வழிகாட்டியாக இருக்கிறது. இந்தத் தொழிலாளர் வர்க்கம் உலகத்தில் இதுவரையில் ஏற்படாத ஒரு புதுமைச் சிருஷ்டியாகும்.

ரஷ்யக் குடியானவர்களிடையிலும் புரட்சிகரமான ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. நிலச்சுவான்தார் பணக்காரவிவசாயி ஆகிய இவர்கள் பிடியிலிருந்து குடியானவர்கள் விடுதலை பெற்றுக் கூட்டுப்பண்ணைகளை வைத்து நடத்த ஆரம்பித்துவிட்டார்கள். ஏரை வைத்துக்கொண்டு இரண்டுஏக்கர், மூன்றுஏக்கர் துண்டுநிலங்களை உழுத குடியானவன் இன்று ஆயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள கூட்டுப்பண்ணையில் இயந்திரக் கருவிகளின் உதவிகொண்டு விவசாயத்தை நடத்துகிறான். இந்த மாதிரிக் குடியானவர்கள் உலகத்தில் இதற்கு முன் எங்கும் தோன்றியிருக்கிறார்களா?

ரஷ்யாவில் படித்த வர்க்கத்தாரிடையிலும் ஒரு மகத்தான மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. முதலாளிகளின் கூலிகளாக இருந்த வர்க்கம் மறைந்து ஒரு புதிய வர்க்கம் தோன்றியிருக்கிறது. இந்த வர்க்கத்தார் ஜனங்களிலிருந்தே தோன்றியவர்கள், ஜனங்களிடம் நெருங்கிய தொடர்புடையவர்கள். இவர்கள் தொழிலாளர்களுக்கும் குடியானவர்களுக்கும் ஆப்த நண்பர்களாக இருந்து வர்க்கப் பிரிவற்ற சமுதாயத்தைச் சிருஷ்டிக்க அவர்களோடு சேர்ந்து பாடுபடுகிறார்கள்.

சோவியத் ரஷ்யாவிலிருக்கும் தேசிய இனங்களிடையிலும் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. ஒரு தேசிய இனம் இன்னொரு தேசிய இனத்தை அமுக்கி வைத்திருந்த நிலைமை மாறி எல்லா தேசிய இனங்களும் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் உதவி செய்துகொண்டு ஒற்றுமையுடனும் சகோதர பாவத்துடனும் வாழுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மேலே சொன்ன இந்த மகத்தான மாற்றங்கள் ஏற்பட்டதன் காரணமாக 1924-ஆம் வருஷம் வகுத்த சோவியத் அரசியல்ச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஸ்டாலின் தலைமையில் இந்தப் புதிய அரசியல் சட்ட அமைப்பு வகுக்கப்பட்டது. இதை 8-வது விசேஷ அகில சோவியத் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டு சட்டமாக்கியது. இந்தப் புதிய அரசியல் சட்ட அமைப்பின்படி எல்லோருக்கும் உழைப்புக்கும் ஓய்வுக்கும் பூரண உரிமை உண்டு. கல்வி கற்கும் உரிமையும் முதுமைப் பருவத்திலும், நோய்வாய்ப்பட்டிருக்கும் காலத்திலும், ஜீவனத்திற்கு அரசாங்கத்தின் உதவியை நாடும் உரிமையும் எல்லோருக்கும் உண்டு. வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்குள்ள உரிமைகளெல்லாம் பெண்களுக்கும் உண்டு. எந்தத் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பினும், எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் சோவியத் ரஷ்யாவில் எல்லோரும் சமம். பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் கூடும் உரிமை, பொது ஸ்தாபனங்களை ஏற்படுத்திக்கொள்ளும் உரிமை எல்லோருக்கும் பொது. தொழிலாளர்களின் நலனைப் பாதுகாத்த குற்றத்திற்காகவோ, சுதந்திரம் வேண்டுமென்று கேட்டதற்காகவோ தண்டனைக்குள்ளான இதர நாட்டு மக்களுக்குச் சரணளிப்பது இந்தப் புதிய அரசியலமைப்பின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும்.

இந்த அரசியல் சட்ட அமைப்பை "ஸ்டாலின் சட்ட அமைப்பு" என்று சோவியத் மக்கள் ரொம்ப அன்போடு அழைக்கிறார்கள். இந்த அமைப்பின் மூலாதாரக் கொள்கைகளை வகுத்தது ஸ்டாலினே. இந்தப் புதிய அமைப்பின்படி 1937-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் சுமார் 9 கோடி பேர், அதாவது வாக்குரிமை பெற்றவர்களில் 100-க்கு 98·6 பேர் ஓட்டுப் போட்டார்கள். இதிலிருந்து சோவியத் மக்கள் அரசியலில் எவ்வளவு பங்கெடுத்துக்கொள்ளுகிறார்கள் என்பது புலனாகும். அரசியலில் அவர்கள் இவ்வளவு சிரத்தை காட்டுவதற்கும், தேர்தலில் அமோகமாகப் பங்கெடுத்துக்கொள்வதற்கும் மூலகாரணம் அரசாங்கம் தங்களது, அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பு தங்களைச் சேர்ந்தது என்று எண்ணும் எண்ணம்தான்.

ஸ்டாலின் சட்ட அமைப்பு மனித சரித்திரத்திலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. மனித சமுதாயம் கற்பனையில் எண்ணிக் கனவு கண்டு கொண்டிருந்த ஒரு விஷயத்தை இந்தச் சட்ட அமைப்பு நனவாக்கிவிட்டது. இது சோவியத் மக்களுக்கு மட்டும்தான் முக்கியமானதென்பதல்ல. உலக மக்களுக்கே இது முக்கியமான விஷயமாகுமென்று ஸ்டாலின் கருதுகிறார். மனித சமுதாயத்தின் விடுதலைக்காக நடத்திய போராட்டத்தில் சோவியத் மக்களுக்கு இது ஒரு மகத்தான வெற்றி. இது அவர்கள் நாட்டுச் சரித்திரத்தின் ஒரு பகுதி. உலக மக்களுக்கோ இது தங்கள் விடுதலைப் போராட்டத்தை நடத்தத் தூண்டுகோலாகவும் வழிகாட்டியாகவும் இருக்கும் ஒரு அரும்பெரும் செயலாகும்.

சோவியத் மக்கள் இன்று ஒரு அரிய அரசியல் சட்ட அமைப்பைப் பெற்றிருக்கிறார்கள், வாழ்க்கைத் துறையின் எல்லா அம்சங்களிலும் பூரணமான சுதந்திர மக்களாக விளங்குகிறார்கள் என்றால், அவர்களடைந்திருக்கும் இந்த மகத்தான வெற்றிக்குப் பெரிதும் காரணமாயிருந்தது உலகத் தொழிலாளர்களின் அனுதாபமும் நட்புமே ஆகும். இந்த உண்மையை ஸ்டாலின் நன்றாக உணர்ந்திருந்தார். பல சந்தர்ப்பங்களில் ரொம்ப நன்றியறிதலோடு சொல்லியும் இருக்கிறார்: "சோவியத் தொழிலாளர் வர்க்கம் உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பகுதியே ஆகும். நமது தொழிலாளர்களின் சலியாத உழைப்பினால் மட்டும் நாம் வெற்றியடையவில்லை. உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் ஆதரவினாலேதான் வெற்றியடைவது சாத்தியமாயிற்று. இந்த ஆதரவுமட்டும் இல்லாமல் போயிருந்தால் வெகு காலத்திற்கு முன்பே நாம் சின்னாபின்னப்பட்டுப் போயிருப்போம். சோவியத் யூனியன் உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் முன்னணிப் படையென்று சொல்லப்படுகிறது. ஆம், அது உலகத் தொழிலாளர்களின் முன்னணிப் படைதான். உலகத் தொழிலாளர்களின் முன்னணிப் படையாக இருக்கும் காரணத்தால், நமக்குப் பொறுப்பு அதிகம்; நாம் அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள் பல இருக்கின்றனவென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. உலகத் தொழிலாளர்கள் நம்மை ஏன் ஆதரிக்கிறார்கள்? இந்த ஆதரவுக்கு நாம் எவ்விதம் தகுதியுள்ளவர்கள்? நாம் ஒரு காரியத்தில் இறங்கியிருக்கிறோம். இதில் வெற்றி கிட்டினால் உலகம் முழு

வதையும் அது தலைகீழாக மாற்றிவிடும், உலகத் தொழிலாளர்களனைவரையும் அது விடுதலை செய்யும் என்ற இந்த எண்ணமே நமக்கு ஆதரவளிக்கும்படி அவர்களைத் தூண்டியிருக்கிறது. ஆனால் நாம் எடுத்த காரியத்தில் வெற்றிக்குத் தேவையாயிருப்பது என்ன? "இதுதான் எங்கள் முன்னணிப் படை, இதுதான் எங்களுடைய தொழிலாளர் வர்க்கத்தின் அரசாங்கம்; எங்கள் தாய்நாடு இது தான்; சோவியத் தொழிலாளர்களின் லட்சியம்தான் எங்கள் லட்சியமும்; அவர்கள் இந்த லட்சியத்தை நோக்கி வெகு திறமையாக முன்னேறிச் செல்லுகிறார்கள்; ஆதலால் நாம் அவர்களை ஆதரிப்போம்,'' என்று உலகத் தொழிலாளர் வர்க்கம் சொல்லும் முறையில் நாம் நடந்துகொள்ளவேண்டும்.''

1931-ஆம் வருஷத்தில் ஸ்டாலின் இப்படிச் சொன்னார். *1939*-ஆம் வருஷத்தில் அவர் சொன்னதைக் கேளுங்கள்: ''நமது நாட்டுத் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டங்களும் வெற்றியும் முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளர் வர்க்கத்தைத் தட்டியெழுப்பி அவர்களுக்குள்ள உண்மையான சக்தியையும் அதன் மூலம் அடையப்போகிற வெற்றியையும் அவர்கள் உணரும்படி மட்டும் செய்துவிட்டால், அப்போது நமது கட்சி செய்த வேலை வீணாகவில்லை என்று நாம் நிச்சயமாகச் சொல்ல முடியும்.''

13. பாசிஸப் படையெடுப்பு

1939-ஆம் வருஷம் நடைபெற்ற போல்ஷவிக் கட்சி காங்கிரசில் தான் சமர்ப்பித்த அறிக்கையில் ஸ்டாலின் கீழ்க்கண்டவாறு கூறியிருந்தார்: ''உற்பத்தி செய்யும் நுட்பங்களிலும், உற்பத்தி விகிதாச்சாரத்திலும் நாம் உலகிலுள்ள பிரதானமான முதலாளித்துவ நாடுகளைத் தோற்கடித்துவிட்டோம். இது நாம் பெருமையடையக்கூடிய விஷயம்தான். ஆனால் இது போதாது. பொருளாதாரத் துறையிலும் நாம் முதலாளித்துவ நாடுகளைத் தோற்கடித்தாகவேண்டும். நாம் அதைச் செய்ய முடியும், செய்யவேண்டும். இந்தக் காரியத்தைச் செய்தால்தான், நமது மக்களுக்குத் தேவைப்படுகிற எல்லாப் பொருள்களும் போதிய அளவு கிடைக்கும். அதிகமாகக் கிடைப்பதும் சாத்தியமாகும். அப்போதுதான் பொதுவுடைமைச் சமூகத்தின் முதல் படியிலிருந்து இரண்டாவது படிக்குச் செல்கிறோம் என்று நாம் கொள்ள முடியும். இதை நாம் செய்ய முடியும்; செய்யத்தான் வேண்டும்.''

ஆனால் இவ்வளவு உறுதியாக ஸ்டாலின் சொன்ன இந்தக் காரியத்தைச் செய்ய முடிந்ததா? இல்லை. பயங்கரமான உலகப் போர் நம்பர் 2 வந்து குறுக்கிட்டுவிட்டது. பொருளாதார முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதை அப்படியே நிறுத்திவைத்துவிட்டு, தங்களுடைய சக்திகளையெல்லாம் போருக்காக ஆயத்தம் செய்வதில் ஈடுபடுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது.

1931-ஆம் வருஷத்திலிருந்தே இரண்டாவது ஏகாதிபத்தியப் போர் ஆரம்பித்துவிட்டது. ஏதொரு காரணமுமின்றி ஜப்பானிய பாசிஸ்டுகள் மஞ்சூரியாவின் மீது தாவி அதைப் பிடித்துக்கொண்டார்கள். சுதந்திர அபிசீனியாவை அடிமை அபிசீனியாவாகச்

செய்தது முசோலினியின் இத்தாலி. ஹிட்லரும் முசோலினியும் உதவி செய்ததன் காரணமாகக் குடியரசு ஸ்பெயின் பிராங்கோ வின் பாசிஸ்ட் ஸ்பெயினுக மாறிக்காட்சியளித்தது. ஆஸ்டிரியாவை ஹிட்லரின் படைகள் ஆக்கிரமித்தன. ஆசிய கண்டத்தையே தேனும் பாலும் ஓடும் தெய்விக பூமியாக மாற்றுகிற வேலையைக் கடவுள் ஜப்பான் பாசிஸ்டுகளுக்கல்லவா பணித்திருக்கிறுர்? அந்த வேலையைச் செய்துதான் தீருவோம் என்று ஜப்பானிய பாசிஸ்டு கள் கிளம்பிவிட்டார்கள். அதற்கு முதல் படியாக, முன் மஞ் சூரியாவைப் பிடித்தார்கள். பிறகு பண்டைய நாகரிகத்திற்கு உயிர்நாடியாகவுள்ள சீனுவின் மீது, திருடர்களைப்போல, போர் அறிவிப்பு எதுவுமின்றிப் பாய்ந்தார்கள்.

பாசிஸ்டுகள் இப்படி உலகப் போரை ஆரம்பித்திருக்க, "ஜனநாயக" நாடுகள் "தலையிடா"க் கொள்கையை மனம் வாக்குக் காயங்களாலும் கடைப்பிடித்து வந்தன. இந்தத் தலை யிடாக் கொள்கை கடைசியில் தலைக்கு வரும் என்பதையும் அவை கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் இந்தப் பிரசித்தி பெற்ற 'தலையிடாக்' கொள்கையைப் பாசிஸ்டுகளின் பிரதேசப் பசிக்கு இரையான பாதுகாப்பற்ற நாடுகள் சம்பந்தப்பட்ட வரையில் "ஜனநாயக" நாடுகள் கடைப்பிடித்தனவேயன்றி, பாசிஸ நாடுகளுக்குப் பலவழிகளில்பணத்தையும் பண்டங்களையும் கொடுத்து உதவி செய்வதை நிறுத்துவதில் அதைக் கடைப்பிடிக்க வில்லை. சமாதானத்தை விரும்பும் நாடுகளையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு ஐக்கிய முன்னணியை ஏற்படுத்திப் பாசிஸ்டுகளின் பலத்தை எவ்வளவோ குறைத்திருக்கலாம். ஆனல் இது பொது ஜனங்களின் ஒத்துழைப்பினுல், தொழிலாளர்களின் ஒத்துழைப்பி னுல், "ஜனநாயக" நாடுகள் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் நாட்டு மக்களின் ஒத்துழைப்பினுலேதான் சாத்தியமாகும். இந்த ஒத்துழைப்பினுல் ஏற்படும் சமாதான ஐக்கிய முன்னணிதான் பாசிஸ்டுகளை வெல்ல முடியும் என்று ஸ்டாலின் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். "ஜனநாயக" நாடுகள் கேட்டால்தானே? அவைகள்தான் ஜனங்களைக் கண்டு அஞ்சுகிற "ஜனநாயக" நாடுகளாக இருக்கின்றனவே?

"தலையிடாக்" கொள்கைக்கு முத்தாய்ப்பு வைத்ததுபோல, சேம்பர்லேன் ஹிட்லரோடு முனிக் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார். "ஜனநாயக" பிரிட்டனுடைய அநுமதியின்பேரில் செக்கோஸ்லோவகியா பாசிஸ்ட் ஜெர்மனிக்குப் பலிகொடுக்கப் பட்டது. இறுதியாகப் போலந்தின்மீது படையெடுத்து ஹிட்லர் சுப முகூர்த்தத்தில் இரண்டாவது உலகப் போரை சம்பிரதாய முறையில் துவக்கிவைத்தார்.

முதலாளித்துவ நாடுகளால் சூழப்பட்டிருக்கும் சோவியத் ரஷ்யாவுக்குப் பெரிய ஆபத்து வந்துவிட்டது. தனியாக நிற்ப தென்பது தற்கொலை செய்துகொள்வதுபோலாகிவிடும் என்று ஆலோசித்து 'ஜனநாயக' நாடுகளோடு சேருவதுதான் நலம் பயக்கும் என்று ஸ்டாலின் எண்ணினர். "ஜனநாயக" நாடுக ளிடம் என்னதான் குறைகளிருந்தாலும் அவைகள் போரை விரும்புகின்றன என்று சொல்ல முடியாது. சமாதானத்தையே அவைகள் நாடுகின்றன வென்பதிலும் சந்தேகமில்லை. இதையெல்

லாம் உத்தேசித்தே முதன் முதலாகப் பிரிட்டனேடு ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு ஸ்டாலின் முயன்ருர். பிரிட்டிஷ் பொது ஜனங்களும் சோவியத் ரஷ்யாவுடன் நட்பு ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும் என்று கிளர்ச்சி செய்தார்கள். ஆயினும் சேம்பர்லேன் அரசாங்கம் அதை விரும்பவில்லே. வந்தால் எனக்கு, போனல் உனக்கு என்ற மனப்பான்மையோடு அது பேச்சு வார்த்தைகளே நடத்தியது. கடைசியில், சோவியத் ரஷ்யா ஒத்து வரவில்லே, நாங்கள் என்ன செய்வோம் என்று சேம்பர்லேன் கையை விரித்துவிட்டார். வேறு வழியில்லாமல், தற்பாதுகாப்பை ஒட்டி ஸ்டாலின் ஜெர்மனியோடு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. போருக்குத் தயாரில்லாமல் இருந்த நிலேயில், இந்த ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளாமலிருந் தால், சோவியத் ரஷ்யாவின் நிலே இன்று என்னவாகியிருக்கும்? இந்த ஒப்பந்தத்தின் காரணமாகக் கிடைத்த இரண்டு வருஷ காலத்தில் செய்த முன்னேற்பாடுதான் சோவியத் ரஷ்யா பாசிஸப் படைகளே விரட்டியடிப்பதற்கு ஏதுவா யிருந்தது. 1941-ஆம் வருஷம் ஹிட்லர் சோவியத் ரஷ்யாவின் மீது படையெடுத்தபிறகு தான் சோவியத் ரஷ்யா பிரிட்டனேடும் அமெரிக்காவோடும் சேர்ந்து ஒரு ஐக்கிய முன்னணியை ஏற்படுத்த முடிந்தது.

இந்த ஐக்கிய முன்னணியின் நோக்கம் என்ன? இத்தாலி, ஜெர்மனி ஆகிய அச்சு நாடுகளின் நோக்கம் என்ன? ஸ்டாலின் இந்த இரண்டு பிரிவுகளின் நோக்கங்களேயும் நன்ருக எடுத்துச் சொல்லியிருக்கிருர்:

"இத்தாலோ-ஜெர்மன் இணேப்பின் செயல் திட்டம் கீழ் வருமாறு:

"ஜாதி வெறுப்பு, குறிப்பிட்ட நாடுகளின் ஆதிக்கம், இதர நாட்டு மக்களே அடிமைப்படுத்தி அவர்களின் நாடுகளேப் பிடித்துக் கொள்வது, தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்த நாடுகளேப் பொருளாதாரத் துறையில் அடிமைப்படுத்தி அவைகளின் செல் வத்தையெல்லாம் கொள்ளேயடிப்பது, அவைகளின் ஜனநாயக சுதந்திர உரிமைகளேயும், அவைகளின் ஸ்தாபனங்களேயும் அழித்து, எங்கும் ஹிட்லர் ஆட்சிக்குச் சாதகமான ஸ்தாபனங்களே அமைப் பது.

"ஆங்கிலோ-சோவியத்-அமெரிக்கன் இணேப்பின் நோக்கம் பின்வருமாறு:

"ஜாதிவேற்றுமையை ஒழிப்பது, எல்லா நாடுகளேயும் சமத் துவமாக நடத்துவது, அவைகளின் பிரதேசங்களே அப்படியே விட்டுவைப்பது, அடிமைப்பட்டிருக்கும் நாடுகளுக்கு விடுதலே அளித்து, அவைகள் இழந்திருக்கும் பூரண அரசியல் உரிமைகளேத் திரும்ப அளிப்பது, தங்கள் விருப்பப்படி சொந்தக் காரியங் களேச் செய்துகொள்ள எல்லா நாடுகளுக்கும் உரிமை அளிப்பது, பொருளாதாரத் துறையில் துன்பத்திற்குள்ளான நாடுகளுக்குப் பொருளாதார உதவி அளித்து அவைகள் சுபிட்சம் அடைவதற்கு ஒத்தாசையாக இருப்பது, தாங்கள் இழந்த ஜனநாயக சுதந்திர உரிமைகளேத் திரும்ப அவைகள் அடையும்படி செய்வது, ஹிட்லர் ஆட்சியை அழித்துவிடுவது."

ஹிட்லரின் பான்சர் படைகள் மின்னல் வேகத்தில் சோவியத் ரஷ்யாவில் முன்னேறிச் சென்றன. சூறைக் காற்றைப்போலச் சுழற்றி அடித்துக்கொண்டு சென்ற இந்தப் பாசிஸப் படைகளின் வேகத்தைச் சில மாதங்களிலேயே செஞ்சேனை குறைத்துவிட்டது. என்றாலும், அவைகள் முன்னேறிச் சென்றுகொண்டுதான் இருந்தன. ஆனல் அவைகள் ஸ்டாலின்கிராடுக்குச் சமீபத்தில் வந்ததும் ஒரு அங்குலம் கூட முன்னேற முடியவில்லை. ஸ்டாலின்கிராட் ஹிட்லருடைய சாம்ராஜ்ய அபிலாஷைகளுக்குச் சாவுமணி அடித்து விட்டது. ஸ்டாலின்கிராட் வெற்றியிலிருந்தே செஞ்சேனை பாது காப்புப் போரை விட்டுவிட்டு ஆக்கிரமிப்புப் போரைக் கையாள ஆரம்பித்தது. ஹிட்லருடைய பான்ஸர் படைகள் "திட்டப்படி" பின் வாங்க ஆரம்பித்தன. இன்று, பிற நாடுகளைப் பிடிக்கிற ஆசையைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, ஜெர்மனியையே பாதுகாக்கவேண்டிய நிலைமை ஹிட்லருக்கு ஏற்பட்டிருக்கிறது. பாசிஸ மிருகம் அடிதான் பட்டிருக்கிறது. அது இன்னும் பலம் குன்றிப் போய்விடவில்லை. அது பதுங்கிக்கிடக்கும் இடத்திற்கே சென்று அதைக் கொல்லவேண்டும் என்று ஸ்டாலின் சொன்னது இங்கே குறிப்பிடத்தக்கது.

வெல்ல முடியாதது என்று சொன்ன ஜெர்மன் பாசிஸப் படைகளை விரட்டி விரட்டி அடித்த பெருமை சோவியத் ரஷ்யா வைச் சேர்ந்ததே. பிரிட்டனும் அமெரிக்காவும் சோவியத் ரஷ் யாவுக்குப் பெரிதும் உதவியாயிருந்தன. ஆயினும் அவைகள் மேற்கே இரண்டாவது போர்முனையை ஏற்படுத்திய போதுதான் ஐரோப்பியப் போர் இனி விரையில் முடிந்துவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

சோவியத்ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய மூன்று நேச நாடுகளும் 1943-ம் வருஷம் டெஹரான் மகாநாட்டில் செய்த முடிவுதான் முடிவான வெற்றிக்கு அடிகோலியது என்று சொல் லலாம். 1943-ம் வருஷம் நேசநாடுகளுக்கு வெற்றிக்குமேல் வெற்றி ஏற்பட்ட வருஷம். நாஜிப்படைகள் எல்லா முனைகளிலும் தோற்று ஓடிய வருஷம். ஆங்கிலோ—அமெரிக்கத் துருப்புகள் சிசிலியில் இறங்கியதும், முசோலினி இத்தாலியை விட்டுத் தப்பி ஓடியதும் இந்த வருஷம்தான். நேசநாட்டு விமானங்கள் ஜெர்மன் நகரங்களை நிர்த்தூளி செய்ய ஆரம்பித்ததும், நேசத் துருப்புகள் ரோமாபுரி யைப் பிடித்ததும் இதே வருஷத்திலேதான். செஞ்சேனை மகத்தான ஆக்கிரமிப்புப் போரை ஆரம்பித்து ஜெர்மனி பிடித்திருந்த பிரதே சத்தில் மூன்றில் இரண்டு பகுதியை மீட்டதும் இதே 1943-ம் வருஷம்தான். இவைகளுக்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்ததுபோல் டெஹரான் மகாநாடு நடைபெற்றதும இதே வருஷம் தான்.

போரை நடத்துவதற்காகத் திட்டம் போடுவதற்கு டெஹ ரான் மகாநாடு நடைபெற்றது. போருக்குப்பிறகு சமாதானத்தை நிலை நாட்டவும், புனர் நிர்மாணத்திட்டம் போடவும் கூடிய மகா நாடு டம்பர்ட்டன்ஓக்ஸ் ஆகும். பாதுகாப்பு சம்பந்தமான விஷயத் தில் சோவியத் ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளுக்கும் இடையே பல அபிப்பிராய பேதங்கள் ஏற்படத் தான் செய்தன. இதைப்பற்றிச் சொல்லும்போது ஸ்டாலின் கீழ் வருமாறு குறிப்பிடுகிறார்: "ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களுக்

கிடையிலேயே அபிப்பிராய பேதங்கள் ஏற்படுவது சாத்தியமாக இருக்கும்போது, வெவ்வேறான பல நாடுகளும் பல கட்சிகளும் கூடிப் பேசும்போது அபிப்பிராய பேதங்கள் ஏற்படுவது இயல்பு தான். அதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஆனால் அபிப்பிராய பேதங்கள் இவ்வளவு குறைவாக இருக்கின்றனவே என்றுதான் நாம் ஆச்சரியப்படவேண்டும். இந்த அபிப்பிராய பேதங்களும் இறுதியில் பெரும்பாலும் சமாதானத்திலேயே முடிந்தன. மூன்று நாடுகளும் ஒற்றுமை உணர்ச்சியோடு இருந்ததுதான் அதற்குக் காரணம். இந்த மகாநாட்டின் விசேஷம் என்னவென்றால் ஏதோ சில அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன என்பதல்ல, ஆனால் பாது காப்புப் பிரசினைகளை மூன்று நாடுகளும் ஏகமனதாகத் தீர்த்து வைத்தன என்பதேயாகும்.''

நேச நாடுகளைப் பிரித்துவிடுவதற்கு ஜெர்மனி எத்தனையோ நுட்பமான வழிகளில் முயன்று பார்த்தது. கோபல்ஸ் தமது சாமர்த் தியம் முழுவதையும் காட்டிப் பார்த்தார். காரியம் பலிக்கவில்லை. இவர்கள் போர் நடக்கும் காலத்தில் செய்ததுபோல போர்முடிந்த பிறகும் செய்யப் பார்ப்பார்கள். ஒரு நேச நாட்டை இன்னொரு நேச நாட்டோடு சண்டை மூட்டிவிடத் தங்களாலான பிரயத்த னத்தை எல்லாம் செய்வார்கள். ஆயினும் ஹிட்லருடைய பாசிஸத் தை நம்பி இனி ஒருவரும் மோசம் போய்விடமாட்டார்கள். பாசிஸ அரசியல் வாதிகளின் முயற்சி வெற்றியடைய இனிச் சந்தர்ப்பம் இல்லை. சோவியத் ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளும் தற்காலிகமாகச் செய்துகொண்ட ஒப்பந்தம் அல்ல இது. நீண்ட கால நோக்கத்தோடுதான் அவைகள் இந்த ஒப்பந்தத் தைச் செய்துகொண்டிருக்கின்றன. சென்ற மூன்று வருஷங்களில் ஏற்பட்ட சோதனைகளையெல்லாம் இந்த ஒப்பந்தம் வென்றுவிட் டது. சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருந்த மக்களை இந்த ஒப்பந்தம் வெற்றிக்கு வழி நடத்திச்சென்றது. அதன் காரணமாக எங்கு பார்த்தாலும் பொதுஜனங்களின் இயக்கம் வலுத்து வரு கிறது. அப்படியிருக்கும்போது போர் முடியும் காலத்தில் இந்த ஒப்பந்தம் குலைந்துபோகும் என்று சந்தேகப்படத் தேவையில்லை.

நேசதேசங்கள் ஹிட்லரின் ஜெர்மனியோடு தொடுத்தபோரை வெற்றிகரமாக முடிக்கும் காலம் வந்துவிட்டது. ஜெர்மன் போரை முடிப்பது ஒரு மகத்தான வெற்றிதான். ஆனால் இப்போது போரில் ஜெயித்துவிட்டால் மட்டும் இனிமேல் இந்த மாதிரியான ஒரு போர் ஏற்படாது என்பதற்கு என்ன அத்தாட்சி? உலக மக்கள் அமைதியோடு வாழவேண்டுமென்று சொன்னால் இந்த மாதிரிப் போருக்கு இனி இடமே இருக்கக்கூடாது. ஆகையால் பொருளா தாரம், ராணுவம், அரசியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் ஜெர் மனி இன்னொரு போருக்குத் தயார் செய்வதற்கு எவ்வித சந்தர்ப் பமும் கொடுக்கக்கூடாது. ஜெர்மனி இனிமேல் அப்படியொன் றும் செய்யாது, நல்லதனமாக நடந்துகொள்ளும் என்று எண்ணு வது அறிவுடைமையாகாது. ஜெர்மனியின் ஆளுகிற வர்க்கத்தார் அடுத்த போருக்கு இப்போதே தயார் செய்ய ஆரம்பித்து விட் டார்கள் என்பதைநாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று ஸ்டாலின் கூறுகிறார்.

இன்று போரை விரும்பும் நாடுகள், சமாதானத்தை விரும்பும் நாடுகள் என்று உலக நாடுகள் இரண்டு பிரிவாகப் பிரிந்து நிற்

கின்றன. போரை விரும்பும் நாடுகள் நெடுநாளாகவே ஆக்கிரமிப்புக் கென்றே தயார் செய்துகொண்டிருக்கின்றன. ஆயத்தங்கள் முடிந்தவுடன் திடீரென்று போர் என்று அவை ஆரம்பிக்கின்றன. சமாதானத்தை விரும்பும் நாடுகளுக்குப் போரில் விருப்பமில்லை. ஆதலால் போருக்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளவும் இல்லை. இந்த நிலையில் திடீரென்று போர் ஆரம்பிக்கும்போது அவைகள் ராணுவ பலத்தில் குறைந்தவைகளாய் இருக்கின்றன. பர்ல் துறைமுகத்தில் அடைந்த தோல்வி, பிலிப்பைன், ஹாங்காங், ஷாங்கை முதலியவைகளை இழந்தது, இவையெல்லாம் ஜப்பான் போருக்குத் தயாராய் இருந்தது, அமெரிக்காவும் பிரிட்டனும் சமாதானக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்ததன் காரணமாகப்போருக்குத் தயாராக இல்லையென்பதையே காட்டுகின்றன. அதே மாதிரி முதல் வருஷத்திலேயே யுக்ரேன், வெள்ளை ரஷ்யா ஆகிய பகுதிகளையெல்லாம் சோவியத் ரஷ்யா இழந்ததும் இதே காரணத்தினுலேதான்.

இந்தச் சரித்திர உண்மையை நாம் மறந்துவிட்டால், இதே போர் நாடகம் இதைவிடப் பயங்கரமான உருவத்தில் இன்னும் 20, 30 வருஷத்தில் திரும்பவும் தோன்றுவதற்கு சந்தர்ப்பம் அளித்தது போலாகிவிடும். ஆதலால் இந்தமாதிரிப்போர் இனி என்றும் அல்லது இன்னும் நெடுங்காலம் வரையிலாவது நிகழாமலிருப்பதற்கு இப்போதே வேண்டிய நடபடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கு என்ன செய்யலாம்? உலக சமாதானத்தைப் பாதுகாக்க சமாதானத்தை விரும்பும் நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய விசேஷ ஸ்தாபனத்தை உருவாக்கவேண்டும். போரை விரும்பும் நாடுகளின் ஆக்கிரமிப்பை அவ்வப்போது அடக்குவதற்குத் தேவையான அளவு பலம் உள்ள ஒரு ராணுவத்தை இந்த ஸ்தாபனத்தின்கீழ் வைக்கவேண்டும். ஆக்கிரமிப்பு நாடு ஒரு பாதுகாப்பற்ற நாட்டைத் தாக்கும்போது, இந்த சர்வ தேச ராணுவத்தைக்கொண்டு அந்த நாட்டை உடனே அடக்கும்படி கேட்க முடியும். இந்த ஸ்தாபனம் அப்பாவி சர்வதேச சங்கத்தைப்போல இகழ்ச்சிக்கும் பலவீனத்துக்கும் எடுத்துக் காட்டாக இருக்கக் கூடாது. சமாதானத்தை நிலை நாட்டவும், ஆக்கிரமிப்பை அடக்கவும் இந்தப் புதிய ஸ்தாபனத்திற்குப் பூரணமான சக்தி இருக்க வேண்டும். இந்த மாதிரி ஸ்தாபனம் ஒன்றை அமைப்பது முடியாத காரியமல்ல. ஹிட்லர் சிருஷ்டித்த அபார பலம் பொருந்திய ராணுவத்தைச் சிதறடித்த நேசநாடுகள் இந்த ஸ்தாபனத்தை உருவாக்கத்தான் போகின்றன என்று ஸ்டாலின் 1944, நவம்பர் 6ஆ புரட்சி தினக் கொண்டாட்டத்தின்போது பேசியிருக்கிறுர். அந்தப் பேச்சைக் கீழ்வருமாறு அவர் முடிக்கிறுர்:

"நாட்டைப் பாதுகாப்பதற்கு நடத்தும் இந்தப் போரின் காரணமாக எழுந்த பல சிக்கலான பிரசினைகளைச் செஞ்சேனையும் சோவியத் மக்களும் தீர்த்து வைத்துவிட்டார்கள். செஞ்சேனை நாட்டுக்குத் தான் செய்ய வேண்டிய கடமையைச் செய்து சோவியத் மண்ணிலிருந்து ஜெர்மன் பாசிஸ்டுகளை விரட்டி அடித்துவிட்டது. இனி எந்தக் காலத்திலும் நமது நாடு ஹிட்லரின் ஜெர்மனியிலிருந்து சுதந்திரமாகவே இருக்கும். ஜெர்மன் பாசிஸத் துருப்புகளைப் பூரணமாகத் தோற்கடித்து பாசிஸமிருகம் பதுங்கிக் கொண்டிருக்கும் இடத்திற்கே சென்று அதை முடித்துவிடுவது

தான் இனி எஞ்சிய வேலை. செஞ்சேனையும் நேச நாட்டுத் துருப்புகளும் இந்த வேலையைத்தான் செய்துகொண்டிருக்கின்றன. இனி நமது வெற்றிக் கொடி பெர்லினில் பறக்கும்.''

14. பொதுஜன இயக்கமும் நேசதேசங்களும்

ஐரோப்பாவில் இன்று பொதுமக்கள் விழிப்படைந்து விட்டார்கள். எங்குப்பார்த்தாலும் பொதுஜன இயக்கமாய் இருக்கிறது. பொதுஜனங்கள் கிளர்ந்து எழுந்ததன் காரணமாகப் பொதுஜனங்களின் அரசாங்கங்களும் ஏற்பட்டு வருகின்றன ஐரோப்பிய நாடுகளில் சிலவற்றைப்பற்றி இங்கே ஆராய்வோம்.

1939-ஆம் வருஷம் ஜெர்மனிக்கு விரோதமாக பிரான்சும் பிரிட்டனும் ஒன்றுசேர்ந்து போராடுவதென்று கிளம்பின. ஆனல் போர் ஆரம்பமான சில தினங்களிலேயே பிரான்சின் ராணுவம் மிகப் பலம் குன்றிப்போயிருக்கிறது என்பது வெளிப்படையாயிற்று. இதைக் கண்ட பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு நாக்கில் சுவைதட்டிற்று. பிரான்சையும் தங்கள் சாம்ராஜ்ய நாடுகளில் ஒன்ருகச் சேர்த்துக்கொள்ள நல்ல தருணம் என்று உள்ளூர அவர்கள் எண்ணினர்கள். ஆயிரக்கணக்கான நாஜி விமானங்கள் லண்டனை நாசம் செய்துகொண்டிருக்கும் காலத்தில் இந்த ஆசை! இன்று நேசதேசங்கள் ஹிட்லர் படைகளை எல்லா முனைகளிலும் முறியடித்துவிட்டன. நேசதேசத் துருப்புகளின் உதவிகொண்டு டிகாலின் பிரெஞ்சு விடுதலைப்படை பிரான்சை விடுவித்தது. விடுதலையானபிறகு, பிரெஞ்சு ஜனங்களின் தலைவரான டிகால் தனது அரசாங்கத்தை அமைத்தார். பிரெஞ்சு முதலாளிகள், பிரஞ்சு பாசிஸ்டுகள் ஆகியோரின் சார்பாகவுள்ள பெதெய்னையும் லவாலையும் அங்கீகாரம் செய்த பிரிட்டிஷ்—அமெரிக்க அரசாங்கங்கள் பிரஞ்சுப் பொதுஜனங்களின் தலைவரான டிகாலே அங்கீகாரம் செய்யத் தயங்கின. தங்கள் சொற்படி கேட்கும் டார்லான், கிரவுட் போன்ற பிரஞ்சு முதலாளிகளின் பிரதிநிதிகளைப் பிரான்சில் புகுத்திவிடுவது என்று திட்டம் போட்டன. பொதுஜனப் பிரஞ்சு அரசாங்கம் உள்நாட்டிலுள்ள முதலாளிகளின் சுரண்டலையன்றி வெளிநாட்டிலிருந்து வரும் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கும் இடம் கொடாதல்லவா? அவைகள் டிகாலே அங்கீகரிக்க விரும்பாததன் காரணம் இதுதான். சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் அட்லாண்டிக் சாசனத்தில் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பற்றித் தம்பட்டமடித்திருக்க, பொதுஜனங்களின் நன்மைக்காகப் பொதுஜனங்களால் நியமித்த ஒரு அரசாங்கத்தை அங்கீகரிக்க இவ்வளவு தயக்கமா? ஆனல் சோவியத் ரஷ்யா இந்தத் தயக்கத்தில் பங்குகொள்ளவில்லை. பங்குகொள்ளத் தேவையும் இல்லை. பிரிட்டனைப் போல, பிரான்சைத் தனது சாம்ராஜ்யத்திற்குள் ஐக்கியப்படுத்திக்கொள்ளுகிற ஆசையோ, அமெரிக்காவைப்போல, பிரான்சின்மீது பொருளாதார ஏகாதிபத்தியத்தைப் புகுத்துகிற ஆசையோ, சோவியத் ரஷ்யாவுக்கு இல்லை. ஆதலால் டிகால் அமைத்த பொதுஜன அரசாங்கத்தைக் குதூகலத்தோடு வரவேற்று முதன்முதலாக அங்கீகரித்த நாடு சோவியத் ரஷ்யாவேயாகும்.

பாசிஸத்திற்கு எதிர்ப்பாக நடந்துவந்த பொதுஜன இயக்கம் தான் இத்தாலிக்குச் சுதந்திரத்தைக் கொண்டுவந்தது. 1943 மார்ச் மாதத்தில் தொழிற் பெருக்கமுள்ள வட இத்தாலியில் ஏற்பட்ட பெரிய வேலைநிறுத்தங்கள் முசோலினியின் ஆட்சியை அஸ்திவாரத்திலேயே ஆட்டம் காணும்படி செய்து விட்டன. இந்த வேலை நிறுத்தங்கள் நிகழ்ந்த நான்கு மாதங்களில் ஏகச் சக்கிராதிபத்தியம் செலுத்திக்கொண்டிருந்த முசோலினி ரோமாபுரியைவிட்டு ஓடி ஒளியும்படி நேரிட்டுவிட்டது. நேச தேசத் துருப்புகள் இத்தாலியில் படையெடுத்தபோது, இத்தாலிய ஜனங்களின் விடுதலைப் போராட்டம் மிகப் பலமாக இருந்தது. ஆயிரக் கணக்கான இத்தாலிய வீரர்கள் நேசத் துருப்புகளோடு சேர்ந்து நாஜிகளை எதிர்த்துப் போர் புரியத் துடிதுடித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் பிரிட்டனும் அமெரிக்காவும் அவர்களுக்கு ஆயுதங்கள் அளிக்க விரும்பவில்லை. ஆம்; அவநம்பிக்கை தான் காரணம். படாக்ளியோவின் அரசாங்கத்தையும் இத்தாலிய மன்னரையும் நம்பிய பிரிட்டனும் அமெரிக்காவும் இத்தாலிய தேசபக்தர்களை நம்ப மறுத்தன. மேலும் படாக்ளியோவின் அரசாங்கத்தோடு, நேசநாட்டு ராணுவ அரசாங்கமும் இத்தாலியப் பொதுஜன இயக்கம் முன்னேறுவதற்குத் தடையாயிருந்தது. இத்தாலியை விடுதலை செய்யச் சென்ற நேசதேச ராணுவம் இப்படி நடந்துகொள்வது மாஸ்கோ மகாநாட்டுத் தீர்மானத்திற்கு முற்றிலும் முரண்பாடானது; இத்தாலிய பாசிஸ்டுகளுக்குப் பயந்து ஜனங்களுக்குத் துரோகம் செய்வதாகும் இது என்று சோவியத் பத்திரிகைகள் நேச நாட்டு ராணுவ அரசாங்கத்தைப் பலமாகக் கண்டித்து எழுதின. இதன் பயனாக நேச ராணுவ அரசாங்கம் கொஞ்சம் நல்லதனமாக நடந்துகொண்டது. ஆயினும் இத்தாலிய விடுதலைக் கமிட்டி அரசாங்கத்தில் பங்குகொண்ட பிறகுதான், இத்தாலிய மன்னர் சிம்மாசனத்தினின்றும், படாக்ளியோ அரசாங்கத்தினின்றும் நீக்கப்பட்டனர்.

லண்டனில் சரணடைந்திருக்கும் யூகோஸ்லேவிய அரசாங்கம் ரொம்பப் பிற்போக்கானது. பிற்போக்காயிருக்கும் காரணத்தினாலேயே, பிரிட்டிஷ் அமெரிக்கப் பிற்போக்குச் சக்திகள் அதற்கு பேராதரவாயிருந்துவந்தன. யூகோஸ்லேவியா பல தேசிய இனங்களைக்கொண்ட நாடு. இந்தத் தேசிய இனங்களுக்குள் பிளவுகள் சதா ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். லண்டனுக்கு ஓடிவந்த யூகோஸ்லேவிய அரசாங்கம் லஞ்சத்திற்குப் பேர்போனது. பிளவுகளும், லஞ்சப் பேயும் தாண்டவம் ஆடிய யூகோஸ்லேவியாவை நாஜிகள் பிடித்தனர். நாஜிப் பிடியிலிருந்து நாட்டைவிடுவித்துக்கொள்ள யூகோஸ்லேவிய தேசபக்தர்கள் தங்கள் வேறுபாடுகளையெல்லாம் மறந்து டிடோவின் தலைமையில் விடுதலைப் போராட்டத்தை நடத்தினர். ஒன்றுபட்ட யூகோஸ்லேவியர்களின் ஒப்பற்ற தலைவராய் விளங்குகிறார் தளகர்த்தர் டிடோ. ஆயினும் பிரிட்டிஷ்—அமெரிக்கப் பிற்போக்கு சக்திகளின் உதவியினால் டிடோவைத் தள்ளிவிட்டு, தனது அடக்குமுறை அரசாங்கத்தைத் திரும்பவும் ஸ்தாபித்துக்கொள்ளலாம் என்று யூகோஸ்லேவிய அரசர் பீடர் கனவு கண்டுகொண்டிருந்தார். ஆயினும் இந்தக் கனவு நனவாகவில்லை. யூகோஸ்லேவிய அரசாங்கத்தை நடத்துவதற்குரிய ஆற்றல் வாய்ந்தது டிடோவின் விடுதலைக் கமிட்டிதான் என்பதை

இப்போது பிரிட்டனும் அமெரிக்காவும் அங்கீகாரம் செய்யும்படி ஆகிவிட்டது. பிரிட்டனும் அமெரிக்காவும் தயங்கிக்கொண்டிருக்க டிடோவை முதலில் அங்கீகரித்ததும் சோவியத் ரஷ்யாவே.

தங்கள் நாடுகளை விட்டு ஓடிப்போய், லண்டனில் சரண்புகுந்திருக்கும் அரசாங்கங்களில் எல்லாவற்றையும்விடப் பாசிஸத்திற்குச் சார்பாகவும், சோவியத் ரஷ்யாவுக்கு விரோதமாகவும் உள்ளது போலிஷ் அரசாங்கமே. இந்த அரசாங்கத்தின் தலைவர்கள் நாஜிகளைத் தோற்கடிப்பதற்குச் சோவியத் ரஷ்யா அளித்த ராணுவ உதவியைப் புறக்கணித்த போலிஷ் நிலச்சுவான்தார்கள், தொழிற்சாலை முதலாளிகள் ஆகியோரின் நேர் வாரிசு ஆவார்கள். விவசாயிகள் எந்த விதத்திலும் முன்னேறிவிடாதபடியும், தொழிலாளர்கள் தொழிலாளர் சங்கங்கள் எதையும் ஏற்படுத்திக்கொண்டு விடாதபடியும் அவர்களை அடக்கி ஒடுக்கி வைத்திருந்த போலிஷ் அரசாங்கம் இவர்களது அரசாங்கமே. இவர்கள் லண்டனில் சௌக்கியமாக இருக்க, போலிஷ் ஜனங்கள் நாஜி அட்டூழியங்களுக்கு ஆளானார்கள். ஆயினும் போலிஷ் தேசபக்தர்கள் ஹிட்லரின் சர்வாதிகார அடக்குமுறையை எதிர்த்து மறைமுகமாகப் போராடிவந்தார்கள். இப்படிப் போராடிய பொதுஜனங்களின் உண்மையான பிரதிநிதிகளைக் கொண்ட கமிட்டிதான் போலிஷ் தேசிய விடுதலைக் கமிட்டி. சோவியத் ரஷ்யா, செக்கோஸ்லோவகியா ஆகிய பக்கத்துநாடுகளோடு அந்நியோந்நியமாக இருப்பது, மக்கள் எல்லோருக்கும் வாக்குரிமை வழங்குவது, பெரிய ஜமீன்களைப் பல பாகங்களாகப் பிரிப்பது, மூலத் தொழில்களை நாட்டின் பொதுச் சொத்தாக மாற்றுவது — இவைதான் இந்தக் கமிட்டியின் நோக்கங்கள். இந்தக் கமிட்டியை உருவாக்குவதற்கு சோவியத் ரஷ்யா பெரிதும் உதவியாக இருந்தது. ஆயினும் இந்தக் கமிட்டியை எப்படியாவது ஒழித்துவிட்டு, குட்டி ஹிட்லர்களை மந்திரியாகக் கொண்ட லண்டனிலிருக்கும் போலிஷ் அரசாங்கத்தை ஸ்தாபித்துவிடுவது என்று பிரிட்டிஷ் — அமெரிக்கப் பிற்போக்குச் சக்திகள் தலைகீழாக நின்றுபார்த்தன. இந்தப் பிற்போக்கு அரசாங்கத்தின் பிரதம மந்திரி மிகோலாஜிஸ்க் ஸ்டாலினைக் கண்டு பேசி எப்படியாவது காரியத்தைக் கைக்கொண்டு விடுவதென்று மாஸ்கோ பயணமானார். "போலந்தின் மண்ணில் எங்களுக்கு ஆசையில்லை. போலந்தின் சமுதாய அமைப்பை மாற்றுவதும் எங்கள் வேலையல்ல. ஆனால் உண்மையான, சக்திவாய்ந்த ஜனநாயகப் போலந்தைச் சிருஷ்டிப்பதே எங்கள் நோக்கம்," என்று ஸ்டாலின் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லிவிட்டார். குடியானவர்களையும் தொழிலாளர்களையும் கொடுமைப்படுத்தும் பாசிஸத்தில் பற்றுள்ள பழைய அரசாங்கத்தை ஸ்தாபிக்க அவர் ஒப்புக்கொள்ளவில்லை. எனவே, மிகோலாஜிஸ்க்கும், அவரை அனுப்பிவைத்த சர்ச்சிலும் பெரிதும் ஏமாற்றமடைந்தார்கள்.

மிகோலாஜிஸ்க் இந்த ஸ்டாலினையா நான் போய்ப் பார்ப்பது என்று வீரர் பேசினர். ஆயினும் ரொம்ப சமாதானம் சொல்லி சர்ச்சில் கூட்டத்தார் அவரை மாஸ்கோவுக்கு அனுப்பிவைத்தார்கள். ஆனல் செக்கோஸ்லோவகியக் குடியரசுத் தலைவரான பெனிஷ் எப்படியாவது ஸ்டாலினைப் போய்ப் பார்க்கவேண்டுமென்று துடிதுடித்தார். ஆயினும் அவருக்கும் ரொம்ப சமாதானம் சொல்லி, அவரை மாஸ்கோவுக்குப் போகாமல் செய்வ

தற்குவேண்டிய இடையூறுகளையெல்லாம் சர்ச்சில் கூட்டத்தார் செய்தார்கள். பெனிஷ் பலே கெட்டிக்காரர். இந்த இடையூறு களையும் தாண்டி அவர் மாஸ்கோவுக்குச் சென்று ஸ்டாலினேடு ஒரு நட்பு ஒப்பந்தம் செய்துகொண்டு வந்துவிட்டார். பெனிஷ் செக்கோஸ்லோவகிய மக்களின் அன்புக்குப் பாத்திரமானவர்; முற்போக்கான எண்ணங்களுடையவர்; பாசிஸத்தை வெறுப் பவர். ஆகையினாலேதான் அவர் ஸ்டாலினைப் பார்க்க விரும்பினர். ஆகையினாலேதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் அவரை மாஸ்கோ போகமுடியாதபடி அடித்துவந்தார்கள். மிகோலா ஜிஸ்க் பாசிஸத்தை விரும்புபவர்; குடியானவர்கள் தொழிலாளர் கள் ஆகியோரின் அதிருப்தியையும் கோபத்தையும் சம்பாதித்துக் கொண்டவர்; பிற்போக்கான எண்ணங்களை உடையவர். ஆகை யினலேதான் அவர் ஸ்டாலினைப் பார்க்க விரும்பவில்லை. ஆகையி ஞலேதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் அவருக்குச் சாதக மாக இருந்து வருகிருர்கள்.

பால்டிக் நாடுகளிலும் பொதுஜன இயக்கம் கிளர்ந்தெழுந்தது. இந்நாடுகளின் பொதுஜனத் தலைவர்களையும், அவர்களது ஸ்தா பனங்களையும் அங்கீகாரம் செய்து பொதுஜனங்களின் அரசாங் கங்களை நிறுவ உதவியாக இருந்ததும், இருப்பதும் சோவியத் ரஷ்யாவே.

எனவே பிரான்சில், இத்தாலியில், யூகோஸ்லேவியாவில், சேக் கோஸ்லேவியாவில், போலந்தில், எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் பொதுஜன அரசாங்கங்கள் ஏற்படுவதைப் பிரிட்டிஷ்-அமெரிக்கப் பிற்போக்கு சக்திகள் விரும்பவில்லை. பொதுஜன அரசாங்கங் களுக்குப் பதிலாக நிலச்சுவான்தார், தொழிற்சாலை முதலாளி கள், பாசிஸ்டுகள் ஆகிய இவர்களைக்கொண்ட அரசாங்கங்கள் அமைக்க அவை முயல்கின்றன. ஆனல் இந்தப் பிற்போக்கு அர சாங்கங்களை ஸ்தாபிக்க முயலும் இடங்களிலெல்லாம் பொதுஜனங் கள் கோபமடைந்து அந்த அரசாங்கங்களைத் தகர்த்தெறிந்து விட் டுத் தங்கள் சொந்த அரசாங்கங்களை ஏற்படுத்திக் கொள்ளுகிருர் கள். இந்தவேலையில் பொதுஜனங்களுக்கும், பொதுஜன அரசாங் கங்களுக்கும் சோவியத் ரஷ்யா ஊக்கமும் உதவியும் அளித்துவரு கிறது.

இதிலிருந்து இரண்டு உண்மைகள் நமக்கு நிதரிசனமாகத் தெரிகின்றன.

சோவியத் ரஷ்யா பொதுஜனங்களின்மீது பூரண நம்பிக்கை வைத்திருக்கிறது. தான் சொல்ல எண்ணுவதைச் சந்தேகத்திற்கு இடமின்றி வெளிப்படையாக அது சொல்லுகிறது. காரணம், சோவியத் ரஷ்யாவுக்கு நாடு பிடிக்கும் ஆசையில்லை. அந்நிய நாடு களை அரசியலிலோ, பொருளாதாரத் துறையிலோ அடிமைப்படுத்தி வைக்கும் ஆசை அதற்கு இல்லை. உள்நாட்டில் ஒரு வர்க்கத்தாரை இன்னெரு வர்க்கத்தார் சுரண்டுகிறது என்கிற காரியமும் சோவி யத் நாட்டில் இல்லை. சோவியத் ரஷ்யா விரும்புவதெல்லாம் சமா தானமே; உலகநாடுகள் ஒற்றுமையாகவும் ஒன்றுக்கொன்று உதவி யாகவும் இருந்து வாழவேண்டுமென்பதே. இந்தக் காரணத்தைக் கொண்டுதான் ஐரோப்பியாவிலும் இதரபகுதிகளிலும் ஏற்படும் பொதுஜன இயக்கங்களையும் பொதுஜன அரசாங்கங்களையும் சோவி

யத் ரஷ்யா குதூகலத்துடன் வரவேற்கிறது. பொதுஜன அரசாங்கம் பொது ஜனங்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும். பொதுஜனங்களுக்கு நன்மைபயக்கிற காரியங்கள்யாவும் உள்நாட்டுச் சுரண்டலையும் வெளிநாட்டுச் சுரண்டலையும் ஒழித்துவிடக்கூடியதாகத் தான் இருக்கமுடியும். ஏனெனில், பலருடைய உழைப்பின் பயனை ஒரு சிலர் அடித்துக்கொண்டு போகிறார்கள் என்பதையே "சுரண்டல்" என்ற பதம் குறிக்கிறது. உள்நாட்டு முதலாளித்துவமும் வெளிநாட்டு ஏகாதிபத்தியமும் இந்தச் சுரண்டலையே அஸ்திவாரமாகக் கொண்டவை. அவரவர்களின் உழைப்பின்பயனை அவரவர்களே அநுபவிக்கும் முறை ஏற்படுமானால் பொருளாதார நெருக்கடிக்கும் போருக்கும் சமுதாய அமைப்பில் இடமில்லாமல் போய்விடும். இந்த முறைதான் உண்மையான பொதுஜன அரசாங்கத்திற்குப் பயனளிக்கக் கூடியதாயிருக்கும். ஆகையால், அது இந்த முறையையே பின்பற்ற முயலும். அப்போது உலகத்தில் சமாதானம் ஏற்படுவது சாத்தியமாகும். அதனாலேதான் இத்தாலி, பிரான்ஸ், யுகோஸ்லோவியா, போலந்து முதலிய நாடுகளில் பொதுஜன அரசாங்கங்கள் ஏற்படுவதில் சோவியத் ரஷ்யா உற்சாகம் காட்டுகிறது. அதனாலேதான் அவசியம் ஏற்படும்போது பொதுஜனங்களின் சார்பாக அது தலையிடவும் செய்கிறது.

ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கமும் அமெரிக்க அரசாங்கமும் பொதுஜனங்களை நம்ப அஞ்சுகின்றன. இவைகள் என்ன எண்ணுகின்றனவோ, அதற்கு மாறான விஷயங்களைச் சொல்லுகின்றன. சொல்லுவதைச் சந்தேகத்திற்கு இடமின்றியும் பட்டவர்த்தனமாகவும் சொல்லாமல், ஒளிவு மறைவாகவும் அர்த்த மற்ற வார்த்தை அடுக்குகளினால் உண்மையான நோக்கத்தை மறைத்தும் சொல்லுகின்றன. இவைகளுக்கு நாடுபிடிக்கும் ஆசை குறைந்திருக்கிறது என்பதே அன்றி மறைந்து போய்விடவில்லை. ஏற்கனவே பிடித்துவைத்திருக்கும் நாடுகளையும், இதர நாடுகளில் அநுபவித்து வரும் விசேஷப் பொருளாதார உரிமைகளையும் தியாகம் செய்ய இவைகளுக்கு மனதில்லை. "பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை எடுத்து மூடவா நான் பிரதம மந்திரியானேன்? அதில் ஒரு அங்குலம்கூட விட்டுக்கொடுக்கமாட்டேன்," என்று சர்ச்சில் துரை கர்ஜிக்கிறார். இந்தியாவையும் இதர நாடுகளையும் சுரண்டுகிற பிரிட்டனையே சுரண்டுவதற்கு அமெரிக்க முதலாளிகள் திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சுரண்டுகிற ஆசை பிரிட்டனையும் அமெரிக்காவையும் விட்டபாடில்லை. சோவியத் ரஷ்யாவைப்போல, பிரிட்டனும் அமெரிக்காவும் போரை விரும்பவில்லைதான். ஆனால் இவைகள் செய்கிற, செய்ய எண்ணுகிற காரியங்கள் போருக்குத்தான் வழி காட்டுகின்றன. ஏகாதிபத்திய வெறி இன்னும் அடங்கப் பெறாத பிரிட்டனும் அமெரிக்காவும் ஐரோப்பாவிலும், உலகத்தின் அந்நிய பகுதிகளிலும் பொதுஜன இயக்கம் ஏற்படுவதை விரும்பவில்லை; பொதுஜன அரசாங்கங்கள் ஏற்படுவதை நிச்சயமாக விரும்பவில்லை. இவைகள் விரும்புவதெல்லாம் தங்கள் காலனிகளையும், தாங்கள் அந்நிய நாடுகளில் அநுபவித்து வரும் விசேஷ உரிமைகளையும் பிடுங்கிக் கொள்வதற்காகப் போரை ஆரம்பித்திருக்கும் ஆக்கிரமிப்பு நாடுகளைத் தோற்கடித்துவிட்டு பழைய சுரண்டல் கொள்கையை அப்படியே பின்பற்றி வரவேண்டும்

என்பதே. ஆகையினலேதான் இவைகள் இத்தாலியிலும் பிரான்சிலும், போலந்திலும் இதர ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்டு வரும் பொதுஜன இயக்கங்களையும், பொதுஜன அரசாங்கங்களையும் தடைப்படுத்திவிட்டு ஜனங்களுக்கு விரோதமான பழைய அரசாங்கங்களை ஸ்தாபிக்கமுயல்கின்றன. காரணம், பொதுஜன அரசாங்கங்கள் முதலாளித்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் சாதகமாக இருக்கமாட்டா என்பதேயாகும்.

இந்த இரண்டு உண்மைகளும் வெறுங் கொள்கை அல்ல, வரட்டுச் சித்தாந்தம் அல்ல. இவை இன்று நம் கண்முன்பாக நிகழ்ந்துவரும் காரியம் ஆகும். இது எதைக்காட்டுகிறது? பெரிய வல்லரசுகள் மகாநாடு கூடி ஐரோப்பிய நாடுகளின் தலைவிதியைத் தீர்மானிப்பது என்கிற காரியம் இனி இல்லை. அந்த நாடுகளில் முன்னேற்றத்திற்கு உதவியாக ஆற்றலும் உதவியும் வாய்ந்த புதிய சக்திகள் தோன்றிவிட்டன. ஒவ்வொரு நாட்டிலும், தேசபக்தியின் அடிப்படையின்மீது முற்போக்குக் கட்சிகள் எல்லாம் சேர்ந்து ஒரு தேசிய ஐக்கிய முன்னணியை ஏற்படுத்திவிட்டன. தேசவிடுதலைக்காகத் தோன்றிய இந்த ஐக்கிய முன்னணிகள் யாவும் செஞ்சேனையின் தியாகத்தையும் வீரத்தையும் கண்டு உற்சாகமும் பலமும் பெறுகின்றன. ஹிட்லரின் ஆட்சியையும் அதற்குக் கருவியாக இருக்கும் துரோகிகளையும் எதிர்த்து ஒவ்வொரு நாட்டு மக்களும் மறைமுகமாகச் செய்த அற்புதமான போராட்டம் அவர்களிடையே அசைக்கமுடியாத ஒரு ஒற்றுமையை உண்டாக்கி யிருக்கிறது. இந்த நாடுகளின் விடுதலைப் போராட்டங்களின் இரண்டு முக்கியமான நோக்கங்கள் என்னவென்ருல், நாட்டுமக்களின் பூரண சம்மதியைப்பெற்ற சுதந்திர ஜனநாயக அரசாங்கங்களை ஸ்தாபிப்பது, ஆக்கிரமிப்பு நாடுகளுக்கு இடம் கொடாதவண்ணம் சுதந்திரநாடுகள் யாவும் ஒற்றுமையாக வாழுவது என்பவை ஆகும்.

இந்த நாடுகளில் ஜனநாயக அரசாங்கங்களை முறியடித்துவிட்டு, திரும்பவும் பிற்போக்கு சக்திகள் தலையெடுக்கமாட்டா என்பதற்கு என்ன உறுதி?

முதலாவதாக, "விடுதலைக்காகப் போராடும் நாடுகளுக்கு நாங்கள் உதவிசெய்வோம். விடுதலையடைந்தபிறகு, அந்த நாடுகளின் சொந்த விஷயங்களில் நாங்கள் தலையிடமாட்டோம். தாங்கள் விரும்பிய வண்ணம் தங்கள் மக்களின் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் உரிமை அவைகளுக்குத்தான் உண்டு," என்று சோவியத் ரஷ்யா ஒளிவு மறைவின்றி உறுதி கூறியிருக்கிறது.

இரண்டாவதாக, ஆக்கிரமிப்பு நாடுகளின் தொல்லையில்லாமல் வாழுவதற்கு சமாதானத்தை விரும்பும் எல்லா நாடுகளையும் கொண்ட ஒரு சர்வதேச ஸ்தானத்தை அமைப்பது என்பது ஆகும்.

மூன்ருவதாக, இந்த நாடுகளின் பொதுஜன அரசாங்கங்களுக்கும் சோவியத் ரஷ்யாவுக்கும் இடையே ஒத்துழைப்பும் நட்பும் பெருகிவருகின்றன. சோவியத் ரஷ்யாவின் உண்மையான நோக்கங்களையும், அதன் செல்வாக்கின் பெருக்கையும் பிரிட்டனும் அமெரிக்காவும் முன்னையைவிட அதிகமாக உணர்ந்து வருகின்றன. பாசிஸத்தின் பிடியிலிருந்து விடுபட்டு வரும் புதிய ஐரோப்பா

வின் தன்மையையும் அவைகள் அறியத் தொடங்கிவிட்டன. தங்கள் விருப்பத்திற்கு மாருக, டிடோவையும், டிகாலேயும், இத்தாலிய அரசாங்கத்தையும் அவைகள் அங்கீகாரம் செய்ததே இதற்கு அத்தாட்சியாகும்.

எனவே, சோவியத் ரஷ்யாவும் ஐரோப்பிய பொதுஜன இயக்கமும் ஒன்று சேரும்போது, இவற்றின் ஆற்றலுக்குமுன் ஏகாதிபத்திய ஆசைகொண்ட பிரிட்டனும் அமெரிக்காவும் எதிர் நின்று தங்கள் நோக்கங்களில் வெற்றியடைய முடியவில்லை. ஐரோப்பியப் பொதுஜன இயக்கம் உலகத்தின் இதர பகுதிகளேயும் பாதிக்காமலிருக்கமுடியாது. போர் அரங்கம் கீழை நாடுகளின்பக்கம் திரும்பும்போது இந்தியா, சீன போன்ற நாடுகளில் இந்த இயக்கம் வலுவடைவதை நாம் காண்போம். காங்கிரஸ்-லீக் ஒப்பந்தம் ஏற்பட்டுப் பூரண ஒற்றுமையோடு விளங்கும் இந்தியாவும், க்யோமிண்டாங்—கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையேயுள்ள பிளவுகள் நீங்கி பூரண ஒற்றுமையோடு விளங்கும் சீனவும் உலகப் பொதுஜன இயக்கத்திற்கே மகத்தான இரண்டு கோட்டைகளாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லே. சோவியத் ரஷ்யாவும் உலகப் பொதுஜன இயக்கமும் ஒன்றுசேரும்போது, இவற்றின் சக்திக்கு முன்னர் பிரிட்டிஷ்—அமெரிக்க முதலாளி வர்க்கத்தாரின் சூழ்ச்சிகளும் தந்திரங்களும் பலிக்காது என்று நாம் நிச்சயமாக நம்பலாம் அல்லவா ?

15. தலைவர் ஸ்டாலின்

ஸ்டாலினுடைய வாழ்க்கையே ஒரு பெரும் போராட்டம். இளமைப் பருவத்திலிருந்தே ஸ்டாலின் போல்ஷிவிக் கட்சிக்காகவும், தொழிலாளர் வர்க்கத்திற்காகவும் போராடி வந்திருக்கிருர். மார்க்ஸையும், எங்கல்ஸையும் படிக்கத் துவங்கிய கால முதற்கொண்டே புரட்சியைத் தூண்டும் மார்க்ஸீயத்தை ஊக்கத்தோடு பிரசாரம் செய்தும் எதிரிகளுக்குத் தக்க பதில்சொல்லியும் வந்திருக்கிருர். 20-ம் நூற்ருண்டின் துவக்கத்திலிருந்து லெனினே உண்மையோடு பின்பற்றி வந்திருக்கிருர். ஜாரின் போலீசார் அவரைப் பல கஷ்டங்களுக்கு உள்ளாக்கினர்கள்; சிறைப்படுத்தினர்கள். ஆனல் சிறையிலிருந்து திரும்பத் திரும்பத் தப்பி வந்து போராட்டத்தை நடத்திவந்திருக்கிருர்.

லெனின் தலைமறைவாக இருந்த காலத்தில், ஸ்டாலின் போல்ஷிவிக் கட்சியை அக்டோபர் புரட்சிக்குத் தயார்செய்தார். அந்தப் புரட்சியை வெற்றிகரமாக நடத்தியதும் ஸ்டாலினே. சமதர்ம அரசியலே உருவாக்க லெனினேடு சேர்ந்து பாடுபட்டார் ஸ்டாலின். புதிதாகத் தோன்றிய சோவியத் ரஷ்யாவின்மீது அந்நியநாட்டு ஏகாதிபத்திய வாதிகளும் உள்நாட்டு முதலாளிகளும் சேர்ந்து பல முனைகளில் படையெடுத்தபோது அவர்களைத் துரத்தி யடித்ததும் ஸ்டாலினே. லெனினுக்கு வலதுகையாக யிருந்து ஸ்டாலின் மூன்ருவது சர்வதேசப் பொதுவுடைமைச் சங்கத்தை உருவாக்கினர்; அதைச் சந்தர்ப்ப வாதிகளின் தாக்குதல்களினின்றும் பாதுகாக்கவும் செய்தார். பொதுவுடைமைக் கட்சிகளின் சர்வதேச சங்கத்திற்கு ஸ்டாலின் தலைவர்; ஸ்டாலின் ஜனங்களுக்கு தலைவர்.

ஸ்டாலின் மார்க்சீய - லெனினிசம் என்கிற கொள்கையை எப்போதும் தீட்டி முனை மழுங்காமல் வைத்திருப்பார். காலம் வரும்போது அதை அபாரத்திறமையுடன் பிரயோகிப்பார். லெனினுடன் சேர்ந்தும், தானாகவும் மார்க்சீய - லெனினிசம் என்கிற கொள்கையை அவர் பெரிதும் அபிவிருத்தி செய்திருக்கிறார். சமுதாய வாழ்க்கையில் ஒரு வழி காட்டியாக இருக்கும் இந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டே பல சிக்கலான பிரசினைகளை அவர் தீர்த்து வைத்திருக்கிறார். தேசிய இனங்களுக்குப் பூரண சுதந்திரம் கொடுக்கவேண்டுமா? ஒரே நாட்டில் மட்டும் சமதர்மம் வெற்றியடையுமா? சோவியத்துக்களின் வேலை என்ன? பொதுவுடைமைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தப் பாட்டாளி மக்களின் சர்வாதிகார அரசாங்கம் இருக்க வேண்டுமா? சமதர்ம அமைப்பில் தொழிலை எப்படி வளர்ப்பது? விவசாயத்தை எப்படி அபிவிருத்தி செய்வது? இந்தப் பிரசினைகளையும் இன்னும் இவைபோன்ற முக்கியமான பல பிரசினைகளையும் ஸ்டாலின் எவ்வளவு தீர்க்க தரிசனத்தோடு தீர்த்து வைத்தார் என்று எண்ணும்போது மார்க்சீய—லெனினிஸக் கொள்கையில் ஸ்டாலினுக்குள்ள அபாரமான ஞானத்தைக்கண்டு யாரும் வியக்காமலிருக்கமுடியாது.

நெருக்கடியான சந்தர்ப்பங்களில் மார்க்சீய — லெனினிசக் கொள்கையைத் திறமையோடும் குறிதவறுமலும் பிரயோகிப்பதில் மட்டும்தான் ஸ்டாலின் கெட்டிக்காரர் என்பதில்லை. அந்தக் கொள்கையைச் சாமானிய மக்களும் தெரிந்துகொள்ளும்படி பொதுமக்களின் பாஷையில் எடுத்துச் சொல்வதிலும் ஸ்டாலின் ஒப்பற்றவராக விளங்குகிறார். ஸ்டாலினுடைய பேச்சில் அநாவசியமாக ஒரு வார்த்தையைக்கூடக் காணமுடியாது. எளிமையாகப் பேசுவது, எளிமையாக எழுதுவது என்பது ஸ்டாலினிடமுள்ள சிறந்த குணங்களில் ஒன்ருகும். மனதிலும் வாக்கிலும் உள்ள இந்த எளிமையை அவருடைய சொந்தவாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் காணலாம். ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை வாழ்வதில் ஸ்டாலினை இதர போல்ஷிவிக்குகளும் பின்பற்றுகிருர்கள். தன்னடக்கம்தான் உண்மையான போல்ஷிவிக்கரின் ஆபரணம்என்று ஸ்டாலின் அடிக்கடி சொல்லுவாராம்.

ஸ்டாலின் எத்தனையோ புத்தகங்கள் எழுதியிருக்கிருர். அவற்றில் பல மார்க்சீயத்திற்கே உயிர் நாடியாக இருக்கின்றன. ஆயினும், “நான் கேவலம் லெனினுடைய சிஷ்யன்தான். அவருக்கு உண்மையான சிஷ்யனுக இருப்பதே எனது குறிக்கோள்” என்று தன்னடக்கத்தோடு ஸ்டாலின் சொல்லிக் கொள்ளுகிருர்.

ஸ்டாலினுக்கு ஜனங்களிடம் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. பொதுஜனம் என்பது ஒரு பெரிய சக்தி. எந்தக் கட்சியும், எந்த அரசாங்கமும் பொதுஜனங்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் இல்லாமல் நீண்ட காலம் நடைபெற முடியாது என்பதை அவர் அழுத்தமாக உணர்ந்திருந்தார். பொதுஜனங்களின் தொடர்பைப் பலப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று அவர் அடிக்கடி கட்சி அங்கத்தினர்களுக்கு அறிவுறுத்துவதுண்டு. ஒரு கட்சிக் கூட்டத்தில் அவர் சொன்னதைக் கேளுங்கள் :

"பொதுமக்களோடு தொடர்பு வைத்திருக்கிறவரையில் போல்ஷிவிக் கட்சியை யாராலும் அசைக்க முடியாது. அதற்கு மாருக, போல்ஷிவிக் கட்சியினர் பொதுஜனங்களின் தொடர்பை இழந்த அந்தக் கணமே அதிகார வெறி என்கிற துருப்பிடித்து தங்கள் சக்தியையெல்லாம் இழந்து ஒன்றுக்கும் உதவாதவர்களாகிவிடுகிருர்கள். இது சம்பந்தமாகக் கிரேக்க புராணத்தில் ஒரு கதை உண்டு. **ஆண்டியஸ்** என்ற பிரசித்திபெற்ற ஒரு வீரன் இருந்தான். அவன் வருண பகவானுக்கும் பூமாதேவிக்கும் பிறந்தவன். தாயினிடத்தில் அவனுக்கு அளவற்ற அன்பு. பாலூட்டிச் சீராட்டி வளர்த்த தாய் அல்லவா? போரில் அவனை வென்றவர்கள் யாருமே இல்லை. அபார பலம் பொருந்திய வனுக இருந்தான். அவனுக்கு இவ்வளவு பலம் எங்கிருந்து வந்தது? போரில் எதிரியின் கை மேலோங்கினல், அவன் தன் தாயாகிய பூமாதேவியைத் தொடுவான். அவ்வளவுதான், அவனுக்கு அமோகமான பலம் வந்துவிடும். ஆயினும் ஒரு பலவீனம் மட்டும் அவனிடம் இருந்தது. பூமியிலிருந்து அவனைப் பிரித்துவிட்டால், தன் சக்தி முழுவதையும் அவன் இழந்துவிடுவான். அவனுடைய எதிரிகளுக்கு இந்தப் பலவீனம் தெரியவந்தது. அவனைத் தோற்கடிக்கச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒருநாள் அவனுக்குமுன் ஒரு எதிரி தோன்றினன். அந்த எதிரி **ஆண்டியசை** அநாயாசமாகக் கொன்றுவிட்டான். அவன்தான் **ஹெர்க்குலிஸ்.** ஹெர்க்குலிஸ் அவனை எப்படிக் கொன்ருன்? பூமியிலிருந்து அவனைத் தூக்கி ஆகாயத்தில் நிறுத்தியபடியே ஹெர்க்குலிஸ் அவன் கழுத்தை நெறித்துக்கொன்ருன்.

"தங்களை உண்டாக்கி ஊட்டிவளர்த்த தாயாகிய பொதுஜனங்களோடு தொடர்பு வைத்துக்கொள்ளுகிற காரணத்தால் போல்ஷிவிக் கட்சியினரும் **ஆண்டியசைப்** போல வெல்ல முடியாத ஆற்றல் படைத்தவர்களாக இருக்கிருர்கள். இந்தத் தொடர்பைத் தொடர்ந்து வைத்திருக்கிறவரையில் அவர்கள் அபார சக்திவாய்ந்தவர்களாகவே என்றும் இருப்பார்கள். இதுதான் போல்ஷவிக் கட்சியை மற்ற கட்சிகள் வெல்லமுடியாததன் மர்மம்."

முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இப்படிச் சொன்ன ஸ்டாலினைச் சர்வாதிகாரி என்று சொல்லித் தூற்றுவதை நாம் கேட்டிருக்கிறேம். இதில் ஆச்சரியமில்லை. ஆனல் முதலாளி வர்க்கத்தைச் சேராதவர்களும் அவரைத் தூற்றுவது கொஞ்சம் வேடிக்கையான விஷயமே. ஜனங்களின் தொடர்பற்ற கட்சி சக்தியற்ற கட்சி என்று எந்தச் சர்வாதிகாரி இதுவரையில் சொல்லியிருக்கிருர்? தேர்தல் பிரசங்கத்தின்போது ஓட்டர்களுக்குமுன் நின்றுகொண்டு எந்தச் சர்வாதிகாரி கீழ்வருமாறு சொல்லமுடியும்?—:

"தோழர்களே! சட்டசபைக் காலம் முடிவதற்கு முன்னரே பிரதிநிதிகளைத் திருப்பி அழைக்கவும், அவர்களைக் கண்காணிக்கவும், அவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் சீர்தூக்கிப் பார்க்கவும், சரியான வழியிலிருந்து தவறினல் அவர்களை வெளியேற்றவும், புதிய தேர்தல் நடத்தும்படி செய்யவும் உங்களுக்குப் பூரணமான உரிமை உண்டு. இதை மறந்துவிடாதீர்கள். உங்கள் பிரதிநிதிகளைத்தவருமல் அடிக்கடி நீங்கள் கண்காணித்துவரவேண்

டும். ஓட்டர்களின் ஆதிக்கத்திலேயே பிரதிநிதிகளை இருக்கும்படி செய்வது ஓட்டர்களின் கடமை மாத்திரமல்ல. அது அவர்களின் உரிமையும் கூட. தோழர்களே, பிரதிநிதி என்ற முறையில் நான் ஓட்டர்களாகிய உங்களுக்கு அளிக்கும் ஆலோசனை இதுதான்.'' இப்படி நடந்துகொள்ளுகிற தலைவரைப் பார்த்து, சர்வாதிகாரி என்று சொன்னால், இந்தமாதிரி சர்வாதிகாரிதான் நமக்கு வேண்டும் என்று சொல்வதில் என்ன தவறு இருக்க முடியும்?

ஸ்டாலின் பார்வைக்கு ஒரு குடியானவனைப்போல் காணப்படுவார். குள்ளமானமனிதர். ஒழுங்காக ஆடையணிந்துகொண்டிருப்பார். அவலட்சணமான குணங்கள் அவரிடம் ஒன்றுமே இல்லை. சதாசிரிப்பதற்குத் தயாராயிருப்பார். தமாஷாகப் பேசுவார். கூரிய பார்வை. அவரது உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை முகம் உடனுக்குடனே பிரதிபலித்துக்காட்டும். அவர் சந்தோஷமாக இருப்பதும் கவலையாக இருப்பதும் அவரது முகத்தைப் பார்த்தவுடனேயே தெரிந்துவிடும். ஸ்டாலின் கள்ளங் கபடமற்ற மனதுடையவர். சாந்தம், அன்பு, மரியாதையெல்லாம் அவரிடம் குடிகொண்டிருக்கும். சிடுசிடுவென்றில்லாமல் உல்லாசமாயிருப்பார். அபாரமான விவேகமும், பரந்த அறிவும், எந்த முடிவையும் விரைவாகவும், திடமாகவும் செய்யும் திறமையும் படைத்தவர் ஸ்டாலின் என்று ஹென்றி பார்பூஸ் கூறுகிறார்.

காலை 4 மணிக்குத்தான் ஸ்டாலின் படுக்கைக்குச் செல்லுவது வழக்கம். அதுவரையிலும் வேலை செய்துகொண்டே இருப்பார். அவருக்குக் காரியதரிசி ஒருவர்தான். தனக்கு வரும் கடிதங்களுக்குப் பதில் எழுதும்போது, விஷயங்களைக் கூறிக் காரியதரிசியையே பதிலெழுதி அனுப்பும்படி சொல்லிவிடுவார். மற்ற தலைவர்கள் மாதிரி காரியதரிசிகளைக் கடிதங்கள் எழுதச்சொல்லி அதில் கையெழுத்துமாத்திரம் போடும் பழக்கம் ஸ்டாலினிடம் கிடையாது. அன்றாடம் வரும் கடிதங்களுக்கு அன்றன்றே பதில் அனுப்பிவிடுவார். கிரெம்லின் காரியாலயத்தில் ஸ்டாலினுடைய அறைக்குச் செல்லும் ஒருவர் அங்கே மூன்று அல்லது நான்கு பேரைத் தவிர வேறு யாரையும் காணமுடியாது என்று பார்பூஸ் எழுதுகிறார். கிரெம்லின் மாளிகையில் ஸ்டாலினுக்கென ஒரு சிறிய ஹால், மூன்று படுக்கை அறைகள், ஒரு போஜன அறை, இவ்வளவுதான்.

அவருக்கு மூன்று குழந்தைகள். எல்லோருக்கும் மூத்த பையன் செஞ்சேனையில் ஒரு உப தளகர்த்தனாக இருக்கிறான். அவருடைய மனைவி அலிலுயீவ் 1934 லேயே இறந்துவிட்டாள். அவள் டிரான்ஸ்காகேசியாவிலுள்ள ஒரு தொழிலாளரின் மகள். அலிலுயீவ் ஸ்டாலினுடைய இரண்டாவது மனைவி. முதல் மனைவி ஸ்வானிட்ஜ் இறந்த சில வருஷங்களுக்குப் பிறகே அவர் இரண்டாவது மணம் செய்துகொண்டார். முதல் மனைவி அவருடைய அரசியல் வாழ்க்கையில் எவ்விதமான பங்கெடுத்துக்கொண்டதாகவும் தெரியவில்லை. அவள் இறந்தாள் என்று கேட்டபோதுதான் சோவியத் மக்கள் அவள் ஒருத்தி இருந்தாள் என்பதையே ஞாபகப்படுத்திக்கொண்டார்கள். அலிலுயீவ் அப்படியல்ல. ஸ்டாலினுடைய அரசியல் திட்டம் பொருளாதாரத் திட்டங்களையெல்லாம் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வம் அவளுக்கு அதிகமாக

இருந்தது. மார்க்ஸீயக் கொள்கை, அரசியல், பொருளாதாரம் ஆகிய இந்த விஷயங்களில் ஞானத்தையூட்டுவதற்காக மாஸ்கோவில் நடைபெற்ற வகுப்புகளுக்கு இந்த அம்மையார் போவதுண்டு. எப்படியாவது விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும், குடும்ப வாழ்க்கையைப்போல, பொதுவாழ்க்கையிலும் கணவனுக்கு உதவியாக இருக்கவேண்டும் என்ற எண்ணம்தான் அலிலுயீவை மாலை வகுப்புகளுக்குச் செல்லும்படி தூண்டியது. மணமான முதல் வருஷங்களில் அலிலுயீவ், மற்ற சாமானியத் தொழிலாளர்களின் மனைவியரைப்போல, மாஸ்கோ தொழிற்சாலை ஒன்றில் வேலைபார்த்து வந்தாள். வயிற்றிலே கட்டி ஏற்பட்டதன் காரணமாக அலிலுயீவ் ஸ்டாலினை விட்டு நிரந்தரமாகப் பிரியும்படி நேரிட்டுவிட்டது. கேவலம் உணர்ச்சி வசப்படுவது என்பது ஸ்டாலினிடம் காணமுடியாத ஒரு குணம். அது ஒரு பலவீனம் என்றுகூட அவர் எண்ணினர். ஆயினும் அலிலுயீவ் இறந்தபோது உருக்குப் போன்ற ஸ்டாலினுடைய மனசும் உணர்ச்சிவயப்பட்டுவிட்டது.

ஸ்டாலினுக்குக் குழந்தைகளின் மீதும், இளைஞர்கள் மீதும் ரொம்பப் பிரியம். குழந்தைகளைப் பராமரிப்பதிலும், சிறுவர் சிறுமிகளுக்குச் சிறந்த பயிற்சியளித்து அவர்கள் உடலையும் மனத்தையும் ஒருங்கே ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதிலும் ஸ்டாலின் விசேஷ கவனம் செலுத்துவார். இவர்கள்தானே எதிர்கால ரஷ்யாவை நடத்தப்போகிறார்கள்? குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் அவரிடம் அபார அன்பு. தந்தையாகவும் வாத்தியாராகவும், தோழனாகவும் இருந்து ஸ்டாலின் அவர்களுக்குத் தொண்டு செய்கிறார் அல்லவா? அதனாலேதான் ரஷ்யக் குழந்தைகள் எல்லாம் அவரைப் பார்த்து "தோழர் ஸ்டாலினே, எங்கள் வாழ்க்கையைச் சந்தோஷமயமாக்கிய உங்களுக்கு எங்கள் நன்றி" என்று சொல்லுகிறார்கள்.

சோவியத் குழந்தைகளைப் போல சோவியத் மக்களும் ஸ்டாலினைப் பெரிதும் நேசிக்கிறார்கள். அவரிடம் அபாரமான மரியாதையும் அன்பும் நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள். இப்படிப் பொதுமக்களின் இதயத்தைக் கொள்ளைகொண்டிருக்கும் சர்வாதிகாரி ஒரு புதுரகமான சர்வாதிகாரியே. இந்தச் சர்வாதிகாரி, பொதுவாகத் தலைவர்களைப் பற்றி என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள். "ஒருசில தலைவர்கள் தான் சரித்திரத்தை உண்டாக்குகிறார்கள் என்ற காலம் மலையேறிவிட்டது" என்கிறார். ஆம். இது ஒரு மகத்தான உண்மையே. "தனது பரந்த அறிவின் உதவிகொண்டு ஒரு விஷயத்தை முன்கூட்டியே அறிந்து அதற்குத் தக்கபடி எதிர்ப்பாகவோ, சாதகமாகவோ நடந்துகொள்பவன் சிறந்த தலைவன் ஆவான். ஒரு தலைவன் இதுவரையில் யாருடைய அறிவுக்கும் எட்டாத ஒரு புதுமை யுகத்தைச் சிருஷ்டித்ததில்லை. ஆனல் அதைக் கண்டுபிடிக்கிறான். லெனினும் ஸ்டாலினும் சரித்திரத்தைச் சிருஷ்டிக்கவில்லை. அதைக் கண்டுபிடித்தார்கள். தூரத்தில் தோன்றிய எதிர்காலத்தை சமீபத்திற்குக் கொண்டுவந்த பெருமை அவர்களைச் சார்ந்ததாகும்," என்று பார்பூஸ் சொல்லுவது எவ்வளவு பொருத்தமான விஷயம். எதிர்காலத்தின் போக்கை எப்படியோ தெரிந்துகொண்டு அதற்கு முன்கூட்டியே தயாராயிருக்கும் காரணத்தினலேதான் சோவியத்மக்கள் ஸ்டாலினைப்பெரிதும் போற்று

கின்றனர். முன்னே ரஷ்யா எப்படி இருந்தது, இன்று எப்படி இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும் எந்த ரஷ்யன்தான் அவரைப் போற்ருமலும் அவரிடம் அன்பு செலுத்தாமலும் இருக்க முடியும்?

மாஸ்கோ முழுதுமே நித்திரையில் ஆழ்ந்திருக்கும் நள்ளிரவில் ஒரே ஒருவர் மட்டும் வாழ்ந்துகொண்டிருக்கிருர். அவர் சோவியத் ரஷ்யாவின் ஒவ்வொரு நகரிலும் ஒவ்வொரு கிராமத்திலும் ஜீவகளை ததும்பிக்கொண்டிருப்பதை உல்லாசமாகக் கவனித்துக்கொண்டிருக்கிருர். "எங்கள் தந்தை, எங்கள் நண்பர், எங்கள் சகோதரர், எங்கள் தலைவர்" என்று பெருமையோடு தொழிலாளர்கள் சொல்லிக்கொள்ளும் அந்த மனிதர்தான் அவர். தொழிலாளர்கள் முன்னேற்றமடைய அவர் உண்மையான வழிகாட்டியாக இருக்கிருர். "உனக்கு அவரைப்பற்றித் தெரியாது. ஆனல் அவருக்கு உன்னைத் தெரியும். உனக்காகத்தான் அவர் பாடுபடுகிருர். நீ யாராயிருந்தால்தான் என்ன, உனக்கு நன்மை செய்பவர் அவரே. உனது எதிர்கால வாழ்வு அவர் கையிலேதான் இருக்கிறது. ஆம் ஒரு சாதாரணப் போர்வீரனைப் போல உடையணிந்துகொண்டு, ஒரு தொழிலாளர் போலக் காணப்படுகிருரே, அந்த மனிதர் தான்," என்று பார்பூஸ் ஸ்டாலினை வருணிக்கிருர்.

பிரான்ஸ், பெல்ஜியம் போன்ற நாடுகளை விழுங்கி ஏப்பமிட்ட பிறகு, ஜெர்மன் பாசிஸம் சோவியத் ரஷ்யாமீது படையெடுத்தது. ஆனல் அது சோவியத் ரஷ்யாமீதுமட்டும் படையெடுக்கவில்லை, நாகரிகத்தின்மீதே படையெடுத்துவிட்டது. சேவியத் ரஷ்யாவும் பிரன்சைப்போல, ஹிட்லரின் படைக்கு முன்னர் பணிந்து போயிருந்தால், இன்று உலகம் முழுவதும் பாசிஸப் பேய் கோர தாண்டவமாடிக் கொண்டிருந்திருக்கும். தாய் நாட்டுக்கு ஆபத்து என்றவுடன் சோவியத் மக்கள் வீறு கொண்டு எழுந்தனர். "ஹிட்லருடைய ராணுவம் பயங்கரமானதுதான், ஜெயிக்கமுடியாதுதான். ஆயினும் என்ன? எங்கள் தலைவர் ஸ்டாலின் இருக்கும்போது, எங்களுக்கு அது ஒரு பொருட்டல்ல" என்று சோவியத் மக்கள் எண்ணினர்கள். அன்று, புதிதாகதோன்றிய சோவியத் ரஷ்யாவுக்கு ஆபத்து ஏற்பட்ட காலத்தில் லெனின் ஸ்டாலினைத்தான் போர்முனைக்கு அனுப்பிவைத்தார். இன்று, சமதர்ம ரஷ்யாவுக்கு ஆபத்து ஏற்பட்டகாலத்திலும் சோவியத் மக்கள் ஸ்டாலினைத் தான் போர்முகத்துக்கு அனுப்பிவைத்தார்கள். எந்தப்போர் முனையில் மனிதவர்க்கத்திற்கே ஆபத்து ஏற்பட்டதோ, அந்தப் போர்முனையில் நின்று ஸ்டாலின் போர் புரிந்தார். இந்த உருக்கு மனிதனுக்குமுன் பாசிஸத்தின் பயங்கரமான இயந்திரப் படை எதிர் நிற்கமுடியவில்லை. செஞ்சேனை ஆங்காரத்தோடு போர் புரிந்து எதிரியின்படைகளை முறியடித்தது. ஸ்டாலின்கிராட் போருக்கு பிறகு, ஜெர்மன் இயந்திரப்படை ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தது. இன்று செஞ்சேனையும் ஆங்கிலேய அமெரிக்கத் துருப்புக்களும் ஜெர்மன் மண்ணில் கால்வைத்துவிட்டன. ஸ்டாலின் உறுதி கூறியபடி நேசதேசங்களின் வெற்றிக்கொடி இன்னும் சில தினங்களுக்குள் பெர்லின்மீது உல்லாசமாகபறக்கும். பாசிஸத்தை முறியடித்த இந்த வெற்றிக்கொடி, இனிப் பிற்போக்கு சக்திகளையும் ஏகாதிபத்தியங்களையும் முறியடிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தக் கொடி நேசதேசங்களின் வெற்றிக்குமட்டும் அறிகுறியாக நிற்காது. ஒரு நாட்டை இன்னெரு நாடு அடிமைப் படுத்திவைப்

பது, ஒரு வர்க்கத்தை இன்னொரு வர்க்கம் அடிமைப்படுத்திவைப்பது என்பது இனி முடியாது என்பதற்கும் இது ஒரு அறிகுறியாக நிற்கும். உலக மக்கள், சிறப்பாக சோவியத்மக்கள், செய்த அமாநுஷ்யமான தியாகத்தினால் உருவாகியகொடி இது. இந்தக் கொடியை நடுவதற்கு இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது. கோடிக்கணக்கான வீரர்களைப் பலியிட்டுப் பிடித்த இந்தக்கொடி இனி உலகமக்களின், உலகத்தொழிலாளர்களின் சுதந்திரத்திற்காகவும் சுபிட்சத்திற்காகவும் பறக்கும். இதற்கு ஒரு சிறிதும் ஐயமில்லை. ஏனெனில் இந்தக்கொடியைப் பிடித்துக்கொண்டிருப்பவர்களில் முக்கியமானவர் ஸ்டாலின். இவர் எப்பேர்ப்பட்டவர்?

லெனினுக்குத் தோளோடு தோள் கொடுத்து நின்று ஜாரின் கொடுங்கோன்மையையும் முதலாளிகளின் ஆட்சியையும் முறியடித்தவர். புதிதாகத் தோன்றிய சோவியத் ரஷ்யாவின்மீது பாய்ந்த "பதினான்கு நாடுகளின்" படைகளையும் புறங்காட்டி ஓடச் செய்தவர். சந்தர்ப்பவாதிகளைத் தலையெடுக்கவிடாமல் அடித்தவர். தேசிய இனங்களுக்குப் பூரணசுதந்திரம் வழங்கியவர். சோவியத் தொழிலை வியக்கத்தக்கமுறையில் விருத்திசெய்தவர். குலாக்குகளை ஒழித்துக் கூட்டுப்பண்ணை முறையைப் பூரணமாக வெற்றியடையச் செய்தவர். சமதர்ம ரஷ்யாவையே உருவாக்கியவர். ஒரு தேசத்தை இன்னொரு தேசம் அடிமைப்படுத்தி வைப்பதை அழுத்தமாக கண்டித்தவர். ஜாதித்திமிருக்கும் நிறத்திமிருக்கும் தண்டனை விதித்தவர். 'ஜனநாயக நாடுகள்' சுதந்திரம், ஜனநாயகம், சமாதானம் என்று தம்பட்டம் அடித்துக்கொண்டு ரகசியமாக பாசிஸ நாடுகளுக்கு உதவி புரிந்து வந்தகாலத்தில், உண்மையான சுதந்திரத்திற்கும், ஜனநாயகத்திற்கும், சமாதானத்திற்கும் பாடுபட்டவர். "தலையிடாக்கொள்கை" என்று சொல்லி 'ஜனநாயக' நாடுகள் குடியரசு ஸ்பெயினுக்குத் துரோகம் செய்த காலத்தில், அதற்குப் போர்தளவாடங்களை அனுப்பி உதவி செய்தவர். சீனமக்களைக் கொன்று குவித்துக்கொண்டிருந்த ஜப்பானுக்கு ஜனநாயகத்தின் பேரால் பிரிட்டனும், அமெரிக்காவும் இரும்பும் ரப்பரும், எண்ணெயும் அனுப்பிக்கொண்டிருந்த காலத்தில், போர்த்தளவாடங்களை அனுப்பிச் சீனவுக்கு உதவி செய்தவர். பிரிட்டனும் அமெரிக்காவும் பிரான்சில் டிகாலின் பொதுஜன அரசாங்கத்தை அங்கீகரிக்கத் தயங்கிய காலத்தில், அதை குதூகலத்தோடு அங்கீகரித்தவர். பிரிட்டிஷ்-அமெரிக்கப்பிற்போக்கு சக்திகள் யூகோஸ்லேவிய மன்னர் பீடருக்கும், அவருடைய கையாளான மிஹெலவிச்சுக்கும் ஆதரவளித்த காலத்தில் யூகோஸ்லேவிய மக்களின் இதயத்தை கொள்ளைகொண்ட தளகர்த்தர் டிடோவை இரண்டுகரங்களையும் நீட்டி வரவேற்றவர். மிகோலாஜிஸ்க் அரசாங்கத்தைப் போலந்தில் ஸ்தாபித்து விடுவதற்காகச் சர்ச்சில் கூட்டத்தார் பெரு முயற்சி யெடுத்துக் கொண்டகாலத்தில், போலிஷ் பொதுமக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தேசிய விடுதலைக் கமிட்டியை உருவாக்க உதவியவர். இந்த ஸ்டாலின்தான், இன்று வெற்றிக் கொடியைப் பிடித்துக் கொண்டு நிற்கிறார். இதை நாம் மறந்துவிடக்கூடாது.

இன்று உலகமக்களின் மதிப்பில் ஸ்டாலினும் சோவியத்மக்களும் வானளாவ உயர்ந்து விட்டார்கள். சோவியத் ரஷ்யாவைத் தீண்டத்தகாது என்று ஒரு காலத்தில் ஒதுக்கிவைத்திருந்த முத

லாளித்துவ நாடுகள் இன்று அதற்கு முன் தலைவணங்குகின்றன. பிற்போக்குச் சக்திகளுக்கே பிறப்பிடமான லண்டன் டைம்ஸ் இன்று சோவியத் ரஷ்யாவைப் பற்றி என்ன சொல்லுகிறது என்று பாருங்கள்:

"இன்றையப் போரில் ரஷ்யா அடைந்திருக்கும் வெற்றி ஆச்சரியமானது. தொழில் துறையில் ஏற்பட்டிருக்கும் அபாரமான உன்னதமும், சோவியத் மக்களின் தன்னலமற்ற தியாகமுமே இந்த வெற்றியைச் சாத்தியமாகும்படி செய்துவிட்டன. இவற்றின் காரணமாக ஐரோப்பாவிலும், உலகத்திலும் ரஷ்யாவின் மதிப்பு வானளாவ ஓங்கிவிட்டது. ஐரோப்பாவில் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள மதிப்பு இனி குறைந்துபோகாமல் இருக்க வேண்டுமென்றால் அதற்கு ஒரேவழிதான் உண்டு. வேலையில்லா திண்டாட்டத்தை ஒழித்து, உற்பத்தியளவைப் பெருக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் அவைகள் எவ்வளவுதூரம் வெற்றியடைகின்றன என்பதைப் பொருத்தே அவைகளின் மதிப்பும் இருக்கும். இந்த வெற்றியின் அளவைகொண்டுதான் ரஷ்யாவின் மதிப்போடு அவைகளின் மதிப்பை ஒப்பிட்டுப் பார்க்க முடியும்."

பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தின் கருவியாகிய டைம்ஸ் பத்திரிகையே இப்படி எழுதுகிறது என்றால், அது எதைக் காட்டுகிறது? சோவியத் ரஷ்யா போரில் மட்டும் வெற்றி அடையவில்லை, கொள்கையிலும் வெற்றியடைந்துவிட்டது என்பதைக் காட்டவில்லையா? சோவியத் ரஷ்யாவின் கை ஓங்குகிறது. இனி அதன் செல்வாக்கையும் ஏற்றத்தையும் தடைப்படுத்த யாராலும் முடியாது. சோவியத் ரஷ்யாவோடு உலக மக்களின் கையும் ஓங்குகிறது. எல்லா நாடுகளிலும் பொதுஜன இயக்கம் வலுத்துவருகிறது. பிரான்ஸ், யுகோஸ்லேவியா, இத்தாலி, போலந்து முதலிய நாடுகளில் பொது ஜனங்களின் அரசாங்கம் ஏற்பட்டுவிட்டன. ஸ்பெயினில் பிராங்கோ அவனுக்கு உதவிசெய்த முசோலினி அடைந்த கதியை அடையப் போகிறான். கிழக்கே இந்தியா போரிலும் பஞ்சத்திலும் அடிபட்டுப் புரட்சி மனப்பான்மை அடைந்து வருகிறது. உயிரை இழந்தாலும் இழப்போமேயன்றி சுதந்திரத்தை இழக்க ஒருக்காலும் சம்மதியோம் என்று சீனமக்கள் அமாநுஷ்யமான தியாகத்தோடும் வீரத்தோடும் ஜப்பான் பாசிஸ்டுகளை எதிர்த்துப் போர் புரிந்து வருகிறார்கள். உலக நாடுகளின் பொருளியல், அரசியல், சமுதாய அமைப்பு இவைகள் எல்லாவற்றிலுமே மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இலட்சியங்கள் மாறி வருகின்றன. எண்ணங்கள் மாறி வருகின்றன. நன்மை இது, தீமை இது என்று தீர்மானித்து வைத்திருந்த முடிவுகளும் மாறி வருகின்றன. சுருங்கச் சொன்னால், உலகத்திலேயே செயலிலும் எண்ணத்திலும் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டு வருகிறது.

இந்தப் புரட்சி இயக்கத்திலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்ளுகிறோம்? உலகத்தில் சாசுவதமாக நிற்பது ஒன்றும் இல்லை. கால வெள்ளம் புரண்டு ஓடும்போது மக்களுடைய செயலிலும் எண்ணத்திலும் புரட்சி ஏற்படுகிறது. பொருளபிவிருத்தியின் அளவுக்கும், அதன் அதன் இயல்புக்கும் தக்கபடி சமுதாய அமைப்பு மாறுகிறது என்பதேயாகும்.

சரித்திர ஆரம்பத்தில் கூட்டம் கூட்டமாக மக்கள் கூடி வசித்தார்கள். அவர்களுக்குள் பூரண சமத்துவம் நிலவியது. ஆனால் காலப் போக்கில் மாட்டுப் பண்ணையை வளர்ப்பது, விவசாயம் செய்வது என்று ஏற்பட்ட காலத்தில் ஒரு கூட்டத்திற்கும் இன்னொரு கூட்டத்திற்கும் இடையே பண்ட மாற்றுதல் நிகழ ஆரம்பித்தது. பண்டங்களை மாற்றிக்கொள்வது சாத்தியமான காலத்தில் சொந்தமாகச் சொத்துச் சேர்ப்பதும் சாத்தியமாகி விட்டது. ஆதலால் ஒரு கூட்டம் இன்னொரு கூட்டத்தோடு போரிடும்போது போரில் தோற்றவர்கள் வென்றவர்களின் அடிமையானார்கள். இந்த அடிமைகளைக் கொண்டு வென்ற கூட்டத்தார் விவசாயத்தைப் பெருக்கினர். சிறிது காலத்தில் கூட்டத்தின் செல்வம் பொதுவாயிராமல், போர்த்திறமைவாய்ந்த கூட்டத் தலைவனுக்கும் அவன் சகாக்களுக்கும் என்று பங்கிட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிலையில் பொருளுற்பத்தியும் வியாபாரமும் பெருகியபடியால், அடிமைகளை வைத்துக்கொண்டு வேலைவாங்குவது லாபகரமானதாக இல்லை. வேலையில் கொஞ்சம் புத்திநுட்பமும் ஈடுபாடும் கொண்ட ஆட்கள் தேவையாக இருந்தது. இந்த உணர்ச்சிகளைத் தூண்டுவதற்காக அடிமைகளுக்குச் சில உரிமைகள் வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்தப் புதிய முறைதான் பாதி அடிமைத்தனத்தோடு கூடிய நமது பண்டையப் பண்ணை முறையாகும். பொருளுற்பத்தியின் வேகம் அதிகப்பட அதிகப்பட, பாதி அடிமைகளைவிடப் புத்திநுட்பமும், ஈடுபாடும் காட்டக்கூடிய வேலைக்காரர்கள் தேவையிருந்தது. இதற்குக் காரணம் விவசாய அபிவிருத்தி ஒருபுறமிருக்க பண்டங்களை உற்பத்திசெய்கிற பகுதி விரிந்ததே யாகும். பொருளுற்பத்தியில் ஏற்பட்ட இந்தப் புதிய மாற்றங்களுக்குத் தக்கபடி பழைய பண்ணை முறை முதலாளித்துவ முறையாக மாறியது. பழைய பண்ணை முறையில் நடுத்தரவர்க்கத்தார் என்று சொன்னவர்கள் எல்லாம் இந்தப் புதிய பொருளாதார அமைப்பு முறையில் முதலாளிகள் ஆனார்கள்; பாதி அடிமைகளெல்லாம் சுதந்திரமான தொழிலாளர்கள் ஆனார்கள். இயந்திரத்தொழிலையும் பண்டங்களின் உற்பத்தியையும் அபாரமாகப் பெருக்கியிருக்கும் இந்த அமைப்பில் "அதிகப்படியான உற்பத்தி" என்ற ஒரு விஷயம் தலைகாட்டத் தொடங்கியது. உற்பத்தி செய்த பண்டங்களை வாங்குவோர் இல்லை. உண்மையாகத் தேவைப்படுகிறவர்களிடம் வாங்குவதற்குக் கையில் காசு இல்லை. எனவே, பொருளாதார நெருக்கடிகள் அடிக்கடி தோன்ற ஆரம்பித்தன. உற்பத்திசெய்யும் பண்டங்களுக்குச் சந்தைகளைத் தேடி இயந்திரத்தொழிலில் அபிவிருத்தியடைந்திருந்த சிலநாடுகள் அந்நிய நாடுகளைப்பிடித்துத் தங்களுக்கு அடிமையாக்கின. அதனால் போர் மூண்டது. பொருளாதார நெருக்கடியும் போரும் இப்படி அடிக்கடி வருவதற்குக் காரணம் புதிய பொருளுற்பத்தி முறைக்குத் தக்கவாறு சமுதாய அமைப்பு மாறவில்லை என்பதேயாகும்.

இன்று உலக நாடுகளில் காணப்படும் பொதுஜன இயக்கமும் புரட்சி மனப்பான்மையும் இந்த முதலாளித்துவமுறை மாறவேண்டும், எல்லோருக்கும் சமமான சந்தர்ப்பங்களையும் சமமான வாழ்க்கை வசதிகளையும் அளிக்கும் ஒரு புதியமுறை ஏற்படவேண்டும் என்ற அடிப்படையான எண்ணங்களையே பிரதிபலிக்கின்றன. சில நாடுகள் முதலாளித்துவ முறையைப் படிப்படியாக உதறித்

தள்ளலாம். சிலநாடுகள் ஒரேயடியாக உதறித் தள்ளிவிடலாம். ஆனுல் மாற்றங்களின் தன்மையும் வேகமும் அந்தந்தநாட்டின் விசேஷ நிலைமைகளை யொட்டியே இருக்கும். ஒருநாடு இன்னெரு நாட்டிலிருந்து பொதுஜன இயக்கத்தையோ, புரட்சியையோ பொதுவுடமையையோ இறக்குமதி செய்துவிட முடியாது. ஆனுல் பிறநாடுகளில் நடக்கும் புரட்சியையும், பொருளாதார சமுதாய அமைப்பு முறைகளில் ஏற்படும் மாற்றத்தையும் பார்த்து ஒருநாடு உணர்ச்சியும் ஊக்கமும் பெறலாம்; அந்த நாடுகளின் அநுபவங்களினுல் நன்மையடையலாம்.

ஆகையால், ஸ்டாலினே, சோவியத் ரஷ்யாவோ போல்ஷிவிசத்தை உலக நாடுகளின்மீது புகுத்திவிட முடியாது. உலகநாடுகளும் சோவியத் ரஷ்யாவைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்ற மாட்டா, பின்பற்ற முடியாது. இந்தப் பிரசினை எழுவதற்கே இடமில்லை. எழாத பிரசினையைக் கண்டு மிரளவும் கலவரம் அடையவும் தேவையில்லை. ஆனுல் ஒரு முக்கியமான விஷயத்தில் மட்டும் சோவியத் ரஷ்யாவுக்கும் மற்ற உலகநாடுகளுக்கும் பூரணமான ஒற்றுமை இருக்கும்: பொதுவுடைமையை நோக்கி முன்னேறிச் செல்லுவதில் இவைகள் ரஷ்யாவைப் பின்பற்றத்தான் செய்யும். இந்த முன்னேற்றப்பாதையில் இன்று முதல்முதலில் நிற்பது சோவியத் ரஷ்யா. அதற்குப்பின் மற்ற நாடுகள் ஒன்றன்பின் ஒன்ருக அணிவகுத்து நிற்கின்றன. ஸ்டாலினையும் ஹிட்லரையும் ஒரே ரகத்தில் வைத்துப் பேசியகாலம் மலையேறிவிட்டது. சிவப்பு ஏகாதிபத்தியம் வந்துவிட்டது என்று பூச்சாண்டி காட்டுவதிலும் இனிப் பயனில்லை. பாசிஸமும், முதலாளித்துவமும் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும், இந்த நாடுகளின் தலைவர்கள் தங்கள் முன்னேற்றப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு ஸ்டாலினுடைய ஆலோசனையையும் ஆதரவையும் ஆவலோடு எதிர்பார்க்கிருர்கள். அவர்களுக்கு வழிகாட்டுவதற்கு ஸ்டாலினும் இன்று முன்வந்துவிட்டார். டெஹரான், மாஸ்கோ, டம்பர்ட்டன்ஓக்ஸ் மகாநாடுகள் இந்த உண்மையைத்தான் எடுத்துக்காட்டுகின்றன.

டிரான்ஸ்காகேசியாவில் புரட்சிவேலைகளில் ஈடுபட்டு ஸ்டாலின் உழைத்துவந்த காலத்தில், இவரைப்பற்றி முதன்முதலாக லெனின் கேள்விப்பட்டார். இவரது செயல் திறமையையும், புத்தி நுட்பத்தையும், மன உறுதியையும் கண்டு, "ஆஹா, எவ்வளவு அற்புதமான ஜார்ஜியன்!" என்று லெனின் வியந்தார். இந்த "அற்புதமான ஜார்ஜியன்" தனது குருவாகிய லெனினைவிடக் கூடப் பெரிய அதிர்ஷ்டசாலியாக இருக்கிருர். லெனினுக்குக் கொடுத்து வைக்காத உலகத் தலைமைப் பதவி இன்று ஸ்டாலினுக்குக் கிடைத்துவிட்டது. சோவியத் குழந்தைகளைப் போல, உலகமக்களும், "தோழர் ஸ்டாலினே, எங்கள் வாழ்க்கையைச் சந்தோஷமயமாகச் செய்த உங்களுக்கு எங்கள் நன்றி," என்று சொல்லக் கூடுமானுல் அப்போது உலகமக்கள், சிறப்பாக உலகத் தொழிலாளர்கள், இதய பூர்வமாக அளித்த இந்த தலைமைப் பதவியை ஸ்டாலின் வெற்றிகரமாக வகித்துவிட்டார் என்று சொல்லலாம். இதில் ஸ்டாலின் வெற்றியடைவாரா? நிச்சயமாக வெற்றியடைவார். சரித்திரப் போக்கல்லவா அவருக்குச் சாதகமாக நிற்கிறது.

ஸ்டாலினுடைய வாழ்க்கையில் சில முக்கியமான வருஷங்கள்

1879	ஜார்ஜிய மாகாணத்தில் கோரி என்னும் கிராமத்தில் ஸ்டாலின் பிறந்தார்.
1894–99	டிப்லிஸ் நகரில் சமயப் பாடசாலையில் கல்வி பயின்றார். அதினின்றும் நீக்கப்பட்டார்.
1898-1901	டிப்லிஸ் சமுதாய ஜனநாயகக் கட்சியில் சேர்ந்து தொழிலாளர்களிடையே வேலை செய்தார்.
1901-2	பாதும் நகரில் தொழிலாளர்களுக்கென்று ஒரு ஸ்தாபனத்தை அமைத்தார். ஸ்டாலினை முதல் தடவையாகக் கைது செய்தார்கள்.
1902-17	இந்தக் காலத்தில் ஜாரின் போலீஸார் ஸ்டாலினை 6 தடவை கைது செய்தார்கள். அதில் 5 தடவை ஸ்டாலின் தப்பித்துக் கொண்டார்.
1904-10	பாகு, டிப்லிஸ் நகரங்களில் புரட்சிக்காகத் தொழிலாளர்களைத் தயார் செய்தார்.
1905	டாமர்போர்ஸ் கட்சிக்கூட்டத்தில் முதன் முதலாக லெனினைச் சந்தித்தார்.
1906	சமுதாய ஜனநாயகக்கட்சியின் ஸ்டாக்ஹோம் காங்கிரஸ்.
1907	லண்டன் காங்கிரஸ்.
1912	ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி அங்கத்தினராக ஸ்டாலின் தேர்ந்தெடுக்கப்பட்டார். கிராகோ நகரில் லெனினைச் சந்தித்துப் பேசினார்.
1911-1913	'பிரவடா' பத்திரிகையின் ஆரம்பம். கட்சிப் பத்திரிகைகளுக்கு வழி காட்டியாக இருந்தார். டூமா (அரசாங்க சபை)விலுள்ள கட்சிப் பிரதிநிதிகளுக்கு வழிகாட்டியாக இருந்தார்.
1913	"மார்க்சியமும் தேசியப் பிரசினையும்" என்ற புத்தகத்தை வெளியிட்டார்.
1917	'பிரவடா' பத்திரிகையின் ஆசிரியரானார். அக்டோபர் புரட்சி.
1918–20	உள்நாட்டுச் சண்டைகள்.
1919	தொழிலாளர்கள் விவசாயிகள் ஆகிய இவர்களைக் கவனிக்கும் இலாக்காவுக்கு கமிசாராக நியமிக்கப்பட்டார்.
1920–23	யுத்தகவுன்சில் அங்கத்தினராக இருந்தார்.
1924	கட்சியின் மத்திய கமிட்டிக்குப் பொதுக் காரியதரிசியாக நியமிக்கப் பட்டார்.
1924	லெனின் மரணம். "லெனினிசத்தின் அஸ்திவாரம்" என்பதைப் பற்றி ஸ்டாலின் தொகுதியாக பிரசங்கங்கள் செய்தார்.
1925	நாட்டை இயந்திரத் தொழில் மயமாக்கத் திட்டம் போட ஆரம்பித்தார்.
1927	தேசமுழுதும் கூட்டுப்பண்ணை முறையை ஸ்தாபிக்கத் திட்டமிடுதல்.
1929	முதல் 5 ஆண்டுத் திட்டம்.
1931	வேலையில் திறமையும் நிபுணத்துவமும் வேண்டுமென்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
1933	முதல் 5 ஆண்டுத்திட்டம் நான்கு வருஷத்தில் பூர்த்தியாயிற்று. கூட்டுப்பண்ணை இயக்கம். இரண்டாவது 5 வருஷத்திட்ட ஆரம்பம்.

1935 **ஸ்டாக்கனுவ் இயக்கம். புதிய 'ஸ்டாலின்' அரசியல் சட்ட அமைப்பு.**

1939 மூன்றுவது 5 வருஷத் திட்டம்.

1941 பொதுஜனக் கமிசார்களின் கவுன்சிலுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1941 பாதுகாப்புக் கமிசாராகவும், பாதுகாப்புக் கமிட்டியின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆங்கிலோ - சோவியத் ஒப்பந்தம்.

1942 ஐக்கிய நாடுகளின் நோக்கம் என்ன, பாசிஸ நாடுகளின் நோக்கம் என்ன என்பதைப் பற்றிய அறிக்கையை அகில சோவியத் கூட்டத்திலும், கட்சிக் கூட்டத்திலும் ஸ்டாலின் சமர்ப்பித்தார்.

1943 ஸ்டாலின்கிராட் வெற்றி. டெஹரான் மகாநாடு.

1944 இரண்டாவது போர்முனை ஆரம்பம். டம்பர்ட்டன் ஓக்ஸ் மகாநாடு. ஜெர்மன் மண்ணில் சோவியத் துருப்புகள் கால் வைப்பது.

குறிப்புகள்

இஸ்க்ரா : ரஷ்ய சமுதாய ஜனநாயகக் கட்சி நடத்திய பத்திரிகை. இந்தப் பத்திரிகையின் ஆசிரியர்களடங்கிய போர்டில் 1900-முதல் 1903-வரை லெனின் முக்கியமான அங்கத்தினராக இருந்தார். இந்தப் பத்திரிகை 1900-முதல் 1903-வரை லெனினுடைய கொள்கைகளைப் பூரணமாக ஆதரித்து வந்தது. ஆனால் 1903-க்குப் பிறகு இது மென்ஷிவிக்குகளின் போக்கை அனுசரித்தது. ஆதலால் 1903 வரை நடந்த 'இஸ்க்ரா' பத்திரிகையைப் 'பழைய இஸ்க்ரா' என்றும், அதற்குப் பிறகு நடந்த இஸ்க்ராப் பத்திரிகையை 'புதிய இஸ்க்ரா' என்றும் சொல்லுவார்கள். இந்தப் புத்தகத்தில் நாம் குறிப்பிட்டிருப்பது பழைய இஸ்க்ராவையே ஆகும். 1900-ல் ரஷ்யாவில் பல மார்க்சிய வட்டாரங்களும் கூட்டங்களும் இருந்தன. ஆனால், இவை ஒன்றோடொன்று சம்பந்தம் எதுவுமின்றித் தனித்தனியாக இயங்கிக்கொண்டிருந்தன. இந்தக் கூட்டங்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு அகில ரஷ்ய மார்க்சீயக் கட்சியாக உருவாக்குவதற்கு ஒரு ரகசியப் பத்திரிகை வேண்டும், அந்தப் பத்திரிகை அகில ரஷ்யப் பத்திரிகையாக இருக்கவேண்டுமென்று லெனின் எண்ணினர். அவருடைய எண்ணமே 'இஸ்க்ரா'வாக உருவெடுத்தது. 'இஸ்க்ரா' என்ற ரஷ்ய வார்த்தைக்கு 'பொறி' என்று பொருள். 'இந்தப் பொறி பெரிய நெருப்பை உண்டுபண்ணும்' என்று இந்தப் பேப்பரின் தலைப்பில் எழுதியிருந்தது. அதில் எழுதியிருந்தபடி இந்தப் பொறியிலிருந்து தோன்றிய புரட்சித் தீ ஜாரின் அரசாட்சியையும், பூர்ஷ்வாக்களின் அதிகாரத்தையும் எரித்துச் சாம்பலாக்கிவிட்டது.

ஐந்து வருஷத் திட்டம், முதலாவது : 1929-ம் வருஷம் மே மாதம் கூடிய சோவியத் மகாநாட்டின் ஐந்தாவது அகில ரஷ்யக் கூட்டத்தில் 'பியாடி லெட்கா' என்று கூறப்படும் ஐந்து வருஷத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த முதல் ஐந்து வருஷத் திட்டத்தின் நோக்கம் விவசாயத் தொழிலைப் பிரதானமாகக் கொண்டிருந்த சோவியத் ரஷ்யாவை ஒரு இயந்திரத் தொழில் நாடாக மாற்றிவிடுவதே ஆகும். இயந்திரத் தொழிலை அபிவிருத்தி செய்வதோடு அமையாமல், துண்டு துண்டாகச் சிதறிக்கிடந்த நிலங்களையெல்லாம் கூட்டுப்பண்ணைகளாக்கி, அப்பண்ணைகளில் இயந்திரக் கருவிகளைக்கொண்டு விவசாயத் தொழிலை நடத்துவதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். சோவியத் மக்களின் மகோன்

னதமான முயற்சியால் இந்தத் திட்டம், நான்கு வருஷங்களிலேயே (1929-32) வெற்றிகரமாகப் பூர்த்தியாகிவிட்டது. டிராக்டர் (உழுவதற்குரிய இயந்திரம்), மோட்டார், விமானம், ஏனைய இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள் முதலியவைகளை உற்பத்திசெய்யும் பல மூலத் தொழில்கள் இந்தத் திட்டகாலத்தில் ஏற்படுத்தப்பட்டன. இந்தத் திட்டத்தின் பயனை 1932-ல் பொருளுற்பத்தி 1913-ம் வருஷ உற்பத்தியைப்போல மும்மடங்கு பெருகிற்று; வேலையில்லாத் திண்டாட்டம் அறவே ஒழிந்தது; சோவியத் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது.

ஐந்து வருஷத் திட்டம், இரண்டாவது: முதல் ஐந்து வருஷத் திட்டத்தில் ஏற்பட்ட தொழில், விவசாய அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு இந்தத்திட்டம் வகுக்கப்பட்டது. தொழிலுற்பத்தி 4300 கோடி ரூபிள்களிலிருந்து 9300 கோடியாக உயரவேண்டுமென்பது இந்தத் திட்டத்தின் நோக்கம். ஆனால் இந்தத் திட்டம் நிறைவேறிய காலத்தில் (1932 - 37) எதிர் பார்த்ததைவிட 300 கோடி ரூபிள் அதிகமாகவே தொழிலுற்பத்தி ஏற்பட்டது. 1913-ல் இருந்த தொழில் வளர்ச்சியைப்போல 1937-ல் அது எட்டு மடங்கு பெருகிவிட்டது. பொருள் வளர்ச்சியோடு, சோவியத் மக்களின் கலையும் வளர்ந்தது. பொருள் வளர்ச்சியும், கலை வளர்ச்சியும் ஏற்பட்டதன் காரணமாக மக்களின் பண்பாடும் உயர்ந்தது. அறியாமை அறவே ஒழிக்கப்பட்டது. எல்லோருக்கும் கட்டாய ஆரம்பக்கல்வி அளிக்கப்பட்டது. கிராமங்களிலும், நகரங்களிலும் பெருவாரியான பேருக்கு உயர்தரக்கல்வி அளிக்கப்பட்டது. சுகாதாரத்தைக் கவனிக்க பல ஸ்தாபனங்கள் நாடெங்கும் தோன்றின. 1938-ல் சமூக நலத்திற்காகவும், கலை வளர்ச்சிக்காகவும் செலவிட்டபணம் 3520 கோடி ரூபிள் ஆகும்.

ஐந்து வருஷத் திட்டம், மூன்றாவது: 1938-42-ம் வருஷங்களுக்கு மூன்றாவது ஐந்து வருஷத் திட்டம் வகுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் நோக்கம் என்னவென்றால் மிக முன்னேற்றமடைந்திருக்கும் ஐக்கிய அமெரிக்காவில் ஒவ்வொரு மனிதனும் சராசரி உற்பத்தி செய்யக்கூடிய அளவை எட்டிப்பிடித்து அந்த அளவுக்கு உற்பத்தி செய்யவேண்டும் என்பதாகும். அழிபண்டங்களை இரட்டிப்பாக உற்பத்திசெய்து, வாழ்க்கைத் தரத்தையும் கலையையும் மகோன்னத நிலைக்கு உயர்த்திவிட வேண்டுமென்பதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். ஆனால் இந்தத் திட்டம் பாசிஸப் படையெடுப்பின் காரணமாகத் தடைப்பட்டு விட்டது.

காபன் (Gapon): இவர் ஒரு ரஷ்யப் பாதிரி. இவர் ஜாரின் போலீசுக்கு கையாளாக இருந்தார். இவரைக்கொண்டு ஜாரின் போலீசார் ஒரு ரஷ்யத் தொழிலாளர் சங்கத்தை நிறுவினார்கள். இந்தச் சங்கத்திற்குப் பல கிளைகளும் இருந்தன. தொழிற்சாலைகளில் வேலைநிறுத்தம் ஏற்பட்ட காலத்தில் காபன் நம்பிக்கைத் துரோகமான ஒரு திட்டத்தைத் தனது சங்கத் தொழிலாளர்களுக்கு முன் சமர்ப்பித்தார். ஜாரின் படத்தையும், சமயக் கொடிகளையும் பிடித்துக்கொண்டு தொழிலாளர்கள் ஜாரின் அரண்மனைக்கு ஊர்வலமாகச் சென்று தங்கள் தேவைகளைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஜார் அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துவைப்பார். தொழிலாளர்களைச் சுடுவதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கும்பொருட்டு காபன் போலீசாருடன் கூடிச் செய்த சூழ்ச்சி இது. ஆயினும் இந்தச் சூழ்ச்சி காபனும், ஜாரின் போலீசும் நினைத்தபடி வெற்றியாகவில்லை. ஏனெனில் முதல் ரஷ்யப் புரட்சியைத் துவஜாரோகணம் செய்துவிட்டது இந்தச் சம்பவமே.

கமிசார்: கமிசார் என்ற சொல் மந்திரி என்ற பொருளில் சோவியத் ரஷ்யாவில் வழங்குகிறது. சோவியத் அரசாங்கத்தை முதன்முதலில் அமைத்தபோது, ஒவ்வொரு இலாகாவின் தலைவரையும் எந்தப்பெயரால் அழைப்பது என்ற பிரசினை எழுந்தது. மந்திரி, கமிஷனர் என்பனபோன்ற வார்த்தைகள் முதலாளித்துவ அரசியலங்கங்களை நினைவூட்டுகிறபடியால் அவைகளைப் புறக்கணித்து, கமிசார் என்று வழங்குவது சாலப் பொருத்த

மாகும் என்று லெனின் சொன்னார். அதன்படியே கமிசார் என்ற வார்த்தை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

குலாக் : 'குலாக்' என்ற ரஷ்ய வார்த்தைக்கு 'முஷ்டி' என்று பொருள். கடுவட்டிக்குக் கடன் கொடுப்பதன் மூலமும், இதர வகைகளைக் கையாளுவதன் மூலமும் ஏழைக் குடியானவனைச் சுரண்டிப் பணக்கார னை குடியானவனைக் குறிப்பதற்கு ரஷ்யாவில் தொன்றுதொட்டு வழங்கி வந்த சொல் இது. ஏழைக்குடியானவர்கள் இவர்கள் பிடியிலிருந்து தப்ப முடியாமல் விழிபிதுங்கினார்கள். சோவியத் ரஷ்யா கையாண்ட கூட்டுப் பண்ணை வளர்ச்சியின் காரணமாக இந்தக் குலாக் வர்க்கம் அடியோடு மறைந்தது.

டிரான்ஸ்காகேசியா : ஜார்ஜியா, ஆர்மீனியா, அஜர்பைஜான் என்ற மூன்று மாகாணங்களையும் சேர்த்து டிரான்ஸ்காகேசியா என்று சொல்வது வழக்கம். ஸ்டாலின் ஜார்ஜிய மாகாணத்தைச் சேர்ந்தவர். டிப்லிஸ் என்ற நகரும், கோரி என்ற ஊரும் ஜார்ஜியாவைச் சேர்ந்தவையே. ஜார்ஜியா வளமான பூமி என்றாலும், ஆர்மீனியா தொழில் துறையில் முன்னேறியிருந்தது. அஜர்பைஜான் ரொம்பப் பிற்போக்காயிருந்தது. ஆதலால் ஆர்மீனிய முதலாளிகளின் ஆதிக்கம் அந்தக்காலத்தில் டிரான்ஸ் காகேசியாவில் அதிகமாக இருந்தது.

தேசிய இனம் : Nation, Nationality என்கிற வார்த்தைகளைக் குறிக்கும் சொல். பழைய பண்ணையடிமை முறை சிதைந்து முதலாளித்துவ முறை தலைதூக்கிய காலத்தில் உற்பத்தியான ஒரு சரக்கு இது. இது ஜாதியை மட்டுமோ, பாஷையை மட்டுமோ அடிப்படையாகக் கொண்ட தல்ல. அமெரிக்கர்களில் பெரும்பான்மையோர் பிரிட்டனிலிருந்து குடி யேறினவர்கள். அவர்கள் பேசுவதும் ஆங்கிலமே. ஜாதியிலும் பாஷை யிலும் பிரிட்டிஷ்காரர்களும் அமெரிக்கர்களும் ஒத்திருந்தாலும், அவர்கள் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களல்லர். ஒரே பிரதேசத்தில் வசிக்கும் காரணத்தினால் மட்டும் எல்லோரும் ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்லமுடியாது. உதாரணமாக, வட அமெரிக்காவைப் போல தென் அமெரிக்காவும் ஒரு நீண்ட நிலப்பரப்புதான். என்றாலும் வட அமெ ரிக்காவைப்போல ஒரு பொதுவான பொருளாதார முறையின்கீழ் எல்லாப் பகுதிகளும் ஒன்றோடொன்று இயல்பாகவே இணைந்து நிற்காத காரணத் தால் தென் அமெரிக்கா ஒரு தேசிய இனத்தைக்கொண்ட நாடாக இராமல், பல தேசிய இனங்களைக் கொண்ட நாடாக இருக்கிறது. பொருளாதார வாழ்க்கையில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் மட்டும் இருந்தாலும் போதாது. கலை, பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகிய இவைகளிலும் ஒற்றுமை இருக்க வேண்டும். எனவே, பொதுவான பிரதேசம், பொதுவான பொருளாதார வாழ்க்கை, பொதுவான பாஷை, கலை, பண்பாடு, பழக்க வழக்கங்களில் ஒற்றுமைகாட்டும் ஒரு பொதுவான மனப்போக்கு ஆகிய இவைகளை எல் லாம் பெற்றுச் சரித்திரப்போக்கில் உருவாகி பிரிக்கமுடியாதபடி ஒன்று பட்டுப் போயிருக்கும் ஒரு மக்களின் கூட்டத்தையே ஆங்கிலத்தில் நேஷன் என்றும், தமிழில் தேசிய இனம் என்றும் குறிக்கிறோம். உதாரணமாக எல்லைப்புற மக்கள் ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல் லலாம்.

நரோடியர்கள் : 'நரோட்' என்ற ரஷ்ய வார்த்தைக்கு 'ஜனங்கள்' என்று பொருள். ஆதலால் ஜனங்களிடம் செல்லுபவர்கள் 'நரோடியர்கள்' ஆனார்கள். குடியானவர்கள்தான் புரட்சி மனப்பான்மை உடையவர்கள், அவர்கள் கிளர்ந்து எழுந்தால்தான் ஜாரையும் நிலச்சுவான்தார்களையும் முறியடிக்க முடியும் என்று இவர்கள் தவறாக எண்ணினார்கள். அந்த எண்ணத்தின்படி இவர்கள் தொழிலாளர்களை அலட்சியம் செய்து புறக் கணித்துவிட்டார்கள். ஆனால் இவர்கள் எண்ணியபடி குடியானவர்கள் கிளர்ந்து எழுவில்லை. சிறிது சிறிதாக நரோடியர்கள் ஜனங்களின் தொடர்

பற்றவர்களாகி இறுதியில் தனிப்பட்ட உத்தியோகஸ்தர்களைக் கொல்லுகிற ஹிம்சாவாதிகளாக மாறினர்கள்.

பிரிட்ஜோலா: இது ஜார்ஜிய வார்த்தை. இதற்குப் 'போராட்டம்' என்று பொருள். லெனினுடைய 'இஸ்க்ரா'வைப் பின்பற்றும் முறையில் ஸ்டாலின் இதை ஆரம்பித்தார். டிரான்ஸ்காகேசியாவில் 'மெசாமேடாசி'யில் சந்தர்ப்பவாதப் போக்குள்ள பெரும்பான்மைக் கூட்டத்தை எதிர்த்து நிற்பதற்கு ஸ்டாலின் கையில் இது ஒரு சிறந்த கருவியாக இருந்தது. இதற்குப்பின் ஆரம்பித்த 'பிராலிடேரியட்டிஸ் பிரிட் ஜோலா' என்ற பத்திரிகையும் உண்மையான மார்க்சீயத்தைப் போதிக்க உதவியாக இருந்தது. இதற்கு 'தொழிலாளர்களின் போராட்டம்' என்று பொருள்.

பூர்ஷ்வா: முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களைக் குறிக்கும் ஒரு வார்த்தை.

ரஷ்ய சமுதாய ஜனநாயகத் தொழிலாளர் கட்சி: தனித் தனியாக இயங்கிக்கொண்டிருந்த பல மார்க்சீய வட்டாரங்களையும், ஸ்தாபனங்களையும் 'இஸ்க்ரா' என்ற பத்திரிகையின் உதவியினல் ஒன்று திரட்டி 1900-ல் அமைத்த அகில ரஷ்ய மார்க்சீயக் கட்சி. இதை உருவாக்குவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் லெனினே. 1903-ல் நடைபெற்ற இந்தக் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் போல்ஷிவிக், மென்ஷிவிக் பிளவுகள் தலைகாட்டத் தொடங்கின. இந்தப் பிளவு விரிந்துகொண்டே சென்று இறுதியில் இந்தக்கட்சி பொல்ஷிவிக் கட்சியென்றும், மென்ஷிவிக் கட்சியென்றும் இரண்டாகப் பிரிந்தது. போல்ஷிவிக் என்பதற்கு பெரும்பான்மையோர் என்றும், மென்ஷிவிக் என்பதற்குச் சிறுபான்மையோர் என்றும் பொருள்.

மார்க்சீயம்; காந்தியின் தத்துவத்தை காந்தீயம் என்று குறிப்பிடுவதுபோல மார்க்சின் தத்துவத்தை மார்க்சீயம் என்று குறிப்பிடுகிறார்கள். மார்க்சீயம் மனத்தை அடிப்படையாகக் கருதாமல், வஸ்துவை அடிப்படையாகக் கருதுகிறது. உலகத்தில் வஸ்து எப்படி இயங்குகிறது என்கிற உண்மையை மனித சரித்திரதோடு பொருத்திக் காட்டுகிற சித்தாந்தமே இது. இது விருப்பு வெறுப்பு இன்றி, உண்மைகளை அடிப்படையாகக்கொண்டு விஞ்ஞான ரீதியில் மனித வளர்ச்சியை ஆராய்கிறபடியால் இதை விஞ்ஞான சமதர்மம் என்றும் சொல்வதுண்டு. பொருளை உற்பத்தி செய்கிற முறை, அதன் தன்மை, பொருளை உற்பத்தி செய்யும் காலத்தில் மக்களுக்குள் ஒருவர்க்கொருவரிடையே ஏற்படுகிற தொடர்புகள், இந்தப் பொருளுற்பத்தியை அஸ்திவாரமாகக்கொண்டு எழுகிற சமுதாய, அரசியல் அமைப்புகள் — இவைகளை யெல்லாம் பற்றி மார்க்சீயம் ஆராய்கிறது.

மார்க்சீய-லெனினிஸம்: மார்க்சீயம் என்பது விஞ்ஞான ரீதியாக ஆராய்கிற ஒரு முறை ஆதலால் எல்லாக்காலத்திற்கும் சேர்த்து இப்போதே சட்டம் செய்வது என்கிற முறைக்கு அது முற்றிலும் மாருனது. அது வளர்ந்துகொண்டு செல்லுகிறமுறை. இந்த விஞ்ஞான முறையின் உதவிகொண்டு புதிதாகத் தோன்றுகிற நிலைமைகளின் இயல்பையும் அவற்றைத் திறம்படப் பயன்படுத்திக்கொள்ளும் வழிகளையும் கண்டுபிடிப்பது மார்க்சீய வாதிகளின் வேலையாகும். இந்த வேலையை லெனின் அற்புதமாகச் செய்தார். கண்ணைமூடிக்கொண்டு ஒரு கொள்கையைப் பின்பற்றுமல் அந்தக் காலத்திற்கும் நிலைமைகளுக்கும் தக்கவாறு இந்த விஞ்ஞான முறையின் உதவியினல் உண்மைகளை உள்ளவாறே தெரிந்துகொண்டு அவற்றிற்குத் தக்கபடி காரியங்களைச் செய்வதற்கு மார்க்சீய-லெனினிசம் என்று சொல்லுகிறார்கள்.

மின்சாரத் திட்டம்: ரஷ்யாவை மின்சார மயமாக்க வேண்டுமென்பது லெனினுடைய கனவுகளில் ஒன்று. ஏனெனில் மின்சார சக்தியின் அஸ்திவாரத்திலேயே மூலத்தொழில்களை நிருமாணம் செய்யமுடியும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். 1920-ம் வருஷம் லெனி

னுடைய ஆலோசனையின்பேரில் மின்சாரக் கமிஷன் ஒன்று நியமனம் செய்யப்பட்டது. இதற்கு ரஷ்ய மொழியில் 'கோயெல்ரோ' என்று பெயர். இந்தக் கோயெல்ரோ திட்டம் குறித்தகாலத்தில் நிறைவேறி எதிர்பார்த்ததைவிட அமோகமான பலனை ஈந்தது.

மெசாமேடாசி: இது டிரான்ஸ்காகேசியாவில் இயங்கிய மார்க்சீயக் கட்சியாகும். இந்தக் கட்சியில் பெரும்பான்மையோர் மென்ஷிவிக் போக்கைப் பிரதிபலித்தனர். இவர்களுக்கு ஜார்டேனியா என்பவர் தலைவராக இருந்தார். இந்தக் கட்சியிலுள்ள சிறுபான்மைக் கூட்டத்தார் முற்போக்கான எண்ணங்களையுடையவர்களாக இருந்தார்கள். இவர்கள் போல்ஷிவிக் கட்சியைப் பின்பற்றினர்கள். இந்தச் சிறுபான்மைக் கூட்டத்தாருக்கு ஸ்டாலின் தலைவராக இருந்தார். காலப் போக்கில் இந்தச் சிறுபான்மைக் கூட்டத்தாரின் செல்வாக்கு அதிகமாகி அவர்கள் கட்சி வலுத்தது. மென்ஷிவிக் போக்கை ஆதரித்த சந்தர்ப்பவாதக் கூட்டத்தின் உண்மையான நோக்கங்களை வெளிப்படுத்தி அவர்களது எண்ணம் நிறைவேருமல் செய்த பெருமை ஸ்டாலினையே சார்ந்ததாகும்.

ரூபிள்: ரஷ்ய நாணயம். இதன் மதிப்பு சுமார் ஒரு ரூபாய் ஐந்தணவாகும்.

ஸ்டகானுவ் இயக்கம்: 1935-ம்வருஷம் ஆகஸ்டுமாதம் 31-ஷ இரவு **டான்யாஸ்** நிலக்கரிச் சுரங்கத்தில் வேலைசெய்துகொண்டிருந்த **அலெக்ஸிஸ்டகானுவ்** என்ற தொழிலாளர் புதிய முறையொன்றைக் கையாண்டு, ஆறுமணி நேரத்தில் எடுக்கும் வழக்கமாவுள்ள 14 டன் நிலக்கரிக்குப் பதிலாக 102 டன் நிலக்கரியைத் தோண்டியெடுத்தார். அந்தச் சம்பவத்திலிருந்து புதிய முறைகளைக் கையாளுவதன்மூலம் குறித்தகாலத்தில் குறித்த ஒரு நபர் ஒன்றுக்குப் பலமடங்காகப் பொருள்களை உற்பத்திசெய்கிற இயக்கத்திற்கு ஸ்டகானுவ் இயக்கம் என்ற பெயர் வரலாயிற்று. இந்த இயக்கம் வெகு வேகமாக பொருளுற்பத்திசெய்யும் எல்லாத்துறைகளிலும் பரவியது. அயல்நாட்டுத் தொழிலாளர்களின் கூட்டம் ஒன்றில் ஸ்டகானுவ் பேசும்போது அவர் சொன்னதாவது: "இது கேவலம் உடல்பலமும் தேகப்பிரயாசையும் அல்ல. தினசரி பதினுன்கு டன் நிலக்கரி தோண்டியெடுத்த காலத்தில் எடுத்துக்கொண்ட பிரயாசையைவிட நூறு டன் தோண்டியெடுக்கிற இன்று அதிகமான பிரயாசை ஒன்றும் நான் எடுத்துக்கொள்ளவில்லை. அதற்குமாருக இன்று என்னுடைய வேலை மிகவும் சுலபமாகவும் எளிதாகவும் இருக்கிறது. கூலியும் அதிகமாகக் கிடைக்கிறது." சோவியத் ரஷ்யாவில் இந்த இயக்கம், பொருளை அதிகமாக உற்பத்தி செய்வதில் ஏற்பட்ட சமதர்மப் போட்டியில் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்தது என்று சொல்லலாம். இந்தப் புதிய சகாப்தத்தில் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை உயர்ந்தது; பொருளுற்பத்தியில் புதிய புதிய முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இன்று ஹிட்லரின் சேனையையும் ஹிட்லரிசத்தையும் தோற்கடிக்க இந்த இயக்கம் நாடெங்கும் பரவி வலுப்பெற்று, உற்பத்தியைப் பெருக்குகிறது. இந்த இயக்கத்தின் முன்னணியில் இன்று நிற்பவர்கள் டிமிட்ரி பாஸ்யே, இல்லேரியன் யான்கின், அலெக்சி செமிவோலாஸ், நிக்கோலஸ் ஹமின் போன்றவர்கள் ஆவார்கள்.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
81	5	வாழ்ந்து	விழித்து
,,	22	சேவியத்	சோவியத்
3	23	ஜோஸப் விசாரியா ஞேவிட் ஜுட்கஷ்விலி	ஜோஸப் விசாரியோ ஞேவிச்ட் ஜுகஷ்விலி
,,	29	இரவு பகலும்	இரவும் பகலும்

இனி வெளிவருபவை :

தினசரி வெளியீடு

அரேபியாவின் அதிபதி
தொண்டி மு. ரா. மு. அப்து ரஹீம், பி.ஏ.

இன்னும் அடிமையா?
பொ. திருகூடசுந்தரம்

காந்தி-ஜின்னு பேச்சு
ராஜாஜியின் முன்னுரையுடன் கூடியது

பர்மா
வெ. ராமசாமி

இந்தியா அடிமையானது ஏன்?
டால்ஸ்டாய்

●

வெளி வந்தவை :

	ரூ. அ
முதலாளிகள் திட்டம் — வெ. ராமசாமி (கைவசமில்லை)	0-4
பிலிப்பைன் விழ்ச்சி — ஆ. நடராஜன்	0-4
பொய்யும் மெய்யும் — க. சந்தானம்	0-4

●

விற்பனை உரிமை :

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை :: சென்னை

வடக்கு வெளி வீதி :: மதுரை

பாரத சக்தி நிலய வெளியீடுகள்

யோகி
ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்
இயற்றியவை

	ரூ. அ
அன்னை	0-6
ஸ்ரீ அரவிந்தயோக விளக்கம்	0-8
கீதா யோகம் (முதல் பாகம்)	1-0
கீதா யோகம் (இரண்டாம் பாகம்)	2-4
உபநிஷத் ரகசியம்	1-8
அன்னையின் பிரார்த்தனை	0-8
பூரண யோகம்	0-10
ஸ்ரீ அரவிந்த மலர்	1-0
இல்லற ஒழுக்கம்	0-4
Mahathma Ramalingam	1-8

தபால் செலவு தனி

●

எல்லாவிதமான தமிழ் நூல்களும் எங்களிடம் கிடைக்கும் :

பாரத சக்தி நிலயம்
47, ரங்கப்பிள்ளை வீதி
புதுச்சேரி

வெ. சாமிநாத சர்மா எழுதிய நூல்கள்:

புதிய சீனு ✲

— சீனுவும் சீன நாகரிகமும் மிகப் பழமை யானவை. சென்ற நாலாயிரம் வருடங் களாகவே சீனர்கள் உலகத்தில் இருந்து வருகிருர்கள். அதற்கு நிகரான நாகரிகம் வேறு எதுவும் இல்லே. அன்பையும் அறத் தையுமே லட்சியங்களாகக் கொண்டு, புத்தர் பிரானின் போதனைகளே நடை முறையில் கடைப்பிடித்து ஒழுகியவர்கள் சீனர்கள். அத்தகையவர்கள் இன்று வீழ்ச்சியுற்றிருப்பதற்குக் காரணம் என்ன? அதன் எதிர்காலம் எவ்வாறிருக் கும்? சீனுவின் ஆரம்பகால சரித்திரத்தி லிருந்து, புதிய சீனுவின் தோற்றம்வரை எல்லா விபரங்களும் இந்நூலில் அடங்கி யிருக்கின்றன. —

ரூ. 6-8-0

பிளேட்டோ எழுதிய

அரசியல் ✲

பிளேட்டோ எழுதிய நூல்களுள் இதுவே மிகவும் சிறந்ததென்று உலகம் புகழுகிறது.

— இதில் அரசியலின் ஒவ்வொரு பிரிவும் வெகு தெளிவாக சம்பாஷணை மூலம் விளக்கப்பட்டிருக்கிறது. தேசத்துக்கும் மக்களுக்குமுள்ள தொடர்பு; எந்த மாதிரி யான மக்களுக்கு எத்தகைய அரசியல் இருக்கவேண்டும்? நீதி வழங்குதல் என்ருல் என்ன? என்பன போன்ற விஷயங்களே பிளேட்டோ தெளிவாக விளக்கியிருக்கிருர். — (அச்சில்)

ரூ. 6-0-0

தபால் செலவு தனி

சக்தி காரியாலயம்

115-E, மோபரீஸ் ரோட், சென்னை

வடக்கு வெளி வீதி, மதுரை

Designed & Printed by Shakti Press Ltd., (Shanti Press) Royapettah, Madras